# தலைவர் தொண்டமான்

எஸ். டி. சிவ[illegible]யகம்

எழுதிய தொண்[illegible]மான் ஆறு,
தொண்டமான்[illegible]கம் ஆகிய
ஆராய்ச்சிக் கட்டுரை[illegible]கள் அடங்கிய நூல்

நூல் வெளியீடு :

மாண்புமிகு அமைச்சர்

தொண்டமான் பாராட்டு குழுவினர்

பட்டமங்கலம், திருப்பத்தூர், தமிழ்நாடு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரித்திரத்தில் தொண்டமான்

"தலைவர் தொண்டமான்" என்பது இந்த நூலின் பெயர்.

இந்த நூலின் உள்ளடக்கத்தை தொண்டமானுடைய சரித்திரம் என்று சொல்வதைவிட, "சரித்திரத்தில் தொண்டமான்" என்று சொல்லலாம்.

ஏனென்றால், தொண்டமானுடைய வரலாறு இந்நூலில் வருட வாரியாக, மாத வாரியாக, தேதி வாரியாக எழுதப்படவில்லை. இலங்கையின் அரை நூற்றாண்டு சரித்திரத்தில் தொண்டமான் எத்தகைய தாக்கத்தை விளைவித்தார், எந்த விதமான முத்திரைகளைப் பதித்தார், அவருடைய சிந்தனைகள், செயல்கள் எத்தகைய எதிரொலிகளை ஏற்படுத்தின என்பதை இந்நூல் விளக்குகிறது.

இலங்கையின் சமுதாய வாழ்விலும், அரசியலிலும் தொண்டமான் பிரவேசித்ததிலிருந்து, அவருடைய அசைவுகள் அனைத்தும் பொதுமக்கள் அறிந்தவையே.

தொண்டமான் வாழ்வில் இதுவரை தெரியாதிருந்த பகுதிகள் அவருக்கும் இலங்கைக்குமிருந்த முந்தையர் தொடர்புகளும், சொந்த பந்தங்களும், தந்தையர்வழி பூர்வீகமும்தான். அந்த விவரங்களை எல்லாம் சாங்கோபாங்கமாக விளக்குகிறது இந்த நூல்.

அத்தோடு, பொது மக்களிடத்தில், குறிப்பாகத் தோட்டத்தில் வாழும் மலையக மக்களிடத்தில், அவருக்கு ஏற்பட்டிருக்கும் பிரபை (Charisma) எத்தகையது, அரசியல் ஆடரங்கில் அவருக்கு ஏற்பட்டிருக்கும் ஆளுமையும் ஆதிக்கமும் (Personality and Image) எத்தகையன என்பனவற்றையும் எடுத்துக் கூறுகிறது இந்த நூல்.

இவற்றை எல்லாம் 'சரித்திரமாக' எடுத்துச் சொல்லாமல், சம்பவங்களாகத் தொடுத்துத் தருகிறது இந்த நூல்.

வரலாறு படிக்கும் மாணவர்களில் சிலர், பாடப் புத்தகங்களைக் கையில் வைத்துக் கொண்டு திருவாய் மலர்ந்து கொட்டாவி விடுவது வழக்கம். அப்படி நேர்ந்து விடாமல், கதையைப் படிப்பது போல, ஒரு நாவலைப் படிப்பது போல, அந்த வேகத்தில் இந்த நூலை மக்கள் படிப்பார்களானல், அது ஒன்றே நாம் மேற்கொண்ட இச்சிறு பணிக்கு நற்சான்றுப் பத்திரம் வழங்கியதாக அமையும். வணக்கம்

—வெளியீட்டாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


சமர்ப்பணம்

சரித்திரத்தில் தொண்டமான்

மாமனிதர் அவர்

காந்திக் கவிஞரும் கண்ணதாசனும்

தலைவர் வாழ்க

* * *

1. தொண்டமானும் பண்டைய இலங்கையும் 25
2. திருக்கோஷ்டியூரில் திடசங்கற்பம் 36
3. குமாரவேல் இலங்கைப் பயணம் 45
4. எந்தத் தொழிலையும் ஏற்றமுடன் செய்தவர் 53
5. வெறுங்காலால் நடந்து வெவண்டன் முதலாளியானார் 62
6. ஆசைக்கு ஒரு திருமணம், வாரிசுக்கு ஒரு திருமணம் 70
7. வீரத்தாய் பெற்ற வீரமகன் சௌமியன் 78
8. குமாரவேலின் நேர்த்தி வெள்ளியானை வாகனம் 88
9. கண்ணனும் காந்தியும் காட்டிய வழியில் 93
10. தொண்டமான் பரம்பரையின் தோற்றமும் வரலாறும் 105
11. தேர் ஓட்டமும் யானை கட்டலும் 113
12. கோதை தொண்டமான் அனைவருக்கும் 'அப்பத்தா' 122
13. பொருளாதார மந்தமும் இனவாத தோற்றமும் 131
14. இலங்கை இந்திய காங்கிரஸ் நேருஜீ முன்னால் உதயம் 141
15. கம்பனி மாநாட்டில் கன்னிச் சொற்பொழிவு 152
16. முதல் பெரிய போராட்டமும், பிரிவி கவுன்சில் வெற்றியும் 166
17. தொண்டமானும் பாராளுமன்ற பிரவேசமும் 171
18. தொண்டமான் இலங்கையின் முதலாவது சத்தியாக்கிரகி 181
19. தூக்கு மரத்திலிருந்து காப்பாற்றினார் 188
20. போராட்ட வீரர் தொண்டமான் 198
21. அச்சம் என்பதை அறியாத தலைவர் 207
22. அமைப்பு நிர்வாக ஆற்றல் கொண்டவர் 215
23. தொண்டமான் ஈட்டிய மிகப் பெரிய வெற்றி 223
24. தமிழ் மொழி வளர்ச்சியில் தொண்டமான் பங்கு 245
25. இழந்த தமிழ் உரிமையை மீட்டவர் 252
26. பிரார்த்தனை இயக்கம் ஒரு புதிய ஆயுதம் 259
27. தனித்துவம் இழக்காத நடுநிலைத் தலைவர் 271
28. காக்கும் தெய்வமானார் கோதை தொண்டமான் 276
29. அழகும் எழிலும் கொழிக்கும் தொண்டமான் அமைச்சகம் 282
30. எழுபத்தைந்து வயதிலும் எழுச்சிமிக்க இளைஞர் 287

★ பூர்வீக வரலாறு எப்படி எழுதப்பட்டது ?

★ ஜொலிக்கிறது அவர் தொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைவர் வாழ்க

தொண்டருக்குத் தொண்டனாய்
தோழருக்குத் தோழனாய்
தொழிலாளர் துணைவனாகி

நண்பருக்கு நண்பனாய்
பகைவருக்கும் அன்பனாய்,
நந்தமிழர் வாழ்வு சிறக்கத்

திண்மைசேர் அரசுக்குத்
தரமான மதி கூறும்
திறமுற்ற அமைச்சனாகித்

தொண்டமான் எனும் நாமம்
எண்டிசையும் ஒலித்திடத்
திகழ்கின்ற தலைவர் வாழ்க.

## வாழ்ந்தனர் தொழிலாளர்

பண்டு புகழ் பரப்பியெங்கும் பாரினிலே தேயிலையின்
மண்டு புகழ் தேடியவோர் தேசமாம் இலங்கையிலே
கண்டவர் தம் உளம் கவரும் கார்வண்ணன் போலவொரு
தொண்டமான் தோன்றினனால், தொழிலாளர் வாழ்ந்தனரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமனிதர் அவர்

தலைவர் தொண்டமான் ஓர் அதிசயமான மனிதர். அற்புதமான மனிதர். அளவிட முடியாத மனிதர். அதாவது, ஆழமான மனிதர்!

தொண்டமான் அன்பு நிறைந்த மனிதர், ஆளுமை நிறைந்த மனிதர். ஆற்றல் மிக்க மனிதர். அதே வேளையில், ஆணவம் அற்ற மனிதர்!

தொண்டமான் வீரம் செறிந்த மனிதர். தீரம் நிறைந்த மனிதர். போராட்டத்தில் புறங்காட்டாத மனிதர். மோதலுக்கும் சாதலுக்கும் அஞ்சாத மனிதர். ஆனால் அஹிம்சையிலும் சாத்வீகத்திலும் அசையாத உறுதி கொண்ட மனிதர்!

தொண்டமான் நாணயம் மிக்க மனிதர். நம்பியவர்களை நட்டாற்றில் கைவிடாத மனிதர்!

தொண்டமான் செழுமை மிக்க மனிதர். எளிமை மிக்க மனிதர். சேவை நிறைந்த மனிதர்!

தொண்டமான் ஏற்றத் தாழ்வு பார்க்காத மனிதர். தோற்றத்தைக் கண்டு ஏமாறாத மனிதர். தொழிலையும் தொழிலாளர்களையும் போற்றும் தெய்வமாக மதிக்கும் மனிதர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய நிறைவான பண்புகளால் அவர் ஒரு மாமனிதராக விளங்குகிறார்.

தலைவர் தொண்டமானைப் பற்றித் தமிழ் மக்கள் மேற் கண்டவாறுதான் அபிப்பிராயப் படுகிறார்கள்.

இலங்கையில் வாழும் சிங்கள மக்களிடமும், முஸ்லீம் மக்களிடமும், ஏனைய சமூகத்தைச் சேர்ந்த மக்களிடமும் அபிப்பிராயம் கேட்டால், தொண்டமானுடைய அரசியல் கொள்கைகள் எப்படியிருந்த போதிலும் அவர் ஒரு நல்ல மனிதர் என்றே கருத்துத் தெரிவிக்கிறார்கள்.

யாருடைய மனமும் புண்படாதபடி பேசுவதும், நடந்து கொள்வதும் அவர் பண்பாகும். அதனால் அவர் தமது கொள்கைகளை எதிரிகள் ஏற்றுக் கொள்ளும்படி செய்ய முடி யாது போன சந்தர்ப்பங்களிலும்கூட, தம்மை அவர்கள் ஒரு நண்பராக ஏற்றுக் கொள்ளும்படி செய்து விடுகிறார்.

இலங்கையில் உள்ள தமிழ் தலைவர்கள் எல்லாரையும் விட அதிகப்படியான எண்ணிக்கையில் சிங்கள நண்பர்களையும், முஸ்லீம் நண்பர்களையும் கொண்ட தமிழ்த் தலைவர் தொண்ட மான் தான்.

பாராளுமன்றத்தில் அவர் பல அங்கத்தவர்களோடு காரசாரமாகப் பேசி மோதிக் கொள்ளுவார். ஆனால், வெளியே வந்ததும் அவ்வளவு பேரும் தொண்டமானுடைய இரு கரங் களையும் பிடித்துக் கொண்டு, "தொண்டா பிளீஸ் டோன்ட் மிஸ் அண்டஸ்ராண்ட் மீ" என்று ஒவ்வொரு வராகக் குழை வார்கள்.

இத்தகைய வசீகரம் அவருக்கு எப்படி வந்தது? யாருக் குமே தெரியாது.

அதனால் தான் அவர் ஒரு மாமனிதராக விளங்குகிறார்.

இந்த மாமனிதரைப் பற்றி எழுத முயற்சி செய்யப் பட்டிருக்கிறது இந்த நூலில். அது முடிகிற காரியமா? சுமார் 350 பக்கங்களில் அவர் புகழையும், பெருமையையும் அடக்கி விடுவது சாத்தியமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானைப் பற்றி நூல் எழுதுவது என்றால் அது சுலபமான காரியம் அல்ல. அவர் பட்டை தீட்டப்பட்ட ஒரு இரத்தினக் கல்லைப் போன்றவர். அவர் வாழ்க்கையில் எத்தனையோ முகங்களும், முனைகளும் உள்ளன. அதனால் அவரைப் பற்றி நூல் எழுத முடியாது. நூல்கள் தாம் எழுத வேண்டும்!

தொண்டமானுடைய வாழ்க்கையை எடுத்துக் கொண்டால் அதை ஐந்து அங்கங்களாக வகுக்கலாம்.

1. தொண்டமான் பரம்பரையின் பூர்வீக வரலாறு
2. பிறப்பும் வாலிப பருவமும்
3. தொழில் சங்க ஈடுபாடும் செயல்பாடும்.
4. அரசியலும் சாதனைகளும்
5. அமைச்சராக தொண்டமான்.

இதன் பின்னர் மேலும் எத்தனை அங்கங்கள் சேர்க்கப் பட வேண்டும் என்பது எதிர் காலம் நிர்ணயிக்க வேண்டிய தொன்றாகும்.

மேலே தரப்பட்ட ஐந்து அங்கங்களில் நாலாவது ஐந்தாவது அங்கங்கள் பெரும்பாலும் மக்கள் அறிந்த காண்டங்களாகிவிட்டன. மக்கள் அறியாமல் இருப்பன, முதல் மூன்று அங்கங்கள் தாம். இந்த நூல் அந்த மூன்று அங்கங்களையும் விரிவாக எடுத்து விளக்கியிருக்கிறது. மற்ற இரண்டு அங்கங்களையும் பற்றிய "ஹை லைட்ஸ்" அதாவது பொழிப்புகள் மட்டுமே தரப்பட்டுள்ளன.

உண்மையைச் சொல்லப்போனால், தொண்டமானைப் பற்றி பல தலைப்புகளில் பல நூல்கள் எழுதலாம். அப்படியான தலைப்புகளில் சிலவற்றை இங்கு குறிப்பிட்டால்:-

1. தொழிற்சங்க வளர்ச்சியில் தொண்டமான். 2. தொண்டமான் நடத்திய போராட்டங்கள் 3.தொண்டமான் தொழிலாளருக்குப் பெற்றுக் கொடுத்த சம்பள ஏற்றங்கள் 4. தொண்டமானின் அரசியல் சாகஸங்கள் 5.தொண்டமானின் தேர்ந்தெடுத்த நாடாளுமன்ற பேச்சுகள்

6. தொண்டமானின் மாநாட்டு தலைமை உரைகள் 7.தொண்டமானின் பொதுக் கூட்ட சொற்பொழிவுகள் 8.உலக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்குகளில் தொண்டமான் ஆற்றிய உரைகள் 9.தொண்டமான் கலந்து கொண்டு உலக மாநாடுகள் 10.தொண்டமான் சுற்றிய உலகம்.

11. தொண்டமான் சந்தித்த உலகத் தலைவர்கள் 12. தொண்டமானும் இந்திய தலைவர்களும் 13. தொண்டமானைப் பற்றி பெரியார்கள், சமயத் தலைவர்கள், உலகத் தலைவர்கள் அபிப்பிராயங்கள் 14. சந்தித்த உலகத் தலைவர்கள் பற்றி தொண்டமான் கருத்துக்கள் 15. தொண்டமான் உதிர்த்த பொன்மொழிகள்.

16. தொண்டமான் கூறிய வீரவசனங்கள் 17. தொழில் தகராறுகளைத் தீர்ப்பதில் தொண்டமான் கையாண்ட வழிமுறைகள் 18. தொண்டமான் எழுதிய கட்டுரைத் தொகுப்பு 19. பிரதான பத்திரிகைப் போட்டிகள். 20. தொண்டமான் பற்றிய கவிதைகளின் தொகுப்பு

21. தொண்டமான் வெற்றி கண்ட வழக்குகள் 22. தொண்டமான் தோற்றுவித்த நிறுவனங்கள் 23. தொண்டமான் உருவாக்கிய பிரமுகர்கள் 24. தொண்டமான் பற்றி பத்திரிகை கருத்துகள் 25. தொண்டமான் புகைப்பட தொகுப்புகள்.

உதாரணத்துக்காக 25 தலைப்புகள் இங்கு தரப்பட்டுள்ளன. இன்னும் எத்தனையோ தலைப்புகளுக்கு தொண்டமான் வாழ்க்கையில் சம்பவங்களும் சாதனைகளும் நிறைய உள்ளன. இப்படியான நூல்கள் எல்லாம் வெளிவருவதற்கு ஏற்பாடுகள் செய்யக் கூடிய வாய்ப்பும், வசதிகளும் நிதியும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு உண்டு. தொண்டமான் பவுண்டேஷன் கல்வித் தொண்டோடு இதையும் சேர்த்து செய்யலாம்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அவசியம் தொண்டமானின் பெயரில் ஒரு ஆராய்ச்சி நிலையத்தையும், பக்கத்திலே கோதை அம்மாள் பெயரில் ஒரு வாசிக சாலையையும் நிறுவ வேண்டும். பல்கலைக்கழகங்களிலிருந்து வெளிவரும் மலை நாட்டு பட்டதாரிகளை ஊக்குவித்து ஆராய்ச்சிகளிலும் நூல் எழுதுவதிலும் ஈடுபடுத்த வேண்டும். அதற்கான மானியங்களை ஒதுக்க வேண்டும். இவற்றிற்கான ஒரு தனி அறக்கட்டளை கூடத் தோற்றுவிக்கப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர் தொண்டமான் என்ற இந்த நூலைப் பொறுத்த வரையில் ஒரு சில சம்பவங்களையே தொட்டு எழுத முடிந்தது. குறிப்பிட்ட பக்கங்களுக்குள் அடக்க வேண்டும் என்ற எல்லை நிர்ணயமும் இருந்தது. ஆகையால், ஏனைய நிகழ்ச்சிகள் இரண்டாம் மூன்றும் தொகுதிகளுக்காக விடப்பட வேண்டியவை ஆயின.

ஒரு சில சம்பவங்கள், இந்நூலில் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. அந்தந்த இடத்தின் பொருத்தம் கருதியும், தொடர்புகளைக் காட்டுவதற்காகவும் அப்படிக் குறிப்பிட வேண்டியதாயிற்று. கூறியது கூறல் என்ற இலக்கணக் குற்றமாக இவற்றைக் கொள்ளக்கூடாது.

இந்தநூல், தலைவர் தொண்டமானைத் தாங்கி நிற்கும் பல லட்சம் தோட்டத் தொழிலாளப் பெருமக்கள் படிக்கப் போகும் ஒரு நூலாகும். அதனால் அனைவருக்கும் ஏற்றதான எளிய நடையில், இலகு தமிழில் எழுதப்படுவது அவசியம் என்பதை மனதில் கொண்டு சிறு சிறு வசனங்களாக அமைத்து எழுதப்பட்டிருக்கிறது. கடினம் தவிர்க்கப் பட்டிருக்கிறது.

தொண்டமானின் வரலாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் வரலாறுடன் இரண்டறப் பிணிக்கப்பட்ட தொன்றாகும். ஆயினும் இ.தொ.கா. வரலாறு இந்நூலில் விஸ்தாரமாக இடம் பெறவில்லை. காரணம், இந்நூல் தொண்டமான் என்ற அந்த மாமனிதரைப் பற்றிய ஒரு நூல் மட்டுமே என்பதால்தான். இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் வரலாறு ஒரு தனி நூலாக எழுதப்பட வேண்டியது ஒன்றாகும். அப்படி ஒரு நூல் அவசியம் எழுதப்பட வேண்டும்.

"தலைவர் தொண்டமான்" என்ற இந்த நூல் உருவாவதற்குப் பலர் உதவியும் ஒத்தாசையும் புரிந்தார்கள். அவர்களுடைய திருநாமங்களை நாம் நன்றியறிதலுடன் இங்கு குறிப்பிட வேண்டியது அவசியமாகும்.

இ.தொ.க. பொதுச் செயலாளர் எம்.எஸ். செல்லசாமி. அதே ஸ்தாபனத்தைச் சேர்ந்த எஸ். செல்லையா, ஏ.கே. கந்தசாமி, என்.சுப்பிரமணியம் ஆகியோர் நன்றிக்கு உரியவராவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ.எம்.துரைசாமி, பி.கனகராசா ஆகிய இருவரும் அரசாங்க சுவடிக் காப்பகத்தில் பல பழைய பத்திரிகைக் குறிப்புகளைத் தேடித் தந்து உதவி புரிந்தார்கள்.

அமைச்சர் தொண்டமானின் பேத்தியார் அநுராதா சாந்தமோகன் நல்ல பல ஆலோசனைகளையும், 'அப்பத்தா' பற்றிய விவரங்களையும் கூறினர்.

அமைச்சரின் இணைப்புச் செயலாளர் பி. திருநாவுக்கரசு செய்த உதவிகளும், கூறிய ஆலோசனைகளும் மிகப் பயனுள்ளவையாக அமைந்தன. இந்நூல் உருவாவதற்கு அவர் ஆற்றிய பணியும், காட்டிய அக்கறையும் மிகுந்த நன்றி உணர்வோடு நினைவு கூரத்தக்கனவாகும்.

இந்நூல் இவ்வளவு அழகாகவும், சிறப்பாகவும், துரிதமாகவும் அச்சாவதற்கு உதவி புரிந்தவர் நண்பர் பி.ஆர். செல்வராஜ். சென்னை பி.ஆர்.லித்தோகிராபர்ஸ் அச்சக உரிமையாளரான அவருக்கு நமது பாராட்டும் நன்றியும் உரியனவாகுக.

*நூலாசிரியர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்திக் கவிஞரும் கண்ணதாசனும்

காந்திக் கவிஞரும், கண்ணதாசனும் கவிமழை பொழிந்து விட்டார்கள்.

தமிழகத்தின் இரண்டு ஆஸ்தானக் கவிஞர்கள் அவர்கள். அவர்கள் இருவராலும் புகழ்ந்து பாடப் பெற்ற பெருமையுடையவர் தொண்டமான்.

இலங்கையில் தோன்றிய எந்தத் தமிழ்த் தலைவர்களுக்கும் இந்தப் பெருமை இதுவரை கிடைத்ததில்லை.

மன்னர்களையும், மாமன்னர்களையும் பெரும் புலவர்கள் புகழ்ந்து பாடுவது வழக்கம், பண்டைக் காலத்தில். இன்று மன்னர்கள் இல்லை. மக்கள் தலைவர்கள் தாம் உள்ளனர். ஜனநாயக யுகத்தில், மக்கள் தலைவர்களே மக்களைக் கட்டியாளுகின்ற பணியைச் செய்கிறார்கள், மன்னர்களைப் போல.

இலங்கையில் உள்ள மிகப்பெரிய மக்கள் தலைவர்களுள் தொண்டமானும் ஒருவர். அவர் மலைநாட்டின் முடிசூடா மன்னர். அவர் இடும் ஆணையை நிறைவேற்ற இலங்கையின் குறிஞ்சி நாட்டில் ஆறு லட்சம் தோட்டத் தொழிலாளர்கள் ஆயத்தமாக இருக்கின்றார்கள். மேலும் கணிசமான தமிழ் மக்கள் நாட்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய பகுதிகளிலும் தயாராக இருக்கின்றார்கள். இப்படியான ஒரு தானைத் தலைவனைப் பாட வேண்டும் என்று ஆஸ்தானக் கவிஞர்களான காந்திதாசனும், கண்ணதாசனும் எண்ணியதில் ஆச்சரியமில்லை அல்லவா?

நாமக்கல் கவிஞர் என்று அழைககப்பட்ட வெ. ராமலிங்கம்பிள்ளை ஒரு காந்திதாசன்தான். காந்தியுகக் கவிஞர் என்ற பட்டப் பெயரைப் பெற்றவர். காந்திமகானைப் பற்றியும், அவருடைய சத்தியாக்கிரகத் தத்துவத்தைப் பற்றியும் பல பாடல்களைப் பாடிய கவிஞர் அவர். கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது சத்தியத்தின் நித்தியத்தில் புத்தி கொண்ட ஜகத்தீர் அனைவரும் அந்த தர்மயுத்தத்தில் சேர வாரீர் என்று காந்தியின் சத்தியாக் கிரகப் போராட்டத்துக்குப் பிரசாரம் செய்து அழைத்தவர் ராமலிங்கம் பிள்ளை.

இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர் அவரே தமிழ்நாட்டு அரசாங்கத்தின் முதலாவது அரசவைக் கவிஞராக நியமிக்கப் பட்டார். அவர் பாடிய கவிதைகள் எளிமைக்கும், ஓசை நயத்துக்கும், கருத்தாழத்துக்கும் எடுத்துக்காட்டாக அமைந்தன.

நாமக்கல் கவிஞரைப் போலவே கவியரசர் கண்ணதாசனும், புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். ஆட்சியில் தமிழ்நாடு அரசாங்கத்தின் ஆஸ்தானக் கவிஞர் ஆனார்.

இந்த இருவருமே, தலைவர் தொண்டமானைப் பாடிய கவிஞர்களாவர். இவர்களைத் தவிர இன்னும் பல கவிஞர்கள் தொண்டமான் மீது கவிதை பாடி கவியாரம் சூட்டியிருக்கிறார்கள். ஆயினும் நாமக்கல்லாரின் கவிதையையும், கண்ணதாசனின் கவிதையையும் மட்டுமே இந்நூலின் முகப்பில் கவிஞர் கூற்றாகக் கொள்ளப்படுகின்றன.

நாமக்கல்லார் பாடுகிறார்:

*மதி கலங்கா மந்திரியே,*
*மாசுபடாத் தந்திரியே,*
*சுதி கலங்கா யாழிசையே,*
*சுவை குறையா சொல் அமுதே!*
*நிதி மயக்கா மன நிறைவே,*
*நிலை கலங்கா நீர்மையனே,*
*கதி கலங்கா சாரதியே,*
*காத்தருளும் சௌமியனே!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன் பொழுகும் திருவுருவே,
அருள் அமரும் ஆசனமே,
துன்பமுற்ருேர் துணைக் கரமே,
துயர் நீக்கும் தூதுவனே!
இன்ப மெல்லாம் பிறர்க்குதவி
இன்ன லெல்லாம் தாங்கி நிற்கும்
மென் மனத்துப் பெருந்தகையே!
மேன்மை யுற வாழ்த்துகிறேன்!

இந்த இரண்டு பாடல்களும் தலைவர் தொண்டமானுடைய தன்மைகள், பெருமைகள், பண்புகள் அனைத்தையும் அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றன.

நாமக்கல் கவிஞர் இப்போது நமது மத்தியில் இல்லை. அவர் காலமாகிப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. மேலே தரப்பட்டுள்ள கவிதைகளை அவர் எழுதியும் இருபது ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டன. ஆயினும் இந்தக் கவிதைகளிலே பொதிந்திருக்கும் பொருளும், கருத்தும், தீர்க்கதரிசனமும் நம்மை வியப்படையச் செய்கின்றன. கவிஞன் வாக்குப் பலிக்கும் என்பார்கள். நாமக்கல்லாரின் வாக்குப் பலித்து விட்டது.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு "மதி கலங்கா மந்திரியே" என்று பாடினுர் கவிஞர். மதிகலங்கா மந்திரி என்ருல் தடுமாற்றம் இல்லாத, மதியூகியான அமைச்சர் என்று அர்த்தம். இந்த நாட்டில் தொண்டமான் ஓர் அமைச்சராக வருவார் என்று அன்று யாரும் கனவு கூடக் கண்டிருக்க முடியாது. அப்படியிருந்தும் கவிஞர் "மந்திரியே!" என்று தொண்டமானை அழைத்தார். அதுவும் "மதிகலங்கா" என்ற அடைமொழியோடு!

உண்மையில், இன்று உள்ள அமைச்சர்களிலே மதிமயங்காமல், தெளிவான சிந்தனையோடு அபிப்பிராயங்களை வெளியிடும் ஓர் அமைச்சர் உண்டு என்ருல், அவர் தொண்டமான்தான். அதனுல்தான் எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் தொண்டமானுடைய ஆதரவையும், ஒத்துழைப்பையும் அந்தந்த அரசாங்கத்தின் தலைவர்கள் நாடி நின்ருர்கள், நிற்கிருர்கள் என்பதை சரித்திரம் காட்டியிருக்கிறது.

"மாசுபடாத் தந்திரியே" என்பதிலும் தனிப் பொருள் உண்டு. தந்திரி என்பது இங்கே ராஜதந்திரியைக் குறிக்கும். குற்றமில்லாத, குறைவில்லாத, நிறைவான ஒரு ராஜதந்திரியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டமான் விளங்குவார் என்பதை நாமக்கல் கவிஞர் அன்றே சொல்லி விட்டார்.

சஞ்சலமுற்ற மனதுக்கு சாந்தியைத் தருவது இசை. அந்த இசையும் சுருதி பேதமற்ற இசையாக இருந்தால் இன்பத்துக்கு கேட்க வேண்டுமா? தொண்டமான் சுதி கலங்காத யாழின் இசை என்கிறார் கவிஞர். துன்பத்தைப் போக்குவது யாழ் இசை. "துன்பம் நேர்கையில் யாழ் எடுத்து நீ இன்பம் மீட்டமாட்டாயா?" என்று காதலன் தன் காதலியிடம் கேட்டதாகப் பாடுகிறார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

ஒருவருக்கு துன்பம் ஏற்படும்போது, கஷ்டம் ஏற்படும் போது, இனிவானதும், இதமானதுமான ஆறுதல் வார்த்தைகளைக் கூறுவது யாழிசை பொழிவது போலவும், அமுதம் ஊட்டுவது போலவும் இருக்கும். தொண்டமான் இவ்வாறுதான் ஆறுதல் அளிப்பார் என்பதைத்தான் "சுதி கலங்கா யாழிசையே, சுவை குறையா சொல்லமுதே" என்ற இரு அடிகளில் கவித்துவம் சொட்ட, அழகுற விளக்கி விட்டார் ராமலிங்கம்பிள்ளை.

மதி கலங்கா, சுதி கலங்கா, கதி கலங்கா என்று மூன்று அடிகளில் எதுகை வைத்தவர், ஓர் அடியில் மட்டும் "நிதி மயக்கா" என்று கூறி விட்டார். இந்த இடம் கருத்தின் உச்சம் என்னலாம்.

பணம் யாரையும் மயக்கி விட வல்லது. ஆனால் பிறவியிலேயே செல்வந்தராகப் பிறந்த தொண்டமான் பணத்தால் மயங்கிவிடக் கூடியவர் அல்லர். நிதி மயக்காத மதி படைத்தவர் அவர். அதனாலேயே, "நிதி மயக்கா மன நிறைவே" என்றார் நாமக்கல்லார்.

அடுத்த அடி "நிலை கலங்கா நீர்மையனே" என்பது. நீர்மையன் என்பதை நீரின் தன்மை உள்ளவன் என்று கொள்ளலாம். நீரின் தன்மை சகல உயிர்களையும் ஓம்பிக்காப்பது. அதைவிட ஒரு சிறந்த பொருள் இங்கு தொனிக்கிறது.

நீர் எப்பொழுதும் தன் நிலையை ஒரே பாங்காக வைத்துக் கொள்ளும் ஒரு பொருள். Water seeks its own level என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். நிலத்தின் அடித்தளம் எப்படியிருந்தாலும் தண்ணீரானது மேல் தளத்தில் ஒரே மட்டத்தில் தான் நிற்கும். இந்த சம நிலையையே "நிலை கலங்கா நீர்மையனே" என்று கூறி, தொண்டமானும் நீரின் தன்மை போல சமநிலை தளராதவர் என்று காட்டினார் கவிஞர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கதிகலங்கா சாரதியே, காத்தருளும் சௌமியனே" என்ற அடிகள் தொண்டமானை, பாரதப் போர் நடத்தி சகலரையும் காத்தருளிய பார்த்த சாரதியான பரந்தாமனைப் போல தமது மலையக மக்களைக் காத்தருளும் சௌமியன் என்று உயர் பொருள் ஒப்புவமை இலக்கணத்துக்கமையப் பாராட்டுகிறார்.

இரண்டாவது கவிதையில் உள்ள ஒவ்வொரு வரிக்கும் உதாரணம் காட்டும் முகமான கட்டுரைகள் இந்நூலின் உள்ளே அடங்கியுள்ளன.

துன்ப முற்றோர் துணைக்கரமே
துயர் நீக்கும் தூதுவனே!
இன்ப மெல்லாம் பிறர்க்குதவி
இன்ன லெல்லாம் தாங்கிநிற்கும்
மென் மனத்துப் பெருந்தகையே......

என்ற வரிகள் தொண்டமானின் இளகிய உள்ளத்தைத் துல்லியமாக வருணிக்கின்றன.

இந்த நூலிலே உருளை வள்ளிப் போராட்டம் வருகிறது. தூக்கிலே தொங்கவிருந்த தொழிலாளரைக் காப்பாற்றிய வரலாறு வருகிறது. பட்டினி கிடந்த தோட்டத் தொழிலாளருக்கு அரிசி வழங்கிய சம்பவம் வருகிறது. இவற்றையெல்லாம் படிக்கும்போதும், தன் சொந்தக் காணிகளையும் தோட்டங்களையும் அடவு வைத்து தோட்டத் தொழிலாளருக்காகச் செலவிட்டார் என்பதை அறியும் போதும், தொண்டமான் துன்பமுற்றோர் துணைக்கரமாக நின்று, இன்பமெல்லாம் பிறர்க்குதவி, இன்னலெல்லாம் தாமே தாங்கி நின்ற ஒரு மென் மனத்துப் பெருந்தகைதான் என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். நாமக்கல் கவிஞரைப் போல நாமும் அவரை வாழ்த்தத்தான் வேண்டும்.

★

இனி கவியரசர் கண்ணதாசன் என்ன சொல்கிறார் என்பதைப் பார்ப்போம்.

இலங்கைத் தமிழர்
இன்முகத் தோழர்
இலங்கைத் தொழிலாளர்
இயக்கத் தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கும் நேர்மை
இணையிலாப் பண்பு
எல்லாம் நிறைந்தவர்
எங்கள் தொண்டமான்.

காஞ்சியி லிருந்து
கலிங்கம் குலைத்த
வண்டையர் கோமான்
தொண்ட மானுக்கும்
இலங்கையி லிருந்து
இன் தமிழ் ஆளும்
தொண்டமானுக்கும்
தொடர்புகள் உண்டு.

என்கிறார் கண்ணதாசன். காஞ்சியிலிருந்து படை நடத்திச் சென்று கலிங்க தேசத்தை வென்றவர் கருணாகரத் தொண்டமான் என்ற சோழப் பெரும் படைத் தளபதி. இந்த வரலாற்றைத் தொட்டுக் காட்டியிருக்கும் கண்ணதாசன், அந்த கருணாகரத் தொண்டமானுக்கும், நமது நூலுடைத் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானுக்கும் தொடர்புகள் உண்டு என்கிறார்.

தமிழக சரித்திரத்தை நன்கு படித்தறிந்தவர் கவியரசர் கண்ணதாசன். மருது சகோதரர்கள் சம்பந்தமான சினிமாப் படம் தயாரிப்பதற்காக சிவகங்கைச் சீமையின் வரலாற்றை நன்கு ஆராய்ந்தவர். அவர் கலிங்கத்துப் பரணி கூறும் கருணாகரத் தொண்டமானுக்கும், அமைச்சர் தொண்டமானுக்கும் தொடர்புகள் உண்டு என்று குறிப்பிடுகிறார். இந்தக் கருத்தை ஒட்டியே கருணாகரத் தொண்டமானுக்கும், இலங்கைக்கும் உள்ள தொடர்பு இந்த நூலின் முதல் அத்தியாயத்தில் ஆராயப்பட்டிருக்கிறது. தொண்டைமான் ஆறு என்ற பெயர் யாழ்ப்பாணத்தில் வழக்கில் வந்தது எப்படி என்பது விளக்கப்பட்டிருக்கிறது.

கவியரசர் கண்ணதாசன் ஒரு தடவை இலங்கைக்கு வந்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார். தொண்டமானின் விருந்தினராக வந்த அவரைத் தொண்டமான் உபசரித்த விதத்தையும் கவியரசர் பாட்டிலேயே எழுதி வைத்து விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் நிறைந்தவர்
எங்கள் தொண்டமான்
அன்றோர் நாளவர்
அகத்தினி லேநான்
அருந்திய விருந்தும்
அன்பும் இந்த
கடல் சூழ் உலகில்
காணற் கரியது.

கூட இருந்து
கொடுப்பன கொடுத்து
உண்ணப் பார்த்து
உறங்கவும் வைத்து
கண்ணை இமைபோல்
காத்தவர் அன்றோ!
என்னாளும் அவர்
எழிலுற வாழ்க.

இப்படி வாழ்த்தினர் கவிஞர் கோமான்.

எழுபத்தைந்து வயதிலும் தொண்டமான் எழிலுற வாழ்வதற்கு "என்னாளும் அவர் எழிலுற வாழ்க" என்று வாழ்த்திய கண்ணதாசனின் கவி வாக்கும் பலித்தே வருகிறது.

இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களிலே இணையற்ற கவிஞராக விளங்கியவர் கண்ணதாசன். அவர் கவிதையின் ஒவ்வொரு வரியும், ஒவ்வொரு சொல்லும் அர்த்தம் நிரம்பியது.

இலங்கைத் தமிழர்களுக்குள்ளே "இன்முகத் தோழர்" என்கிறார் தொண்டமானை கவிஞர். இன்முகத் தோழர் என்பது நிரம்பிய பொருள் நிறைந்த ஒரு தொடர். தோழர்கள் பலர் நமக்கு இருக்கலாம். அவர்களில் சிலர் வன்முகத் தோழர்களாகவும் இருப்பார்கள். தொண்டமான் என்றும் இன்முகத் தோழர் ஆவார். இதுவும் அவர் வெற்றிக்கு வழிவகுத்த இரகசியங்களுள் ஒன்றாகும்.

தோட்டத் தொழிலாளியின் உரிமைகளுக்காக இவர் தோட்ட முதலாளிகளுடன் பல சந்தர்ப்பங்களில் போராடியிருக்கிறார். பல சந்தர்ப்பங்களில் வாக்கு வாதப் பட்டிருக்கிறார். ஆனால் எந்த சந்தர்ப்பத்திலும் அவர் வன்முகம் காட்டியதில்லை. இன்முகம் காட்டியே காரியங்களைச் சாதித்திருக்கிறார். தோட்ட முதலாளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் பலர் வெள்ளைக் காரர்களாக, பிரிட்டிஷ்காரர்களாக இருந்திருக்கின்றார்கள். நூலின் உள்ளே வருகிற ரேஸ் துரை ஓர் உதாரணர் ஆவார். மோதல் பலமாக இருந்தது. இறுதியில் ரேஸ் துரை இலங்கையை விட்டுப் போகும் போது அன்பராகவும் நண்பராகவுமே விட்டுப் பிரிந்தார். இன்முகத் தோழர் ஒருவரையே அவர் பிரியவேண்டியதாயிற்று.

"தொண்டா, உம்மைக் கைது செய்து சிறையில் தள்ளுவேன்" என்றார் நாட்டின் பிரதமராக இருந்த டட்லி சேனநாயகா.

"முடிந்தால் செய்து பாருங்கள்" என்ற பாங்கில் சவால் விட்டார் தொண்டமான். ஆனால் சுடு முகத்தோடு அவர் இப்படிக் கூறவில்லை. கவிஞர் கண்ணதாசன் சொல்வது போல இன்முகத் தோழராகவே அந்த சொற்களைக் கூறினார். அதனால்தான் அடுத்த நாளே பிரதமர் டட்லி, தொண்டமானை அழைத்துப் பேசி, சுமுகமான முடிவை ஏற்படுத்தினார். இந்த விவரங்கள் நூலின் உள்ளே தரப்பட்டுள்ளன. இன்முகம் தந்த வெற்றி அது, தொண்டமானுக்கு.

கண்ணதாசன் கையாளும் மற்றொரு சொல் "எல்லாம்" என்பது. தெய்வத்தை நாம் "எங்கும் நிறைந்தவன், எல்லாம் வல்லவன்" என்கிறோம். இந்த "எல்லாம்" என்ற சொல்லிலே எல்லாமே அடக்கமாகும். அவ்வளவு வலிவானது அந்தச் சொல்.

இயங்கும் நேர்மை உள்ளவர் தொண்டமான், இணையிலாப் பண்பு உள்ளவர் தொண்டமான் என்று சொல்லிவிட்டு மற்றச் சிறப்புகளை ஒன்றொன்றாகப் பிரித்துப் பிரித்துச் சொல்லிக் கொண்டிருக்கச் சொல்லும், பொறுமையும் இழந்தவராக, "எல்லாம் நிறைந்தவர், எங்கள் தொண்டமான்" என்று முத்தாய்ப்பு வைத்து விடுகிறார். "எல்லாம்" என்பது இந்த இடத்தில் எவ்வளவு பொருளைத்தான் அடக்கி நிற்கிறது.!

கண்ணதாசனும், தொண்டமானும் ஒரே மாவட்டமான முத்துராமலிங்கத் தேவருடைய மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். "எங்கள் தொண்டமான்" என்பதன் அர்த்தம் இதுவாக இருக்கலாமோ?

தொண்டமானுடைய தமிழ் ஆர்வத்தைப் பற்றியும், இலங்கை அரசில் தமிழ் மொழி தக்க இடத்தைப் பெறுவதற்கு தொண்டமான் ஆற்றிய சாதனைகள் பற்றியும், இந்நூலின் உள்ளே சொல்லப்பட்டிருக்கிறது. இவை எல்லாம் பின்பு நடந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியங்கள். அதாவது, தொண்டமான் ஒரு பாராளுமன்ற அங்கத்தவராகவும், பின்னர் அமைச்சராகவும் ஆன பின்னர் நிறைவேறிய காரியங்கள்.

ஆனால், கண்ணதாசன் ஒரு கவிஞர் ஆனபடியால், ஒரு தொடர்மூலம் சொல்ல வேண்டியதை முன் கூட்டியே சொல்லி விட்டார். அது எப்படியென்றால்.....

இந்தியா சுதந்திரம் அடைந்தது 1948ஆம் ஆண்டு. ஆனால் மகாகவி பாரதியார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பதாகவே, சுதந்திரம் பெற்று விட்ட பாரதத்தைத் தன் கவி தரிசனத்திலே கண்டு விட்டார். அதனால் அவர் எக்களிப்போடு பாடி ஆடத் தலைப்பட்டு விட்டார். அவர் என்ன சொன்னார்?

ஆடுவோமே பள்ளுப்
பாடுவோமே
ஆனந்த சுதந்திரம்
அடைந்து விட்டோம் என்று....

இவ்வாறு பாடினார். கவிஞர் கண்ணதாசனும் ஒரு சொற்றொடரிலே, "இலங்கையிலிருந்து இன் தமிழ் ஆளும்" தொண்டமான் என்று சொல்லி விட்டார்.

"தமிழ் ஆளும்" என்பதிலே, தமிழ் மொழியை ஆளும், தமிழ் மக்களை ஆளும், தமிழ் உணர்வை ஆளும், தமிழ் இனத்தை ஆளும் என்ற பொருள்கள் எல்லாம் தொக்கு நிற்கின்றன. ஆளும் என்பது கையாளும் என்ற பொருளிலும் வரும். ஆளும் என்பது ஆட்சி புரியும் என்ற பொருளிலும் வரும். எந்தப் பொருளும் பொருந்துமாறு கவியரசர் கண்ணதாசன் அந்தச் சொல்லைப் பிரயோகித்திருக்கிறார்.

'அப்பத்தா' என்று அழைக்கப்பட்ட அன்னை கோதை தொண்டமானைப் பற்றி எழுதப்பட்டிருக்கும் பகுதி ஒன்று இந் நூலில் உண்டு. அதில் அப்பத்தாவின் விருந்துபசாரம் பற்றிய குறிப்புத் தரப்பட்டிருக்கிறது. அதற்கு துணை ஆதாரம் காட்டுவது போல விருந்தோம்பும் பண்பினைத் தொண்டமான் மீது ஏற்றிப் பாடியிருக்கிறார். கண்ணதாசன். அதாவது கோதை அன்னை தயாரித்தளித்த பட்சணங்களை, தொண்டமான் -

கூட இருந்து, கொடுப்பன கொடுத்து, உண்ணப்பார்த்து, உறங்கவும் வைத்து, கண்ணை இமை போல் காத்தார் என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த விருந்தினை வருணிக்கையில் -

அன்று, ஒரு நாள், தொண்டமான் வீட்டில் அருந்திய விருந்தானது கடல் சூழ்ந்த உலகில் வேறு எங்கும் அருந்த முடியாத தரத்தை உடைய விருந்து என்கிறார்.

இதுவல்ல முக்கியம். கவிஞரின் சொல்லழகுதான் முக்கியம். தொண்டமான் இல்லத்தில் கண்ணதாசன் இரண்டு பொருள்களை அருந்தினாராம்.

ஒன்று, விருந்து.
மற்றது, அன்பு.

விருந்து எங்கும் அருந்தக் கூடியதுதான். ஆனால் அன்பு?

பாடல் வரிகளை மீண்டும் ஒரு தடவை பார்க்க வேண்டும்.

அன்றோர் நாளவர்
அகத்தினி லேநான்
அருந்திய விருந்தும்
அன்பும் இந்த
கடல்சூழ் உலகில்
காணற் கரியது.

அன்போடு சேர்த்து வழங்கப்பட்ட விருந்தாகையால் தான் அந்த விருந்தை "கடல் சூழ் உலகில் காணற்கரிய விருந்து" என்றார் கண்ணதாசன்.

இத்தகைய விருந்து அளிக்கும் பண்புடைய தொண்டமானின் பூர்வீகம், வாழ்வு, சாதனைகள், அடங்கிய இந்நூல் தமிழ் மக்களுக்கு ஓர் அன்பு கலந்த விருந்தாக அமையட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1

# தொண்டமானும் பண்டைய இலங்கையும்

உண்மை, சில சமயங்களில் கற்பனையைவிட அதிசயம் நிறைந்ததாக அமைந்து விடுகிறது.

தலைவர் தொண்டமானுடைய கதையும், அவர் தந்தை யாருடைய வரலாறும், இவ்விருவரின் மூதாதையர்களுடைய பூர்வீகமும் படிப்பவர்களை வியப்பிலும் அதிசயத்திலும் ஆழ்த்தி விடக் கூடியனவாகும்.

தொண்டமானின் மூதாதையர்களில் சிலர் அளப்பரிய சாதனையாளர்களாகவும், சரித்திர நாயகர்களாகவும், விளங்கி யிருக்கிறார்கள்.

தொண்டமான், இலங்கையின் தலைசிறந்த ஒரு மக்கள் தலைவராக இன்று விளங்குகிறார்.

அவர், இலங்கை அரசாங்கத்தில் ஒரு சக்தி வாய்ந்த மந்திரி யாக, கிராமக் கைத்தொழில் அமைச்சராகப் பிரகாசிக்கிறார்.

ஆசியாவிலேயே மிகப் பெரிய தொழிற்சங்கம் என்று மதிக்கப்படும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முது பெரும் தலைவராக பல்லாண்டு காலம் பதவி வகித்து வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிப் பட்ட தலைவர் தொண்டமான், அந்தக்கால ராமநாதபுரம் ஜில்லாவில், இந்தக்கால பசும்பொன்முத்துராம லிங்கர் மாவட்டத்தில், பிறந்து இலங்கையில் குடியேறியவர் தான்.

ஆனால், தொண்டமானுக்கும் இலங்கைக்கும் உள்ள தொடர்பு இன்று நேற்று ஏற்பட்டதொன்று அல்ல. அல்லது, இந்தத் தலைமுறையிலோ, அதற்கு முந்திய தலைமுறையிலோ ஏற் பட்டுவிட்ட ஒரு தொடர்பு தான் என்றும் சொல்வதற்கில்லை.

இலங்கையோடு தொண்டமானுடைய தொடர்பு பல நூற்றாண்டு காலத்துக்கு முற்பட்டதாகும்.

தேடக்கூடிய சரித்திரச் சான்றுகளையும், கிடைக்கக் கூடிய வரலாற்றுக் குறிப்புகளையும் ஆதாரமாக வைத்துப் பார்க்கும் போது, தொண்டமானின் மூதாதையர்களில் ஒருவரான கருணாகரத் தொண்டமான் என்பவர் ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இலங்கையில் காலடி பதித்துவிட்ட மகாபுருஷர் ஆகிறார்.

அவர் வெறுமனே வந்துவிட்டுப் போகவில்லை. ஒரு சக்கர வர்த்தியின் ராஜப் பிரதிநிதியாக, பரிபூரண அதிகாரத்தோடு, படைபட்டாள ஏவலர்களுடன் வந்து தனது பெயரைப் பதித்து விட்டுப் போயிருக்கிறார். அதனால் அவர் பெயர் இலங்கையின் வடபாகத்தில் முத்திரை குத்தப்பட்ட பெயராக இன்றும் நின்று நிலவுகிறது.

யாழ்ப்பாணத்திலே, வடக்கே பருத்தித்துறை முதல், தெற்கே யானை இறவு வரை நீண்டு கிடக்கும் வாய்க்கால் "தொண்டமான் ஆறு" என்று அழைக்கப்படுகிறது அல்லவா?

கருணாகரத் தொண்டமானின் ஞாபகார்த்தமாகத் தான் இந்த வாவி "தொண்டமான் ஆறு" என்று வழங்கி வருகிறது.

யாழ்ப்பாணத்துக்கு தொண்டமான் என்று ஒருவர் வந்திருக்கத்தான் வேண்டும் என்பதை நம்பலாம். ஏனென்றால், தொண்டமான் என்ற பெயர் யாழ்ப்பாண ஊர் வழக்கில் அன்றும் இல்லை, இன்றும் இல்லை.

"தொண்டமான் ஆறு" என்பது மட்டுந்தான் வழக்கில் உள்ளது. தொண்டமான் என்ற பெயர் வேறு ஒரு மனிதருக்கு அங்கு சூட்டப்பட்டதாகவும் தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனுல், தொண்டமான் என்று ஒருவர் அண்டை நாட்டிலிருந்து தான் வந்திருக்க வேண்டும். அப்படி வந்தவரும் சாதாரண நாடோடியாக இருக்க முடியாது. ஒரு பிரபலஸ்த ராகத் தான் இருந்திருக்கவும் வேண்டும்.

தொண்டமான் என்ற பெயரை இலங்கையில் உள்ளவர்கள் யாரும் தமக்கோ, தம் பிள்ளைகளுக்கோ சூட்டிக் கொள்ள வில்லை. இதற்கு காரணம் உண்டு. தொண்டமான் என்பது ஒரு குலப் பெயராகும்.

ஆதியில், சோழ ஆட்சிக்கு உட்பட்ட தொண்டை மண்டலத்தில் வாழ்ந்த கள்ளர் குல மக்கள் இப்பெயரை குலப் பெயராகக் கொண்டார்கள்.

அங்கிருந்து தொண்டமான் குலத்தினர் இராமநாதபுரத் தில் குடியேறி வாழ்ந்தார்கள்.

ராமநாதபுரத்திலிருந்து ஒரு சாரார் புதுக்கோட்டை சமஸ்தானத்துக்கு வந்தார்கள். புதுக்கோட்டை சமஸ்தானத்தி லிருந்து தக்க காரணத்துடன் வெளியேறிய ஒரு பெண்மணி திருப்பத்தூருக்கு 5 மைல் தொலைவில் உள்ள பட்டமங்கலம் என்ற கிராமத்துக்கு வந்து சேர்ந்தாள்.

இவள் வருகை பற்றிய வரலாற்றுப் பின்னணி இந்நூலில் பின்னர் எடுத்துரைக்கப்படும்.

தொண்டமான் பரம்பரை பட்டமங்கலத்தில் பல்கிப் பெருகி வளர்ந்து, பின்னர் மூனுபுதூர் என்ற கிராமத்துக்கும் பரவியது.

தொண்டமான் என்பது கள்ளர் குலத்தின் பட்டப் பெய ராக அமைந்த காரணத்தால், இலங்கையில் வேறு யாரும் தொண்டமான் என்று பெயர் சூட்டிக் கொள்ளவில்லை.

இந்தப் பின்னணியை மனதில் வைத்துக் கொண்டு குலோத்துங்கன் காலத்து கருணுகரத் தொண்டமானைப் பற்றி சிறிது சிந்தித்தால்......

கருணுகரத் தொண்டமான் என்பவர் யார்? அவர் எதற் காக இலங்கைக்கு வந்தார்? எப்போது வந்தார்? அவர் யாரால் இங்கு அனுப்பப் பட்டார்? அவர் இலங்கையில் என்ன காரியங் களை எல்லாம் செய்து முடித்தார்? - என்ற வினுக்கள் எழுகின்றன.

இத்தகைய வினுக்களுக்கான விடைகளை வரலாற்று நூல் களிலே ஓரளவு காணக் கூடியதாக இருந்த போதிலும், மேலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழமான பரவலான விவரங்களை நாம் கர்ண பரம்பரைக் கூற்று களிலே இருந்து அறியக் கூடியதாக இருக்கிறது.

பழந்தமிழ் நாட்டின் வட பகுதி தொண்டை மண்டலம் என்று வழங்கி வந்தது. இந்த மண்டலத்தில் அதிபதிகளாக விளங்கி வந்தவர்கள் தான் தொண்டமான்கள்.

சோழப் பேரரசின் காலத்தில் தொண்டமான்கள் பல் வேறு அரச நாமங்களில், பல்வேறு இடங்களில், சிற்றரசர் களாக ஆண்டு வந்திருக்கிறார்கள். சில சமயங்களில் சோழப் பெரும் படையில் மிக முக்கிய பதவிகளை வகித்திருக்கிறார்கள்.

சோழர்களுக்கும் பாண்டியர்களுக்கும் —

சோழர்களுக்கும் சேரர்களுக்கும் —

சோழர்களுக்கும் கலிங்கர்களுக்கும் இடையே போர் நடைபெற்ற போது தொண்டமான்கள் சோழ ராஜ்யத்தின் தளபதிகளாகப் படை நடத்தியிருக்கிறார்கள்.

போர் செய்வதில் துணிச்சலும், தீரமும் மிக்கவர்களாக விளங்கிய தொண்டமான்கள் யானைப் படையினை நடத்துவதில் விசேஷ திறமை வாய்ந்தவர்களாக இருந்திருக்கிறார்கள்.

சோழர்களின் படைகளில் ரதப் பிரிவு, கஜப் பிரிவு, துரகப் பிரிவு, பதாதிப் பிரிவு என்று நான்கு அணிகள் அமைந்திருந் தன. அதாவது, சகடைப் படை, யானைப் படை, குதிரைப் படை, காலாட் படை என்பனவாகும் இவை. இவற்றுள் யானைப் படையின் தளபதிகளாக தொண்டமான் வம்சத்தினரே பெரும் பாலும் பதவி வகித்திருக்கிறார்கள்.

தமிழ்நாட்டின் தென்முனைப் பிரதேசம் மதுரையிலிருந்து ஆட்சி நடத்திய பாண்டியரின் ஆதிக்கத்திலேயே அதிக காலம் இருந்து வந்தது.

சோழப் பேரரசு 10 ஆம் நூற்றாண்டில் வடக்கிலும் தெற்கிலும் படையெடுத்து தன் சாம்ராஜ்யத்தை விஸ்தரித்த போது வடக்கே கங்கைக்கரை வரையும், தெற்கே தனுஷ்கோடி வரையும் சோழரின் புலிக் கொடி பறக்கலாயிற்று.

பாண்டி நாட்டின் பிடியிலிருந்த ராமேஸ்வரம், காயல், சீரலைவாய், தூத்துக்குடி பிரதேசங்கள் எல்லாம் சோழ அரசின் கீழ் வந்தன. அப்போது, சுமுகமான ஆட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகத்துக்காக சில சில பகுதிகளை வரையிட்டு, நம்பிக்கை யான ஆட்சித் தலைவர்களின் கையில் ஒப்படைக்க வேண்டிய அவசியம் தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு அரசு நடத்தி வந்த சோழ பேரரசுக்கு ஏற்பட்டது.

சோழ அரசுக்கு உட்பட்டு தொண்டைமண்டலத்துள் சிற்றரசர்களாக இருந்தவர்களில் நம்பிக்கையான ஒரு தொண்ட மானை அழைத்துப் போய் ராமநாதபுரத்தில் அரச பிரதிநிதி யாக நிலைநிறுத்தியது சோழப் பேரரசு. அதிலிருந்து தான் ராமநாதபுரத்தில் சேதுபதிகள் என்ற ஒரு தொண்டமான் பரம்பரை உருவாயிற்று. ஆயினும், இந்த சேதுபதிகள் சோழ அரசர்களின் ஆணைக்கு கட்டுப்பட்டவர்களாகவே இருந்து வந்தார்கள்.

கிறிஸ்துவுக்குப் பின் சுமார் 1070 ஆண்டளவில், அது வரை வேங்கி நாட்டின் இளவரசனாக விளங்கிய இராசேந்திரன், குலோத்துங்க சோழன் என்ற பெயரோடு சோழ மண்டலாதி பதியானார்.

சோழ நாட்டின் வடபால், கோதாவரி நதிக்கரைக்கு அப்பால், கலிங்க நாடு என்று ஒரு தேசம் இருந்தது. அதுவரை சோழ நாட்டுக்கு திறை கொடுத்து வந்த கலிங்கர் சோழ அரசரோடு முரண்டத் தலைப்பட்டனர். எனவே கலிங்கத் தின் மீது போர் தொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் சோழ அரசுக்கு ஏற்படலாயிற்று.

இந்தக் கால கட்டத்துக்கு சற்று முன்புதான் கருணாகரத் தொண்டமான் எனப்பட்ட, சோழர் படையின் வீரத்தளபதி, இலங்கைக்கு வந்தார். குலோத்துங்க சக்கரவர்த்தி தான் அவரை இலங்கைக்கு அரச பிரதிநிதியாக அனுப்பி வைத்தார்.

தளபதி கருணாகரத் தொண்டமான் எதற்காக இலங்கை வந்தார் என்பது முக்கிய விஷயமாகும்.

கருணாகரத் தொண்டமான் இலங்கைக்கு வந்தது பற்றிய ஆங்கிலக் குறிப்பு ஒன்று பின்வருமாறு :

A short note on "THONDAIMANARU" is found on page 116 in the book "The Tamils of Early Ceylon" written by C. Sivaratnam. He has quoted from the Cambridge History of India Vol. 1 P. 169, which runs as follows –

*"...... Karunakara Tondaiman, a general of Kulottunga Chola (1070 A.D.), came to Manatidal to collect salt at*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Karanavai and Vellaiparavai by building a canal to reach these salterns. This canal is now called Tondaimanaru. Tondaiman lived in Uduvil for some time when he built the Karunakara Pillaiyar Temple in the Urumpirai District. This event appears to have taken place during the flourishing period of Singai-Nagar (C 1070). 'Tondaiman became famous by his successful expedition into Calingha ...... (Cambridge History of India Vol. 1. P. 169)' ....."*

'பூர்வீக இலங்கையில் தமிழர்' என்ற நூலை எழுதிய திரு. சி. சிவரத்தினம் என்ற சரித்திர ஆசிரியர் தளபதி கருணாகரத் தொண்டமானின் இலங்கை வருகை பற்றித் தமது நூலில் குறிப்பிட்டிருக்கிறார். அதில் கூறப்பட்டிருப்பதாவது:

"கி.பி. 1070 அளவில் ஆட்சி புரிந்த குலோத்துங்க சோழனின் படைத்தளபதியாக விளங்கியவர் கருணாகரத் தொண்டமான்."

அவர் முதலில் யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள மாந்திடல் என்ற இடத்துக்கு வந்து சேர்ந்தார். கரணவாய், வல்லப் பரவை என்னும் இடங்களில் விளைந்த உப்பைச் சேகரிப்ப தற்காகவே வந்தார்.

"இந்த உப்பளங்களைச் சென்றடைவதற்காக அவர் ஒரு வாய்க் காலையும் அமைத்தார். அந்த வாய்க்கால் தான் இப்போது தொண்டமான் ஆறு என்று அழைக்கப்படுகிறது."

"சிலகாலம் தொண்டமான் உடுவில் என்ற இடத்தில் வாசம் செய்தார். அப்போது அங்கு கருணாகரப் பிள்ளையார் என்ற பெயரில் ஒரு கோயிலையும் கட்டினார்."

"பின்னர், இந்தத் தொண்டமான் கலிங்கத்துக்குப் படை எடுத்துச் சென்று போரில் வென்று பெரும் புகழீட்டினார்."

இவ்வாறு அந்த நூலில் கூறப்பட்டிருக்கிறது. இதற்கு ஆதாரம் இந்தியாவின் கேம்பிறிட்ஜ் சரித்திரம் புத்தகம் 1, பக்கம் 169 என்றும் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

நம்மைப் பற்றி, அதாவது, இந்தியாவையும் இலங்கை யையும் பற்றி, சரித்திரம் என்ற பெயரில் வெள்ளைக்காரன் எழுதி வைத்திருக்கும் குறிப்புகளை எல்லாம் நாம் அப்படியே விழுங்கி விடக் கூடாது. கொஞ்சம் சலித்துப் பார்ப்பது அவசியம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளபதி கருணுகரத் தொண்டமான் யாழ்ப்பாணத்துக்கு வந்தார் என்பதும், அங்கு ஒரு கால்வாய் வெட்டுவித்தார் என்பதும் உண்மை. தொண்டமான் முன்னின்று அமைத்ததால் இந்தக் கால்வாய்க்கு "தொண்டமான் ஆறு" என்று பெயரிடப் பட்டது என்பதும் பொருத்தமாக இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் ஒரு மலே கூடக் கிடையாது. ஒரு நதி கூடக் கிடையாது. சமதரையான தீபகற்பமே யாழ்ப்பாணம். ஆயினும் யாழ்ப்பாணத்து மக்கள் ஆசை காரணமாக, மலே அல்லாத இடத்தை மலே என்றும், ஆறு அல்லாத ஒன்றை ஆறு என்றும் பெயர் சூட்டி அழைத்து மகிழ்ச்சி அடைகிருர்கள். கீரிமலே, தொண்டமான் ஆறு என்ற இரண்டையும் இங்கு குறிப்பிடுகிருேம்.

ஆறு என்பதற்கு வழி என்றும் பொருள் உண்டு. தொண்ட மான் வெட்டிய கால்வாய் நீர்மேல் வழியாகப் பயன்பட்டதால் ஆறு என்ற பெயரைப் பெற்றது என்று விளக்கம் சொல்லலாம்.

ஆனுல் விளங்காமல் இருப்பது வேறு ஒரு விஷயமாகும்.

அதாவது, தளபதி தொண்டமான் எதற்காக இலங்கை வந்து அந்த வாய்க்காலே வெட்டினுர் என்பதுதான்.

'உப்புச் சேகரிப்பதற்காக' என்று வெள்ளேக்காரர் தயாரித்த சரித்திர நூல் கூறுகிறது. அதை உள்ளூர் நூலாசிரியர் ஒருவரும் எடுத்து ஆண்டிருக்கிருர். இதை ஏற்றுக் கொள்ளலாமா?

சோழ சாம்ராஜ்யத்தின் தளபதி,- பின்னுல் கலிங்கத்துப் போரில் வென்று, மிகப்பெரும் கவிஞர்களில் ஒருவரான ஜெயங்கொண்டார் தமது சீரிய எழுதுகோலால் 'கலிங்கத்துப் பரணி' என்ற பேரிலக்கியம் படைப்பதற்கு காரண புருஷராக இருந்த ஒரு தளபதி,- உப்பு சேகரிக்க யாழ்ப்பாணம் வந்தார் என்பதும், உப்பை ஏற்றிச் செல்ல கால்வாய் வெட்டினுர் என்பதும் வேடிக்கையாக இல்லேயா?

இப்படிக் கூறுவது ஒரு பெரிய தளபதியை, ஒரு பெரும் மாவீரரை அவமதிப்பது ஆகாதா?

ஆம், இது ஒரு பெரும் வேடிக்கையான ஜோடனேக் கதைதான்! அவமதிப்பான கூற்றுத்தான்!

முக்கால் பக்கம் கடலால் சூழப்பட்ட தமிழ்நாட்டில் உப்பு என்ன கிடைக்காத ஒரு பொருளா? ராமநாதபுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டத்தில் அன்று கூட உப்பளங்கள் நிறைய உண்டே. சீரலைவாயிலும், தூத்துக்குடியிலும் விளையாத உப்பையா கரணவாயிலும், வல்லப்பரவையிலும் தேடி வந்தார் சோழத் தளபதி?

அப்படித்தான் மழை, வெள்ளம் காரணமாக உப்பின் இருப்பு குறைந்து போயிற்று என்றாலும், கடல் நீர் கொண்டு உப்புக்காய்ச்சியெடுப்பது சிரமமான காரியம் அல்லவே!

ஒரு பேரரசின் வீரத்தளபதியை இன்னொரு நாட்டுக்கு அனுப்பி அந்த நாட்டைப்பிடித்துவா என்று கட்டளை இடலாம். பொன் கொண்டுவா, பொருள் கொண்டுவா அல்லது ரத்தினங்கள் பெற்றுவா என்று பணிக்கலாம். இதைவிடுத்து, உப்புத் தேடுவதற்காக ஒரு மகாமன்னர் தன் தளபதியைப் பயன் படுத்துவாரா? அப்படிப் பணித்தாலும் ஒரு தளபதி அப் பணியைத் தன்மானத்தோடு ஏற்று செயல்படுவாரா?

யாழ்ப்பாணத்தின் சரித்திரத்தை எழுதப்போகிறேன் என்று வந்த வெள்ளைக்காரனுக்கு "தொண்டமான் ஆறு" பற்றி அங்கு யாரோ கதை அளந்திருக்கிறார்கள் என்று தோன்றுகிறது.

தளபதி கருணாகர தொண்டமான் உப்பு வியாபாரியாக இலங்கை வந்தார் என்ற கட்டுக்கதையை நம்பாமல், தொண்டமான் பரம்பரைபற்றி இந்தியா சென்று வாய்வழியாகவும், செவிவழியாகவும், நூல்வழியாகவும், ஆராய்ச்சிகள் மேற் கொள்ளப்பட்டன.

குறிப்பாக சென்னையில் உள்ள கன்னிமாரா நூல்நிலையத்திலும், பரவலாக மதுரையில், தஞ்சையில், உள்ள பல வாசகசாலைகளிலும் தொண்டமான் பரம்பரை பற்றி ஆராயப் பட்டதன் விளைவாகப் பல புதிய கருத்துக்கள் மிதக்கலாயின.

கல்லூரி பேராசிரியர்கள், அறிஞர்கள், ஆராய்ச்சி யாளர்கள் சிலரிடமும் கருத்துகள் திரட்டப்பட்டன. செவிமரபுக் கதைகளும் சேகரிக்கப்பட்டன.

பட்டமங்கலத்திலும், மூனுபுதூரிலும், திருப்பத்தூரிலும் ஜீவவந்தர்களாக உள்ள முதியோர்கள், முன்பு கேட்டறிந்த செய்திகளை மீட்டுரைக்கும்படி கேட்டு, தேவையான ஆதாரங் கள், தொடர்புகள் திரட்டப்பட்டன. விடுபட்ட இடங்களி லிருந்து வரலாறுகள் கோக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றின் மூலம் கருணாகரத் தொண்டமானைப் பற்றிய பல நிகழ்வுகள் உருப்பெற்றன. கருணாகர தொண்டமானை ஓர் உப்பு வியாபாரியாக ஏற்றுக் கொள்ள எவருமே மறுத்து விட்டனர். அவர் இலங்கை சென்றதன் நோக்கம் "இவையாகத் தான் இருக்க வேண்டும்" என்று அனுமானமாகவும், ஆணித்தர மாகவும் அபிப்பிராயங்களைத் தெரிவித்தனர்.

பண்டைக் காலத்திலிருந்தே இலங்கை வளம் மிக்க நாடாகத் திகழ்ந்திருக்கிறது. இலங்கையிலிருந்து பல்வேறு திரவியங்களையும், பொருள்களையும் தமிழ்நாடு இறக்குமதி செய்திருக்கிறது.

இலங்கையின் வன்னிப்பகுதியில் நெல்லின் மணிகள் நிறைய விளைந்தன. பருத்தி படர்ந்து பனிநிறப் பஞ்சினை காய்த்தது. யானைகளும், யானைத் தந்தங்களும், மயிலும் மயிற்பீலிகளும் அபரிமிதமாகக் கிடைத்தன. கட்டுக்கட்டாக பருத்திப்பஞ்சுப் பொதிகள் இலங்கையின் வடபகுதியிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட துறையாகையால் அது பருத்தித்துறை என வழங்கியது. பருத்தித்துறையிலிருந்து நேர்கோடாகவே சென்று, நாவாய்கள் தொண்டித் துறைமுகத்தில் நங்கூரமிட்டன.

இலங்கையில் விளைந்த உணவுவகை தமிழகத்தின் சந்தையிலே பரப்பிக் கிடந்தன என்பதை பட்டினப்பாலை என்ற சங்க இலக்கிய நூல் விளக்குகிறது.

இலங்கை இன்னொரு வகையில் முன்னணியில் நின்றது. வல்லமை மிக்க கொல்லர்கள் இங்கு வாழ்ந்தார்கள். யவனத் திலும் சீனத்திலும் இருந்து கிடைக்கப்பெற்ற உருக்குப்பாளங் களைக் கொண்டு காங்கேசன் துறைமுகத்துக்கு அருகில் தரமான ஆயுதங்கள் தயாரிக்கப்பட்டன. சிறந்த உருக்கிலான வாள்கள், குத்தீட்டிகள், வேல்கள், சூலங்கள், இரும்பிலான தண்டாயுதங்கள் எல்லாம் கொல்லன்கலட்டி என்ற ஊரில் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டன. இந்தியாவில் அரசோச்சிய மன்னர்களுக்கெல்லாம் தரமான படைக்கலன்களை வழங்கும் ஆயுதத் தொழிற்சாலைகள் நிரம்பிய ஒரு நாடாக வடஇலங்கை விளங்கியது.

கருணாகரத் தொண்டமான் சோழப்பேரரசின் தளபதி களில் ஒருவராக நியமனம் பெற்ற காலகட்டத்திலேயே கலிங்கப் போர் கருக்கூட்டத் தொடங்கி விட்டது. அந்தப்போரில் தாமே தளபதியாக பொறுப்பேற்று போர் நடத்த வேண்டி வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை உணர்ந்த கருணாகரத் தொண்டமான், குலோத்துங்க சோழரின் அனுமதியோடு, தக்க பக்கபலத்தோடும் பணத் தோடும் ஆளடிமைகளோடும், இலங்கை வந்தார்.

அவர் நான்கு பொருட்களை இலங்கையிலிருந்து கொள்வனவு செய்து தமிழகத்துக்கு எடுத்துச்செல்வதற்காக இங்கு வந்தார். யானைகள், படைக்கலன்கள், நெல்மணிகள், பருத்தி.

எதிர்பார்க்கப்பட்ட கலிங்கப் படையெடுப்புக்கு இந்தப் பொருள்கள் அவசியம் தேவைப்பட்டன. படைவீரர்களின் சீருடைகளுக்கு பருத்தியும், போருக்குப் படைக்கலன்களும், நீண்டகால யுத்தம் ஏற்பட்டால் உணவு சேமிப்புக்கு நெல்லும் தேவைப்பட்டன. இந்தப்பொருள்களோடு ஓரளவு உப்பும் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கலாம்.

பொருள்களைச் சுலபமாக ஏற்றிப் பறிப்பதற்கு ஒரு நீர்வழி தேவைப்பட்டதால் தொண்டமான் ஆறு என்ற கால் வாய் அமைக்கப்பட்டிருக்கலாம். கனத்த பொருட்களைத் தரை மார்க்கமாக ஏற்றிப் பறிப்பதை விட நீர்மார்க்கமாக இழுத்துச் செல்வது சுலபமே அல்லவா?

இவற்றையெல்லாம் விட முக்கியமாக யானைகளைப் பெறவே கருணாகரத் தொண்டமான் இலங்கை வந்திருக்க வேண்டும். இலங்கையின் வடபகுதியில் குறிப்பாக வன்னியி லும், சிலாபத்திலும், கந்தளாயிலும், மூதூரிலும் யானைகள் அந்த நாட்களில் அபரிமிதமாக இருந்தன. மலிவு விலையிலும் கிடைத்திருக்க வேண்டும். போருக்கு ஏற்ற யானைகளைப் பொறுக்கி எடுக்கவே கஜ சாஸ்திரம் அறிந்த கருணாகரத் தொண்டமான் யாழ்ப்பாணத்தில் வந்து முகாமிட்டிருக்க வேண்டும்.

யானைகளை ஆற்றில் இறக்கிப் படகுகளில் ஏற்றிய இடம் யானை இறவு எனப்பட்டது. இறவு என்றால் ஏணி அல்லது படிக்கட்டு என்று பொருளாகும். அந்த யானை இறவு இன்றும் அதே பெயரில் வழக்கில் உள்ளது. ஆங்கிலத்தில் Elephant Pass என்கிறார்கள்.

இலங்கையோடு தொடர்பு உடைய முதலாவது தொண்ட மான் கருணாகரத் தொண்டமான் தான்.

அவருக்குப் பின்னர், சுமார் 1000 ஆண்டுகளுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர், இலங்கையில் இன்னொரு தொண்டமானை நாம் காண்கிறோம்:

அவர்தான் அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமான்.

இந்த நூலின் கதாநாயகரான சௌமியமூர்த்தி தொண்டமானின் இலங்கைத்தொடர்பு ஆயிரம் ஆண்டு பழைமையானது என்று கொள்வது பொருத்தமே ஆகும் அல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

# திருக்கோஷ்டியூரில் திடசங்கல்பம்

திருக்கோஷ்டியூரில் சௌமிய நாராயணப் பெருமாள் கோவிலின் அஷ்டாங்க விமானத்தின் மேலாக ஆதவன் தக தகவென்று பிரகாசித்துக் கொண்டிருந்தான்.

சித்திரை மாதம். வசந்தம் அரசோச்சிக் கொண்டிருந்த காலம். திருக்கொன்றை மரமும், கலியாண முருங்கையும் பொன் நிறத்திலும் மாணிக்க நிறத்திலும் மலர்களைச்சொரிந்து கொண்டிருந்தன. தூரத்து மா மரங்களிலிருந்து குயில்கள் குக்கூ இசை பொழிந்தன. வெப்பம் ஏற்றிய தென்றல் காற்று கோவிலின் திருவாயிலினூடாகப் புகுந்து கர்ப்பக் கிரகம் வரை பரவிக் கொண்டிருந்தது.

திருக்கோஷ்டியூர் ஆலயம் வைஷ்ணவ அடியார்களின் உள்ளத்தையும், உணர்வையும் போலவே பெரிதாகவும், விசால மாகவும் அமைந்திருந்தது. நான்கு தளங்களைக் கொண்டது இத்திருக்கோவில்.

தரைமட்டத்தில் ஸ்ரீகிருஷ்ணப் பெருமாளின் சன்னிதி உள்ளது. இதற்கு நேர்மேலே பெருமாளின் சயனத்திருக்கோலம், ஸ்ரீரங்கநாதரை ஒத்ததாக இருக்கிறது. அதற்கு மேலே மூன்ரு வது மாடியில் பெருமாளின் நின்ற கோலம். இது திருப்பதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெங்கடேஸ்வரரை ஒத்தது. உச்சி மாடியில், அதாவது நான்காவது தளத்தில், பரமபதநாதரின் வீற்றிருந்த திருக்கோலம் உள்ளது. விஷ்ணுவின் நான்கு நிலைகள் அமைந்த பெருமையைக் கொண்டது திருக்கோஷ்டியூர்.

இந்தக்கோவிலின் மூன்ருவது தளத்தில், பெருமாளின் நின்ற திருமேனிக்கு உச்சிகாலப் பூஜைக்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன.

எங்கும் திருவிளக்குகள் ஏற்றப்பட்டிருந்தன. விளக்குச் சுடர்களினுல் சூடு ஏறிய பசு நெய்யின் நறுமணமும், கற்பூரம், கஸ்தூரி, துளசி தளம் ஆகியவை சேர்ந்து கிளப்பிய சுகந்தமும் மனதில் சாந்தத்தை ஏற்படுத்தின.

மணியும், சேமக்கலமும் ஒலித்தன. சங்குகளும் முழங்கின.

நின்ற பெருமானுக்கு நைவேத்தியம் படைத்து, அடிமுதல் முடிவரை பெரிய பெரிய வட்டங்களாக தீபாராதனை காட்டினுர் கோவிலின் உச்சி காலப் பட்டர் ஸ்ரீநிவாஸாச்சாரியார்.

முன்னுல் ஒரு கூட்டம் ஹரிபக்தர்கள் நின்று 'கோவிந்தா கோவிந்தா' என்று பெருங்கோஷமிட்டனர். ஒரு வைஷ்ணவர், "பச்சை மால் வரை போல் மேனி, பவள வாய்..." என்று பாசுரம் பாடினுர் தனிமையில் நின்று.

அந்தக்கூட்டத்தின் ஒருபால் ஒரு சிறுவன் காணப்பட்டான். திருமாலைப் போலவே அவனும் கரிய திருமேனியுடையவனுக விளங்கினுன். அவனுடைய வயது 13 தான். எனினும் 15 வயது மதிக்கக்கூடிய ஓர் இளைஞனின் எடுப்பும் வளர்ச்சியும் பெற்றிருந்தான்.

அவன் தேகம் திடகாத்திரமாக இருந்தது. மனதின் திண்மையை முகம் பிரதிபலித்தது. ஒரு முடிவை எடுத்தால் அதை எந்த இடையூறையும் தாண்டி நிறைவேற்றி வைக்கும் உறுதி அவனுடைய உதடுகளில் உட்கார்ந்திருந்தது. அவனுடைய எதிர்காலம் பிரகாசமானது தான் என்பதை அவனுடைய கண்களின் பிரகாசமே கட்டியம் கூறியது.

கூட்டத்தோடு கூட்டமாக அவன் நின்ருலும், அவன் மனம் தனித்து நின்று பிரார்த்தனை செய்தது. ஏதோ ஒரு பிரதிக்ஞையை மேற்கொண்டு அது நிறைவேற மனம் ஒன்றிப் பிரார்த்தனை செய்பவன் போல அவன் காணப்பட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப்பையன் யார்? அவனுடைய பெயர் என்ன? எதற்காக அவன் திருக்கோஷ்டியூர் ஆலயத்துக்கு அந்த வேளையில் வந்திருந்தான்?

அந்தப் பையனுடைய பெயர் குமாரவேல்.

அவன் செய்த பிரார்த்தனை என்ன? பிரதிக்ஞை என்ன? எதற்காக?

இவற்றை எல்லாம் தெரிந்து கொள்வதற்கு, முதல் நாள் மாலையில் மூனுபுதூர் என்ற அழகிய கிராமத்தின் வடபால் அமைந்திருந்த சோலை அம்மன் கோவிலில் நடை பெற்ற ஒரு நிகழ்ச்சியைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

குமாரவேல் புத்திசாலித்தனம் நிரம்பிய ஒரு சிறுவன். ஆயினும் அடம் பிடிக்கும் குணமும், முரட்டுத்தனமும் அவனிடம் குடிகொண்டிருந்தன. தான் பிடித்த காரியத்தை உறுதிப் பாட்டுடன் சாதிப்பதில் திடமான உள்ளம் படைத்தவன்.

அந்தச் சிறிய வயதிலேயே தன்மானத்துடனும், தன்னம்பிக்கையுடனும், துணிச்சலுடனும் வாழத்தலைப்பட்டவன். அதனால் அவன் குடும்பத்தின் கட்டுப்பாட்டிலிருந்து விதறிய ஒரு பையனுகவே மதிக்கப்பட்டான். என்றாலும் அவன் தன் தாயாரிடமும், சகோதரிகளிடமும் தணியாத அன்பும் பாசமும் கொண்டவனுக விளங்கினுன்.

மூனுபுதூர் என்ற கிராமம் பட்டமங்கலம் என்ற கிராமத்திலிருந்து 3 மைல் தொலைவில் இருந்தது. பட்டமங்கலம் திருப்பத்தூர் என்ற சிறு பட்டணத்திலிருந்து 5 மைல் தூரத்தில் அமைந்திருந்தது. பட்டமங்கலம், மூனுபுதூர் ஆகிய இரண்டு கிராமங்களும் நல்ல விவசாய கிராமங்களாக விளங்கின.

இந்த இரண்டு கிராமத்திலும் கள்ளர் குலத்தைச் சார்ந்தவர்கள் அம்பலம், தொண்டமான் என்ற குலப்பெயர்களோடு வாழ்ந்து வந்தார்கள்.

கள்ளர் குலத்தினர் வீரம் மிக்கவர்கள். போருக்கு அஞ்சாதவர்கள். தாம் சார்ந்தவர்களுக்கு விசுவாசத்துடன் பணியாற்றுவதில் பெயரும் புகழும் பெற்றவர்கள். அதனுல் இவர்கள் சோழமன்னர் காலத்திலும், அதன் பின்னர் பல குறுநில மன்னர்களிடமும் மதிப்பான பதவிகளை வகித்தார்கள்.

கிராம நீதி மன்றங்கள் அந்தக்காலத்திலும் பஞ்சாயம் என்றே அழைக்கப்பட்டன. பஞ்சாயம் கூடி கிராம வழக்குகளை விசாரித்து நீதி வழங்கும் இடம் அம்பலம் எனப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டது. இந்த அம்பலங்களுக்கு கள்ளர் குலத்தவர்கள் தலைவர் களாக நியமிக்கப்பட்டார்கள். அதனால் அவர்கள் அம்பலத் தார் என்ற பட்டப்பெயருடன் அழைக்கப்பட்டார்கள். இதுவே பின்னர் அம்பலம் என்று அவரவர் பெயரோடு மருவிக் கொண்டது.

தொண்டமான்கள் படைத்தலைவர்களாகவும், தளபதிகளாக வும் சில சமயம் குறுநில மன்னர்களாகவும் விளங்கினார்கள்.

பிற்காலத்தில் குமாரவேல் அம்பலம் என்று அழைக்கப் பட்ட சிறுவன் குமாரவேல், மூனுபுதூர் கிராமத்தைப் பிறப்பிடமாகக்கொண்டவன். அவன் காலத்தில் அவன் குடும் பத்தினர் மூனுபுதூரில் விவசாயிகளாக தொழில் செய்து வந்தார்கள். நிலபுலன்களோடு தான் குமாரவேலின் முன் னோர்கள் இருந்தார்கள். ஆனால், பின்னர் அவர்களுடைய பொருளாதார நிலை பாதிப்புற்றது.

அதற்கு காரணம் பல ஆண்டுகளாக மழை குன்றி விளைவற்றுப் போனமைதான். அதனால் பஞ்சம் நிலவியது. நில புலன்கள் கைவிட்டுப் போயின. குமாரவேலின் குடும்பத் தையும் வறுமை கப்பிக்கொண்டது.

வருவாய் இல்லாது போன காரணத்தால் மூனுபுதூர், பட்டமங்கலம், திருப்பத்தூர், திருக்கோஷ்டியூர் கிராமத்து மக்கள் மட்டுமல்லாது, செட்டிநாட்டைச் சேர்ந்த மக்களும், ஏன் முழு ராமநாதபுரத்து வறிய மக்களும் வேலை தேடி வெளியூர்களுக்கும், இலங்கை, பர்மா, சிங்கப்பூர், மலேசியா, தென் ஆபிரிக்கா, பிஜி, மொரீஸியஸ் போன்ற வெளிநாடு களுக்கும் போக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இவ்வாறு, குமாரவேலுடைய காலத்துக்கு முன்பாக வேலைக்காக இலங்கைக்கு சென்றுவிட்ட இருவர் மூனுபுதூர் வந்திருந்தார்கள். ஒருவர் பெயர் மருதப்பன். மற்றவர் முத்தையா.

மருதப்பன், இலங்கையில் கம்பளைப்பகுதியில், காபி தோட்டம் ஒன்றில் கங்காணியாக வேலை பார்த்தார். முத்தையா அதே தோட்டத்தை அடுத்து ஒரு பலசரக்கு கடை வைத்திருந்தார். அவருக்கு கம்பளையிலும் ஒரு கடையிருந்தது. முத்தையா ஒரு வகையில் இளைஞன் குமாரவேலுவுக்கு தூரத்து உறவினருமாவார்.

கம்பளையில் ஒரு காபி தோட்டத்தில் வேலை செய்வதற்கு மேலதிக ஆட்கள் தேவைப்பட்டார்கள். வெள்ளைக்காரத் தோட் டத்துரை மருதப்பன் கங்காணியை அழைத்து கையில் பணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்து, இந்தியாவுக்குச் சென்று வேலையாட்களை அழைத்து வருமாறு கேட்டுக் கொண்டார்.

மருதப்பன் கங்காணி புறப்பட்டபோது, ஒரே ஊர்க் காரரான முத்தையாவும் அவருடன் சேர்ந்து கொண்டு மூனு புதூர் போய்ச் சேர்ந்தார்கள். முத்தையாவுக்கும் கிராமத்தில் சொந்த வேலைகள் இருந்தன.

மூனுபுதூரை அடைந்த மருதப்பன், அந்தக் கிராமத்தில் வேலையற்றிருந்தவர்களை அழைத்து ஒரு சிறிய கூட்டம் போட்டார். கூட்டம் முதல் நாள் மாலையில் சோலை அம்மன்கோவிலில் நடைபெற்றது.

மூனுபுதூரின் வடபால் ஒரு சிறிய சோலை இருந்தது. ஐந்தாறு புளிய மரங்களும், புன்னை மரங்களும், கொன்றை, ஆத்தி மரங்களும் அந்த சோலையில் நின்றன. ஒரே ஒரு வேப்ப மரம் நடுவில் நின்றது. அந்த மரத்தின் அடியில் ஒரு கல் மேடை. அந்த மேடையின் மீது செப்புத்தகட்டில் அடித்துப் பதித்த அம்மனின் முகம். முன்னால் ஒரு இரும்பு விளக்கு. இவ்வளவு தான் கோயில். மேலே கூரை கிடையாது.

இந்தச் சோலையும் கோயிலும் இப்போது அங்கு இல்லை. 1906 அல்லது 1907ஆம் ஆண்டில் அடித்த ஒரு பெரும் புயலின் போது இந்தச் சோலையில் நின்ற மரங்கள் எல்லாம் அடிசாய்ந்து விட்டதாக மூனுபுதூர் பெரியவர்கள் கூறிக்கொள்கிறார்கள்.

மூனுபுதூர் மக்கள் ஏதாவது ஒரு பொது விஷயத்தைப் பற்றி கூடித் தீர்மானிப்பதானால் சோலை அம்மன் கோவிலடியில் தான் கூடுவார்கள். அன்றும், மருதப்பனின் வேண்டுகோளின் படி, வாலிபரும், நடுவயதினருமான ஆடவர் பலர் அங்கு கூடினார்கள். ஒரு தீப்பந்தம் கோவிலின் முன் வெளிச்சம் காட்டி நின்றது.

அந்த நாட்களில், இந்தியாவிலிருந்து இலங்கைக்கு தொழிலாளர்களை அழைத்து வருவது என்பது வெகு சிரமசாத்தியமான காரியமாக இருந்தது. ஒன்று, தேசம் விட்டுத் தேசம் போக மக்கள் பயந்தார்கள். இன்னொன்று, இலங்கையின் காபி காட்டையும், பாம்பும் புலியும் வாழும் மலைநாட்டையும், அங்கு நிலவிய வெடவெடக் குளிரையும் பற்றி ஏற்கனவே கேள்விப் பட்டிருந்தவர்கள் இலங்கை போகத் தயங்கினார்கள்.


அதனால், பல உபாயங்களைக் கையாண்டு வேலையாட்களைக் கவர்ந்து இலங்கைக்கு இழுத்து வர வேண்டியிருந்தது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோஷ்டியூர்


திருக்கோஷ்டியூர் ஸ்ரீ சௌமிய நாராயணப் பெருமாள் திருக்கோவில். பக்கத்தில் : திருவாயில் கோபுரம்
கீழே : நான்கு தளங்களைக் கொண்ட அஷ்டாங்க விமானத்தின் அழகிய தோற்றம்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# தலைவனை தொண்டுக்கு தந்த தந்தை



தொண்டமானுடைய அன்புத் தந்தையார் குமாரவேல்
என்ற கருப்பையா பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனயனை உலகுக்கு ஈந்த அன்னை



தொண்டமானுடைய அன்புத் தாயார் சித்தம்மையார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாரதப் பிரதமர் பண்டிட் ஜவாஹர்லால் நேரு
இலங்கைக்கு வந்திருந்த போது :
திருமதி. கோதை தொண்டமான், திரு. தொண்டமான்,
இலங்கையின் கவர்னர் ஜெனரல் சேர் ஒலிவர் குணதிலக,
பண்டிட் ஜவாஹர்லால் நேரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புது டில்லியில் திருமதி இந்திரா காந்தியின் காரியாலயத்தில்




வீட்டில் உபசாரம்
திரு தொண்டமான், திருமதி கோதை தொண்டமான்,
நேருவின் சகோதரி திருமதி விஜயலஷ்மி பண்டிட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ் நாடு முதலமைச்சர் திரு. அண்ணாதுரையுடன்



தமிழ்நாடு மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர்
திரு. ம.பொ. சிவஞானத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ் நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதியுடன்




தாஜ்மஹாலுக்கு விஜயம் செய்தபோது
திரு. தொண்டமான் — திருமதி தொண்டமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மாநாடு ஒன்றில் தலைவர் தொண்டமான் வீர முழக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதலாவது இந்திய கவர்னர் ஜெனரலாக விளங்கிய சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாருடன் தொண்டமான். மத்தியில் காணப்படுபவர் அப்போதைய இலங்கை இந்திய தூதுவர் கண்டேவியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கையின் முதலாவது அரசியல் சத்தியாகிரகப் போராட்டம். மூன்றாவதாக உள்ளவர் தொண்டமான்.



தொண்டமானுடைய நான்கு பேத்திகளும், ஒரு பேரரும் — சிறு பிராயத்தில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளரை இலங்கைக்கு அழைத்து வர இந்தியா சென்ற கங்காணிமார் கையோடு சில பொருட்களை எடுத்துச் சென்றார்கள். அவற்றில் சில, மைசூர் பருப்பு, உருளைக் கிழங்கு, மாசிக்கருவாடு, தேங்காய் எண்ணெய், கித்துள்முளை, காபி பொட்டலம் போன்றனவாம்.

இந்தியாவில் துவரம் பருப்புத்தான் இருந்தது. வண்ணமும் ருசியும் நிரம்பிய மைசூர் பருப்பு அங்கு கிடைக்கவில்லை. கங்காணிமார்கள் தொழிலாளருக்கு சில சமயம் சாப்பாடு போட்டார்கள். முத்துச் சம்பா சோற்றின் மீது மாசிக் கருவாடும், உருளைக்கிழங்கும் சேர்த்து ஆக்கிய மைசூர் பருப்புக் குழம்பை ஊற்றினார்கள். கமகம என்று வாசனை வீசும் தேங்காய் எண்ணெய்யில் பொரித்த அப்பளத்தையும் பரிமாறினார்கள். முடிவில் காபியும் கித்துள் கட்டியும் கொடுத்தார்கள்.

இவற்றின் சொல்லொணுச் சுவையில் தொழிலாளர்கள் தம் மனதையும் நாக்கையும் பறி கொடுத்தார்கள்.

இந்த ரஸமான சாப்பாட்டோடு, சில கங்காணிமார்கள் தமது புளுகு மூடையையும் அவிழ்த்து விட்டார்கள்.

இலங்கை ஒரு சுவர்க்க பூமி, அங்கு காபி மரத்தின் மீது கித்துள் முளைகள் விளைகின்றன என்றார்கள். அடியில் தோண்டினால் மைசூர் பருப்பு குவியல் குவியலாகக் கிடைக்கும் என்றார்கள். பிற்காலத்தில் தேயிலை உற்பத்தியான போது, தேயிலை செடியின் வேரைத் தோண்டி முறித்தெடுத்து உலர்த்தினால் அது ருசிமிக்க மாசிக்கருவாடு ஆகிவிடும் என்றார்கள்.

இவ்வளவு பொருள்களையும் அங்கு, அதாவது இலங்கையில், இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம் என்றார்கள்.

இப்படியான கதைகளைக் கேட்டு மதிமயங்கி இலங்கை புறப்பட்ட தொழிலாளர்கள் அனந்தம். அனந்தம்.

ஆனால், நம்பமுடியாத புளுகுகளை எல்லாம் அன்று மருதப்பன் கங்காணி அவிழ்த்து விடவில்லை. காரணம், மூனுபுதூர் மக்கள் இயற்கையாகவே புத்திசாலிகள், விஷயமறிந்தவர்கள் என்பதை அவர் உணர்ந்திருந்தார்.

அதனால், இத்தகைய கட்டுக் கதைகளை அவர் சொல்லவில்லை. உண்மைகளையே அவர் எடுத்துக் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் சொன்னார் :
"என்னோடு இலங்கைக்கு வாருங்கள். உங்களுக்கு நல்ல வேலை தேடித் தருகிறேன். நல்ல சம்பளம் வாங்கித் தருகிறேன். இருப்பதற்கு வீடும், உண்பதற்கு சத்துள்ள உணவும் பெற்றுத் தருகிறேன். நீங்கள் உழைத்துச் சம்பாதித்து உங்கள் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் நிறைய செல்வம் தேடிக் கொண்டு வரலாம். மனைவியையும் பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு வந்தால், இரண்டு மடங்கு, மூன்று மடங்கு சம்பாதிக்கலாம்" என்றார்.
கூட்டத்தில் இருந்த ஒருவன் எழுந்து கேட்டான் :
"அங்கு பெரும் குளிராமே. காட்டு மிருகங்களும் பாம்பு பல்லிகளும் உண்டாமே. உயிர் ஆபத்து இல்லையா?" — என்று.
மருதப்பன் கங்காணி பதில் சொன்னார் :
"ஆம், உண்மைதான். குளிர் உண்டுதான். ஆனால் அது இதமான குளிர். ராமநாதபுரம் ஜில்லாவில் காய்வது போல அங்கு கொடிய வெய்யில் இல்லை. தண்ணீர்ப் பஞ்சம் இல்லை. எங்கும் பச்சைப் பசேல் என்றிருக்கும். வண்ண வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கும். மலையருவிகள் சல சல என்று ஓடும். அங்கு நடமாடித் திரிய மனோகரமாக இருக்கும். குளிர் அதிகரித்தால் போர்த்துக் கொள்ள தடித்த கம்பளிகளை தோட்டத்துரை, வெள்ளைக்காரன், இனாமாகத் தருவான். காட்டு மிருகங்கள் வந்தால் அவன் தனது இரட்டைக் குழல் துப்பாக்கியால் அவைகளைச் சுட்டுப் பொசுக்கி, நம்மையெல்லாம் கடவுள் போலக் காப்பாற்றுவான். வார முடிவிலும், மாத முடிவிலும் நமக்கு கை நிறையச் சம்பளத்தை அள்ளித் தருவான்"

இப்படிக் கூறினார் மருதப்பன் கங்காணி. இந்த மயக்கு மொழிகளால் அனைவரும் கவரப்பட்டனர். பலர் இலங்கை வருவதாக ஒப்புக் கொண்டனர்.

அந்த வேளையில் கூட்டத்தின் நடுவிலிருந்து ஒரு சிறு பையன் எழுந்து, இரு கைகளையும் கட்டிக் கொண்டு நின்று, தயங்கித் தயங்கி ஒரு கேள்வி கேட்டான்.
அந்தக் கேள்வி இது தான் :
"சிறு பையன்களும் அங்கு போகலாமா? அவர்களுக்கும் அங்கு வேலை கிடைக்குமா? சம்பளமும் கிடைக்குமா?" என்பது தான் அந்தக் கேள்வியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகுந்த சந்தோஷத்தோடு பதிலளித்தார் மருதப்பன்.

"ஆமா, பையன்களும் வரலாம். பத்து வயதுக்கு மேற்பட்ட பையன்களுக்கெல்லாம் வேலையும் கிடைக்கும். சம்பளமும் கிடைக்கும். நான் சொன்ன மற்ற இலவச சலுகைகளும் கிடைக்கும்"

மருதப்பன் கங்காணி பதில் சொல்லி முடிப்பதற்குள், முன் பின் யோசியாமல் மிகுந்த அடக்கத்தோடு "நானும் இலங்கை வருகிறேன்" என்ருன் அந்தப் பையன்.

அவன் வேறு யாருமல்லன். ஏற்கனவே திருக்கோஷ்டியூர் சௌமிய நாராயணப் பெருமாள் ஆலயத்தில் அறிமுகமான அந்தப் பையன் குமார வேலு தான்!

கூட்டத்திலிருந்த அனைவரும் ஆச்சரியத்தோடு அந்தப் பையனைத் திரும்பிப் பார்த்தார்கள். அவன் முகத்தில், அங்கு எரிந்து கொண்டிருந்த தீப்பந்த வெளிச்சத்தில், ஓர்மையும், உறுதியும் சுடர் விட்டுப் பிரகாசித்தன.

மீண்டும் அந்தப் பையன் குரல் கொடுத்தான் : "நானும் உங்களோடு இலங்கைக்கு வருகிறேன்"

அந்தப் பையனின் தோற்றத்தையும், பேச்சையும் கேட்டவர்கள் அயர்ந்து போனுர்கள்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து கூட்டத்திலிருந்தவர்கள் — அனேகமாக எல்லோரும், சடசடவென்று தங்கள் தங்கள் பெயரைக் கொடுத்துப் பதிந்து கொண்டார்கள்.

குமாரவேல் அம்பலத்தின் பெயரும் பதியப்பட்டது !

இந்தக் கூட்டம் முதல் நாள் மாலையில் நடைபெற்றது. மறுநாள் காலையில் எழுந்ததும் குமாரவேல், திருக்கோஷ்டியூர் ஆலயத்தை நாடி நடையைக் கட்டினுன்.

திருக்கோஷ்டியூர் பெருமாள் முன்னிலையில் நின்று அவரை வேண்டிக் கொண்டான். திடசங்கல்பம் செய்து கொண்டான்.

"பெருமாளே, சௌமிய மூர்த்தியே! நான் இலங்கை செல்லப்போகிறேன். நீர் தான் எனக்கு எங்கும், எதிலும், துணையாக நிற்க வேண்டும். என் உழைப்புக்கு உரம் அளிக்க வேண்டும். நான் ஏற்கும் காரியங்கள் அனைத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் சித்தியடைந்து, என் கிராமமும் மக்களும் மதிக்கக் கூடிய நிலையை அடைந்து, உம் அருளால் சிறப்புடன் இந்த மூளுபுதூருக்கு திரும்ப வேண்டும். இலங்கையில் நான் எந்த வித விக்கினமும் இல்லாமல் வாழ வழி செய்ய வேண்டும். கைமாருக என்னுல் முடிந்த காணிக்கையை நான் உமது திருவடியில் செலுத்துவேன் இது என் நேர்த்திக் கடன்!"

அன்று குமாரவேல் செய்த அந்த நேர்த்திக் கடனை அவன் சில வருடங்களுக்குப் பின்பு கோலாகலமாக நிறைவேற்றி வைத்தான்

அவன் அன்று செய்த நேர்த்திக் கடன் தான் என்ன?

அதன் விவரத்தைப் பின்னுல் ஓர் அத்தியாயத்தில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

# குமாரவேலின் இலங்கைப் பயணம்

சோலை அம்மன் கோவில் கூட்டம் நடைபெற்ற ஐந்தாம் நாள் மருதப்பன் கங்காணி தலைமையில் சுமார் 40 பேர் இலங்கை நோக்கிப் புறப்பட்டார்கள். இவர்களில் பலர் ஆண்கள், சிலர் பெண்கள், ஒரே ஒரு பையன். அவன் தான் குமாரவேல்!

இவர்கள் கால் நடையாக தொண்டி சென்று, அங்கிருந்து படகு ஏறி, பாம்பன் என்ற இடத்தை அடையத் திட்டமிட்டி ருந்தார்கள்.

முத்தையா தனியாக மதுரை சென்று, அங்கிருந்து ரயில் மூலம், தூத்துக்குடி போய், தூத்துக்குடியிலிருந்து கப்பல் ஏறி கொழும்பு சென்றடையத் திட்டமிட்டிருந்தார்.

பாம்பனை அடைந்த மருதப்பன் கோஷ்டியினர் கால் நடையாக மண்டபம் வந்து சேர்ந்தார்கள். அங்கிருந்து பாய் படகு மூலம் மன்னாரில் உள்ள வங்காலை என்னும் இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

கடல் பயணத்தின் போது குமாரவேல் மிகவும் உற்சாக மாகவும், மகிழ்ச்சியாகவும் காணப்பட்டான். வீட்டையும் ஊரையும் விட்டு வருவது அவனுக்கு கவலையாக இருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புது இடத்துக்குப் போகிறோமே என்ற பயமோ, தயக்கமோ அவனிடம் காணப்படவில்லை.

தான் செய்த முதல் கடல் பிரயாணத்தைப் பற்றி பிற் காலத்தில் குமாரவேல் மிகுந்த பெருமையோடு பலரிடம் சொல்லிக் கொண்டதுண்டு.

அந்தக் காலத்தில் இலங்கைக்கு வந்து சேருவதற்கு இரண்டு மார்க்கங்கள் இருந்தன. ஒன்று தரைமார்க்கம், மற்றது கப்பல் மார்க்கம், ஆகாய மார்க்கம் கிடையாது!

தரைமார்க்கம் என்பது மன்னாரிலிருந்து இலங்கையின் மத்திய பகுதிகளுக்கு, குறிப்பாக மாத்தளைக்கும் கண்டிக்கும் கால் நடையாக வந்து சேருவது.

மன்னாருக்கு, இந்தியாவிலிருந்து படகில் தான் வரவேண்டும். படகில் வருவதற்கும் இரண்டு கடல் பாதைகள் இருந்தன. இந்தியாவில் தேவிபட்டணம் என்ற இடத்திலிருந்து புறப்பட்டு இலங்கையில் பேசாலை என்னும் இடத்துக்கு வந்து சேருவது ஒரு பாதை. தென் மேற்குப் பருவப் பெயர்ச்சி காற்று வீசும் வேளையில் இந்தியர்கள் இந்தப்பாதையில் வந்தார்கள்.

இந்தியாவில் மண்டபம் என்னும் இடத்திலிருந்து படகேறி இலங்கையில் வங்காலை எனும் இடத்தில் வந்து இறங்குவது மற்றப் பாதை. வடகிழக்குப் பருவப் பெயர்ச்சி காற்று வீசும் வேளையில் இந்தப் பாதை தேர்ந்தெடுக்கப்பட்டது. பெரும் பாலும் காற்றை நம்பியே படகுகள் செலுத்தப்பட்டதால், அதற்கேற்றபடியும், கடல் கொந்தளிப்பை அனுசரித்தும் பாதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

கப்பல் மார்க்கமாக வருபவர்கள் ராமேஸ்வரத்திலிருந்து அல்லது தூத்துக்குடியிலிருந்து கப்பல் ஏறி, கொழும்பை வந்து அடைந்தார்கள். கப்பல் என்பது நீராவிக் கப்பல் தான். எண்ணெய்க் கப்பல் அல்ல.

தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையே வாரத்துக்கு ஒரு தடவை கப்பல் சேவை நடைபெற்றது. பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நவிகேசன் கம்பனி என்ற நிறுவனம் இந்தக் கப்பல் சேவையை நடத்தி வந்தது.

இது தவிர, ஏஸியாட்டிக் ஸ்டீம் நவிகேசன் கம்பனி என்ற நிறுவனமும் கப்பல் சேவை நடத்தியதுண்டு. ஆனால் இந்த சேவை குறிப்பிட்ட கால அட்டவணைப்படி நடைபெறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரக்கும், ஆட்களும் போதிய அளவு சேர்ந்தால் மட்டும் சேவை நடத்தப்பட்டது.

தேவிபட்டணம், பாம்பன், மண்டபம் ஆகிய இடங்களி லிருந்து மன்னார் வந்தடைய தலைக்கு 25 சதம் வீதம் படகு கட்டணம் அறவிடப்பட்டது.

தூத்துக்குடியிலிருந்து கொழும்புக்கு வர தலைக்கு ரூபா 3 கப்பல் கட்டணம் வசூலிக்கப்பட்டது.

அந்தக் காலத்தில் ரூபா 3 என்பது பெரிய அளவு பணம் ஆகும். அது இன்றைய ரூ 300க்கு சமம் என்று சொல்லலாம். எனவே, நல்ல பண வசதி படைத்தவர்கள், அல்லது அவசர காரியமாக வருபவர்கள் மட்டுமே கப்பல் பிரயாணத்தை மேற் கொண்டார்கள்.

முத்தையா ஓரளவு பணக்காரர் என்ற காரணத்தால் தாம் கப்பலில் இலங்கை வருவதாக மருதப்பன் கங்காணியிடம் சொல்லி அவர்களை முன்பதாக அனுப்பி வைத்தார். அத்தோடு, குமாரவேல், தமது தூரத்து உறவினனாக இருந்ததால் அவனு டைய பிரயாணச் செலவுக்கென சிறு தொகை பணமும் மருதப் பனிடம் கொடுத்தனுப்பினார்.

தரைமார்க்கமாக வருபவர்கள் தலைமன்னாரிலோ, பேசாலையி லோ அல்லது வங்காலையிலோ இருந்து கோஷ்டி கோஷ்டியாக நடக்கத் தலைப்படுவார்கள். அவர்கள் நடந்து வந்த வழி "வட பாதை" எனப்பட்டது.

உயிலன்குளம், முருங்கன், கொம்பறைஞ்சகுளம், வண்ணான் கல்லு, செட்டிகுளம், மான்குளம், இறம்பைக்குளம், மதவாச்சி, இறம்பாவை, மிஹிந்தலை, திரிப்பாளை, தம்பளை ஆகிய கிராமங்களைத் தாண்டி அவர்கள் மாத்தளையை வந்தடைய சில சமயம் ஏழு நாள் முதல் பத்து நாள் வரை தேவைப்பட்டது.

வழியில் ஆங்காங்கே தரித்து, ஆறி, சமைத்துண்டு, நோய்க்கு சிகிச்சை பெற்று வந்து சேர்வார்கள்.

கடு வழியாகையால் வழியில் ஒரு சிலர் வைசூரி, வயிற் றோட்டம் போன்ற நோய்களால் மரித்து விடுவதும் உண்டு. இன்னும் சிலர் வனவிலங்குகளுக்கு இரையாகி விடுவதும் உண்டு.

பயணத்தின் இறுதிக் கட்டம் தான் பயங்கரமானது. மிஹிந்தலையிலிருந்து தம்பளை வருவதும், தம்பளையிலிருந்து மாத்தளை வருவதும் ஆபத்தானது. யானை, புலி, கரடி உறையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டினூடாக இந்தப் பாதை அமைந்திருந்தது.

நீண்ட வடபாதையில், அரசாங்கம் இடையிடையே தங்கும் மடங்களேயும், மருத்துவ நிலேயங்களேயும் அமைத்திருந்தது. என்ருலும், இந்த நெடும் வழியில், கரடுமுரடான ரோட்டுப் பாதையில் நடந்து வருவது என்பது இலேசுப்பட்ட காரியம் அல்ல. உறுதிப்பாடு உடையவர்களே மனம் சலிக்காமல் நடந்தார்கள்.

இவ்வளவு தூரம் நடப்பது குமாரவேலுவுக்கு ஒரு பெருங்காரியமாக இருக்கவில்லே. அவன் வயதில் சிறுவனுக இருந்தும் கூட, அவன் மனதிலே இயற்கையாகவே குடிகொண்டிருந்த திண்மை அவனுக்கு வலுவையும், ஊக்கத்தையும் கொடுத்தது. அவன் ஓடி ஓடி நடக்கலானுன்.

மருதப்பன் கோஷ்டி மன்னுரில் வந்திறங்கி, எட்டாவது நாள் மாத்தளேயை அடைந்தது. அங்கு எல்லோரும் மாத்தளே முத்துமாரி அம்மன் கோவிலில் முகாமிட்டனர். ஒன்பதாவது நாள் கண்டியை அடைந்தனர். ஒரு இரவு கண்டி பிள்ளேயார் கோவிலில் கழிந்தது.

வழியில் விக்கினம் எதுவும் இன்றி வந்து சேர்ந்ததால் மேற்கூறிய இரண்டு கோவில்களிலும் சிறிய பூஜைகள் நடத்தப் பட்டன.

சரியாகப் பத்தாவது நாள் அனேவரும் கம்பளேயைச் சென்றடைந்தனர்.

அவர்களுக்கு முன்னரே முத்தையா கம்பளேக்குப் போய்ச் சேர்ந்து விட்டார். அவர் தூத்துக்குடியிலிருந்து 24 மணித்தியாலத்தில் நீராவிக் கப்பல் மூலமாக கொழும்பு வந்து, அங்கிருந்து ரயிலில் கண்டி சென்றடைந்தார்.

இது நடந்தது 1873ஆம் ஆண்டு. 1867ஆம் ஆண்டிலேயே கொழும்பு கண்டி ரயில்பாதை போடப்பட்டு விட்டது. அதனுல் கப்பலில் கொழும்பு வந்தடைந்த இந்தியர்கள் கண்டி வரை ரயிலில் சென்று, அங்கிருந்து மலேநாட்டின் காபி தோட்டங்களே கால் நடையாகவே அடைந்தார்கள்.

1860ஆம் ஆண்டில் பிறந்தவரான குமாரவேல் கம்பளேயை அடைந்ததும் 1873ஆம் ஆண்டில் தான். அப்போது அவருக்கு வயது 13 நிரம்பியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதப்பன் கங்காணி அழைத்து வந்த தொழிலாளர்களை எல்லாம் காபி தோட்டத்தில் சேர்க்கும்படியும், குமாரவேலுவை தன்னோடு விட்டு விடும்படியும் கேட்டுக் கொண்டார் முத்தையா.

குமாரவேலுவை தன் வீட்டோடு வைத்துக் கொண்டு, தமது கடையில் ஒரு சிப்பந்தியாக அவனைச் சேர்த்து வியாபாரம் பழக்கப் போவதாகவும் அவர் சொன்னார்.

காபி தோட்டத்துக்குப் போக வேண்டும். மருதப்பன் சொன்ன மலையையும், காட்டையும், அருவியையும், மலர்களையும், வனவிலங்குகளையும் பார்க்க வேண்டும், அங்கு வேலை செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்ட சிறுவன் குமாரவேலுவுக்கு முத்தையா சொன்ன ஆலோசனை அவ்வளவாகப் பிடிக்கவில்லை.

"நான் தோட்டத்துக்குத் தான் போகப் போகிறேன்" என்றான் குமாரவேல்.

"நீ தோட்டத்துக்குப் போகலாம். என் கடையில் உள்ள சாமான்களையும் எடுத்துக் கொண்டு மாட்டு வண்டியில் நீ தோட்டங்களுக்குப் போகலாம். சாமான்களைக் கொடுத்து வரலாம். தோட்டங்களையும் பார்க்கலாம். நீ செய்யும் வேலைக்கு நான் சம்பளம் போட்டுத் தருவேன்" என்று வெகு ஆதரவாக பதில் கூறினார் முத்தையா.

அவர் சொல்வதையும் ஏற்றுக் கொள்ளலாம் போல இருந்தது குமார வேலுவுக்கு. "சரி" என்றான் குமாரவேல்.

அதன் பிரகாரம் குமாரவேல், முத்தையாவின் வீட்டிலும், பின்னர் கடையிலும் ஒரு வேலைக்காரன் ஆனான்.

இப்படியான ஏற்பாடு ஒன்று இடையில் குறுக்கிட்டது, குமாரவேலுவுக்கு பிற்காலத்தில் ஒரு பெரும் அதிஷ்டமாக அமைந்து விட்டது.

இந்தியாவிலிருந்து நேரே தோட்டத்துக்கு வேலைக்கு வந்தவர்கள் ஒரு ஒப்பந்த அடிப்படையில் தான் தோட்டத்தில் வேலைக்குச் சேர முடியும். அப்படிச் சேர்பவர்களை Indenture Labour என்பார்கள். இன்டென்ஷர் லேபர் என்றால் 'ஒப்பந்த தொழில்' என்று பொருள்.

ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு சேர்பவர்கள் பல்வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டாக வேண்டும். ஏறக்குறைய, தொழிலாளியை தோட்டத் துரையிடம் ஆபிரிக்க அடிமைபோல் கட்டுப்படுத்தி வைப்பது இந்த 'இன்டென்ஷர்' எனும் ஒப்பந்த மாகும்.

ஒரு தோட்டத்தில் ஒப்பந்தக் கூலியாகச் சேர்ந்து விட்டால், அந்த தொழிலாளி —

அந்தத் தோட்டத்தை விட்டு வெளியேற முடியாது.

அந்தத் தோட்டத்தை விட்டு இன்னொரு தோட்டத்தில் வேலை தேட முடியாது.

அந்தத் தொழிலாளியின் மனைவியும் பிள்ளைகளும் அந்தத் தோட்டத்திலேயே வேலை செய்ய வேண்டும்.

அந்தத் தோட்டத்து லேன் வீட்டிலேயே வசிக்க வேண்டும்.

வேலையை ராஜிநாமாச் செய்தால் நேரே இந்தியாவுக்குப் போய்விட வேண்டும். இந்த நாட்டில் வேறு வேலை தேட முடியாது.

இப்படியெல்லாம் பயங்கரக் கட்டுப்பாடுகள் இருந்தன.

குமாரவேலு வந்த உடனேயே தோட்டத்து வேலையில் சேராமல் வெளியே இருந்தமையினால் இந்த 'ஒப்பந்த தொழில்' என்ற பொறியில் அகப்படாமல் தப்பிக் கொண்டார். பின்னர் அவர் தோட்டங்களில் வேலைக்குச் சேர்ந்த போது எந்த ஒரு கங்காணியின் கோஷ்டியிலும் சேராமல் உள்ளூர்க்காரர் ஒருவர் வேலையில் சோந்து உழைப்பது போல் தொழில் ஆற்றும் வாய்ப்பு அவருக்கு கிடைத்தது. அதனால் அவர் ஒரு சுயேச்சை யாளராக வாழவும் சம்பாதிக்கவும் வழி ஏற்பட்டது. இது அவருக்கு திருக்கோஷ்டியூர் பெருமாள் வகுத்துக் கொடுத்த வழியேயல்லவா?

முத்தையாவின் வீட்டில் வேலையாளாக சேர்ந்த குமார வேல் பல இன்னல்களை அனுபவிக்க வேண்டியிருந்தது. முத்தையா ஆரம்பத்தில் தோன்றியபடி ஒரு நல்ல மனிதராக இருக்கவில்லை. கடு நெஞ்சம் படைத்த ஒரு முதலாளியாகவே காணப்பட்டார்.

குமாரவேல் என்ற பெயர் கூட அவருக்கு அருவருப்பாக இருந்தது. ஒரு வீட்டு வேலைக்காரனை குமாரவேல் என்று அழைப்பது அவனுக்கு அதிகபட்சம் கௌரவம் கொடுப்பது போல அவருக்குத் தோன்றியது.

அதனால், அவர் குமாரவேலை ஒரு நாள் கூப்பிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உன்னை நான் இனிமேல் கருப்பன் என்று தான் அழைப்பேன்" என்ருர்.

இப்படி பெயரை மாற்றுவதால் குமாரவேல் கவலைப் படுவான் என்று முத்தையா நினைத்தார். குமாரவேல் கவலைப் படவில்லை. அதற்குப் பதில் அவன் மகிழ்ச்சியே அடைந்தான்.

"ரோஜாவை எந்தப் பெயரால் அழைத்தாலும் அது மணம் குன்றிவிடப் போவதில்லை" என்று உலக மகா கவி ஷேக்ஸ்பியர் கூறியிருக்கிருர். இந்த வாக்கியத்தை குமாரவேல் அறிய மாட்டான். ஆயினும் அந்த வாக்கியத்தின் உட்பொருள் எதுவோ அது அவன் உள்ளத்தில் உதித்ததோ என்னவோ யார் அறிவார்!

'கருப்பன்' என்றதும் குமாரவேல் மகிழ்ச்சி அடைந்ததற்கு காரணம் இருந்தது. கருப்பன் என்பது குமாரவேலுடைய குடும் பத்தின் குலதெய்வம் ஆகும். திருப்பத்தூரில் கோட்டைக் கருப்பையா சாமி கோவில் இருக்கிறது. அந்தக் கோவிலுக்கு சென்று வழிபட்டிருக்கிருன் குமாரவேல். அவனுடைய மூதாதையர் களில் ஒருவர் கருப்பையா சாமி கோவிலில் சிலை வடித்து வைக்கப் பட்டிருக்கிருர் என்பதையும், அந்த சிலைக்கு தினமும் தீபா ராதனை செய்யப்பட்டு வருகிறது என்பதையும் குமாரவேல் அறிந்திருந்தான்.

எனவே, கருப்பையா சாமியின் பெயர் அவனுக்குப் புதுப் பெயராகச் சூட்டப்பட்டதில் அவன் திருப்தியே அடைந்தான். அன்று முதல் அவனை கருப்பன் என்று முத்தையா அழைத்தார். ஏனையோர் கருப்பையா என்று கூப்பிட்டார்கள்.

முத்தையா ஈவிரக்கமற்ற எஜமானனுக இருந்தார். பல சந்தர்ப்பங்களில் குமாரவேலுவை அடித்துத் துன்புறுத்தினுர்.

முத்தையா தமது கடைக்குப் போய்விட்டு இரவு வெகு நேரம் சென்று வீட்டுக்கு வருவார். வீட்டில் குமாரவேல் மட்டும் இருந்தான். அதனுல் தாம் வீடு திரும்பும் வரை குமாரவேல் நித்திரை கொள்ளாமல் விழித்திருக்க வேண்டும் என்பது முத்தையாவின் கட்டளை.

குமாரவேல் வயதில் சிறியவன் தானே. சில வேளைகளில் தூங்கி விடுவான். முத்தையா வந்து கதவில் தட்டோ தட்டென்று நீண்ட நேரம் தட்ட வேண்டியிருக்கும். அதன் பின்னர் தான் குமாரவேல் விழித்துக் கதவைத் திறப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தையாவுக்கு கோபம் வந்து விடும். அவனைப் போட்டு அடித்துத் தீர்த்து விடுவார்.

இந்த உபத்திரவத்திலிருந்து தப்ப வேண்டுமே என்று ஆலோசித்தான் குமாரவேல். அப்போதே அவன் வெகு புத்தி சாலியாகத்தான் இருந்தான். ஒரு யுக்தியை மேற்கொண்டான்.

கதவைச் சாத்திவிட்டு, துண்டை விரித்து கதவோடு அணைந்து கொண்டு படுத்துத் தூங்கி விடுவான். முத்தையா வந்து கதவில் தட்டியதும் துடித்து வாரிக் கொண்டு எழுந்து கதவைத் திறப்பான்.

முத்தையாவுக்குப் பரம சந்தோஷம் ஏற்பட்டு விடும். ஆஹா, கருப்பன் நல்ல பொறுப்புணர்ச்சியான பையன் ஆகி விட்டான் என்று அவர் நினைத்துக் கொண்டார்.

இதனால், குமாரவேலுவுக்கு பிரமோஷன் கிடைத்தது. அவனைத் தமது கடையில் ஒரு எடுபிடி வேலைக்காரனாகச் சேர்த்துக் கொண்டார். சம்பளமும் போட்டுக் கொடுத்தார். சம்பளம் என்றால் எவ்வளவு தெரியுமா? சாப்பாடும் மாதம் அரை ரூபாவும் தான். இந்த அரை ரூபாவே அந்தக் காலத்தில் பெரிய சம்பள மாகும்.

குமாரவேலுவுக்கு கடையில் வேலை செய்யக் கிடைத்ததும் திருக்கோஷ்டியூர் பெருமாளின் திருவருள் என்றே சொல்ல வேண்டும். கடையில் வேலை செய்ததால் வியாபாரக் கலையைப் பயின்று கொண்டான் குமாரவேல். இந்தப் பயிற்சி அவனுக்கு பின்னால் வெகுவாகப் பயன்பட்டது.

அவன் பணம் சம்பாதிப்பதற்கும், மக்களோடு சுமுக மாகப் பழகுவதற்கும் வியாபாரக் கலை அவனுக்கு உறுதுணையாக நின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4

# எந்தத் தொழிலேயும் ஏற்றமுடன் செய்தவர்

ஆரம்பத்தில், கம்பளைப் பகுதியில் உள்ள தோட்டம் ஒன்றில், நாள் ஒன்றுக்கு 13 சதம் சம்பளம் பெற்று, தோட்டத் தொழிலாளியாக வாழ்க்கை ஆரம்பித்த ஒருவர், பின்னர் இலங்கையிலேயே சகல மதிப்பும் மரியாதையும் பெற்ற தோட்ட முதலாளியாக, ஒரு கோடீஸ்வரராக, மாறிய நம்ப முடியாத உண்மைக்கதைதான் குமாரவேல் என்றும் கருப்பையா பிள்ளை என்றும் அழைக்கப்பட்டவரின் கதையாகும்.

முத்தையாவிடம் வீட்டு வேலைக்காரனாகவும், கடைச் சிப் பந்தியாகவும் பணியாற்றிய குமாரவேல் அல்லது கருப்பையா வெகு விரைவில் அவரை விட்டு விலகி விட்டான்.

கம்பளையிலிருந்து அவன் கடுகண்ணாவை சென்றான். அங்கு ஒரு காபி தோட்டத்தில், 13 சதத்திற்கு நாள் முழுவதும் வேலை செய்யும் ஒரு தோட்டத் தொழிலாளியாக வேலை தேடிக்கொண்டான்.

குமாரவேல் இப்போது வாலிபர் ஆகிவிட்டதாலும் எல்லாராலும் கருப்பையா பிள்ளை என்று அழைக்கப்பட்ட தாலும் இனி குமாரவேலை இந்நூலில் கருப்பையா பிள்ளை என்று அழைப்பதே பொருத்தமுடையதாகும். இந்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பையா பிள்ளை பின்னர் கருப்பையா கங்காணி என்று அழைக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கதே.

கருப்பையா பிள்ளை ஆகிய குமாரவேல், கம்பளைக்கு வந்து சேர்ந்த போது, இலங்கையின் ரயில் பாதை கண்டி வரைதான் போடப்பட்டிருந்தது. கண்டி ரயில் பாதை 1867ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டது. கண்டியிலிருந்து கம்பளை வரை போடப்பட்ட ரயில் பாதையில் 1873ஆம் ஆண்டில் தான் ரயில் ஓடியது. அநேகமாக கருப்பையா பிள்ளை கம்பளைக்கு வந்து சேர்ந்த பிறகு தான் கம்பளை ரயில் பாதை பூர்த்தி பெற்றிருக்க வேண்டும்.

1875ஆம் ஆண்டளவில் தான் அவர் கடுகண்ணவை தோட்டத்தில் வேலை பெற்றிருப்பார். 1875ஆம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு 13 சதம் கூலி பெற்றவர் 1940ஆம் ஆண்டில் இவ்வுலகை விட்டு மறைந்தபோது பல தோட்டங்களின், பல வியாபார ஸ்தலங்களின், பல போக்குவரத்து ஸ்தாபனங்களின் சொந்தக்காரராக — இலங்கையில் மிகப்பெரிய கோடீஸ்வரர்களில் ஒருவராக அவர் கணிக்கப்பட்டார். 65 ஆண்டுக் காலத்தில் அவர் அடைந்த பெருமை இது. இமாலய வளர்ச்சி! இது. அசகாய சாதனை இது!

1972/74ஆம் ஆண்டுகளில் தோட்டப்பகுதி காணிச் சீர்திருத்தம் ஏற்படுவதற்கு முன், இலங்கையின் மிகப் பெரிய கூட்டுத் தேயிலைத் தோட்டங்களுள் கருப்பையா பிள்ளையின் வெவண்டன் குரூப் தேயிலைத் தோட்டமும் ஒன்றாக விளங்கியது.

கருப்பையா பிள்ளை இலங்கைக்கு வந்த சமயத்தில் இலங்கையில் காபி தோட்டங்களே இருந்தன. கிடைக்கக் கூடிய குறிப்புகளிலிருந்து 1861ஆம் ஆண்டிலேயே இலங்கை மிகப் பெரிய அளவில் காபி கொட்டையை ஏற்றுமதி செய்தது என்று தெரியவருகிறது. அந்தக் காலகட்டத்தில் தான் இந்தியத் தோட்டத் தொழிலாளரும் பெருமளவில் இலங்கை வந்து சேரத் தலைப்பட்டார்கள். அவர்கள் அப்போது தொழிலாளர்கள் (Workers) என்று அழைக்கப்படவில்லை. கூலிகள் (Coolies) என்றே அழைக்கப்பட்டார்கள். இந்தியன் லேபரேர்ஸ் (Indian Labourers) என்பதும் அவர்களுக்கு இன்னொரு பெயராக இருந்தது.

கடுகண்ணவையில் ஒரு காபி தோட்டத்தில் நாள் கூலியாக சேர்ந்த கருப்பையா பிள்ளை தொடர்ந்து பல காபி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டங்களிலும், தேயிலைச் செடிகள் வளர்க்கப்பட்ட பின்னர், பல தேயிலைத் தோட்டங்களிலும் வேலை பார்த்தார்.

மலைநாட்டில், பொகவந்தலாவை, உடபுசலாவை, கம்பளை யில் உள்ள அட்டபாகை, நுாரளையில் உள்ள வெவண்டன் ஆகிய இடங்களில் அமைந்த தோட்டங்களில் எல்லாம் கருப்பையா பிள்ளையின் காலடிகள் பதியலாயின.

வெள்ளைக்காரராகிய பிரிட்டிஷார் இங்கு வந்த சமயத் தில் மலைநாடு என்பது அடர்த்தியான காட்டுப் பிரதேசமாகவே இருந்தது. உயர்ந்த மலைகளையும், பருத்த மரங்களையும், செழித்த செடிகளையும், நெளிந்த கொடிகளையும், வழிந்தோடிய நீரூற்று களையும் கொண்ட இப்பகுதியில் கரடிகளும், சிறுத்தைகளும், காட்டுப் பன்றிகளும், மான் மரை முதலிய இதர மிருகங்களும் பெருமளவில் வசித்தன. மனித சஞ்சாரம் அற்ற இடங்களாகவே இவை விளங்கின.

வர்த்தக நோக்கம் கொண்ட வெள்ளைக்காரர் இந்தக் காட்டுப் பிரதேசத்தையும், மலைச் சரிவுகளையும் செப்பனிட்டு தோட்டங்களாக மாற்றி அமைத்தனர். இந்தியாவிலிருந்து வேலைக்கு ஆட்களை கோஷ்டி கோஷ்டியாக அழைத்து வந்து காட்டை அழித்து முதலில் அங்கு காபி செடிகளையும், பின்னர் தேயிலைச் செடிகளையும் வளர்த்தனர்.

காபி, தேயிலை பிரதான விளைபொருளாக நடப்பட்ட போதிலும், கூடவே சிங்கோனு, கொக்கோ, மிளகு, ஏலம் ஆகியனவும் பக்கத் துணைப் பயிர்களாக வளர்க்கப்பட்டன.

இங்கிலாந்திலிருந்து தருவிக்கப்பட்ட மேல்நாட்டு மரக் கறி வகைகளான கோவா, பீட்ரூட், காரட், பீன்ஸ், முள்ளங்கி, நோகோல், லீக்ஸ், மெலன் ஆகியனவும் இந்தியத் தோட்டத் தொழிலாளர்களால் பயிரிட்டு வளர்க்கப்பட்டன. இதே போல் மேல் நாட்டு புஷ்பங்களான ரோஸ், ஓர்க்கிட், அந்தூரியம், கார்னேஷன் முதலியனவும் பயிரிடப்பட்டன.

மலையும், கல்லும், புல்லும், புதரும், காடும் மேடு மாய்க் கிடந்த மலைநாட்டைப் பண்படுத்திப் பொன் கொழிக் கும் போக பூமியாக்குவதில் வெள்ளைக்காரர் செலவிட்ட உழைப்பும், பொருளும், ஊக்கமும், ஆக்கமும் கொஞ்சநஞ்ச மல்ல. சூரியன் அஸ்தமிக்காத ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை உலகமெங்கும் ஆட்சி செய்த பிரித்தானியா அவர்களுக்குப் பக்கபலமாக நின்றதனுல், வெள்ளைக்காரத் துரைமார் இந்த மாபெரும் சாதனையைப் புரிந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக மலிவான கூலியில், உலகின் சிறந்த உழைப்பாளி களான இந்தியத் தமிழ் மக்கள், மலைநாட்டை வளம் செய்யும் பணியில் கிடைத்ததும் அவர்களுக்குப் பெரும் வாய்ப்பாக அமைந்தது.

இந்திய தொழிலாளர்களின் இரத்தமும், வியர்வையும் பிழியப்பட்டதன் பயனுகத்தான் தோட்டப் பகுதியின் பொருளாதாரம் சத்தூட்டம் பெற்றுச் செழித்தது என்ற உண்மையை யாராலும் மறுக்க முடியாது.

இந்த அரும்பணிகளில் தம்மை அர்ப்பணித்த இந்தியத் தோட்டத்தொழிலாளப் பெருமக்களில் பல ஆயிரம் பேர் காட்டுக் காய்ச்சல், குளிர் ஜுரம், இரத்தக் கழிச்சல், மார்பு வலி, சத்தின்மை, இரத்த சோகை போன்ற நோய்களினுலும், நல்ல குடியிருப்பு வசதியின்மையினுலும் தத்தம் உயிரையும், தங்கள் தங்கள் உற்றூர் உறவினர், பிள்ளைகள் ஆகியோரின் உயிரையும் பலி கொடுத்தார்கள் என்பதையும் மறக்க முடியாது.

நுவரேலியா என்று சொல்லப்படும் நூரளைப் பகுதியைக் காடழித்து நாடாக்கி, அங்கு ஆங்கிலத் தோட்டத் துரைமாரின் குடியேற்றம் ஒன்றுக்குத் திட்டமிட்டவர் சாமுவேல் டபிள்யு பேக்கர் என்ற வெள்ளைக்காரர் ஆவர். இவர் 1847 முதல் 1855 வரை எட்டாண்டுக் காலத்தில் இப்பணியை ஆற்றினுர். நுவரேலியாவை கோடைகால சுகவாசஸ்தலமாக்கிய பெருமையும் இவரைச் சார்ந்ததே.

நூரளையில் அவர் ஒரு கால்நடைப் பண்ணையையும் தொடங்கினுர். இங்கிலாந்திலிருந்து டர்ஹாம் காளைகளையும் பசுக்களையும், கொட்ஸ்வேல்ட், லெய்ஸெண்டர் ஆடு இனங்களையும், இன்னும் பலவித உயர் ரக மரக்கறி வகைகளையும் தருவித்துப் பரப்பியவர் இவரே. இன்று நாம் உண்ணும் மேல்நாட்டு மரக்கறி வகைகளுக்கு நாம் இவருக்குத்தான் கடமைப்பட்டவராவோம். இவர் செய்த நற்பணியை மறக்காமல் ஞாபகப்படுத்துவதற்காக நூரளைப் பகுதியில் உள்ள ஒரு நீர்வீழ்ச்சி பேக்கர் நீர்வீழ்ச்சி என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

பேக்கர் 1850இல் ஒன்றும் 1855இல் ஒன்றுமாக இரண்டு நூல்களை எழுதியுள்ளார். "இலங்கையில் வேட்டை நாயுடனும் ரைபிள் துப்பாக்கியுடனும் பெற்ற அனுபவம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது முதல் நூல். "இலங்கையில் எட்டு ஆண்டுகள்" என்பது மற்ற நூல் ஆகும்.

மலைநாட்டில் தான் ஆடிய வேட்டைகளைப் பற்றி ரசம்பட எழுதியிருக்கிறார் பேக்கர். மலைநாடு அப்போது வெறும் காடாகக் கிடந்தது என்பதையும், தாம் எவ்வாறு யானைகளையும், சிறுத்தைகளையும், கரடிகளையும், காட்டுப் பன்றிகளையும் துணிகரமாக அங்கு வேட்டையாடினார் என் பதையும் முதல் நூலில் வர்ணித்திருக்கிறார். அவர் கூற்றுப்படி பார்த்தால், இன்று இலங்கையில் உயிர் வாழும் யானைகளின் எண்ணிக்கையை விட அதிகமான எண்ணிக்கை கொண்ட யானைகளை அவருடைய ரைபிள் சுட்டு வீழ்த்தியிருக்க வேண் டும் என்று எண்ணத் தோன்றுகிறது.

ஆங்கிலேயரான பேக்கரின் தந்தையார் மேற்கு இந்திய தீவுகளில் வியாபாரம் செய்து குபேரரானவர். அவருடைய மகனான சாமுவேல் பேக்கர் முதலில் வேட்டையாடுவதற்காகத் தான் இலங்கைக்கு வந்தார். பன்னிரண்டு மாதங்கள் இலங்கை யின் காடுகளில் வேட்டையாடிவிட்டுத் திரும்பிப் போனார். பின்னர் 1847ஆம் ஆண்டில் மீண்டும் வந்தார் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தோடு.

முதல் தடவை இலங்கைக்கு வந்த போது, மலைநாட்டுப் பகுதியும், அதன் சீதோஷ்ண நிலையும் அவருக்குப் பிடித்துக் கொண்டன. அதனால் வெள்ளைக்காரக் குடும்பங்களை இலங்கை யில் கொண்டுவந்து குடியேற்றும் நோக்கத்தோடு தான் திரும்ப வரலானார். அவர் நோக்கம் பெருமளவில் நிறைவேறிற்று. நுவரேலியாப் பகுதியில் பேக்கர் ஆங்கிலக் குடிமக்களைக் கொண்டுவந்து குடியேற்றினார்.

கருப்பையா பிள்ளை பல தோட்டங்களில் வேலை செய்து விட்டு இறுதியாக நுவரேலியா மலைகளின் அடிவாரத்தில் உள்ள ரம்பொடைப் பகுதியில் வெவண்டன் தோட்டத்துக்கு வந்து சேர்ந்தார்.

கருப்பையா பிள்ளை கங்காணி முறையின் கீழ் ஓர் ஒப் பந்தக் கூலியாக எங்கும் வேலை செய்ததில்லை. அதனால் அவர் விருப்பப்படி ஒரு வேலையை விட்டு விட்டு இன்னொரு வேலைக்குப் போக முடிந்தது. ஒரு தோட்டத்தை விட்டு விட்டு இன்னொரு தோட்டத்தில் வேலை தேடிக் கொள்ள முடிந்தது. ஒப்பந்த வேலையாட்களைப் போல் கொத்தடிமையாக இருக்காமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சுதந்திரத் தொழிலாளியாக வேலை செய்யும் வாய்ப்பும் வசதியும் இருந்ததனாலேயே கருப்பையா பிள்ளை படிப்படியாக உயர்வடைந்து தம்மை மேல்நிலைப் படுத்திக்கொள்ள முடிந்தது. இப்படியான சந்தர்ப்பம் பெரும்பாலான தோட்டத் தொழிலாளிகளுக்கு அன்று கிடைக்கவில்லை.

சாதாரண தோட்டத் தொழிலாளியாக வேலைபார்த்த கருப்பையாபிள்ளை படிப்படியாக வேலைமாற்றம் பெற்று கோடன் தோட்டத்தில் ஒரு கங்காணியானார்.

ஒருவர் கங்காணி ஆக வேண்டுமானால், அவரின்கீழ் ஒரு குறிப்பிட்ட அளவு வேலையாட்களைத் திரட்டிக் கொள்ள வேண்டும். அப்படித் திரட்டிக் கொள்ளும் கோஷ்டியை 'காங்' (Gang) என்று அழைத்தார்கள். இந்தியா சென்று ஒருவர் 'காங்' திரட்டிக் கொண்டு வந்தால்தான் அவர் கங்காணியாக வேலை பார்க்க முடிந்தது.

ஆனால், கருப்பையா பிள்ளை ஆரம்பத்தில் உள்ளூரிலேயே 'காங்' திரட்டும் சக்தி வாய்ந்தவராக இருந்தார்.

கோடன் தோட்டத்தில் வேலை பார்க்கும்போது ஒரு பெண் தொழிலாளி, வயிற்றுக் கோளாறினால் பாதிக்கப் பட்டார். அதனால் அந்தப் பெண் தினம் பிடுங்க வேண்டிய எடைக்கு காபி விதைகளைப் பிடுங்க முடியவில்லை. அவளைப் பார்க்கப் பாவமாக இருந்தது. குறிப்பிட்ட எடைக்கு காபி கொட்டை பிடுங்காவிட்டால் அந்தப் பெண்ணுக்குப் பெயர் பதியப்படமாட்டாது. அதனால் அவள் அன்றையக் கூலியை இழக்க வேண்டி ஏற்படும்.

கருப்பையா பிள்ளை ஏனைய தொழிலாளிகளை அழைத்தார். மேலதிக எடையாக அவர்கள் பிடுங்கியிருந்த கொட்டைகளில் சிறுசிறு பகுதியை அந்த நோயாளிப் பெண்ணுக்கு கொடுத்து அவளுடைய எடையை ஈடு செய்யும்படி கேட்டுக் கொண்டார். இந்த பரோபகாரச் செயலைச் செய்ய மற்றத் தொழிலாளரும் மலர்ந்த முகத்தோடு முன்வந்தார்கள். யாரும் முனகவில்லை. அந்த அளவிற்கு கருப்பையா பிள்ளையின் பேச்சு, செல்வாக்கு உடையதாக இருந்தது.

தோட்டத்துரை இதைக் கவனித்துவிட்டார். "ஏன், கருப்பையா கங்காணி உன் மனைவியின் சொந்தக்காரரா?" என்று அந்தப் பெண்ணின் கணவனிடம் விசாரித்தார் தோட்டத் துரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இல்லே துரை, அந்தக் கங்காணி என் மனேவியின் உறவினர் அல்லர். அவர் உயர்ந்த ஜாதிக்காரர்” என்று அந்தப் பெண்ணின் கணவன் கூறினுன். துரை ஆச்சரியப்பட்டார்.

வேறு கங்காணியாக இருந்தால், சுகவீனமான அந்தப் பெண்ணே “வீட்டுக்கு ஓடு” என்று துரத்தியிருப்பார். கருப்பையா பிள்ளே அப்படிச் செய்யவில்லே. அதனுல் அந்தத் தொழிலாளியின் குடும்பம் கருப்பையா பிள்ளேயிடம் அன்போடும் விசுவாசத்தோடும் இருந்தது. அவ்வப்போது அவருக்கு காய் கறிகளேயும், கோழி முட்டைகளேயும் அன்பளிப்பாகக் கொடுத்தது.

கருப்பையா பிள்ளேயின் தயாள குணம் தொழிலாளர் மத்தியில் அவருக்கு செல்வாக்கையும் நல்லெண்ணத்தையும் ஏற்படுத்தியது. எல்லாத்தரத்தினரும், அதாவது உயர் ஜாதிக் காரர்கள், தாழ்ந்த ஜாதிக்காரர்கள் அனேவரும் அவருடன் நட்பாயிருந்தார்கள். அதனுல் அவர் பல ‘காங்’களே அமைத்து வெற்றியும் செல்வாக்கும் உடைய கங்காணியாக விளங் கினுர். பெரும்பாலும் அவர் பெண் தொழிலாளரின் பிரியத்தைப் பெற்றவரானுர். கருப்பையா கங்காணியாரைச் சுற்றி பெண் தொழிலாளர் கோஷ்டி எப்பொழுதும் வட்டமிட்டபடி இருந்தது. ஏனேயோரும் விசுவாசமாகவே நடந்து கொண்டார்கள்.

கங்காணி ஆகிவிட்டாலும் அவர் குறிப்பிடக்கூடிய அளவு பணப்புழக்கம் உடைய ஒருவராக ஆகிவிடவில்லே. உழைப் பதும், உண்பதும், உடுப்பதும் சமமாகவே இருந்து வந்தன.

1880ஆம் ஆண்டில் காபி பயிருக்கு ஒருவித நோய் கண்டது. ‘காபி பிளேட்’ என்று அந்த நோயை வர்ணித்தார் கள். என்ன மாற்று அளித்தும் காபி நோயைக் கட்டுப்படுத்த முடியவில்லே. பல காபி தோட்டங்கள் கருகி அழிந்து நாச மாயின. எங்கும் தொழில் குன்றியது. இந்தத் தாக்கத்தினுல் கருப்பையா கங்காணியும் பாதிக்கப்பட்டார்.

கோடன் தோட்டத்திலிருந்து அவர் அட்டபாகே தோட்டத்துக்கு மாறினுர். அங்கும் கங்காணியாக மீண்டும் பணிபுரிந்தார். காலம் அவருக்கு நன்ருக அமையவில்லே. எடுத்த முயற்சிகளில் எல்லாம் தோல்வி கண்டு பொருளாதாரத்தில் அடிமட்டத்துக்குத் தள்ளப்பட்டவரானுர். 1855க்கும் 1890க்கும் இடைப்பட்ட காலத்தில் இந்த வீழ்ச்சி அவருக்கு ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் அவர் சளைக்கவில்லை. உறுதி தளரவில்லை. ஏதோ ஒரு தொழிலை, செய்யும் பிரதான தொழிலோடு சேர்த்து செய்ய முடிவுசெய்தார். அவர் கௌரவம் பார்க்க வில்லை. உழைப்பதில் உயர்வு கண்டார். செய்யும் தொழில் எதுவாக இருந்தாலும் அதில் இழுக்கு இல்லை. நேர்மையாக எந்தத் தொழிலையும் செய்து பிழைக்கலாம், பணம் சம்பாதிக் கலாம் என்ற கொள்கையுடையவர் கருப்பையா பிள்ளை. அதனால், பக்கத் தொழில்கள் (Side business) சிலவற்றைச் செய்யத் தலைப்பட்டார்.

கம்பளையில் முத்தையாவின் கடையில் நின்று செய்த வியாபாரப் பழக்கம் இவருக்கு கை கொடுத்தது. சோப்பு, சீப்பு, சவர்க்காரம், கண்ணாடி, பவுடர், உணவுப் பொட்டலங் கள், உடுபுடவைகள் போன்றவற்றை வாங்கி மரப்பெட்டியில் அடுக்கினார்.

தகர டின்களில் தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், லாம்பெண்ணெய் போன்றவற்றையும் வாங்கி நிறைத்துக் கொண்டார்.

ஒருவகைப் பொருளை எடுத்துக் கொண்டு ஒரு நாளைக்கு ஒரு பக்கமாகவும், இன்னொரு நாளைக்கு இன்னொரு பக்கமாக வும் சென்று விற்பனை செய்ய ஆரம்பித்தார். தோட்டம் தோட்டமாக, லைன் லைனாகச் சென்றார்.

தலையிலே பெட்டியைச்சுமந்து செல்வார். கைகளிலே எண்ணெய் டின்களைத் தூக்கிச் செல்வார். வாடிக்கையாளர் நிறையக் கிடைத்தனர் வியாபாரம் பெருகியது. தவணை முறையிலும், கடனுக்கும் பொருள்களைக் கொடுத்து வார முடிவிலும், மாத முடிவிலும் பணத்தை வசூல் செய்தார். இம்முறைப்படி அவருக்கு இரட்டிப்பு மடங்கு ஆதாயம் கிடைத்தது.

இனிமையான சுபாவமும், மலர்ந்த முகமும், பேச்சு சாதுரியமும் உடையவராகையால், தோட்டத்துத் தொழிலாள மக்கள், பொருள்களை வாங்குவதற்கு கருப்பையா பிள்ளையின் வருகையைக் காத்திருந்தார்கள்.

பிற்காலத்தில், கருப்பையா பிள்ளையின் தலையின் உச்சி யில் தட்டை காணப்பட்டது. கைகள் இரண்டும் மரத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டன. "இவற்றிற்கு காரணம் என்ன தெரியுமா? தலையில் பெட்டி சுமந்ததும், கைகளில் எண்ணெய் காவியதும் தான் காரணம்" என்று கருப்பையா பிள்ளையே ஒருவித பெருமிதத்துடன் கூறிக்கொள்வார்.

உழைப்பின் மகத்துவத்தை உணர்ந்தவர் அவர். "செய்யும் தொழிலே தெய்வம். அதன் திறமைதான் நமது செல்வம்" என்ற கோட்பாட்டைக் கடைப்பிடித்தவர் கருப்பையா பிள்ளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

# வெறுங்காலால் நடந்து வெவண்டன் முதலாளியானார்

சகுனம், "முழிவியளம்" (புறப்படும் சமயத்தில் ஒருவர் முகத்தில் விழிப்பது) என்பவற்றிலெல்லாம் கருப்பையா பிள்ளைக்கு என்றுமே நம்பிக்கை இருந்ததில்லை. அவருக்கு ஏதாவது ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்று உள்ளுணர்வு தோன்றிஞல் அதை நிறைவேற்றியே தீருவார். இடையில் எந்தக் குறுக்கீடும் அவரைத் தடுத்து நிறுத்தி விட முடியாது.

அட்டபாகே தோட்டத்தில் வேலை பார்த்தபோது அவர் வாழ்க்கையில் சற்றுத் தளர்ச்சியடைந்தார். பொருளா தாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. வறுமையின் எல்லைக் கோட்டுக்கு அவர் மீண்டும் தள்ளப்பட்டார்.

அவருடைய உள்ளுணர்வு அவரை அங்கிருந்து வெளி யேறுமாறு தூண்டியது. எங்கு செல்வது என்று அவருக்கு எதுவித இலக்கும் மனதில் உதயமாகவில்லை. விட்டவழி என்று அவர் நுவரேலியா நோக்கிப் புறப்பட்டார்.

அவர் பயணம் மேற்கொண்டு வெளியே காலடி எடுத்து வைத்ததும் ஒரு நாவிதர்தான் எதிரே வந்தார். எனினும், அவர் அந்த நாவிதரைக் கண்டு சஞ்சலப்படவில்லை. வந்தவர் கருப்பையா பிள்ளைக்கு ஏற்கனவே நண்பரானவர் தாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பிரயாணத்தை மேற்கொள்ளும் போது முழிவியள மாக ஒரு சலவைத் தொழிலாளி மாராப்புடன் வந்தால் அது நல்ல சகுனமாகும். இதற்கு மாருக, ஒரு நாவிதன் வந்தால் தீமையே பயக்கும். இப்படி ஒரு நம்பிக்கை கிராம மக்களிடம் உண்டு. நாவிதன் குறுக்கே வருவது நல்லதல்ல என்று சில நாட்டுப் பாடல்களும் கூறுகின்றன.

இது தவிர ஒரு பழம்பாடல் பின்வருமாறு அமைந்துள்ளது :

*நல்வழி போகும் நாளில்*
*நாவிதன் குறுக்கே வந்தால்*
*செல்வழி அனைத்தும் தீமை*
*செய்வினை அனைத்தும் நஷ்டம்*
*வல்லமை உடையார் தாமும்*
*வசமிழந் தழிவர் இந்த*
*சொல்வழி கேட்டு மாந்தர்*
*தொடருக முயற்சி எல்லாம்*

இப்படிப் பழைய பாடலும், வேறு நாட்டுப் பாடலும் இருந்த போதிலும் நாவிதர் குறுக்கிட்ட சகுனம் கருப்பையா பிள்ளைக்கு நன்மையாகவே முடிந்தது. அந்த நாவிதர் அதிஷ்டத்தையே கொண்டு வந்தார்.

இதனுல் அந்த நாவிதரும் அவர் குடும்பத்தினரும் கருப்பையா பிள்ளையின் நெடுங்கால நண்பர்களானுர்கள். இருவருடைய குடும்பங்களும் பிற்காலத்தில் மிக நெருங்கிய குடும்பங்களாக அமைந்தன. ஜாதி வித்தியாசம் பாராட்டாத பண்புக்கு கருப்பையா பிள்ளை எப்பொழுதுமே ஒரு எடுத்துக் காட்டாக வாழ்ந்தார். இதனுல் சகல இனமக்களும், சகல ஜாதிக்காரர்களும் கருப்பையா பிள்ளையின் நெருங்கிய நண்பர்களாகவும் அந்தரங்க ஆலோசகர்களாகவும் விளங்கினுர்கள்.

இந்த நாவிதருடன் கருப்பையா பிள்ளைக்கு அன்றையத் தினம் ஏற்பட்ட சந்திப்பு, கருப்பையா பிள்ளையின் வாழ்க்கையில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. அன்றிலிருந்து அவருடைய அதிஷ்டச் சக்கரம் வெற்றிக்கு மேல் வெற்றியை நோக்கிச் சுழலலாயிற்று.

தமது வாழ்வில் பொருளாதாரத் தளர்வு ஏற்பட்டு விட்டதாகவும், ஏதாவது ஒரு வேலை தேடி நுவரேலியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கிச் செல்வதாகவும் கருப்பையா பிள்ளை அந்த நாவிதரிடம் மனந்திறந்து பேசினர்.

அதற்கு அந்த நாவிதர், "நேரே ரம்பொடையில் உள்ள வெவண்டன் தோட்டத்துக்குச் செல்லுங்கள். அங்கே ஒரு நல்ல கங்காணியைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்" என்று கூறினர்.

அந்தக் காலத்து நாவிதர்கள் செய்திப் பத்திரிகைகள் மாதிரி விளங்கினர்கள். யார் வீட்டில் என்ன நடக்கிறது என்பது மாத்திரமல்ல, எந்த இடத்தில் என்ன தேவை என்ற விவரங்களைக் கூட நாவிதர்கள் அறிந்து வைத்திருந்தார்கள்.

நாவினல் இதமாகப் பேசுவதால் அவர்களுக்கு நா இதம் உடையவர்கள், நாவிதர்கள் என்ற பெயர் ஏற்படலாயிற்று. வீட்டுக்கு வீடு அதிகாலையில் தொழில் நிமித்தமாகச் செல்லும் போதெல்லாம் அவர்கள் வீட்டு எஜமானுடன் பக்கம் பக்கமாக நின்று உலக விவகாரங்களையும், குடும்ப விவகாரங்களையும் இதமாகப் பேசும் சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிடைத்தது.

இந்த வகையில் வெவண்டன் தோட்டத்தில் 'வேகன்ஸி' இருக்கும் விஷயத்தையும் அந்த நாவிதர் அறிந்திருக்க வேண்டும்.

அட்டபாகையிலிருந்து புறப்பட்ட கருப்பையாபிள்ளை நேரே ரம்பொடை சென்று வெவண்டன் தோட்டத்தை அடைந்தார்.

வெவண்டன் தோட்டத்தில் கங்காணி வேலை அவருக்கு கிடைத்துவிட்டது.

இது நிகழ்ந்தது 1890ஆம் ஆண்டாகும்.

19 ஆண்டுகளுக்குப் பின்னர், அதாவது 1909ஆம் ஆண்டில் கருப்பையா பிள்ளை கங்காணியார் வெவண்டன் தோட்டத்தின் சொந்தக்காரராக, முதலாளியாக ஆகிவிட்டார்.

நாவிதரின் சகுனம் நற்சகுனம் ஆகிவிட்டது.

அது மட்டுமல்ல. எந்த வெவண்டன் தோட்டத்தினுள்ளே வெறுங்காலோடு கருப்பையா பிள்ளை நடந்து சென்று ஒரு வேலை கேட்டாரோ, அதே தோட்டத்துக்குள் 20 ஆண்டுகள் கழித்து சொந்த மோட்டார் காரில், அந்த தோட்டத்தின் முதலாளியாக பவனி சென்ருர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெவண்டன் என்ற பெயரில் அவர் விலை கொடுத்து வாங்கிக் கொண்ட நிலப்பரப்பு சாமாணியமானதல்ல. அந்த நிலப்பரப்பு கண்டி — நுவரேலியா ரோட்டில் ஆரம்பித்து ஒருபுறம் புரோடோப் மலையின் உச்சிவரையும், மறுபுறம் பூஜாகொட டிவிஷன் வரையும் விஸ்தீரணம் உடையதாய் இருந்தது.

இந்த வெவண்டன் தோட்டத்தில் அந்த நேரம் ஒரு சிறிய பகுதியில் தான் தேயிலை நடப்பட்டிருந்தது. பெரிய பகுதியில் நோயினால் தாக்குண்ட காபி செடிகள் காணப் பட்டன. ஒரு பகுதியில் பட்டையுரிக்கப்பட்ட க்றுவா மரங் கள் நின்றன.

பெருமளவிலான எஞ்சிய நிலம் கன்னிக் காடாகவே காணப்பட்டது. அவ்வளவு நிலத்தையும் பண்படுத்தி அங்கு தேயிலையையும், ஏனைய பயிர் வகைகளையும் உற்பத்தி செய்தவர் கருப்பையா பிள்ளை என்ற இந்த அதிசய மனிதர் தான்!

இலங்கையில் பரந்த அளவில் தேயிலைப் பயிர்ச் செய் கைக்கு முதன் முதலாக உட்பட்ட தோட்டங்களில் வெவண்டனும் ஒன்றாகும். 1875ஆம் ஆண்டில் 25 தோட்டங்களில் மட்டுமே தேயிலை உற்பத்தி செய்யப்பட்டது என்று பொறஸ்ட் என்ற வெள்ளைக்காரர் "இலங்கையில் நூறாண்டு கால தேயிலை வளர்ச்சி" என்ற தமது நூலில் குறிப்பிட்டிருக்கிறார். ரம்பொடைப் பகுதியில் ஓரளவு தேயிலை விளைவித்த மூன்று தோட்டங்களில் வெவண்டன் தோட்டமும் ஒன்றாகும்.

அப்போது ஆர்.ஒ. பொஸன்குவட், ஜே.எச். அலெக் சாண்டர் என்ற இருவருமே வெவண்டன் தோட்டத்தின் நிர்வாகஸ்தர்களாக இருந்தார்கள். இத்தோட்டத்தின் ஏஜண்டு களாக ஜோ ஸ்டுவர்ட் கம்பனியினர் விளங்கினார்கள். பொஸன்குவட் வெவண்டன் தோட்டத்துக்கும், அருகி லிருந்த பூஜாகொட தோட்டத்துக்கும் சுப்பிரிண்டெண்டாகவும் கடமையாற்றினார்.

கறுப்புத் தேயிலையை முதன் முதலாக இலங்கையில் உற்பத்தி செய்து அதை ஒரு வர்த்தகப் பொருளாக்கியவர் ஹேவாஹெட்ட பகுதியில் உள்ள லூல்கொந்தர தோட்டத்தின் உரிமையாளரான ஜேம்ஸ் டேலர் என்பவரே ஆவர். அவர் 1866ஆம் ஆண்டு 21 ஏக்கர் நிலத்தைக் காடுவெட்டிப் பண் படுத்தினார். 1867ஆம் ஆண்டில் 10 ஏக்கரில் தேயிலை நாட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவே இலங்கையின் தேயிலை யுகத்தின் ஆரம்பம் என்று சொல்லலாம். 1867இல் 10 ஏக்கரில் தொடங்கிய தேயிலை 1874இல் பல தோட்டங்களில் 350 ஏக்கர் வரை பற்றிப் பிடித்துவிட்டது. 1875இல் 1080 ஏக்கரும், 1883ஆம் ஆண்டில் 32,000 ஏக்கரும் தேயிலை உற்பத்தி நிலமாகிவிட்டது. சுமார் 15 வருடத்தில் இந்த வளர்ச்சி பிரமிக்கத்தக்க வளர்ச்சி யாகும்.

இலங்கையில் முதலில் காபி தோட்டங்களை ஆரம்பித்த வெள்ளைக்காரர் பின்னர் தேயிலையை நாடியதன் காரணம் என்ன?

காபியைக் கைவிட்டு தேயிலையை விளைவிக்கத் தலைப் பட்டதற்கு காபி மரங்களைப் பீடித்த "காபி பிளைட்" என்ற நோய்தான் காரணமாகும்.

காபித் தோட்டத் தொழில் நலிவடைகிறது என்பதை உணர்ந்த வெள்ளைக்காரர், வேறு பல பயிர்களை உற்பத்தி செய்ய முயன்றனர்.

கொக்கோ பயிரிட்டனர். மலேரியாவுக்கு உரிய தடுப்பு மருந்தான குயினா தயாரிக்கும் சிங்கோனா என்ற செடியைப் பயிரிட்டனர். கறுவாவையும், மலேரியாவுக்கான புல் எண்ணெய் தயாரிக்கும் சிட்ரனெல்லா புல்லையும் பயிரிட்டனர். இவை யெல்லாம் எதிர்பார்த்த அளவு பயனைத் தரவில்லை.

எனவே, தேயிலைதான் கைகொடுத்தது.

அப்போது சீனத் தேயிலைதான் உலக மார்க்கட்டில் அறிமுகமாகியிருந்தது. சீனத் தேயிலை என்றால், சிவப்புத் தேநீர் தயாரிக்கும் தேயிலை அல்ல. கிறீன் டீ என்று சொல்லப் படும் பச்சை நிறத் தேநீர் தயாரிக்கும் சீனத் தேயிலையைத் தான் உலகம் அறிந்திருந்தது.

அந்த நேரத்தில், இந்தியாவில் அஸாம் மாகாணத்தில் ஒரு புதிய ரக தேயிலையைத் தயாரித்திருந்தார்கள். "பிளாக் டீ" அதாவது, கறுப்புத் தேயிலை என்று அந்த புதிய ரக தேயிலை பெயர் சூட்டப்பட்டிருந்தது.

கறுப்புத் தேயிலைதான் சிவப்பு நிறத் தேநீரைத் தயாரிக்கப் பயன்படும் தேயிலை ஆகும்.

சீனாவின் 'பச்சைத் தேயிலை' யோடு வேறு எந்தத் தேயிலையும் போட்டி போட்டு ஒரு உலக மார்க்கட்டைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிக்க முடியாது என்று பலரும் நம்பியிருந்த சமயத்தில், அஸாமின் கறுப்புத் தேயிலை இங்கிலாந்திலும், ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் ஒரு செல்வாக்கை உண்டுபண்ணியது. கறுப்புத் தேயிலைக்கு ஓர் உயர்வான மார்க்கட் மவுசு ஏற்படலாயிற்று.

ஐரோப்பிய நாடுகளில் கறுப்புத் தேயிலைக்கு கிராக்கி வளர்ந்து வருவதை அவதானித்த பிரிட்டிஷார் உடனடியாகவே இலங்கையில் தேயிலைத் தோட்டத் தொழிலை ஊக்குவிக்கலானார்கள். மிகக் குறுகிய காலத்தில் இலங்கைத் தேயிலை உலகப் புகழ் பெற்றுவிட்டது.

1869ஆம் ஆண்டில் தான் காபிச் செடி நோய் ஏற்பட்டது. அந்த சமயத்திலேயே தேயிலைச் செடி ஒரு மாற்றுப் பயிராக நடப்பட்டது. தேயிலையின் தோற்றம் இலங்கையின் பொருளாதாரத்தில் பிரமிக்கக் கூடிய ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது.

இந்தக் காலகட்டத்தில் தான் கருப்பையா பிள்ளையும் இலங்கை வந்து சேர்ந்தார். அவருடைய இலங்கை வருகையினால் அவருடைய வாழ்க்கையிலும் ஒரு திருப்பம் ஏற்படலாயிற்று. இந்த வகையில் தேயிலையின் வளர்ச்சியும், கருப்பையா பிள்ளையின் வாழ்வில் ஏற்பட்ட வளர்ச்சியும் ஒன்றோடொன்று தொடர்புடையவை ஆயின.

வெவண்டன் தோட்டத்தைச் சென்றடைந்த பின்னர் கருப்பையா பிள்ளையின் வாழ்வில் பல மாற்றங்களும் ஏற்றங்களும் ஏற்பட்டன. சாதாரண ஒரு கங்காணியாகச் சேர்ந்தவர் வெகு விரைவில் ஹெட் கங்காணி அதாவது தலைமைக் கங்காணியாக பதவி உயர்வு பெற்றார். ஒரு தோட்டத்துக்கு மட்டும் கங்காணியாகச் சேர்ந்தவர் இப்போது ஏழு தோட்டங்களுக்குத் தலைமைக் கங்காணி ஆகிவிட்டார்.

இந்த ஏழு தோட்டங்களிலும் வேலை செய்த தொழிலாளர்களை மேற்பார்வை செய்வதற்காக அவர் தினமும் இந்த ஏழு தோட்டங்களுக்கும் போக வேண்டியிருந்தது. கால்நடையாகவே இந்த ஏழு தோட்டங்களுக்கும் அவர் சென்று வந்தார். அதுவும் பல வருடங்களாக இந்த ஒழுங்கு முறையை அவர் தினமும் கடைப்பிடித்தார். அதிகாலை 4 மணிக்கே கால்நடையாகப் புறப்பட்டு ஒவ்வொரு தோட்டமாக சப் — கங்காணிமாரை மேற்பார்வை செய்துவிட்டு மாலையில் ஏழு எட்டு மணிக்குத்தான் தமது வீட்டுக்குத் திரும்புவார். நாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றுக்கு எத்தனை மைல் நடந்திருப்பார் என்பது அவருக்கே தெரியாமல் இருந்தது!

ஹெட் கங்காணியாக வேலை பார்ப்பவருக்கு 'பென்ஸ் மணி' என்ற ஒரு வருமானம் உண்டு. அதாவது, தினம் தினம் வேலைக்கு வரும் தொழிலாளரின் தொகையைக் கணக்கிட்டு, தலைக்கு 4 சதம் வீதம் ஹெட் கங்காணிக்கு ஒருவித ஊக்கப் பணம் கொடுக்கப்பட்டது. நாள் தவருமல் தொழிலாளர் வேலைக்கு வரும்படி செய்வது தலைமைக் கங்காணியின் கடமை யாகும்.

தலைமைக் கங்காணி என்பவர் கண்டிப்பு உடையவராக இருக்க வேண்டும். அதே சமயம் தயாள குணம் உடையவராக வும் இருக்க வேண்டும். அத்தோடு அவரிடம் தலைமைத்துவமும், ஆளுமையும் இருக்க வேண்டும். ஆத்திரம் அவசரத்துக்கு தொழிலாளர்களுக்குப் பண உதவி செய்து பின்னர் பெறக் கூடியவராகவும் இருக்க வேண்டும்.

இத்தகைய தகைமைகளும் பண்புகளும் இருந்தால்தான் ஒருவர் ஹெட் கங்காணியாக நிலைக்க முடியும், சிறக்க முடியும். கருப்பையா பிள்ளை கங்காணியிடம் இந்த தகைமைகளும் பண்புகளும் நிறைய இருந்தன. எனவே, அவர் புகழும் செல் வாக்கும் உடைய ஒரு தலைமைக் கங்காணியாக விளங்கினர்.

பிற்காலத்தில் கங்காணிமார் என்பவர்கள் சுரண்டல் பேர்வழிகளாக மாறிவிட்டார்கள். அதனுல், கங்காணிகள் மதிப்பிழந்தவர்கள் ஆனார்கள். கருப்பையா பிள்ளை கங்காணி வேலைபார்த்த காலத்தில் கங்காணிமார் என்போர் தாமும் வாழ்ந்து தொழிலாளரையும் வாழவைக்கும் பெருமனது படைத்த பரோபகாரிகளாக மதிக்கப் பட்டார்கள். இத்தகைய மதிப்பு கருப்பையா பிள்ளைக்கு அபரிமிதமாக ஏற்பட்டிருந்தது.

தலைமைக் கங்காணி என்ற வகையில் அவருக்குக் கிடைத்த 'பென்ஸ் — மணி'யினுல் படிப்படியாக ஒரு பணக் காரராக கருப்பையா கங்காணி வளர்ச்சியடைந்து வந்தார். அப்படிக் கிடைத்த பணத்தை அவர் விரயமாக்கி விடவில்லை. பக்கத் தொழிலாக சிலபல தொழில்களை முதலீடு செய்து ஆரம்பித்தார். வண்டி மாடுகள் பலவற்றை வாங்கினர். ஆட்களை வைத்து தோட்டங்களுக்கு சாமான் ஏற்றி வினி யோகிக்கும் "டிரான்ஸ்போர்ட் ஏஜன்ஸி" ஒன்றை அமைத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார். இந்த வகையிலும் அவருக்கு நிரம்பிய வருமானம் வரத் தொடங்கியது.

இப்படி கொஞ்சம் கொஞ்சமாகச் சேகரித்து, மிச்சம் பிடித்து திரட்டப்பட்ட பணத்தைக் கொண்டுதான் கருப்பையா பிள்ளை 1909ஆம் ஆண்டில் வெவண்டன் தோட்டத்தையே விலைக்கு வாங்கினார். அந்த சமயத்தில் செல்வி ஓவன் என்ற ஒரு பெண்மணிதான் தோட்டத்தின் சொந்தக்காரியாக இருந்தார். ஆனால் அவர் இலங்கையில் இருக்கவில்லை. இங்கிலாந்தில் தான் இருந்தார். சட்டத்தரணியின் மூலம் இந்தக் கொள்வனவை ஏற்பாடு செய்து கருப்பையா பிள்ளை வெவண்டன் தோட்டத்தின் முதலாளி ஆனார்.

வெவண்டன் தோட்டத்தை வாங்குவதற்கு தேவையான பணத்தின் ஒரு பகுதியை இலங்கையில் அந்தக் காலத்தில் பாங்கர்கள் போலத் தொழில் செய்து வந்த நாட்டுக் கோட்டைச் செட்டிமார் கொடுத்து உதவினார்கள் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

கருப்பையா பிள்ளையின் நேர்மையும், நாணயமும் அந்த சமயத்தில் மலைநாட்டுப் பகுதிகளில் மட்டுமன்றி கொழும்பிலும் பிரபலமடைந்திருந்தது. அவருக்குப் பல நாட்டுக் கோட்டைச் செட்டிமாரும் நெருங்கிய நண்பர்களாக இருந்து வந்தார்கள். அதனால், ஒரு "கருப்பு முதலாளி"யான கருப்பையா பிள்ளை ஒரு "வெள்ளை முதலாளி"யான செல்வி ஓவனிடமிருந்து பல ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட உயர் ரக தேயிலைத் தோட்டத்தை விலைக்கு வாங்க முடிந்தது.

அந்தக் காலத்தில் இது, ஒரு சாதாரண மனிதரால் எட்ட முடியாத ஒரு சாதனையாக எண்ணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

# ஆசைக்கு ஒரு திருமணம் வாரிசுக்கு ஒரு திருமணம்

இலங்கை கிழக்கு இந்தியா கம்பனியின் ஆட்சியிலிருந்த போதே நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் இலங்கைக்கு வர ஆரம்பித்து விட்டார்கள். பணமுதலீடு செய்து ஒரு சில வியாபாரங்களைத் தொடங்கினார்கள். வட்டித் தொழிலையும் வெற்றிகரமாக நடத்தினார்கள்.

பர்மாவிலிருந்து சம்பா அரிசி, தேக்கு மரம், இந்தியா விலிருந்து பலசரக்கு ஆகியவற்றை இறக்குமதி செய்வதும், இலங்கையிலிருந்து பாக்கு, தேங்காய், ஏலம், இலவங்கம் முதலிய பொருள்களை ஏற்றுமதி செய்வதும் அவர்கள் ஈடுபட்ட சில வியாபாரத் துறைகளாகும்.

ஆனால், குறிப்பாக, அவர்கள் லேவாதேவி என்று சொல்லப்படும் வட்டிக்குப் பணங் கொடுக்கும் தொழில், தங்க நகைகளை ஈடுபிடிக்கும் தொழில் ஆகிய இரு தொழில்களிலுமே அதிக நாட்டம் கொண்டிருந்தார்கள்.

இலங்கையில் பிரிட்டிஷாரின் நிர்வாகம் நேரடியாக ஏற்பட்ட பின்னர் நாட்டுக்கோட்டை செட்டியார்களின் செல்வாக்கு மேலும் அதிகரித்தது. அந்தக் காலத்தில் வங்கிகள் செயல்படவில்லை. கடன் வழங்குதல், நாணயமாற்றுச் செய்தல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டு வர்த்தகங்களில் ஏற்படும் பண்டமாற்று, பணமாற்றுகளை சமன் செய்தல் போன்ற காரியங்கள் யாவும் செட்டிமாரின் வர்த்தக நிலையங்களினூடாகவே நடைபெற்றன.

இதனால் செட்டிமார் பெருந் தொகையான பொருளைச் சம்பாதித்தார்கள். பெரும் பெரும் பணக்காரர்களும் அவர்களிடையே தோன்றினார்கள்.

வட்டிக்குப் பணம் கொடுக்கும் தொழிலையும், ஆதனம் நகை முதலியவற்றை ஈடுபிடிக்கும் தொழிலையும் விஸ்தாரமாக நடத்துவதற்கு செட்டியார்களுக்கு நல்ல நம்பிக்கையான பேர்வழிகள் ஏஜண்டுகளாகச் செயல்படத் தேவைப்பட்டார்கள்.

நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் நம்பிக்கைக்கும் நாணயத்துக்கும் பெயர்பெற்று விளங்கியது போலவே, இந்தியாவிலிருந்து இலங்கை வந்து வர்த்தகம் செய்த பிள்ளை மார்களும் கணிக்கப் பட்டார்கள்.

ஒருவருடைய பெயரோடு "செட்டியார்" என்ற பதம், அல்லது "பிள்ளை" என்ற பதம் சேர்ந்திருந்தால், பணவிஷயங் களில் மக்கள் அப்படிப் பட்டவரை நம்பினார்கள்.

நாட்டுக்கோட்டை செட்டியார் சமூகத்தோடு கருப்பையா பிள்ளைக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டிருந்தது. கருப்பையா பிள்ளை இந்தியாவில் எந்தப் பிரதேசத்திலிருந்து வந்தாரோ, அந்த புதுக்கோட்டை, சிவகங்கை, திருப்பத்தூர், காரைக்குடி பிரதேசங்களிலிருந்து தான் நாட்டுக் கோட்டைச் செட்டியார்களும் வந்திருந்தார்கள். அதனால் ஒருவித பிணைப்பு கருப்பையா பிள்ளைக்கும் நாட்டுக் கோட்டைச் செட்டியார் களுக்கும் ஏற்பட்டிருந்தது.

பணம் லேவாதேவி செய்து வந்த நாட்டுக் கோட்டைச் செட்டிமார் ஸ்தாபனங்கள் சிலவற்றிற்கு கருப்பையா பிள்ளை ஏஜண்டு போல் செயலாற்றி, பெருந்தொகையான பணத்தை அவர்களிடமிருந்து பெற்று, கடனாகக் கொடுத்து வாங்கி நிறைய இடைத் தரகு வட்டி பெற்று வந்தார்.

"பிள்ளை" என்ற பதம் சேர்ந்திருந்த "கருப்பையா பிள்ளை" என்ற பெயர் அவரை மக்கள் மத்தியில் ஒரு நாணயஸ்தர் என்ற அந்தஸ்தையும் தேடிக் கொடுத்தது. மிக விரைவில் கருப்பையா பிள்ளை ஒரு பணக்காரர் என்ற நிலையையும் சம்பாதித்துக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரளவு பணம் கையில் வந்தபின்னர் கருப்பையா பிள்ளை தமது பிறந்த ஊரான மூனுபுதூரை நினைக்கலானுர். அடிக்கடி அங்கு சென்று வந்தார்.

அவர் தலைமைக் கங்காணி ஆனபின்னர் அடிக்கடி இந்தியா சென்று வரவேண்டிய அவசியமும் அவருக்கு ஏற்பட்டது. அதாவது, அவர் தமது ஊருக்குச் சென்று அதிகம் அதிகமாக வேலையாட்களைத் திரட்டி வரவேண்டியிருந்தது. இலங்கையில் தேயிலைத் தோட்டங்கள் வேகமாக அதிகரித்துக் கொண்டு வந்தன. அவற்றில் வேலை பார்க்க ஆண்களும், பெண்களும், சிறுவர்களும், சிறுமிகளும் தேவைப்பட்டார்கள்.

அதிகம் தொழிலாளரை திரட்டிவந்து தோட்டங்களுக்கு காங், காங்காக பிரித்துக் கொடுத்தால், தலைமை கங்காணிக்கு பென்ஸ் - மணியாக நிறையப் பணம் கிடைக்குமல்லவா? அதனுல் கருப்பையாபிள்ளை தென்னகம் சென்று அங்கிருந்து மேலும் மேலும் ஆட்களைத் திரட்டி வந்தார்.

வாட்டசாட்டமான தோற்றமும், வாசாலகமான பேச்சுமுடைய கருப்பையாவுக்கு எப்போதுமே பெண்கள் மத்தியில் ஒருவித கவர்ச்சியிருந்தது. அதனுல் அதிகமான பெண்களும், அவர்களுடைய குடும்பத்தார்களும் சினேகிதமானுர்கள். அவர்களுடைய ஆதரவோடு கருப்பையாபிள்ளை படிப்படியாக உயர்வடைந்தார். சிறு கங்காணி என்ற நிலையிலிருந்து பெரிய கங்காணி ஆனுர். பின்னர் அவர் ஏழு பெரிய தோட்டங்களுக்கு ஏக காலத்தில் பெரிய கங்காணியாக கடமையாற்றினுர்.

இந்த வேளையில் அவருக்கு ஒரு பெண்ணிடம் பிரிய முடியாத தொடர்பு ஏற்பட்டு விட்டது.

அந்தப் பெண்ணின் பெயர் கதிராயி.

கதிராயி கள்ளர் குலத்துப் பெண் அல்லர். ஆயினும் அவர் இந்திய வம்சாவழித் தமிழ்ப் பெண்தான். அந்தப் பெண்ணை அவர் மனைவி என்ற ஸ்தானத்தில் வைத்துக் கொண்டார்.

அந்தக் காலத்தில் கள்ளர் குலப் பெண்கள் கடல் கடக்க மாட்டார்கள். தம் நாடுவிட்டு வேற்று நாட்டுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக மாட்டார்கள். தொண்டமான் குடிப் பெண்கள் இந்தக் கட்டுப்பாட்டைக் கண்டிப்பாகக் கடைப்பிடித்து வந்தார்கள்.

அதனால் இலங்கையில் கருப்பையா கங்காணியின் இனப் பெண்கள் யாரும் இருக்கவில்லை. ஏற்பட்ட முதல் தொடர்பு வேற்றினப் பெண்ணுடனேயே ஏற்பட்டது.

கருப்பையா கங்காணியை மணந்து கொண்ட கதிராயி அவருக்குப் பல குழந்தைகளைப் பெற்றார். சில இறந்துவிட்டன. இரண்டு குழந்தைகள் மட்டும் வளர்ந்து பெரியவர்கள் ஆனார்கள். ஒன்று, 1892ஆம் ஆண்டில் பிறந்த மகன் கருப்பையா. மற்றது, 1896ஆம் ஆண்டில் பிறந்த மகள் கருப்பாயி.

தகப்பன் பெயரும் கருப்பையா, மகன் பெயரும் கருப்பையா தானா என்ற சந்தேகம் சிலருக்குத் தோன்றக் கூடும். தகப்பன் கருப்பையாவின் உண்மைப் பெயர் குமாரவேல் அல்லவா?

இங்கு குறிப்பிடப்படும் பிறப்பு வருடங்கள் உத்தேச மானவையே. ஏனென்றால், அந்தக் காலத்தில் பிள்ளைகளின் பிறப்பைப் பதிந்து வைக்கும் வழக்கம் நடைமுறைக்கு வரவில்லை. இலங்கையின் பிறப்பு இறப்பு பதிவுச் சட்டம் 1890ஆம் ஆண்டில் தான் கொண்டுவரப்பட்டது. எனினும், இந்தச் சட்டத்தின் கீழ் உண்மையானபதிவுகள் இடம்பெற மேலும் பத்தாண்டுகள் வரை கழிய வேண்டியதாயிற்று.

கருப்பையா பிள்ளை கங்காணி, கதிராயி என்பவரை மனைவியாக வைத்துக்கொண்ட போதிலும், அவரை சமூகம் ஒப்புக்கொண்ட ஒரு மனைவியாக மூனுபுதூரில் உள்ள கள்ளர் குலத்தினர் ஏற்றுக் கொள்ளவில்லை.

மூனுபுதூரில் கூட்டுக் குடும்ப முறைதான் நடைமுறை யிலிருந்து வந்தது. எனவே, கருப்பையா பிள்ளை கள்ளர் குலத்தில் பெண் எடுத்தால் தான் அவருக்கு சொத்துரிமை கிடைக்கும் என்றும், பூர்வீகச் சொத்து சிதைந்து போகாமல் பாதுகாக்க அவர் கள்ளர் குலப் பெண் ஒருத்தியைத் திருமணம் செய்து கொள்வது அவசியம் என்றும் மூனுபுதூரில் உள்ள உறவினர்கள் வற்புறுத்தினார்கள்.

கருப்பையா பிள்ளையால் எதுவும் செய்ய முடியாமல் போய்விட்டது. அந்தக் காலத்தில் ஜாதிக் கட்டுப்பாடு என்பது நாட்டின் அரச சட்டத்தை விட வலிமை மிக்கதாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது ஜாதிக்காரப் பெண் ஒருவரைத் திருமணம் செய்ய கருப்பையா பிள்ளை இணக்கம் தெரிவித்தார்.

ஊரிலே கருப்பையா பிள்ளைக்குப் பெண் பார்க்கப் பட்டது.

மூனுபுதூருக்கு அருகே இருந்த ஒரு கிராமத்தில் ஒரு பெண்ணைப் பார்த்தார்கள். அந்தப் பெண்ணைப் பற்றிக் கேள்விப்பட்டு அவரைத் திருமணம் செய்து கொள்ள கருப்பையா பிள்ளையும் விரும்பினர். ஆனல், பெண்ணின் தந்தை அவரை கருப்பையா பிள்ளைக்கு கொடுக்க மறுத்து விட்டார்.

“தூரதேசத்தில் வேலை செய்யும் ஒருவருக்கு என் பெண்ணைக் கொடுக்க மாட்டேன். எனக்குத் தேவை உள்ளூர் மாப்பிள்ளைதான்” என்று சொல்லி விட்டார் அந்தப் பெண்ணின் தந்தை.

கருப்பையா பிள்ளைக்கு ரோசம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது.

“நான் எப்படியும் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து, எனக்குப் பெண் தர மறுத்த கிராமத்தினூடாகவே திருமணப் பவனி வரவேண்டும். ஆகையால், அந்தக் கிராமத்துக்கு அப்பால் உள்ள ஒரு கிராமத்தில் பெண் பாருங்கள்” என்று கேட்டுக் கொண்டார் கருப்பையா பிள்ளை.

அதன் பிரகாரம் அடுத்த கிராமத்தில் பெண் பார்க்கப் பட்டது. பெண்ணும் அமைந்தது. திருமணமும் நடந்தது. கருப்பையா பிள்ளை மாப்பிள்ளையாக கலியாண உடையில் தலையில் தலைப்பாகை தரித்து ஒரு குதிரையில் சவாரி செய்து கொண்டு முன் கூறிய கிராமத்தினூடாக பெண்ணையும் அழைத்துக் கொண்டு ஊர்வலமாக வந்தார். மணப்பெண்ணை குதிரை வண்டியில் அமர்த்தி மூனுபுதூருக்கு அழைத்து வந்தார்கள். பவனியில் கியாஸ் லைட்டுகளும், மேள வாத்தியங்களும் இடம் பெற்றன. வாண வேடிக்கைகளும் நடந்தன.

இந்த நிகழ்ச்சி இரண்டு சம்பவங்களை நிரூபித்தது. கருப்பையா பிள்ளை அந்தக் கிராமத்தில் எவ்வளவு பெரிய பணக்காரராகவும் செல்வாக்கு உடையவராகவும் இருந்தார் என்பது ஒன்று. எத்தகைய பிடிவாதக் காரராக விளங்கினர் என்பது மற்றொன்று!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாருக அவர் குல ஒப்பனேப்படி திருமணம் செய்து கொண்ட பெண்ணின் பெயர் சித்தம்மை. இந்த திருமணம் நடந்தது 1903 ஆம் ஆண்டில்.

சித்தம்மையார் மூலமாக கருப்பையா பிள்ளேக்கு ஐந்து பிள்ளேகள் பிறந்தன. இரண்டு குழந்தைகள் மாண்டு போயினர். மூன்று பேர் வளர்ந்து பெரியவர்கள் ஆயினர்.

மூத்த பிள்ளேயாக, 1905ஆம் ஆண்டில் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதன் பெயர் திருமால். அது இறந்து விட்டது. பின்னர் இரண்டாவது பெண் குழந்தை பிறந்தவுடன் கருப்பையாபிள்ளே இலங்கை புறப்பட்டு வந்தவர் 4 வருடங் களாக இந்தியாவுக்கு போகவே இல்லே.

இந்த சமயத்தில் தான், அதாவது 1909ஆம் ஆண்டில் தான் அவர் வெவண்டன் தோட்டத்தைக் கொள்வனவு செய் தார். அதனுல், ஆதிலக்ஷ்மி என்று அழைக்கப்பட்ட அந்த இரண்டாவது பெண் குழந்தை தான் தமக்கு பெரிய அதிஷ் டத்தை கொண்டு வந்தது என்று கருப்பையா பிள்ளே கருதினுர்.

1910ஆம் ஆண்டளவில் அவர் திரும்பவும் மூனு புதூருக்குச் சென்ருர். இம்முறை சென்றவர், சில வருடங்களே மூனுபுதூரிலே கழிக்கலானுர்.

அவ்வளவு காலம் அவர் அங்கு தொடர்ந்து தாமதித் தமைக்கு காரணம் இருந்தது. இந்தக் காலத்தில் தான் மூனு புதூரில் அவர் பிரமிக்கத்தக்க, அரண்மனேயைப் போன்ற ஒரு மாளிகையை நிர்மாணித்தார்.

மூனுபுதூரில் கருப்பையாபிள்ளே நிர்மாணித்திருக்கும் பிரமாண்டமான மாளிகை ஓர் அரசருடைய அரண்மனேயைப் போல அமைக்கப்பட்டிருப்பதற்கு, தமது மூதாதையர்களான தொண்டமான்களின் அந்தஸ்தை மீண்டும் நிலேநாட்ட வேண் டும் என்று அவர் மனதில் எழுந்த எண்ணமே காரணமாகும்.

எடுப்பான தோற்றம் கொண்ட இக்கட்டடம் இப்போதும் பொன்மஞ்சள் நிறத்தில்பூச்சு செய்யப்பட்டிருக்கிறது. அதனுல் அது பார்வைக்கு பொன்முலாம் பூசிய மாளிகையாக விளங்கு கிறது.

முன்புற வாயிலினூடாக நுழைந்தால் அங்கு மிகவும் அகலமான திண்ணேகள் இருபுறமும் காணப்படுகின்றன. அதை யடுத்து வரவேற்பு மண்டபம் உண்டு. இந்த மண்டபம் மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகானது. மேலே உத்தரங்களும், கை மரங்களும் பர்மிய நாட்டின் முற்றிய தேக்கு மரங்களாலானவை. விட்டங்கள் எல்லாம் வேலைப்பாடுகளுடன் வெட்டி அரிந்து, வழவழப் பாகச் சீவி வார்னிஷ் செய்யப்பட்டுள்ளன.

கைமரங்களின் மேலாக தேக்கம் பலகைகள் பரப்பப் பட்டுள்ளன. அதனால் மேலே வேயப்பட்டுள்ள ஓடுகள் உள்ளே தெரிய மாட்டா. சிற்ப வேலைகள் செய்யப்பட்டுள்ள கதவு களும் நிலைகளும் தடிப்பிலே பெரியன.

மண்டபத்தின் உட்புறத் தரைகளில் சலவைக் கற்கள் சித்திரப் பாங்கில் பரப்பப்பட்டுள்ளன. சுவர்கள் எல்லாம் சுண்ணும்பும் கோழிமுட்டையும் தேனும் கலந்து அரைக்கப் பட்ட குழம்பினுல் பூசி மெருகூட்டப் பட்டுள்ளன. கையால் தடவிப் பார்த்தால் பளிங்குக் கல்லால் ஆனவை போல வழுக்கிச் செல்கின்றன.

கதவுகளின் மேலும், சாளரங்களின் மேலும் அறுப்பு வேலைகள் செய்யப்பட்ட சித்திர வடிவங்கள் உள. அதன் மேல் உயரமாகக் கட்டம் அமைக்கப்பட்டுள்ள சுவர்களில் அழகான வண்ண வண்ண ஓவியங்கள் தீட்டப் பட்டிருக்கின் றன. அந்த ஓவியங்களின் எண்ணெய் வண்ணங்கள் இன்றும் மங்காதவாறு கவர்ச்சியுறக் காணப்படுகின்றன.

வரவேற்பு மண்டபத்தை அடுத்து உரையாடல் மண்டபம் உண்டு. இம் மண்டபமும் முன்கூறியவாறே அலங்காரபூர்வ மாக அமைக்கப்பட்டுள்ளது. இதை ஒருவகை சபா மண்டபம் என்றே வர்ணிக்கலாம்.

அப்பால் விருந்தினர் உணவு அருந்தும் ஒடுக்கமான மண்டபம் உளது. அதைத் தாண்டியதும் அறைகள், எண்ணற்ற அறைகள். சில பண்டங்கள் நிரப்பி வைக்கும் அறைகள், சில வீட்டு சிப்பந்திகள் தங்கும் அறைகள். நான்கு புறமும் அறைகள் அமைக்கப் பட்டிருப்பதால் நடுவில் ஒரு நீள் சதுரமான தளமுற்றம் உண்டு.

மேலே, இளைப்பாறும் அறைகள், சயன அறைகள், விருந் தினர் தங்கும் அறைகள், குடும்ப அறைகள், சல்லாப அறைகள் என்று பற்பல அறைகள்.

கட்டடத்தின் பின்புறத்தில் கிணறு, வேலையாட்கள் தங்கும் இடம், குதிரை லாயம், பசுமடம், வண்டிசாலை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டுத் தொழுவம் எல்லாம் அமைக்கப்பட்டுள்ளன. அத்தோடு வீட்டுத் தோட்டம், பூப்பந்தர் முதலியனவும் உண்டு.

இவ்வளவு பெரிய ஓர் அரண்மனை வீட்டை மூளுபுதூரில் வேறு எங்கும் காணமுடியாது. பல ஆண்டு காலமாக புழங்குவதற்கு அந்த மாளிகையில் போதிய ஆட்கள் இல்லாததால் மாளிகை சற்று உறக்கமுடையதாக காணப்படுகிறது.

பெரும் செலவில் இந்தப் பெரிய மாளிகையைக் கட்டி முடிக்க கருப்பையாபிள்ளைக்கு சுமார் நான்கு ஆண்டுகள் தேவைப்பட்டன. மூளுபுதூரில் தங்கியிருந்து ஒவ்வொரு பணியையும் தாமே மேற்பார்வை செய்து மாளிகையை நிர்மாணித்தார் அவர்.

மாளிகையைக் கட்டி முடித்த பின்னர் அவர் திரும்பவும் இலங்கைக்குச் சென்றார். அப்படிச் சென்றவர் ஏழு வருடங்கள் மூளுபுதூருக்கு திரும்பவில்லை. இலங்கையில் அவருக்கு நிரம்ப வேலைகள் இருந்தன. அவர் வாங்கியிருந்த வெவண்டன் தோட்டத்தை முற்றாகப் புனருத்தாரணம் செய்து மிக உயர்ந்த தரம் உள்ள தேயிலையை உற்பத்தி செய்யும் தோட்டங்களில் வெவண்டன் தோட்டமும் ஒன்று என்ற புகழை நிலைநாட்டினார்.

ஏழு வருடங்களுக்குப் பின்னர் அவர் மூளுபுதூருக்கு போன போது அவருக்கு ஒரு மகிழ்ச்சிகரமான காட்சி காத்திருந்தது. ஒரு புளகாங்கிதமான அனுபவத்தை அவர் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

# வீரத்தாய் பெற்ற வீரமகன் சௌமியன்

ஏழு ஆண்டுகள் தொடர்ச்சியாக இலங்கையில் வாசம் செய்துவிட்டு மூனுபுதூரில் உள்ள தமது மாளிகைக்கு விஜயம் செய்த கருப்பையாபிள்ளையை ஒரு ஏழுவயது சிறுவன் ஓடி வந்து முன்னால் நின்று "அப்பா" என்று அழைத்தால் அவருக்கு ஒரு புறம் மகிழ்ச்சியும், மறுபுறம் புளகாங்கிதமும் ஏற்பட்டதில் ஆச்சரியமில்லையல்லவா?

"வந்திருப்பவர்தான் உன் அப்பா" என்று அந்த சிறுவனின் தாயார் அவனுக்கு அறிமுகம் செய்து வைத்தார். சிறிது நேரம் அச்சிறுவன் அவர் அண்டையில் போகத் தயங்கினான். பின்னர் அப்படியே சென்று அவரைக் கட்டியணைத்துக் கொண்டான். கருப்பையாபிள்ளையும் தன் மகனை நெஞ்சோடு ஆரத்தழுவி அணைத்து முத்தமிட்டார்.

அச்சிறுவன் தான் இன்று தொண்டமான் என்று அழைக்கப்படும் அன்றைய சௌமியமூர்த்தி. வீட்டில் செல்லமாக மாதவன் என்று அழைக்கப்பட்டவன்.

சௌமியமூர்த்தி ஒரு சிறுவனாக வளர்ந்தபின் தன் தந்தையான கருப்பையாபிள்ளையை அன்றுதான் முதன் முதலாக கண்டான். அவன் பிறந்த முப்பது நாட்களிலேயே கருப்பையா பிள்ளை திரும்பவும் இலங்கை சென்றுவிட்டார். அவரை மீண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சௌமியமூர்த்தி தரிசித்த போது அந்த சிறுவனுக்கு வயது ஏழு நிரம்பிவிட்டது.

தொண்டமான் பரம்பரையின் பண்டைய பெருமையை நிலை நாட்டுவதற்காக மூனுபுதூர் கிராமத்தில் பெரிய அரண்மனை போன்ற ஒரு பிரமாண்டமான மாளிகையை கருப்பையாபிள்ளை நிர்மாணித்து, கோலா கலமாகக் குடிபுகுந்த பின்னர் ஒரு வருடம் கழித்து, அந்த அரண்மனை வீட்டிலேயே அவருக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அன்று வருடம் **1913**, ஆகஸ்டு மாதம் 30ஆம் திகதியாகும்.

புதிதாகக் கட்டிய அந்த வீட்டில் ஆண்குழந்தை பிறந்தது ஓர் அதிஷ்டம் என்றும், நற்சகுனம் என்றும் எல்லோரும் கருதினர். அப்படிக் கருதியதற்கு காரணம் இருந்தது. அது ஒரு பெரிய கதை!

குல ஆசாரப்படியும், கிராமக்கட்டுப்பாட்டுக்கு அமைய வும் கருப்பையாபிள்ளை சித்தம்மையைத் திருமணம் செய்து பல ஆண்டுகள் ஆகிவிட்டிருந்தன. அது வரை அவர்களுக்கு நான்கு பெண்குழந்தைகள் பிறந்திருந்த போதிலும், ஓர் ஆண் குழந்தை கிடைக்கவில்லை, அதனால் குடும்பத்தில் ஒரு பெரிய பிரச்சினையே உருவாகியிருந்தது.

பிறந்த நான்கு பெண்குழந்தைகளில் இரண்டு இறந்து விட்டன. இரண்டு பெண்குழந்தைகள் உயிரோடு இருந்தன. ஆசைக்கும் வாரிசுக்கும் ஓர் ஆண் மகவு கிடைக்கவில்லையே என்று கருப்பையாபிள்ளையும் அவர் மனைவி சித்தம்மையும் மிகவும் கவலைப்பட்டார்கள். ஒரு மகன் வேண்டும் என்று சித்தம்மை பல நோன்புகளையும், விரதங்களையும் அனுஷடித்து வந்தார்.

கணவனும் மனைவியுமாக திருக்கோஷ்டியூர் கோயிலுக் குச் சென்று வேண்டுதல் செய்து கொண்டார்கள். அவர்கள் செய்த வேண்டுதல் வீண் போகவில்லை. புத்தம் புதிய மாளி கையைக் கட்டிப் பூர்த்தியானதும் அவர்களுக்கு ஐந்தாவது குழந்தையாக ஓர் அழகான ஆண்குழந்தை கிடைத்தது.

ஆண்குழந்தை பிறந்ததையிட்டு கருப்பையாபிள்ளையும், சித்தம்மையும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

ஆண் குழந்தை கிடைத்ததையிட்டு இனபந்துக்களும், உற் றூர் உறவினரும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்திருந்த அதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளையில், ஒரே ஒருவர் மட்டும் அந்த மகிழ்ச்சியில் பங்கு கொள்ள விரும்பாதவராக இருந்தார்.

அவர் பெயர் வெள்ளைச்சாமி!

சித்தம்மையார் ஓர் ஆண்குழந்தையை ஈன்று விட்டார் என்பதை அறிந்ததும் வெள்ளைச்சாமி ஏன் கவலையுற்றார் என்பதைப் பின்னால் பார்ப்போம்.

கருப்பையாபிள்ளையும் சித்தம்மையும் தமக்கு ஆசை அருமையாகப் பிறந்த ஆண்குழந்தையைச் சீராட்டிப் பாராட்டிப் பெருமைப்பட்டார்கள். முதலில் குழந்தையை தாய்வழிக் குல தெய்வமான கரியமலை சாந்தய்யனார் இரவுத்தராயர் ஆலயத்துக்கு எடுத்துச் சென்றார்கள்.

இத்திருக்கோயில், மூனுபுதூருக்கு அயல் கிராமமான பட்டமங்கலம் என்ற ஊரிலே வடக்குத் தெருவில் அமைந்திருக்கிறது. இறைவன் ஒரு சித்தராகத் திகழ்ந்து கரியமலையிலே சாந்தய்யனாராக நடமாடினார் என்றும் அவரையே அங்கு வாழ்ந்த மக்கள் இரவுத்தராயராக பெயர் சூட்டி வணங்கி வந்தார்கள்; வருகிறார்கள் என்றும் தவத்திரு குன்றக்குடி அடிகளார் கூறுகிறார்கள்.

தெய்வங்கள் மனித உருவில் வந்து தீயோரை வென்று, நல்லவர்களை வாழ வைத்ததை நமது புராணங்கள் எடுத்துக் காட்டுகின்றன. அவ்வாறே மனிதர்களே சித்தர்களாக மாறி தெய்வத்திருவருளை சமுதாயத்துக்கு பொழிந்து வருவதை வரலாறுகள் கூறுகின்றன.

இந்த வகையிலே, இரவுத்தராயர் என்பார் பாண்டிய மன்னனின் வீரத்தளபதியாக விளங்கிப் பல போர்களில் வெற்றியீட்டியவராவர். இவர் வீரத்தையும், தீரத்தையும், அஞ்சா நெஞ்சத்தையும், ஒடுக்கப்பட்டவர்களின் நல்வாழ்வுக்காக வாள் ஏந்திப் போராடிய பரோபகாரச் செயல்களையும் போற்றும் வண்ணம் பட்டமங்கலத்து மக்கள் சாந்தய்யனார் இரவுத்தராயர் ஆலயத்தை நிறுவியிருக்கிறார்கள்.

பிறந்த ஆண்குழந்தையை இந்த ஆலயத்துக்கு எடுத்துச் சென்று இரவுத்தராயர் திருவடியில் வளர்த்தி வழிபட்டால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் குழந்தை வருங்காலத்தில் ஆண்மை மிக்கவனுகவும், அறிவுமிக்கவனுகவும், வீரம் மிக்கவனுகவும், தீரம் நிறைந்த வனுகவும், தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழும் தகை சார்ந்த தானைத்தளபதியாகத் திகழ்வான் என்ற நம்பிக்கை அந்தக் காலத்தில் நிலவியது.

எனவே தான், முதலில் குல தெய்வத்தின் ஆலயத்துக்கு குழந்தையை எடுத்துச் சென்ருர்கள்.

பின்னர் குழந்தைக்குப் பெயர் இடுவதற்காக, யாருடைய திருவருளாலே இக்குழந்தை பிறந்ததோ, யார் மீது வைக்கப் பட்ட நேர்த்திக் கடனை முன்னிட்டு இக்குழந்தை பிறந்ததோ, அந்த தெய்வத்தின் திருக்கோயிலுக்கு எடுத்துச் சென்ருர்கள். அந்தத் திருக்கோவில் திருக்கோஷ்டியூர் செளமிய நாராயணப் பெருமாள் திருக்கோயிலே ஆகும்.

அங்கு அந்த ஆண்குழந்தைக்குப் பெயரிடப்பட்டது. பெருமாளின் திருநாமத்தையே சூட்டினுர்கள். குழந்தை செளமிய மூர்த்தி என்று அழைக்கப்பட்டது. இந்த அருமையான பெயரைச் சூட்டியவர் அப்போது கோயில் பூசகராயிருந்த பெரிய பட்டர் தான்.

அந்தக் குழந்தையை மூனுபுதூரில் உள்ளவர்கள் செளமிய மூர்த்தி என்று தொடர்ந்து அழைக்கவில்லை. அந்தப் பெயர் பலருடைய வாயில் நுழையாத பெயராக இருந்தது. எனவே, பெண்கள் எல்லாரும் சேர்ந்து சுலபமான ஒரு பெயரை வைத்துவிட்டால் என்ன என்று யோசித்தார்கள். அதன் பயனுக செளமியமூர்த்திக்கு மாதவன் என்ற மறு பெயர் சூட்டப்பட்டது. மாதவன் என்பதும் திருக்கோஷ்டியூரில் கோயில் கொண்டருளியிருக்கும் செளமிய நாராயணப் பெருமாளின் இன்னெரு பெயர்தான் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

செளமியமூர்த்தி என்றும், மாதவன் என்றும் அழைக்கப் பட்ட நமது கதாநாயகர் தொண்டமான் பிறந்ததும், பெரும் கவலைக்கும் ஏமாற்றத்துக்கும் உள்ளான வெள்ளைச்சாமி என் பவரின் விருத்தாந்தம் என்ன என்பதை இப்போது பார்ப்போம்:

இந்திய கிராமங்களில் கூட்டுக்குடித்தன முறை என்று ஒன்று வழக்கில் இருந்து வந்தது. அதாவது ஒரு குடும்பத்தைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்த அண்ணன் தம்பிகள் எல்லோரும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவே மதிக்கப்பட்டனர். அவர்களுடைய காணி பூமி பொருள் பண்டம் எல்லாம் தனித்தனியாக யாருக்கும் சொந்தம் அல்ல. அவை கூட்டாக அனைவருக்கும் சொந்தம் என்று கொள்ளப்பட்டது. அவர்களுடைய தேட்டம், வருமானம், சம்பாத்தியம் எல்லாம் கூட்டுக்குடும்பத்துக்கே சொந்தம். இந்த உரிமை பெரும்பாலும் ஆண் சந்ததிகளுக்கே சென்றடையும். அண்ணன் தம்பிகளுள் யாராவது ஒருவருக்கு ஆண் சந்ததி இல்லையென்றால் முதுசம் மட்டுமன்றி, பின்தேடிய தேட்டங்கள் உட்பட சகல சம்பத்துகளும் உயிரோடிருக்கும் ஆண் சந்ததிக்குப் போய்விடும். இது கூட்டுக்குடும்ப முறையில் ஒப்புக் கொள்ளப்பட்ட கட்டுப்பாட்டு விதியாகும்.

பிற்காலத்தில் தொண்டமான் என்று வழங்கப்படவிருந்த சௌமியமூர்த்தியின் தந்தையார் கருப்பையாபிள்ளையின் சொத்துக்கள் அனைத்தும் கூட்டுக்குடும்ப சொத்துக்களாய் இருந்தன.

கருப்பையாபிள்ளைக்கு ஒரு மூத்த சகோதரர் இருந்தார். அவர் பெயர் வைத்திலிங்கம். ஏற்கனவே காலமாகிவிட்டார். எனினும் வைத்திலிங்கத்துக்கு பிள்ளைகள் இருந்தனர். அவர்களில் மூத்தவர் பெயர்தான் வெள்ளைச்சாமி.

சௌமியமூர்த்தி பிறந்ததும் கவலைப்பட்டவரும், ஏமாற்றம் அடைந்தவரும், கருப்பையாபிள்ளையின் கூட்டுக்குடும்ப சொத்துக்களை எல்லாம் பாகப்பிரிவினை செய்வதற்கு காலாய் இருந்தவரும், இந்த வெள்ளைச்சாமி என்பவர் தான்.

கருப்பையாபிள்ளை இலங்கையை அடைந்து, அங்கு இராப்பகலாக உழைத்து, படிப்படியாக பணக்காரர் ஆகிவிட்டதை வெள்ளைச்சாமி கண்டு கொண்டார். அவரும் அந்த சமயத்தில் இலங்கை வந்து சேர்ந்துவிட்டதால் கருப்பையாபிள்ளையின் உயர்வும் செல்வாக்கும் அவர் கண்ணைக் குத்தியது. தானும் அப்படி வருவதற்கு வழி, குடும்பச் சொத்தைப் பாகப் பிரிவினை செய்வதுதான் என்ற குறுக்கு வழி அவர் மனதில் உதயமாயிற்று.

வெள்ளைச்சாமியிடம் துர்ப்புத்தி கூர்மையாகவிருந்தது. அவர் துணிச்சல் காரராகவும், நினைத்ததை முடிக்க வேண்டும் என்ற எண்ணம் உடையவராகவும், பேராசைக்காரராகவும் இருந்தார். அத்தோடு, ஆளும் பெரும் செலவாளி. அதனால், அவருக்கு எந்நேரமும் பணம் தேவைப்பட்டது. தமது சித்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவான கருப்பையாபிள்ளையோடு ஒட்டிக் கொண்டிருந்தால் தன் இஷ்டப்படி செலவு செய்ய முடியாதே என்று அவருக்கு தோன்றியது. பாகப்பிரிவினை என்ற பேச்சைக் கிளப்பினால் முழுச் சொத்துக்கும் தானே அதிபதி ஆகிவிடலாம் என்று அவர் எண்ணினார்.

அப்படி வெள்ளைச்சாமி எண்ணியதற்கும் காரணம் இருந்தது. கருப்பையா பிள்ளைக்கும் சித்தம்மையாருக்கும் அது காலவரை நான்கு குழந்தைகள் பிறந்திருந்தன. அவ்வளவும் பெண்குழந்தைகளாகவே அமைந்தன. ஆண்குழந்தை ஒன்று கூட கிடைக்கவில்லை.

அதனால் கூட்டுக்குடும்பத்தின் வாரிசு தானே தான் என்பதை அப்போதே நிலைநாட்டிவிட வேண்டும் என்று வெள்ளைச்சாமி திட்டமிட்டார்.

இப்படி அவர் ஆலோசித்த சமயத்தில், சித்தம்மை தமது உதரத்தில் ஐந்தாவது குழந்தையைக் கருவுற்றிருந்தார்.

வெள்ளைச்சாமி சும்மா இருக்கவில்லை. ஒவ்வொரு சாஸ்திரக்காரராகத் தேடிச் சென்று ஜோதிடம் கேட்கலானார். சித்தம்மையின் வயிற்றிலிருப்பது ஆண்குழந்தையா, அல்லது பெண்குழந்தையா என்பதே அவர் கேள்வியாக இருந்தது.

ஜோதிடர்கள் எல்லாரும் அவருடைய மனப்போக்கை அறிந்தவர்களாக இருந்ததனால், அவரை மகிழ்விக்க எண்ணி, சித்தம்மை பெற்றெடுக்கப் போவது பெண் குழந்தைதான் என்று சொல்லிவிட்டார்கள்.

இதைக் கேட்டதும் வெள்ளைச்சாமிக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. உடனே அவர் கிராமத்து பஞ்சாயத்தாரிடம் பிராதினைக் கொடுத்தார். அதாவது, "கருப்பையாபிள்ளைக்கு ஏற்கனவே நான்கு பெண்குழந்தைகள் தான் பிறந்திருக்கின்றன. ஆண் வாரிசே கிடையாது. இப்போது சித்தம்மை கருவுற்றிருக்கிறார். அதுவும் பெண்குழந்தையாகவே பிறக்கப் போகிறது. ஆகையால் பஞ்சாயத்து கூடி கருப்பையாபிள்ளையின் கூட்டுக்குடும்ப சொத்துகள் அனைத்துக்கும் வெள்ளைச்சாமியே வாரிசு என்று தீர்ப்பு வழங்க வேண்டும்" என்பதே வெள்ளைச்சாமியின் கோரிக்கையாக இருந்தது.

பஞ்சாயத்து சபை கூடியது. சம்பந்தப்பட்டவர்கள் அழைத்து விசாரிக்கப்பட்டார்கள். "பஞ்சாயத்தார் என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்ப்புக் கூறுகிறார்களோ அதன்படி நான் கட்டுப்படுகிறேன்" என்று கருப்பையாபிள்ளை பெருந்தன்மையோடு கூறிவிட்டார் அனேகமாக பாகப்பிரிவினை நடக்கத்தான் போகிறது என்று விசாரணையை அவதானித்துக் கொண்டிருந்த மூனுபுதூர் கிராமத்து பொதுமக்கள் எண்ணினார்கள்.

அந்த வேளையில் பஞ்சாயத்து சபை உறுப்பினர்களில் ஒருவர் ஓர் அபிப்பிராயத்தைத் தெரிவித்தார். அவர் கூறிய தாவது:

"இந்த பிரச்சினையில் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர் கள் கருப்பையா பிள்ளையும் வெள்ளைச்சாமியும் மட்டும் அல்லர். இன்னொருவர் இருக்கிறார். அவரையும் அழைத்து, அவர் வாக்கு மூலத்தையும் கேட்டு, அப்புறம் தான் நாம் தீர்ப்புக் கூறவேண்டும்"

இப்படி அந்த உறுப்பினர் தெரிவித்ததும், ஏனைய பஞ்சாயத்து உறுப்பினர் நால்வரும் "யார் அவர்? யாரை அழைக்க வேண்டும்?" என்று ஏகோபித்த குரலில் கேட்டார் கள்.

"அழைக்கப்பட வேண்டியவர் கருப்பையாபிள்ளையின் மனைவி சித்தம்மைதான்" என்று பதில் சொன்னார் முன்பு பேசிய பஞ்சாயத்து உறுப்பினர்.

அவர் ஆலோசனை அனைவராலும் ஏற்றுக் கொள்ளப் பட்டது. உடனே, சித்தம்மையை பஞ்சாயத்துக்கு அழைத்து வரும்படி ஆள் அனுப்பினார்கள்.

சித்தம்மை பஞ்சாயத்தார் முன் ஆஜரானார். அவரிடம் பயமோ, அச்சமோ, தயக்கமோ காணப்படவில்லை. மிக்க துணிச்சலோடு அங்கு அவர் வந்து நின்றார்.

பஞ்சாயத்தார் கேட்டார்கள்:

"அம்மா, இப்போது ஒரு பிரச்சினை கிளப்பப்பட்டிருக் கிறது. உனக்கும் கருப்பையாபிள்ளைக்கும் பெண்குழந்தைகள் தான் இருக்கின்றன. ஆண்குழந்தைகள் இல்லை. அதனால் உங்கள் சொத்துக்கு உரிமையாளர் கருப்பையாபிள்ளையின் தமையனார் வைத்திலிங்கத்தின் மகன் வெள்ளைச்சாமி ஒருவர் தான் என்று ஆகிறது. இதற்கு நீ என்ன சொல்கிறாய்?"

இந்தக் கேள்விக்கு சித்தம்மையார் பளிச்சென்று பதில் அளித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்களுக்கு ஆண் வாரிசு இல்லை என்று யார் சொன்னார்கள்? என் கணவருக்கு என் அக்காள் மூலம் அதாவது அவருடைய முந்திய தாரத்தின் மூலம் ஒரு ஆண், ஒரு பெண் என்று இரண்டு குழந்தைகள் இலங்கையில் இருக்கிறார்கள். அந்த ஆண் பிள்ளை என்னுடைய பெருமகன் ஆவார். அந்தப் பிள்ளை இருக்கும் போது எங்களுக்கு ஆண்வாரிசு இல்லையென்று யார் சொல்ல முடியும்?"

இந்தப் பதில் அனைவரையும் அதிர்ச்சியடையச் செய்தது. பஞ்சாயத்தார் திணறினார்கள். கூடியிருந்த பொதுமக்கள் தீர்ப்பு என்ன ஆகிறது என்று வியப்போடு நோக்கினார்கள்.

"சித்தம்மையின் வாதம் சரியானதே. இந்தப் பிராதில் நாங்கள் இப்போது தீர்ப்பு சொல்வதற்கில்லை. கருப்பையாவுக்கு ஆண் வாரிசு உண்டு என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். ஆகையால் வெள்ளைச்சாமியின் முறைப்பாட்டைத் தற்காலிகமாகத் தள்ளி வைக்கிறோம்" என்று பஞ்சாயத்தார் தீர்ப்பளித்தார்கள்.

சித்தம்மையின் இந்த திரமும், சமயோசித புத்தியும் அனைவரையும் ஆச்சரியத்துக்குள் ஆக்கின.

பிற்காலத்தில் தொண்டமானிடம் காணப்படுகின்ற வீர தீரத்துக்கும், சமயோசித புத்திக்கும் நெருக்கடியான கட்டங்களில் துணிச்சலுடன் பொருத்தமான பதில் கொடுத்து நிலைமையை சமாளித்துவிடும் ஆற்றலுக்கும் உரிய வித்து அவருடைய அன்னையரான சித்தம்மையின் கருவில் இருந்தே உருப்பெற்றது என்பதை மேற்படி சம்பவம் நிரூபிக்கிறது அல்லவா?

இச்சம்பவம் நிகழ்ந்து சொற்ப காலத்துக்குள் சித்தம்மை தமது கருவில் இருந்த குழந்தையை ஈன்றெடுத்தார். அது ஓர் ஆண் குழந்தையாக பிறந்தது. வெள்ளைச் சாமியின் எதிர்பார்ப்புகள் யாவும் தரைமட்டமாயின. பெண் குழந்தைதான் பிறக்கும் என்று கூறிய ஜோதிடங்கள் எல்லாம் பொய்த்துப் போயின. தொண்டமான் பரம்பரையைத் துலங்க வைக்கும் விடிவெள்ளியாக சௌமியமூர்த்தி உதயமானார்!

வெள்ளைச்சாமியின் மனப் போக்கை அறிந்த கருப்பையா பிள்ளை, கூட்டுக் குடும்ப முறையை மேலும் நீடிப்பது புத்தியாகாது என்பதை உணர்ந்தார். மூனுபுதூரில் தான் தங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருந்த நாட்களை நீடித்துக்கொண்டார். சௌமிய மூர்த்தி பிறந்து 30 தினங்கள் ஆவதற்கு முன்பாகவே தமது ஆதன பாதனங்களை எல்லாம் பாகப்பிரிவினை செய்து விடவேண்டும் என்று பஞ்சாயத்தைக் கூட்டுவித்தார்.

தோட்டங்கள்,துரவுகள், நிலம் வீடு, பொருள் வீட்டுத் தளவாடங்கள், ஆடு மாடுகள் ஆகிய அனைத்துத் தேட்டங்களை யும் இரண்டாக வகுத்துப் பட்டியல் தயாரித்துக் கொண்டார். இந்தப் பட்டியலில் அவர் சொந்த முயற்சியில் சம்பாதித்து தேடிய இலங்கையில் இருந்த தேயிலைத் தோட்டங்களும் அடங்கின. அவர் புதிதாகக் கட்டிய மாளிகை போன்ற வீடும் இரண்டாகப் பிரிக்கப் பட்டது. வீட்டின் மத்தியில் ஒரு மானசீக ரேகை அந்த மாளிகையைப் பிரிந்து சென்றது. (இன்றுவரை அவ்வீடு இருகூறாக ஆக்கப்பட்டே இருக்கிறது.)

கருப்பையாபிள்ளை தயாரித்த இரண்டு பட்டியல்களையும் நியாயமானவை சரிசமமானவை என்று பஞ்சாயத்தார் ஏற்றுக் கொண்டனர். பின்னர் திருவுளச் சீட்டின் மூலம் எந்தப் பங்கு யாருக்கு என்று நிர்ணயிக்கப்பட்டது. பஞ்சாயத்து சபையில் ஊரில் உள்ள பெரியவர்களும் மூத்தவர்களும் அங்கம் வகித் தனர். செட்டியார் சமூகத்தைச் சேர்ந்த தனவந்தர்களும் பஞ்சாயத்தில் இடம் பெற்றிருந்தனர்.

காலஞ்சென்ற அண்ணன் வைத்திலிங்கம், அவர் மகன் வெள்ளைச்சாமி குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளை குட்டிகளுக்கு ஒரு பங்கினைக் கருப்பையா பிள்ளை மனநிறைவுடனும், மன மகிழ்ச்சியுடனும் கையளித்து, தமக்கு உரிய பங்கைத் தமதாக் கிக் கொண்டார். இது அவர் செய்த தீர்க்கமான முடிவு ஆகும்

இந்தப் பாகப்பிரிவினையின் பிரகாரம் ரம்பொடை தேயிலைத் தோட்டத்தின் மேல் பாகம், மேரீஸ் ஹில் தோட்டம் எல்லாம் வெள்ளைச் சாமிக்குச் சேர்ந்தன. வெவண்டன் தோட் டம் கருப்பையாபிள்ளைக்கு வந்தது.

அதன் மூலம், பிறந்து 30 ஆவது நாளிலேயே சௌமிய மூர்த்தி பிரிவினை செய்யப்பட்ட சகல சொத்துகளுக்கும் தனிவாரிசு ஆனார். அன்று முதல் இன்று வரை ஒரு குபேரரைப் போல வாழக்கூடிய நல்வாழ்வும் அவரை வந்து அடைந்தது.

அவர் வாழ்வில் ஏற்பட்ட முதல் நெருக்கடியை, அவர் தாயார் சித்தம்மை பஞ்சாயத்தின் முன் பகர்ந்த வாக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமும், அவர் தந்தை கருப்பையாபிள்ளை பஞ்சாயத்தின் முன் செய்த பாகப்பிரிவினையும் வெற்றிகரமாகத் தீர்த்து வைத்தன.

அதன் பின்னர், ஒன்றன் பின் ஒன்றாக தமது வாழ்க்கையில் ஏற்பட்ட சகல நெருக்கடிகளையும் சௌமியமூர்த்தி தம் புத்திக் கூர்மையினாலும், செயல் திறமையினாலும், வாக்கு வல்லமையினாலும், பேரம் பேசி முடிக்கும் ஆற்றலினாலும் சாமர்த்தியமாக மேற்கொண்டு வெற்றிவாகை சூடி வருகிறார் என்பது வரலாறு கூறும் உண்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

# குமாரவேலின் நேர்த்தி வெள்ளி யானை வாகனம்

பரம ஏழையாக இலங்கைக்குப் புறப்பட்டு வந்த குமாரவேல் சுமார் பத்து ஆண்டுக் காலத்துக்குள் குறிப்பிடக் கூடிய ஒரு பணக்காரராக, கருப்பையா பிள்ளை கங்காணி என்ற பெயரில் மூனுபுதூருக்குத் திரும்பலானுர்.

அதன் பின்னர் அடிக்கடி அவர் மூனுபுதூருக்கும் பட்டமங்கலத்துக்கும் வந்து போய்க் கொண்டிருந்தார்.

கருப்பையா கங்காணியார் இந்தியாவுக்கு வந்த சமயம் எல்லாம், முதலில் திருக்கோஷ்டியூர் சென்று சௌமிய நாராயணப் பெருமாளைத் தரிசித்து விட்டுத்தான் மூனுபுதூருக்கோ, பட்டமங்கலத்துக்கோ வருவது வழக்கமாயிற்று.

அவர் இலங்கையிலிருந்து இந்தியா வருவதற்கு இரண்டு வாரத்துக்கு முன்னதாகவே, தம் வருகைபற்றி திருக்கோஷ்டியூர் கோவிலுக்கு செய்தி அனுப்பி விடுவார்.

தாம் வருகிறுர் என்ருல் திருக்கோஷ்டியூர் கோவில் நிர்வாகம் சில ஏற்பாடுகளைச் செய்து வைக்க வேண்டும் என்பது கருப்பையா பிள்ளையின் வேண்டுகோள் ஆகும். அதற்கான செலவுகளை முன்பே அவர் செலுத்திவிடுவார்.

அவர் வேண்டுகோளின்படி, அவர் வருகின்ற தினத்தில், பெருமாளுக்கு விசேஷ பூஜை ஏற்பாடு செய்யப்படும். அன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றையத் தினம் சுமார் ஆயிரம் பேருக்கு மதிய அமுது படைக்க சமையல் நடைபெறும்.

கருப்பையா பிள்ளை கோவில் பூஜையில் பங்குபற்றி தெய்வ தரிசனம் செய்துவிட்டு, பந்தியிலிருக்கும் சுமார் ஆயிரம் ஏழைகளுக்கு அன்னம் பரிமாறி விட்டு, தாமும் கூட இருந்து உணவருந்தி விட்டு, இளைப்பாறி, சாயங்கால மாகத்தான் மூளுபுதூர் வந்தடைவார்.

கோவிலிலிருந்து அவரை வீட்டுக்கு அழைத்து வர அவருடைய வெண்குதிரை பூட்டிய சரட்டு வண்டி கோவிலில் வந்து தயாராகக் காத்து நிற்கும்.

இந்த வரிசைகள், அவர் இறக்கும் வரை மாமூலாக நடைபெற்று வந்தன. திருக்கோஷ்டியூரின் திருவிழாக் காலத் துக்கு இரண்டு வாரம் முன்பதாகவே கருப்பையா பிள்ளை இந்தியா வருவது வழக்கமாக இருந்தது.

அப்படி வருபவர், தொண்டமான் மரபினருக்கு ஒதுக் கப்பட்டிருந்த திருக்கோஷ்டியூர் ஆலய வருடாந்த உற்சவத்தின் ஆறுவது மண்டகப் படித்திருவிழாவையும் முன்னின்று நடத் திவிட்டே இலங்கை திரும்புவார்.

இப்படியாக, ஒரு வருடம், கருப்பையாபிள்ளை திருக் கோஷ்டியூர் வருகிறார் என்ற செய்தி அடிபட்ட போது, பிரான் மலையில் கரந்துறைந்து வாழ்ந்த திருடர் கோஷ்டி யொன்று அவரிடம் கொள்ளையடிக்க திட்டம் தீட்டியது.

கருப்பையா பிள்ளை இந்தியா வரும்போது ஒரு கைப் பெட்டி நிறையப் பணம் கொண்டு வருவது வழக்கம். அந்தப் பணத்தை அவர் வெள்ளி நாணயங்களாகவும், தங்க நாணயங் களாகவும் கொண்டு வருவார்.

இதை அறிந்திருந்த கொள்ளையர், அவர் திருக்கோஷ்டி யூர் தரிசனத்தை முடித்து மூளுபுதூர் வரும்போது வழிப்பறி செய்வது என்று முடிவு செய்தனர்.

கருப்பையா பிள்ளை தமது குதிரை வண்டியில் வந்து கொண்டிருந்தார். வண்டியோட்டி வண்டியைச் சவாரி விட்டுக் கொண்டு வந்தான். மெய்க் காப்பாளர் இருவர் கையில் தண்டத்துடன் வண்டியினுள்ளே கங்காணியாருடன் காவலாக உட்கார்ந்திருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது மங்கிக் கொண்டு வந்தது, முன் இருட்டு மூடிக் கொண்ட வேளையில், நடுவழியில் திருடர்கள் வண்டியை மறித்தனர். "பணப்பெட்டியைத் தருகிறாயா அல்லது மண்டையை நொருக்கட்டுமா?" என்று கர்ஜித்தனர்.

கருப்பையா பிள்ளை பயப்படவில்லை. வீரத்தோடு செயல் பட்டார். பணப்பெட்டியை வண்டிக்காரனிடம் கொடுத்து, "கவனமாக வைத்துக்கொள்" என்று கூறிவிட்டு, காவலாளி களுடன் தாமும் வண்டியை விட்டுக் குதித்து கையில் கழி ஒன்றை எடுத்துக் கொண்டு திருடர்களுடன் சிலம்பம் ஆடினார்.

திருடர்களின் கை ஓங்கிவிடும் போலிருந்தது. காவலாளி யில் ஒருவன் அடிபட்டுக் கீழே சரிந்தான். அதுகண்டு, "திருக்கோஷ்டியூரானே" என்று மனமுருகி வாய்விட்டு அழைத் தார் கருப்பையாபிள்ளை.

அந்த சமயத்தில் ஓர் அதிசயம் நிகழ்ந்தது.

ஒரு யானை பக்கத்தில் நின்று பிளிறுவது போன்ற ஒரு பேரொலி கேட்டது.

அந்த ஒலி கேட்டதும் வண்டியில் பூட்டியிருந்த குதிரை வெருட்சி அடைந்தது போல் காணப்பட்டது.

ஒருவித வெறியினால் ஆட்கொள்ளப்பட்டது போல அந்தக் குதிரை தனது முன்னங்கால்களைக் கிளப்பிக் கிளப்பி ஒவ் வொருவராகத் திருடர்களைத் தாக்க முற்பட்டது.

குதிரையின் குளம்புகளால் மோதப்பட்டு திருடர்களில் பலர் கீழே விழுந்து புரண்டார்கள்.

இந்த சமயத்தில் வண்டிக்காரன், "ஐயா எல்லோரும் வண்டியில் ஏறுங்கள்,ஏறுங்கள்"என்று கூச்சலிட்டான்.

வண்டியில் வந்த மூவரும் வண்டியில் தாவி ஏறிக் கொண்டார்கள்.

அவ்வளவு தான்.

இன்னொரு பிளிறல் சத்தம் பயங்கரமாக எங்கிருந்தோ ஒலித்தது. அந்தச் சத்தத்தைக் கேட்டு நடுங்கி விட்டது குதிரை தறிகெட்டு ஓட ஆரம்பித்தது. கண்மூடித் திறப்பதற் குள் கனதூரத்தைத் தாண்டிவிட்டது வண்டி. வந்த திருடர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்தங்கி விட்டார்கள். அந்த திருடர்களால் கருப்பையா பிள்ளையின் பணப்பெட்டியை அபகரிக்க முடியவில்லை.

மூனுபுதூரை அடைந்த கருப்பையா இரவு தூக்கம் பிடிக்காமல் படுக்கையில் சுழன்று சுழன்று கிடந்தார். ஒரு விஷயம் அவருக்குப் புரியாத புதிராகவே இருந்தது.

திருக்கோஷ்டியூரிலிருந்து மூனுபுதூருக்கு வரும் வழியில் யானைகள் எதுவும் கிடையா. வளர்ப்பு யானைகள் கூட இல்லை.

அப்படியானல் அந்தப் பயங்கர யானைத் தொனியில், ஒரு முறையல்ல இரண்டு முறை பிளிறியது எது?

யானையின் பிளிறல் தொனி மூலம் தம்மையும், மற்ற வர்களையும், பணப்பெட்டியையும் காப்பாற்றிய அந்த அதீத சக்தி எது?

பல வருடங்களுக்கு முன் திருக்கோஷ்டியூராரின் திவ்விய சன்னிதியில் குமாரவேல் ஆக, இருந்தபோது, தான் செய்து கொண்ட ஒரு நேர்த்திக்கடன் கருப்பையா பிள்ளையின் மனதில் பளிச்சிட்டது.

அந்த நேர்த்திக்கடனை அவர் இதுநாள் வரை நினைக்க வில்லை."ஐயையோ, மறந்து விட்டிருந்தேனே!" என்று பரிதவித் தார்.

முதன் முதலாக, இலங்கை புறப்படுவதற்கு முன்பதாக, குமாரவேல் என்ற சிறுவன் திருக்கோஷ்டியூரில் பிரார்த்தனை செய்து, இலங்கை செல்ல, சௌமியநாராயணப் பெருமாளிடம் அருள் வேட்டான் அல்லவா?

அந்த சமயத்தில், தெரிந்தோ தெரியாமலோ, சிறுபிள்ளைத் தனமாகவோ அன்றித் தீர்க்கமான சிந்தனையுடனே குமாரவேல் செய்து கொண்ட நேர்த்திக்கடன் என்ன தெரியுமா?

"திருக்கோஷ்டியூரானுக்கு நான் ஒரு யானை வாகனம் செய்து தருவேன்" என்பது தான் அந்த நேர்த்தியாகும்!

இந்த நேர்த்திக் கடனை ஞாபகப் படுத்தவே சௌமியன் செய்த திருவிளையாடல் தான் யானையின் பிளிறல் என்பதை கருப்பையாபிள்ளை க்ஷணத்தில் கருத்தில் கொண்டார்.

பொழுது விடிந்ததும் அவர் செய்த முதல் காரியம் திருக்கோஷ்டியூர் ஆலய நிர்வாகிகளை அழைத்து கோவிலுக்கு தாம் ஒரு யானை வாகனம் செய்து தர விரும்புவதாகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது வெறும் மரயானை வாகனம் அல்ல வெள்ளியானை வாகனம் என்றும் தெரிவித்தார்.

அதற்காக, பன்னிரண்டு ஆயிரம் ரூபா எடை வெள்ளியை அவர் வாக்களித்தார். கோவில் தர்மகர்த்தாக்கள் பணியை ஆரம்பித்தனர். சுமார் ஆறடி உயரத்தில் ஒரு யானை உரு வாயிற்று. அதற்கு சுத்தமான வெள்ளி கொண்டு முழுப்படியாகக் கவசமிடப்பட்டது. அழகான, அற்புதமான வெள்ளியானை வாகனமாக அது அமைந்து விட்டது.

அந்த வாகனத்தைக் கண்ட வைஷ்ணவப் பெருமக்கள் அனைவரும் கவரப்பட்டார்கள். களியுவகை கொண்டார்கள். வாகனம் இன்றுவரை கோவிலில் இருக்கிறது.

இன்றைய பெறுமதியில் அந்த வாகனத்தின் விலை 12 லட்ச ரூபாயாக இருக்கலாம்.

தந்தை கருப்பையாபிள்ளை செய்து விட்டுச் சென்ற மாமூலை இன்றுவரை அவர் மகன் சௌமியமூர்த்தி தொண்டமான் கடைப்பிடித்து வருகிறார்.

அதாவது, தொண்டமான் தமது ஊரான மூனுபுதூருக்கோ, அன்றி பட்டமங்கலத்துக்கோ எப்போது போனாலும் ஒரு தடவை சௌமிய நாராயணப் பெருமாளைத் தரிசித்து விட்டுத்தான் திரும்புகிறார்.

வருடா வருடம் திருக்கோஷ்டியூர் திருவிழாவில் கலந்து கொண்டு, ஆறும் மண்டகப்படித் திருவிழாவையும் முன்னின்று நடத்தி வருகிறார்.

அத்தோடு அவ்வப்போது அங்குள்ள, ஏழைகளுக்கு, அன்னதானமும் அளித்து வருகிறார்.

குமாரவேல் வைத்த நேர்த்திக்கடனின் படி, அவரே கருப்பையா பிள்ளை ஆனதும், நிறைவேற்றி வைத்த திருக்கோஷ்டியூர் தேவாலயத் திருப்பணியை, தொடர் அறுந்து போகாமல் இன்றுவரை நிறைவேற்றி வரும் பெரும் பேறு சௌமிய மூர்த்தி தொண்டமானுக்கு கிடைத்திருப்பது அவர் செய்த பெரும்பாக்கியம் என்றே சொல்ல வேண்டும்.

திருக்கோஷ்டியூர் கோவிலில் பூஜகராக விளங்கும் மலேஷியா புகழ் எஸ்.வெங்கடேஷ பட்டாச்சாரியார், கோவிலுக்கு ஒரு யானை வாகனம் கிடைத்த விவரத்தை மேற்கண்டவாறு எடுத்து விளக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9

# கண்ணனும் காந்தியும் காட்டிய வழியில்

பாகப்பிரிவினை நடைபெற்ற பின்னர் கருப்பையாபிள்ளை மீண்டும் இலங்கை சென்றுவிட்டார். சௌமியமூர்த்தியை சிறுகுழந்தையாக தம் மனைவி சித்தம்மையின் மடியில் விட்டுச் சென்ற கருப்பையாபிள்ளை சரியாக ஏழு ஆண்டுகள் இந்தியா வுக்கே போகவில்லை.

காரணம் என்ன?

பாகப்பிரிவினையின் பின்னர் ஒரு வைராக்கியத்தோடு அவர் இலங்கை வந்தார். பிரித்துக் கொடுத்த அளவு தோட் டத்தை தாமாக மீண்டும் சம்பாதித்து ஈடு செய்து கொள்ள வேண்டும் என்பதே அந்த வைராக்கியம் ஆகும். இந்த முயற்சியில் அவர் ஈடுபட்டிருக்கும் போது எதிர்பாராத விதமாக பல இன்னல்களும் அவருக்கு ஏற்பட்டன. பல ஆதாயங்களும் கிடைத்தன. புதிய தோட்டங்களை வாங்கி அவர் தமது சொத்துக்களைப் பெருக்கிக் கொண்டார். வெவண் டன் தோட்டத்துக்கு அருகில் இருந்த தவளந்தன்ன தோட்டம், வெவண்டனுக்கு கீழே நுவரேலியா சாலையில் அமைந்த பலபொக்கன தோட்டம் எல்லாம் கருப்பையா பிள்ளையின் உடைமைகள் ஆயின.

ஏழு ஆண்டுகள் கருப்பையாபிள்ளை தமது சொந்த ஊரான மூனுபுதூருக்குப் போகாவிட்டாலும் மாதம் மாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவருமல் தன் மனைவிக்கு பணம் அனுப்பிக்கொண்டேயிருந் தார். எனவே, சௌமியமூர்த்தி எதுவித குறைபாடும் இல் லாமல் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, ஐந்து ஆறு வயதுப் பராயத்தினன் ஆனுன்.

அந்த வேளையில் மூனுபுதூர் கிராமத்தில் ஒரு நல்ல காரியம் நடைபெற்றது. முதன் முதலாக அந்தக் கிராமத்தில் ஓர் ஆரம்ப பாடசாலை அமைக்கப்பட்டது.

கிராமத்து பிள்ளைகள் எல்லாம் பாடசாலைக்குப் போக ஆரம்பித்தன. ஆனுல் சௌமியமூர்த்தி பாடசாலைக்குப் போக வில்லை. காரணம், அந்தச் சிறுவனைப் பள்ளிக்கூடத்துக்கு அழைத்துப் போய் முறைப்படி சேர்ப்பதற்கு அவனுக்கு தகப்பன் ஊரில் இருக்கவில்லை.

ஆனுல், இந்த நிலைமையை ஏற்றுக் கொள்ள சிறுவன் சௌமியமூர்த்தியின் மனம் ஒப்பவில்லை. படிக்கவேண்டும், கல்வி கற்கவேண்டும், அறிவாளியாக வேண்டும் என்ற ஆசை யும் ஆர்வமும் அந்த வயதிலேயே சௌமியமூர்த்தியிடம் துளிர்விட ஆரம்பித்துவிட்டன. "தந்தை ஊரில் இல்லாவிட் டால் என்ன? நானே முயன்று பார்க்கிறேன்." என்று புறப் பட்டுவிட்டான் சிறுவன்.

நேராக பாடசாலை ஆசிரியரிடம் சென்ருன். "என்னையும் பள்ளிக்கூடத்தில் சேர்த்துக் கொள்ளுங்கள் " என்று கேட்டான். அந்த நேரம் ஊர்ப்பிரமுகர்கள் பலர் அங்கு ஆசிரியருடன் பேசிக் கொண்டிருந்தார்கள். சிறுவனுடைய ஆர்வத்தையும், தைரியத்தையும் பார்த்து அவர்கள் எல்லாரும் பிரமித்துப் போனுர்கள்.

ஆசிரியரும், சௌமியமூர்த்தியைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்துக் கொண்டார். அவனும் வகுப்புகளுக்கு ஒழுங்காகப் போய்வந்தான். ஆனுல் இது கிராமத்தில் ஒரு பிரச்சினையைக் கிளப்பிவிட்டது. ஒரு சிறுவன் முதலில் பாடசாலைக்குப் போவ தானுல் அவனுக்கு சமய ஆசாரப்படி அட்சராரம்பம் செய்ய வேண்டும். முறைப்படி "ஏடு தொடக்கி" வைக்கப்படாத ஒருவன் பாடசாலை செல்வது என்பது கிராம வழக்கத்தைப் பொறுத்தவரை ஒரு முறைகேடான செயல் ஆகும். ஒரு தான் தோன்றிப்பிள்ளை பின் வாசலால் பாடசாலைக்குள் நுழைந்து விட்டான், என்று பலரும் சுட்டிக் காட்டினர்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமையை உணர்ந்து கொண்ட தாயார் சித்தம்மை உடனே தனது சகோதரர்களை அழைத்து தொண்டமான் வம்ச ஆசாரப்படி, சமய சம்பிரதாயங்களுடன் அட்சராரம்பம் செய்ய ஏற்பாடுகள் செய்தார். இந்த வைபவங்கள் இன்றுவரை சௌமிய மூர்த்தி தொண்டமானின் மனதில் பசுமரத்து ஆணி போல பதிந்துள்ளன. இதைத் தமது வாழ்க்கையில் சம்பவித்த முதல் திருப்பமாக இன்றும் தொண்டமான் கருதுகிறார்.

தமது ஏழாவது வயதில் தந்தையை முதன் முதலாகக் கண்ட சௌமிய மூர்த்தி கல்வி கற்பதில் தனக்கு உள்ள ஆசையை வெளிப்படுத்தினார். அதற்கு இணங்க சிறுவனை இலங்கைக்கு அழைத்துச் சென்று அங்கு நல்ல கல்வி புகட்ட விரும்புவதாக கருப்பையாபிள்ளை, தாயார் சித்தம்மையிடம் தெரிவித்தார். ஆனால் அதற்கு சித்தம்மை இணக்கம் தெரி விக்கவில்லை. பையன் சின்னவனாக இருக்கிறான் வயது வரட்டும் என்று சால்ஜாப்பு கூறிவிட்டார்.

ஆனால், உண்மையில் சித்தம்மைக்கு தன்மகன் சௌமிய மூர்த்தியை இலங்கைக்கு அனுப்ப சற்று பயமாக இருந்தது. காரணம், தன் கணவருடைய மூத்த மனைவியும், அவரின் சொந்தக்காரர்களும் ஒரு வேளை சௌமியமூர்த்திக்கு தீங்கு விளைக்கலாம் என்று சித்தம்மை அச்சங் கொண்டிருந்தார்.

இந்த அச்சத்தைப் போக்க வேண்டியது கருப்பையா பிள்ளையின் கடமையாயிற்று. இரு குடும்பங்கள் அக்கா தங்கை, அண்ணன் தம்பி ஆகிய உறவினர்களை ஒன்றுக்குள் ஒன்றாக திருமணம் செய்து வைத்து, எல்லோரும் சமமான சொந்தக்கா ரர்கள் தாம் என்ற உணர்வை கருப்பையா பிள்ளை வெகுசாமர்த் தியமாக ஏற்படுத்தினார். அதன் பின்னர்தான் இலங்கையில் இருந் தவர்களிடம் சித்தம்மையாருக்கு பயம் தீர்ந்து நம்பிக்கை பிறந்தது.

இதன் பெறுபேறாக, தன் மகன் சௌமியமூர்த்திக்கு பதினொரு வயது ஆனபோது, அவனை தகப்பனாரிடம் இலங் கைக்கு அனுப்பிவைக்க சித்தம்மை சம்மதப்பட்டார்.

அந்தக் காலத்தில் இந்தியாவிலிருந்து இலங்கை வருபவர் கள் ஏழு நாட்கள் மண்டபம் தொற்றுநோய் தடுப்பு முகாமில் தரித்து நின்று தான் வரவேண்டும். இப்படி அங்கு நிற்காமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவதானால் அரசாங்கத்தின் சுகாதார பகுதியினரிடமிருந்து "குவாரண்டைன்" அனுமதி பெற வேண்டும்.

சௌமியமூர்த்தியை தடுப்பு முகாமில் தரிக்காமல் தரு விப்பதற்கான "குவாரண்டைன்" பத்திரங்களைப் பெற்று கருப்பையா பிள்ளை இந்தியாவுக்கு அனுப்பியிருந்தார். அந்தப் பத்திரங் களைப் பார்த்த போது தான் அந்த பதினொரு வயது சிறுவனுக்கு ஓர் உண்மை புலனாயிற்று.

அதுகால வரை உறவினர்களும், கிராமத்தவர்களும் சௌமியமூர்த்தியை மாதவன் என்றே அழைத்து வந்தார்கள். பாடசாலையில் சேர்ந்த போதும் மாதவன் என்ற பெயரே பதியப்பட்டிருந்தது. இலங்கையிலிருந்து கருப்பையா பிள்ளை அனுப்பி வைத்த குவாரண்டைன் அனுமதிப்பத்திரத்தைப் பார்த்த போது சௌமியமூர்த்தி தான் தனது பதிவுப் பெயர் என்பதை முதன் முறையாக அறிந்து கொண்டான் மாதவன்.

மாதவன், சௌமியமூர்த்தி, என்றெல்லாம் அழைக்கப் பட்டவர் 1932ஆம் ஆண்டில் திருமணம் செய்து கொண்ட பின்னர் தான், தமது வம்ச பெயரான தொண்டமான் என்ற நாமத்தைத் தமக்குச் சூட்டிக் கொண்டார் என்ற விவரம் ஏற்கனவே தரப்பட்டது.

1924 ஆம் ஆண்டு தீபாவளி பண்டிகையின் போது தான் சௌமியமூர்த்தி முதன் முதலாக இலங்கை வந்து சேர்ந்தார். அவர் ஒருவரின் துணையோடு தலைமன்னார் மார்க் கமாக பொல்காவலைக்கு ரயிலில் வந்து அங்கிருந்து கம்பளை போய்ச் சேர்ந்தார். கம்பளை ரயில் நிலையத்தில் கருப்பையா பிள்ளை தன் மகன் சௌமியமூர்த்தியை சந்தித்து ரம்பொடைக்கு தமது காரில் அழைத்துச் சென்றார்.

அது கருப்பையாபிள்ளையின் சொந்தக் கார். 1924 ஆம் ஆண்டிலேயே சொந்தமாக கார் வைத்து ஓடும் அளவிற்கு அவர் அந்தஸ்து உயர்ந்திருந்தது. அந்தக் காரை அவர் ஒரு வெள்ளைக்கார தோட்டத்துரையிடமிருந்து வாங்கியிருந்தார். காரின் உட்புறம் அழகான கம்பளங்கள் விரித்து வெகு நேர்த்தியாக இருந்தது.

நீண்ட பிரயாணம் செய்து வந்ததனால் பெரும் களைப் பும், ஓரளவு சுகவீனமும் ஏற்பட்டிருந்தது சௌமியமூர்த்திக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார் ரம்பொடையை நோக்கி செல்கையில், பாதை பல வளைவுகளையும், நெளிவுகளையும் கொண்டைப்பின் திருப்பங் களையும் கொண்டதாயிருந்தது. இப்படியான ஒரு மலைநாட்டுப் பயணத்தை சௌமியமூர்த்தி இதற்கு முன் மேற்கொண்டதில்லை. அதனால் அந்த சிறுவனுக்கு தலைசுற்ற ஆரம்பித்தது. திடீர் என்று வாந்தி ஏற்பட்டது. காருக்குள்ளேயே வாந்தி எடுத்து விட்டான் பையன்.

பையனின் சுகவீனத்தைப் பற்றி கருப்பையாபிள்ளை அதிகம் கவலைப்படவில்லை. காரை அசுத்தப்படுத்தி விட்டானே என்று அவருக்கு ஆத்திரமும், கோபமும் தான் ஏற்பட்டன.

"ஒரு வெள்ளைக் காரத் துரையிடமிருந்தல்லவா நான் இந்தக் காரை வாங்கினேன். நீ காரை அழுக்காக்கி விட்டாயே....." என்று அவர் சீறிவிழுந்தார். இதுதான் சௌமிய மூர்த்தியின் முதல் இலங்கை அனுபவமாக இருந்தது.

என்றாலும் பின்னர் சௌமியமூர்த்தி இலங்கையின் இயற்கை காட்சிகளால் கவரப்பட்டான். ரம்பொடையைச் சூழ்ந்துள்ள உயர்ந்த மலைத் தொடர்களும், பச்சைப் பசேல் என்ற தேயிலைச் செடிகளின் இனிய காட்சிகளும், மரகதக் கம்பளம் விரித்தது போன்ற பசும்புல் வெளிகளும், சல சல வென்று ஓடும் அருவிகளும் , பூங்காவும், மலர் வனங்களும் சௌமியமூர்த்தியின் மனதில் இதமான எண்ணங்களையும், ரசனைகளையும் தோற்றுவித்தன. ரம்பொடை நீர் வீழ்ச்சி அவர் மனதைக் கவர்ந்தது. காய்ந்து வரண்டு கிடக்கும் இராமநாதபுர சூழ்நிலையிலிருந்து வந்த சௌமியமூர்த்திக்கு இலங்கையின் நிலவளமும், நீர்வளமும், மலைவளமும், கா வளமும் மனோரம் மியமாக இருந்தன. "இப்படியான ஒரு கந்தர்வலோகத்து கண்கொள்ளாக்காட்சியை கண்டதில்லையே" என்று ஆச்சரியத் தில் மூழ்கிவிட்டான். சௌமியமூர்த்தி.

சில நாட்கள் இப்படிக் கழிந்த பின்னர் சௌமியமூர்த் தியை கருப்பையாபிள்ளை ஒரு தோட்டப்பள்ளிக் கூடத்தில் சேர்த்தார். மூனுபுதூரில் விட்டுவந்த பள்ளிக்கூடப் படிப்பை சௌமியமூர்த்தி இங்கு தொடர்ந்தான். கருப்பையாபிள்ளைக்கு தோட்டப்பாடசாலைப் படிப்பு தன் மகன் சௌமியமூர்த்திக்கு போதாது என்று மனதில் பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடைய தோட்ட நிர்வாகங்களைக் கவனிப்பதற்கும் தன் அந்தஸ்துக்கும் ஏற்றதாக தன் மகன் ஆங்கிலக் கல்வி பயில்வது அவசியம் என்று அவர் எண்ணினார்.

மூன்று வருடங்கள் சௌமியமூர்த்தி தோட்டப்பாட சாலையில் பயின்ற பின்னர் அவனை ஆங்கிலக்கல்வி கற்பதற்காக கம்பளையில் உள்ள அர்ச் ஆண்ட்ரூஸ் கல்லூரியில் சேர்த்தார் கருப்பையாபிள்ளை. அவருடைய ஒன்று விட்ட சகோதரர் ஒருவருக்கும் மாதவன் என்று ஒரு மகன் இருந்தான். சௌமிய மூர்த்தியும் மாதவனும் ஒன்றாகவே ஆண்ட்ரூஸ் கல்லூரியில் சேர்க்கப்பட்டனர்.

ரம்பொடையிலிருந்து கம்பளையிலுள்ள கல்லூரிக்கு தின மும் சென்று வருவது சிரமம் எனக் காணப்பட்டதால் கருப்பையாபிள்ளை கம்பளையிலேயே ஒரு வியாபார ஸ்தலத்தை ஆரம்பித்தார். அங்கு தங்கி, அங்கு சாப்பிட்டு, இரு சிறுவர் களும் கல்லூரிக்கு சென்று படித்து வந்தார்கள்.

கம்பளை ஆண்ட்ரூஸ் கல்லூரியில் சேரும் போது சௌமியமூர்த்தியின் வயது 14 ஆக இருந்தது. அங்கு ஐந்து ஆண்டுகள் தான் முறையான கல்வி பயிற்சியை சௌமிய மூர்த்தி பெற்றார். அதற்கு மேல் அவருக்கு படிக்க வாய்ப்பு கிடைக்கவில்லை. அவருக்கு திருமணம் செய்து வைத்து தமது தோட்ட நிர்வாகப் பொறுப்புகளில் தமக்கு உதவியாக சௌ மியமூர்த்தியை வைத்துக் கொள்ள வேண்டும் என்று கருப்பையா பிள்ளை தீர்மானித்துவிட்டார். அதன்படி 1932 ஆம் ஆண்டில் சௌமியமூர்த்தி-கோதையம்மாள் திருமணம் நடைபெற்றது. அப்போது சௌமியமூர்த்திக்கு வயது 19 தான் ஆரம்ப மாகியிருந்தது.

மூனுபுதூர் கிராமத்திலும், ஆரம்பப்பாடசாலையிலும் மாதவன் என்றே அழைக்கப்பட்டு வந்தவர் 1924 ஆம் ஆண்டு இலங்கை வந்த போது தான் சௌமியமூர்த்தியானார். இலங்கையில் கல்வி கற்றதும் சௌமியமூர்த்தியென்ற பெய ரிலேயே. திருமணமானபோதும் அவர் பெயர் சௌமியமூர்த்தி என்றே இருந்தது. திருமணத்தின் பின்னர் அவர் தமது இளம் மனையாளோடு இலங்கை திரும்பினார்.

திருமணம் ஆகி இலங்கைக்கு வந்த பின்னர் தான் அவருக்குத் தமது வம்சப் பெயரான தொண்டமான் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரில் ஒரு மோகம் ஏற்பட்டது. தமது வம்சத்தையும், ஆண்ட பரம்பரையின் பெருமையையும் விளங்க வைப்பதற்கு தமது பெயரைத் தொண்டமான் என்று வைத்துக் கொண்டால் என்ன என்று தோன்றியது.

எதை நினைத்தாலும் முடிக்கும் திறன் அப்போதே அவரிடம் குடிகொள்ள ஆரம்பித்துவிட்டது. தாம் எண்ணிய வாறே தமது பெயரைத் தொண்டமான் என்று மாற்றிக் கொண்டார். தொண்டமான் என்ற இந்த அழகிய திருநாமம் அவருக்கு பிற்காலத்தில் பெரிய புகழையும், பெயரையும், செல்வாக்கையும், அதிஷ்டத்தையும், அந்தஸ்தையும் தேடித் தரப்போகிறது என்பதை அவர் அப்போது எப்படித்தான் உணர்ந்து கொண்டாரோ என்பது விளக்கிக் கூறமுடியாத ஒரு புதிராகவே தோன்றுகிறது.

தொண்டமான் பாடசாலைகளிலும், கல்லூரியிலும் கழித்த காலம் சொற்பமானது. படித்த பாடங்களும் வகுப்புகளும் குறைவானவையே!, அவருடைய கல்லூரி வாழ்க்கை ஐந்து வருடங்கள் தான். ஆயினும் அவர் சம்பாதித்திருக்கும் அறிவும் ஞானமும் கடல் போன்றது.

இந்த அதிசயம் எப்படி நிகழ்ந்தது?

சிலர் பிறக்கும் போதே இயற்கை அறிஞர்களாக, மேதைகளாகப் பிறக்கின்றனர்கள். கருவில் திருவுடையவர்கள் அவர்கள். அப்படியான 'ஒரு மேதைதான் தொண்டமான். சிறுவயதிலேயே கல்வி பயில வேண்டும். அறிவைத் தேடிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அவருக்குள் ஆர்த்தெழுந் தது. அதனாலேயே அவர் மூனுபுதூர் பாடசாலையில் அவராகவே சென்று சேர்ந்து கொண்டார். பின்னர் சிறிது படிக்கத் தெரிந்ததும் அவர் சும்மா இருந்தாரா? இல்லை.

தாமாகவே நூல்களையும், பத்திரிகைகளையும் தேடித் தேடிப் படிக்கத் தொடங்கிவிட்டார். பள்ளிச் சிறுவனாக இருக்கும் போதே பாடநூல்களில் வரும் போர்களைவிட பாரத நாட்டில் அப்போது துளிர்விட்டுவளர்ந்து வந்த சுதந் திரப் போராட்டம் அவரைக் கவர்ந்தது. அவர் இந்தியா விலிருந்து இலங்கைக்கு வந்த காலகட்டத்தில் காந்தியுகம் பிறந்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1927 ஆம் ஆண்டு முதல் 1932 ஆம் ஆண்டு வரை அவர் சென்ட் ஆண்ட்ரூஸ் கல்லூரியில் கல்வி கற்றகாலையில் கல்லூரி ஆசிரியர்களின் பிரீதிக்கு உள்ளான ஒரு மாணவராக விளங்கினார். எனினும், அவருள்ளே மறைந்திருந்த தலைமைத் துவம் தாங்கும் பண்பு அப்போதும் தலைகாட்டத் தவறவில்லை. மாணவர் கோஷ்டிகளின் தலைவராக அவர் முன்னின்று பாடசாலையின் சில பொதுப்பிரச்சினைகளை ஆசிரியர்களுடன் பேசித் தீர்த்து வைப்பதில் அவர் முதல் மாணவராகச் செயல்பட்டிருக்கிறார் என்பதும் ஆசிரியர்கள் தொண்டமானை ஏனைய மாணவர்களுக்கு வழிகாட்டும் முதல் மாணவராக மதித்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

பிழை செய்யாத மாணவர்கள், சந்தர்ப்ப சூழ்நிலைகளால், தவறுகக் குற்றம் சாட்டப்படும் வேளைகளில் தொண்டமான் அவர்களுக்காக முன் வந்து நியாயத்தை நிலைநாட்ட முயன்ற சம்பவங்கள் பல உண்டு. சிறு பராயத்திலேயே, ஒடுக்கப்பட்ட வர்களுக்காக போராட வேண்டும் என்ற பண்பும், துணிச்சலும் தொண்டமானுடைய பிஞ்சு உள்ளத்தில் பதிந்து கிடந்தன.

கல்லூரியை விட்டு தொண்டமான் விலகி விட்ட போதிலும், பத்திரிகைகளையும், புத்தகங்களையும் சரித்திர நூல் களையும், அறிவு நூல்களையும் படிக்கும் பழக்கத்தை அவர் விட்டு விடவே இல்லை. படிக்கும் விஷயத்தில் தான் என்றுமே ஒரு மாணவர் தான் என்று தொண்டமான் அடிக்கடி சொல்லிக் கொள்வார்.

இளம் தொண்டமானைக் கவர்ந்தவர்கள் இருவர். ஒருவர் காந்தி, மற்றவர் கண்ணன். அரசியலுக்கு காந்தியையும், ஆத்மீகத்துக்கு கண்ணனையும் அவர் வழிகாட்டிகளாக ஏற்றுக் கொண்டார்.

காந்தியின் போதனைகள், அவர் வாழ்க்கை நெறிகள், அவருடைய கதர் இயக்கம், அவருடைய இந்திய சுதந்திர வேட்கை, அஹிம்சைப் போராட்டம் எல்லாமே தொண்ட மானுக்கு பிடித்தவை ஆயின.

அதே போல, கிருஷ்ணபரமாத்மாவின் 'பகவத் கீதை' தந்த போதனைகள் தொண்டமானை வெகுவாகக் கவரலாயின.

தொண்டமான் ஒரு மாணவராக கம்பளை சென்ட் ஆண்ட்ரூஸ் கல்லூரியில் சேர்ந்த 1927 ஆம் ஆண்டில் காந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாத்மா இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். அவருக்கு நாட்டுக்கோட்டைச் செட்டியார் சமூகத்தினர் கொழும்பில் ஒரு வரவேற்பு அளித்தார்கள். 1927 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் திகதி கொழும்பு ஜிந்துப்பிட்டி மண்டபத்தில் அந்த மாபெரும் வரவேற்பு இடம் பெற்றது.

"ஓர் அந்நிய நாட்டில் எப்படி நாம் நடந்து கொள்ள வேண்டும்?" என்ற வழிமுறைகளை மகாத்மா காந்தி அன்றைய பேச்சில் எடுத்துக் கூறினார். இந்தப் பேச்சின் விவரம் அப்போது தமிழ் பத்திரிகைகளிலும் வெளிவந்தது. காந்தி மகாத்மாவின் செயலாளராகவும், மொழிபெயர்ப்பாளராகவும் பணியாற்றிய மகாதேவ தேசாயினால் எழுதப்பட்டு பின்னர் ஆங்கில நூலாகவும் வெளியாயிற்று.

*அந்த சொற்பொழிவில் மகாத்மா காந்தி கூறியதன் சாரம் இதுதான்:*

*வெளிநாட்டில் இருப்பவர்களானாலும் சரி, இந்தியாவில் இருப்பவர்களானாலும் சரி பணம் படைத்த இந்தியர்களாகிய நீங்கள் சம்பாதித்த பணத்துக்கு உரிய பலனைப் பெறுவதற்கு தாராள மனத்தோடு நீங்கள் கொஞ்சம் தான தர்மம் செய்தால் மட்டும் போதாது.*

*நீங்கள் இந்தியாவில் உள்ள கோடானு கோடி வாயற்ற ஏழை எளிய மக்களுடன் ஒருவித ஜீவப் பிணிப்பை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். அப்படிச் செய்வதற்கு நீங்கள் ஒவ்வொருவரும் கதர் அணிய வேண்டும். கதர் என்பது அந்த ஏழைகளின் புனித கரங்களால் நூற்கப்பட்ட நூலிலிருந்து தயாரிக்கப்பட்டதாகும். கதர் அணிவதன் மூலம் நீங்களும் புனிதர்களாவீர்கள்.*

*பூகோள ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பார்த்தால் நீங்கள் ஒரு அந்நிய நாட்டில் வசிப்பவர்களாவீர்கள். இலங்கை இந்தியாவின் ஒரு பகுதியல்ல. இந்த செழிப்பான பூமியில் வர்த்தகர்களாக வசிக்கும் நீங்கள் இங்குள்ள சுதேச மக்களோடு நேர்மையாகவும், அன்னியோன்யமாகவும் நடந்து கொள்ளக் கடமைப்பட்டவர்கள் ஆவீர்கள்.*

*நீங்கள் எப்படி நடந்து கொள்கிறீர்கள் என்பதை வைத்தே இந்தியாவில் வாழும் கோடிக்கணக்கான மக்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் மதிக்கப்படுவார்கள். ஆகையால் இந்த அழகிய நாட்டில் வாழும் மக்களுடன் நீங்கள் கொடுக்கல் வாங்கல் செய்து கொள்ளும் விதம் நியாயமானதாக வும், குற்றமற்றதாகவும் இருக்கும் என நான் நம்பு கிறேன்.

உங்கள் அளவைகளும் தராசுகளும் சரியானவையாக இருக்கட்டும். உங்கள் கணக்குகள் பிழையற்றவையாக இருக்கட்டும். அத்தோடு இந்த நாட்டில் வாழும் ஒவ்வொரு பெண்மணியையும் அவரவருக்கு ஏற்றபடி நீங்கள் சகோதரியாகவும், மகளாகவும், தாயாகவும் மதிக்க கடவீர்.

செல்வச் செழிப்பு உங்கள் தலையை கிறங்காதபடி வைத்திருக்கட்டும். செல்வம், பொறுப்பு உணர்ச்சியை வளர்ப்பதாக இருக்கவேண்டும். அப்போதுதான், பணம் யார் மத்தியில் சம்பாதிக்கப்படுகிறதோ, யார் அதற்கு உடையவராய் இருக்கிறரோ அப்படிப்பட்ட இருசாராருக் கும் அது ஒரு வரப்பிரசாதமாக அமையும்.

மகாத்மா காந்தியுடைய இந்த அருமையான, ஆழமான பேச்சின் தமிழ் மொழி பெயர்ப்பை தொண்டமான் அப்போதே பத்திரிகைகளிலும் படித்தார். பின்னர் பல முறைகள் ஆங்கில நூலிலும் படித்திருக்கிறுர்.

இப்பேச்சு தொண்டமானிடம் பெரும் தாக்கத்தை ஏற் படுத்தியது.

மகாத்மா காந்தியை அன்று முதல் இன்று வரை தொண்டமான் தமது அரசியல் குருவாக ஏற்றுக் கொண்டார். மகாத்மா காந்தியின் அஹிம்சா தர்மமே தொண்டமானின் அரசியல் தர்மம் ஆயிற்று. சமுதாயப் பிரச்சினைகளையும், சமூக நெறி முறைகளையும் காந்தி எந்த வகையில் அணுகினுரோ அந்த அணுகு முறையையே தொண்டமானும் கடைப்பிடித் தார். தீண்டாமை ஒழிப்பு, பெண் விடுதலை, பரிபூரண சமய சுதந்திரம், மத வேறுபாடின்மை, ஒடுக்கப்பட்டவர்களின் விடு தலை, ஆண்டான் அடிமை ஒழிப்பு, தேச விடுதலை போன்ற காந்தி மகாத்மாவின் உன்னத இலட்சியங்கள் எல்லாம் தொண்ட மானின் இலட்சியங்களும் ஆயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றிற்கும் மேலாக மகாத்மா காந்தியைப் போலவே, தொண்டமானும் தேச ஒற்றுமையையும் தேச விடுதலையையும் நாடி நின்றார்.

காந்தி மகாத்மாவின் கொள்கைகளிலிருந்தும், கோட்பாடு களிலிருந்தும், போதனைகளிலிருந்தும், சாதனைகளிலிருந்தும், இன்று வரை தொண்டமான் விலகிப் போனதே இல்லை.

இந்தியாவும் இலங்கையும் சுதந்திர நாடுகள் ஆகும் வரை அவர் தூய வெள்ளைக் கதர் ஆடையையே தரித்து வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

காந்தி மகாத்மாவைப் போலவே கண்ணபரமாத்மாவும் தொண்டமானுக்கு வழிகாட்டியானார். கண்ணன் காட்டிய வழியிலேயே அவர் கடமையாற்றத் தலைப்பட்டார். பகவத் கீதையின் தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்புகளைப் பாராயணம் செய்யலானார்.

வாழ்க்கையில் அவருக்கு ஏற்பட்ட கஷ்டங்கள் நஷ்டங் கள், இடர்பாடுகள் போராட்டங்கள், ஏற்றங்கள் தாழ்வுகள் வெற்றிகள் தோல்விகள் எல்லாவற்றிலும் ஈடுகொடுத்து துவளாமல் தவழாமல் திடமாக நிமிர்ந்து நின்று பாசம் பற்று அற்ற முறையில் செயலாற்றுவதற்கு வேண்டிய ஆற்றலை யும், தெளிவையும் அவருக்கு தந்தது "பகவத் கீதை" என்ற அந்த ஆத்மீக பொக்கிஷமே ஆகும்.

> ***"மனிதனுடைய ஆத்மா அழிக்க முடியாதது. ஆகை யால் எதிர்த்துவரும் படைகளைக் கண்டு நீ கலங்காதே"***
>
> ***"நீ உன் கடமையிலே கண்ணாயிரு. நியாயத்துக்காக செய்யப்படும் ஒரு போராட்டத்தை விட, ஒரு வீரன் விரும்பி வரவேற்கக் கூடியது வேறு எதுவுமில்லை. ஆகையால் உன் தீர்மானத்திலிருந்து நீ தடுமாறுவது தகாது, ஓ அர்ஜுனா!"***
>
> ***"சந்தர்ப்பம் கிடைக்கும் வீரர்கள் பாக்கியவான்கள். இதோ இந்த சந்தர்ப்பம் சொர்க்கத்தின் கதவுகளை உனக்காகத் திறந்து விட்டிருக்கிறது!"***
>
> ***"நியாயத்துக்காகப் போராட மறுத்தால் நீ ஒரு துரோகி யாவாய். புகழ் உன்னைச் சேராது. நீ பாவவாளியாவாய்."***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உன் அவமானத்தையே மக்கள் எப்போதும் பேசிக் கொள்வார்கள். ஒரு மேன்மகனுக்கு அவமானம் மரணத்தைவிடக் கொடியது"

"நீ கொல்லப்பட்டால் சொர்க்கத்தை அடைவாய். வெற்றி பெற்றால் பூமியின் சாம்ராஜ்யத்தை அனுபவிப்பாய். ஆகவே, குந்தி புத்திரனே, எழுந்து போராடுவாயாக."

"இன்பத்தையும் துன்பத்தையும், வெற்றியையும், தோல்வியையும் சமமாக நோக்குவாயாக. போராட்டத்துக்கு தயாராகிக்கொள். பாவம் உன்னைச் சாராது......"

பகவத் கீதையின் இந்தப் போதனைகளும், இவை போன்ற ஏனைய வாக்கியங்களும் தொண்டமானை வழிநடத்துவன ஆயின. இந்த தெய்வீக மொழிகளே தொண்டமானை பிற்காலத்தில் சகல போராட்டங்களிலும் விருப்பு வெறுப்பின்றி ஒரு யுத்த வீரனைப் போல துணிச்சலுடன் ஈடுபட ஏதுவாயிருந்தன.

தொண்டமானுக்கு வாழ்க்கையில் எதையும் தாங்கும் இதயத்தை அளித்தவர்கள் காந்தியும், கண்ணனுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## திருக்கோஷ்டியூர்

வெள்ளி யானை வாகனத்தின் மீது
ஸ்ரீ சௌமிய நாராயணப் பெருமாள்
ஆறுப் மண்டகப்படி திருவிழாவுக்கு
எழுந்தருளுகிறார்.
கீழே: தொண்டமானுக்கு ஆலயத்தில்
பரிவட்டம் கட்டி திருமுடி சார்த்தப்
படுகிறது. அருகில் பேத்தி அநுராதா






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூனுபுதூர் மாளிகையின் உட்புறத்தை
அலங்கரிக்கும் எண்ணெய் வண்ண ஓவியங்களில்
ஒன்று இது. — கண்ணனுக்கு யசோதா
வெண்ணெய் ஊட்டும் காட்சி.



மேற்படி மாளிகையின் கதவுநிலைக்கு
மேல் காணப்படும் மரவேலைச் சிற்பங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூணாப்புதூரில் தொண்டமான் பிறந்த அரண்மனை போன்ற அலங்காரமான வயி.கரு. மாளிகை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அனைவருக்கும் "அப்பத்தா"
தெய்வமாகி விட்ட அன்புநிறை அன்னை
கோதை தொண்டமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்
ஸ்ரீலங்கா அரசின் மாண்புமிகு அமைச்சர்
சௌமிய மூர்த்தி தொண்டமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பட்ட மங்கலத்தில் உள்ள தொண்டமான்
மாளிகை. மாளிகையின் முன்னுல் ஊர் மக்கள்
கூடும் சமூக நிலையம். இங்கு பஞ்சாயத்து
வழக்குகளும் நடைபெறும்.




இலங்கை வெவண்டன் தோட்டத்தில்
அமைந்திருக்கும் தோட்ட மாளிகை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை ஜனாதிபதி ஜயவர்த்தனாவுடன்
பேரன் ஆறுமுகத் தொண்டமானும் அவர்
மனைவியும், மற்றையோரும்.



மகன் இராமநாதத் தொண்டமான்,
சௌமிய மூர்த்தி தொண்டமான், பேரன்
ஆறுமுகத் தொண்டமான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொண்டமான் தம்பதிகள்
சௌ. தொண்டமான் — கோதை தொண்டமான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10

# தொண்டமான் பரம்பரையின் தோற்றமும் வரலாறும்

***1932ஆம் ஆண்டு***

சௌமிய மூர்த்தி இலங்கைக்கு வந்து 8 ஆண்டுகள் கழிந்து விட்டன.

இதற்கிடையில், அவர் இரண்டொரு தடவை இந்தியா சென்று திரும்பியிருக்கிறார். ஆனால் 1932ஆம் ஆண்டு அவர் மேற்கொண்ட பயணம் அவர் மனதில் என்றும் பசுமையான ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டது.

கண்டர மாணிக்கம் என்பது செட்டிநாட்டுப் பிரதேசத்தில் ஒரு செழிப்பான, செல்வாக்கான கிராமம். ஆன்றோர்களையும் சான்றோர்களையும் தந்த கிராமம் அது.

நவரத்தினங்களிலே மாணிக்கம் மதிப்பு வாய்ந்தது. பிரகாசமுடைய சூரியனை மாணிக்கப் பரிதி என்கிறார்கள். மனிதருள் மதிப்புப் பெற்றவனை "மாந்தருள் ஒரு மாணிக்கம்" என்கிறார்கள்.

கண்டர மா்ணிக்கம் கிராமத்திலிருந்து சௌமிய மூர்த்திக்கு ஒரு விலை மதிப்பற்ற மாணிக்கம் கிடைத்தது. அந்த மாணிக்கம் கிடைத்ததன் பலாபலன், அன்றிலிருந்தே சௌமிய மூர்த்தி படிப்படியாக உயர்வடைந்து, ஒளி பெற்று ஒரு வைரம் போல் பிரகாசிக்க ஆரம்பித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1932இல் மூனுபுதூர் சென்ற சௌமிய மூர்த்திக்கு திரு மணத்துக்குத் தோதான பெண்ணைத் தேடினுர்கள். பல பெண்களின் பெயர்கள் பிரஸ்தாபிக்கப் பட்டன. ஈற்றில் கண்டர மாணிக்கத்திலிருந்து தான் அந்த தேடற்கரிய மாணிக்கம் கிடைத்தது.

பெயரும் புகழும் பண்பாடும் ஐஸ்வரியமும் நிரம்பிய ஒரு பழம் பெரும் குடும்பத்திலிருந்து அந்த மாணிக்கம் கிடைத்தது!

தோதான அந்த மாணிக்கத்தின் நாமம் கோதை என்று அமைந்திருந்தது.

கோதை அம்மையாரின் தந்தையார் பெயர் முத்தழகு சேர்வை. தாயார் பெயர் லக்ஷ்மி அம்மாள்.

சௌமிய மூர்த்தி - கோதை திருமணம் முடிந்து தம்பதிகள் மூனுபுதூரில் அமைந்திருந்த அரண்மனை போன்ற, பெற்றோர் மாளிகையிலே சில நாட்கள் தங்கினுர்கள்.

அப்போது தான் சௌமியமூர்த்திக்கு ஓர் எண்ணம் உதித்தது.

எதற்காக தன் தந்தை அத்தனை பெரிய ஒரு மாட மாளிகையை அந்தச் சிறிய கிராமமான மூனுபுதூரில் நிர் மாணித்தார் என்பது தான் அவர் மனதில் உதித்த எண் ணமாகும்.

தந்தையிடமே விளக்கம் கேட்டார்.

தந்தையார் குமாரவேல் என்ற கருப்பையா பிள்ளை கூறினுர்:

> **"நாங்கள் வீர மரபினர். முக்குலத்தோர் என்ற பழந் தமிழ் குடியினரில் கள்ளர் குலத்தைச் சேர்ந்தவர்கள். தொண்டமான், அம்பலம், சேர்வை என்ற புகழப் பெயரைக் கொண்டவர்கள். நாட்டை ஆண்ட பரம்பரை யினர். அந்நியர் ஆட்சியின் பின் நலிந்து போனவர் கள். முன்பு எப்படி வாழ்ந்தோம் என்பதைப் பிரதி பலிக்கும் வகையில் தான் இந்த அரண்மனை வீடு கட்டப்பட்டது. ஓர் ஆதர்ஸமாக......"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையார் அளித்த இந்த விளக்கம் சௌமிய மூர்த்தியின் சிந்தனையை மேலும் தூண்டலாயிற்று. மூனுபுதூரிலும், பட்டமங்கலத்திலும் அப்போது வாழ்ந்த பெரியவர்களிடம் தமது பரம்பரை பற்றி மேலும் விசாரித்தார் சௌமிய மூர்த்தி. வேண்டிய அளவு தெளிவு பிறக்கவில்லை.

ஆயினும், ஓர் உண்மை அவருக்குத் துலங்கியது. அதாவது, தான் தொண்டமான் என்ற ஒரு பழம் பெரும் பரம்பரையைச் சேர்ந்தவர் என்பது தான் அந்த உண்மையாகும்.

சிறிது காலம் மூனுபுதூரில் தங்கிவிட்டு சௌமியமூர்த்தி தம் இளம் மனைவியையும் அழைத்துக் கொண்டு இலங்கை வந்து சேர்ந்தார்.

இங்கு வந்ததும் அவர் செய்த முதல் காரியம் தமது பெயரை தொண்டமான் என்று மாற்றிக் கொண்டது தான். அதாவது அவர் சௌமிய மூர்த்தி தொண்டமான் ஆனார். எஸ். தொண்டமான் என்று கையொப்பம் இடலானார்.

இப்படி அவர் தமது பெயரை மாற்றிக் கொண்டாலும், அவர் மனதில் இருந்த அந்த வேட்கை தணியவில்லை. அதாவது, தமது பரம்பரையின் முழு விவரத்தையும் ஆராய்ந்து அறிய வேண்டும் என்பது தான் அந்த வேட்கையாகும்.

அப்படி மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் படி சௌமியமூர்த்தி தொண்டமான் "வீரத்தில் விளைந்த வித்து" என்று சொல்லும்படியாக அமைகிறார். அவருடைய பூர்வீக வரலாற்றின் விவரம் பின்வருமாறு:-

தொண்டை மண்டலம் என்பது பண்டைக்காலத் தமிழகத்தில் சோழ நாட்டின் ஒரு பகுதியாக விளங்கியது. இந்த சோழ மண்டலத்தினுள்ளே புதுக்கோட்டை ராஜ்யம் என்ற பிரதேசம் தனி மன்னர்கள் பரம்பரையினால் ஆளப்பட்டு வந்தது.

புதுக்கோட்டை ராஜ்யத்தில் "தொண்டைமான்கள்" என்ற சிறப்புப் பெயரைத் தாங்கிய ஒரு வம்சத்தினர் வாழ்ந்து வந்தனர். முக்குலத்தோர் என்ற வீரமறவர் குலத்தைச் சேர்ந்தவர்களான இவர்கள், ஆதியில் இராமநாதபுரம் மன்னரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ் மாநில ஆட்சித் தலைவர்களாகவும், ஜமீன்தார்களாகவும், படைத் தளபதிகளாகவும் விளங்கியவர்கள் ஆவர்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் தொண்டி என்பது புகழ்வாய்ந்த துறைமுகமாக விளங்கியது. கிரேக்கம், மிசிரம், யவனம், ஸ்பானியம், பாரசீகம் முதலிய மேற்கு நாடுகளி லிருந்தும், மாலயம், சீனம், சீயம், சாவகம் முதலிய கிழக்கு நாடுகளிலிருந்தும் பரிசுகளையும், பட்சணங்களையும், பாவனைப் பண்டங்களையும் ஏற்றிய படகுகளும் நாவாய்களும் பாய்க் கலங்களும் தொண்டித் துறைமுகத்தில் நங்கூரமிட்டன. பண்ட மாற்றுச் செய்தன. காஞ்சியின் பட்டுக்களையும், காயலின் முத்துக்களையும், தஞ்சையின் சம்பாவையும், பொதிகையின் சந்தனத்தையும் அவை ஏற்றிச் சென்றன.

தொண்டைத் துறைமுகத்தின் அதிகாரிகளாக விளங்கியவர் கள் தொண்டைமான்கள் என்று அழைக்கப் பட்டார்கள் என்பதற்கு வரலாற்று ஆதாரங்களும் காட்டப்படுகின்றன.

புதுக்கோட்டை ராஜ்யத்தில் மதிப்புமிக்க நிலக்கிழார் களாக வாழ்ந்த தொண்டமான்கள் பெரிய தனக்காரர்களாக வும். வள்ளல்களாகவும் விளங்கினர்கள்.

புதுக்கோட்டை மன்னரின் நிலங்களை விளைவிக்கும் தலை விவசாயியாக விளங்கினன் செங்கோடத் தொண்டமான் என்ற மாவீரன்.

தலை விவசாயியாக உள்ளவன் ஏனைய விவசாயிகளிடமும், மள்ளர்களிடமும், பள்ளர்களிடமும் "களப்பூ" எடுத்து மன் னனுக்கு மானியமாகக் கொடுக்க வேண்டும், என்பது அப் போதிருந்த விதிமுறையாகும்.

களம் என்பது கதிர்களைக் குவித்து சூடு மிதித்து நெல் மணிகளைச் சேகரிக்கும் இடம். அந்த இடத்தில் வைத்து வசூலிக்கப் படும் அரச இறைக்கு "களப்பூ" என்று பெயர்.

ஒவ்வொரு விவசாயியும் வேலிநிலத்துக்கு 64 கலம் கொண்ட களப்பூ கொடுக்க வேண்டும் என்பது மன்னன் விதித்த கட்டளையாகும். இது அதிகம், ஐந்து கலம்தான் கொடுக்கலாம் என்று ஏழைத் தொழிலாளர்களுக்காகக் குரல் கொடுத்தான் செங்கோடத் தொண்டமான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் காரணமாக ஒரு கிளர்ச்சியே உருவாகியது. மன்னனுடைய படையினர் விவசாயிகளை அடக்கி ஒடுக்கி வரி வசூலிக்க முற்பட்டனர். எதிர்ப்பு வலுத்தது. விவசாயிகளை போராட்டத்துக்குத் தயார் படுத்திய செங்கோடத் தொண்டமானையும். அவன் குடும்பத்தாரையும் பூண்டோடு அழிக்க ஆணை பிறப்பித்தான் புதுக்கோட்டை மன்னன். செங்கோடன் எதிர்த்துப் போராடினன். அவனும் அவன் உறவினர்களும் கொலை செய்யப்பட்டனர்.

இந்த வேளையில் அவன் மனைவி பொன்னுத்தாள் எனப்படும் பொற்கோதை நிறை கர்ப்பிணியாக இருந்தாள். செங்கோடத் தொண்டமானின் வம்சமே பூண்டோடு அழிந்து போகும் நிலை ஏற்பட்டதால், அவளாவது, எங்காவது தப்பி ஓடி வம்சம் தழைக்க வழி செய்ய வேண்டும் என்று குற்றுயிரும் குலை உயிருமாக இருந்தவர்கள் தூண்டினர்கள்.

அவளும் உடுத்திருந்த ஒற்றைத் துணியோடு இரவோடு இரவாக வெளியேறி காடு கரம்பு என்று பாராமல் வழி நடந்தாள்.

செங்கோடத் தொண்டமான் மனைவி தப்பிச் சென்று விட்டாள் என்பதை அறிந்த மன்னன் கடுங்கோபம் கொண்டான். அவளைத் தேடிச் சென்று கண்ட இடத்தில் கொலை செய்துவிட்டு வருமாறு குதிரை வீரர்களை நாலு திசையிலும் அனுப்புக என்ருன். மன்னன் கட்டளைப்படி தளகர்த்தன் நடந்து கொண்டான்.

அப்படி தேடிச் சென்ற ஒரு குதிரை வீரனுடைய பிடியிலே பொன்னுத்தாள் சிக்கினள். எனினும் அவன் அவளைக் கொல்லவில்லை. அதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று, அந்த வீரன் பல வருடங்களுக்கு முன் ஒரு சமயம், ஒரு சமரில் பொருதி படுகாயப்பட்டிருந்த போது செங்கோடத் தொண்டமான் அவனைக் குதிரையில் ஏற்றி வைத்தியரிடம் கொண்டு சென்று காப்பாற்றியிருக்கிருன். அது ஒரு காரணம். வீரனிடம் மேலிட்ட நன்றி உணர்ச்சி செங்கோடனின் மனைவியைக் கத்திக்கு இரையாக்க குறுக்கே நின்றது.

மற்ருெரு காரணம், பொன்னுத்தாள் நிறை கர்ப்பிணியாகக் காட்சியளித்தமையாகும். ஒரு கர்ப்பிணியைக் கொல்வது ஒன்றுமறியாத பச்சைக் குழந்தையையும் சேர்த்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்வதாகும். இப்படி ஒரு காரியத்தைச் செய்ய அவனுடைய வீரத் தமிழ் உள்ளம் இணங்கவில்லை.

எனவே, அவன் ஒரு காரியம் செய்தான். பொன்னுத் தாளை ஒரு புதரின் பின்னல் மறைந்திருக்கச் சொல்லி, அவள் உடுத்திருந்த ஒற்றைச் சீலையை மட்டும் பறித்தெடுத்தான். வழியிலே ஒரு ஆட்டைக் கொன்று அதன் இரத்தத்தை வாளிலும் துணியிலும் தோய்த்துக் கொண்டான். பொன்னுத் தாள் என்ற பொற்கோதையைக் காட்டில் கொன்றதற்கு அடையாளமாக இரத்தம் தோயந்த அவள் சேலையை மன் னனுடைய தளகர்த்தனிடம் காட்டி நிரூபணம் செய்து விட் டான்.

* * *

இரவு முழுவதும் புதரின் மறைவிலே இருந்தாள் பொன் னுத்தாள். வெளியாத்தூர் என்ற அந்த ஊரிலே பொழுது புலர்ந்தது. அந்த ஊரின் தலையாரியான காத்தான் அம்பலம் என்பவர் அதிகாலையில் காட்டுப் பக்கமாகச் சென்றார்.

புதரின் பின்னல் இருந்து ஒரு பெண்ணின் அபயக் குரல் கேட்டது.

திகைத்துப் போனார் அம்பலம். காட்டுக்குள்ளே பெண்ணின் குரலா?

"என்னம்மா வேண்டும்?" என்றார்.

"உங்களுடைய மேலாடையைத் தாருங்கள் ஐயா" என்றது அந்தக் குரல்.

"எதற்காக என் சால்வையைக் கேட்கிறாய்?" என்று கேட்டார் அம்பலம்.

"ஐயா, நான் ஒரு கர்ப்பிணி. புதுக்கோட்டை மன் னனின் கோபத்துக்கு அஞ்சி, தப்பி ஓடி வந்திருக்கிறேன். என்னைக் கொல்ல வந்தவன் மனமிரங்கி என் ஆடையை மட்டும் பிடுங்கிக் கொண்டு போய் விட்டான். நான் இப்போது பிறந்த மேனியாக மறைந்து நிற்கிறேன். எனக்கு அபயந் தாருங்கள்" என்று கெஞ்சினாள் பொன்னுத்தாள்.

காத்தான் அம்பலம் கருணையுள்ளவர். தன் மேலாடையை கழற்றிப் போட்டார். அதைத் தரித்துக் கொண்டு வெளியே வந்தாள் அந்த அழகிய பெண்மணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரின் மேற்குப் புறத்தேயுள்ள ஓர் ஊருணியின் கரையில் குடிசை அமைத்து அவளை அங்கு இருத்தி ஆதரித்து அபய மளித்தார் காத்தான் அம்பலம்.

இந்த நற்செயல் காரணமாக அவரை ஊர்மக்கள் அனைவரும் பின்னர் அபயம் காத்தான் அம்பலம் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கத் தலைப்பட்டார்கள்.

புதுக்கோட்டை செங்கோடத் தொண்டமானின் வீரதீரச் செயல்களும், தொழிலாளர் வர்க்கத்துக்காகப் போராடி அவன் உயிர் துறந்த செய்தியும் ஊரெல்லாம் பரவலாயின. செங் கோடன் புகழ் வெளியாத்தூரையும் சென்றடைந்தது.

பொன்னுத்தாள் தொண்டமான் வம்சத்தைச் சேர்ந்தவள் என்பதைத் தெரிந்ததும் ஊர்மக்கள் அவளை நன்கு உபசரித்தார்கள்.

காலம் கனிந்ததும், பொன்னுத்தாள் ஒருநாள் சூரியோதய சுப வேளையில் சூரியனைப் போலவே பிரகாசமுடைய ஒரு ஆண் குழந்தைக்குத் தாயானாள்.

அபயங்காத்தான் அம்பலமும் அவருடைய அத்தை மகன் ஆறுமுகம் சேர்வையும் சேர்ந்து ஆலோசித்து அந்தக் குழந்தைக்கு சூரியத் தொண்டமான் என்று பெயரிட்டார்கள்.

சூரியத் தொண்டமானுடைய பிறப்பின் மூலமாக தொண்டமான் வம்சம் மீண்டும் துளிர்க்க ஆரம்பித்தது. சூரியத் தொண்டமான் கல்வியிலும் மற்றும் தொழில் நெறி களிலும் சிறந்து விளங்கி வாலிபப் பருவத்தை அடைந்தான்.

ஆறுமுகம் சேர்வைக்கு ஒரு மகள் இருந்தாள். அவள் காலில் சற்று ஊனமானவள். என்றாலும் கொள்ளை அழகு படைத்தவள். அவளையே தன் மனைவி ஆக்கிக் கொள்ள சூரியத் தொண்டமான் விரும்பினான். அவன் விருப்பப்படியே அபயங்காத்தான் அம்பலம் சூரியத் தொண்டமானுக்கு திரு மணம் செய்து வைத்து அவர்களை பட்டமங்கலம் என்ற கிராமத்தில் குடியேற்றி விவசாயத்துக்கான நன்செய் புன்செய் நிலங்களும் அன்பளிப்புச் செய்தார்.

சூரியத் தொண்டமான் மூன்று ஆண் குழந்தைகளுக்குத் தந்தையானார். மூத்தவர் வைத்திலிங்கத் தொண்டமான், இரண் டாமவர் காத்தான் தொண்டமான், இளையவர் குமாரசாமி தொண்டமான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திலிங்கத் தொண்டமான் பெரியவரான போது பட்டமங்கலக் கிராமத்தையே கட்டியாளும் தகுதியைப் பெற்ருர். பட்டமங்கலம் மட்டுமல்லாமல் பக்கத்துக் கிராம மக்களும், சுற்றுவட்டாரத்தில் ஆட்சி புரிந்த ஜமீன்தார்களும் வைத்திலிங்கத் தொண்டமானை நன்கு மதித்துப் பாராட்டி வந்தனர். அதனுல் மக்களிடையே அவருடைய பெயரும் புகழும் செல்வாக்கும் வளர்ச்சியடைந்தன. அதனுல் அவரை, மக்கள் தலைவன் பெரிய வைத்திலிங்கத் தொண்டமான் என்று அழைக்கும் படியான ஓர் அந்தஸ்து அவருக்கு ஏற்பட்டது. இந்தக் காலகட்டம் கி.பி. 1640ஆம் ஆண்டளவில் இருக்கலாம் என்று அனுமானிக்கப் படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11

# தேர் ஓட்டமும் யானை கட்டலும்

பெரிய உடைய நாதத் தேவர் என்பவர் அப்போது சிவகங்கைச் சீமையை ஆண்டு வந்தார். சிவகங்கைச் சீமை செழிப்பும் வளமும் பெற்ற ஒரு பிரதேசமாக விளங்கியது. சிவகங்கை ஆட்சிக்குட்பட்ட பல ஆலயங்களும் தேவஸ்தானங் களும் தெய்வப்பணி ஆற்றி வந்தன.

திருக்கானப்பேர் என்று தேவாரப் புகழ் பெற்ற காளை யார் கோவில், திருக்கோஷ்டியூர் என்ற வைஷ்ணவ ஸ்தலம், குன்றக்குடி என்ற முருகஸ்தலம் எல்லாம் சிவகங்கை மன்னர் பெரிய உடையநாதத் தேவர் ஆட்சியின் கீழ் சிறப்பாகப் பரிபாலிக்கப்பட்டு வந்தன.

திருக்காளை நாதருக்கு ஒரு தேர் அமைக்க வேண்டும் என்ற எண்ணம் உடையநாதத் தேவரின் மனதில் உதயமாயிற்று. அதன்படி தக்க சிற்பாசாரியர்களைக் கொண்டு ஒரு பெரிய தேர் அமைக்கப்பட்டது. தேரின் வெள்ளோட்டத் தினமும் நிர்ணயிக்கப்பட்டது.

ஆனால் குறிப்பிட்ட தினத்தில் ஒரு பெரிய அதிர்ச்சி! ஒரு பெரிய ஏமாற்றம்!

சிவகங்கையிலும், காளையார் கோவில் கிராமங்களிலும் உள்ள மக்கள் அனைவரும் திரண்டு, வணங்கி நெற்றிக்கு நேரே வடம் பிடித்து தேரை இழுத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர் அசையவில்லை! நகர மறுத்து விட்டது!

வெள்ளோட்டத்துக்கு சமுகமளித்துத் தலைமை தாங்கிய சிவகங்கை மன்னர் பெரிய உடைய நாதத் தேவர் திகைத்தார்! என்ன செய்வது என்று அறியாமல் விழித்தார். மந்திரிகளையும், மற்றும் பிரதானிகளையும் அழைத்தார். அவசர ஆலோசனை நடத்தினர்.

அப்போது வெள்ளோட்ட நிகழ்ச்சியைப் பற்றிக் கேள்விப்பட்டு, பட்ட மங்கலம் கிராமத்திலிருந்து அங்கு வந்திருந்த ஒரு பெரியவர் பின்வருமாறு கூறலானார்:-

*ஐயன்மீர், இந்த மாபெரும் தேரை ஓடவைப்பதற்கு ஒரு வழி இருக்கிறது.*

*பட்டமங்கலத்திலே வைத்திலிங்கத் தொண்டமான் என்று ஒருவர் இருக்கிறார். அவர் நல்ல கடவுள் பக்தர்.*

*தினமும், திருப்பத்தூரில் உள்ள கோட்டைக் கருப்பண்ண சுவாமி கோவிலுக்குச் சென்று வழிபட்டுப் பூசைகண்ட பின்னரே அவர் வீட்டுக்கு வந்து உணவு அருந்துவார். அப்படி ஒரு விரதஸ்தர் அவர்.*

*அவருக்கு பட்டமங்கலத்திலும், சுற்றியுள்ள கிராமங்களிலும் மக்களிடையே பெரிய செல்வாக்கு உண்டு. அவர் அழைத்தால் மக்கள் திரண்டு வருவார்கள். அத்தகைய தலைமைத்துவமும் ஆளுமையும் அந்த வைத்திலிங்கத் தொண்டமானுக்கு உண்டு.*

*மன்னர், அவருக்கு அழைப்பு விடுத்தால் அவர் தமது மக்களோடு வந்து இந்த காளையார் கோவில் தேரை ஓட்டிவைப்பார். இந்தக் காரியத்தை அவர் ஒருவரால் தான் செய்யமுடியும்.*

இவ்வாறு கூறினார் அந்த பட்டமங்கலத்துப் பெரியார்.

உடனே சிவகங்கை மன்னரின் கொடியேந்திய குதிரை வீரர்கள் கையில் அழைப்பு ஓலையோடு வைத்திலிங்கத் தொண்டமானை நோக்கி விரைந்தனர்.

கடல் போல மக்கள் கூட்டத்தைத் திரட்டிக் கொண்டு காளையார் கோவிலுக்கு வந்தார் வைத்திலிங்கத் தொண்டமான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னரின் வேண்டுகோளை விருப்போடு ஏற்றூர். கானப்பேர் உறை காளைநாதப் பெருமானைக் கை கூப்பித் தொழுது தேரின் மேல் தாவி ஏறினுர்.

*"எனது மக்களே, எல்லோரும் காளைப் பெருமானின் கோவில் சந்தனத்தைக் குழைத்து உங்கள் கரங்களிலே முழங்கை வரை பூசிக் கொள்ளுங்கள்.*

*"அதன் பின் திருவடத்தைப் பிடியுங்கள். நெற்றிக்கு நேராக இழுக்காதீர்கள். முழங்கை தொப்பூளில் அணையும் படியாக வடத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள்.*

*"நான் 'ஆரம்' சொன்னதும் "காளைப் பெருமானுக்கு அரோஹரா" என்ற கோஷத்துடன் இழுங்கள்"*

என்று கட்டளையிட்டார் வைத்திலிங்கத் தொண்டமான்.

ஆரம் சொல்வது என்றூல் "ஆரம்பியுங்கள" என்று கட்டளை பிறப்பிப்பதாகும்.

வைத்திலிங்கத் தொண்டமான் வகுத்தபடியே காரியங்கள் நடந்தன

அசையாமல் நின்ற அந்த மாபெரும் தேர் அசைந்தது. காளையார் கோவில் தேர் ஓட ஆரம்பித்து விட்டது.

இது வைத்திலிங்கத் தொண்டமானுக்கு ஒரு பெரும் வெற்றியாகவும், புகழாரமாகவும் அமைந்தது. இதன் பயனுக வைத்திலிங்கத் தொண்டமான் சிவகங்கை மன்னரின் மதிப்புக்குரிய நண்பரானுர்.

சிவகங்கைச் சீமையிலே அப்போது 72 ஜமீன்கள் இருந்தன. இவற்றிற்குப் பொறுப்பாக இருந்த குறுநிலத் தலைவர்களை அழைத்து மாநாடு நடத்தியே நாட்டின் ஆட்சி முறைகளையும், வரிமுறைகளையும் வகுப்பது என்பது வழக்கமாக இருந்தது. இப்படி கூட்டப்படும் மாநாட்டில் வைத்திலிங்கத் தொண்டமானையும் அழைத்து அபிப்பிராயங்கள் பெறுவது என்று பெரியஉடையார் தேவர் முடிவு செய்தார்.

காளையார் கோவில் தேரை ஓட்டியதற்காக வைத்திலிங்கத் தொண்டமானுக்கு வழங்கப்பட்ட ஒரு விசேஷ கௌரவமும் மரியாதையும் இதுவாகும். அத்தோடு காளையார் கோவில் தேர் ஓடவிடப்படும் போதெல்லாம் தேர் மீது ஆரோகணித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று, பொதுமக்களை வடம்பிடிக்கக் கட்டளையிட்டு, "ஆரம்" சொல்லும் அதிகாரமும் தொண்டமான் வம்சத்தினருக்கு வழங்கப்பட்டது. இந்த உரிமை இன்று வரை நின்று நிலவுகிறது.

சிவகங்கை மன்னரின் மதிப்பையும் மரியாதையையும் பெற்றபின் வைத்திலிங்கத் தொண்டமானின் புகழும் செல்வமும் பட்டமங்கலத்தில் மேலும் வளர்வதாயின. அதனால் அவர் பல தான தர்மங்களைச் செய்யலானார். கோவில்களுக்கு வாரி வழங்கினார். ஏழை எளியவர்களைக் கைதூக்கி விட்டார்.

அவர் வழங்கிய கொடைகளில் ஒன்று திருக்கோஷ்டியூர் வைணவ ஆலயத்துக்கு ஒரு யானையைக் கொடுத்ததாகும். அந்த யானைக்கு கொட்டகையும் அமைத்துக் கொடுத்திருந்தார். யானையின் உணவாக கரும்பும், கம்பும் தென்னையும் வளர்க்க கள்ளுப்பட்டி என்ற ஒரு கிராமத்தையும் ஒதுக்கி கொடுத்தார். விழாக் காலங்களில் அந்த யானையில் கேடகம் வைத்து சுவாமி வலம் வருவதும் வழக்கமாயிருந்தது.

வைத்திலிங்கத் தொண்டமானுக்கு இருதம்பிமார்கள் இருந்தார்கள் அல்லவா? அவர்களில் ஆக இளையவர் குமாரசாமி தொண்டமான். அவர் தமது மூத்த அண்ணவான வைத்திலிங்கத் தொண்டமானுடனேயே பட்டமங்கலத்தில் விவசாயப் பணிகளில் ஈடுபட்டு வரலானார்.

இரண்டாவது தம்பியான காத்தான் தொண்டமான் பங்காளிகளுக்கிடையே ஏற்பட்ட மனஸ்தாபம் காரணமாக பட்டமங்கலத்தை விட்டு வெளியேறி மூனுபுதூர் என்ற கிராமத்தை வந்தடைந்தார். அங்கு அவர் வர்த்தகம் விவசாயம் ஆகிய தொழில்களில் ஈடுபட்டு நல்ல பொருளும் புகழும் சம்பாதிக்கலானார்.

வைத்திலிங்கத் தொண்டமான் தெய்வ பக்தராகவும், கொடை வள்ளலாகவும் விளங்கினார் என்றால் காத்தான் தொண்டமான் வீரராகவும் துணிச்சல்காரராகவும் விளங்கினார். பாட்டனாரான செங்கோடத் தொண்டமானுடைய வீரமும் திறனும் காத்தான் தொண்டமானிடமே பிரதிபலிக்கலாயின என்று சொல்லலாம். மூனுபுதூர் கிராமத்தைக் கட்டியாளும் ஒரு நாட்டாண்மைக் காரராக அவர் தலை நிமிர்ந்து நின்றார்.

திருக்கோஷ்டியூர் ஆலய நிர்வாகம் வழக்கம் போல சிவகங்கை மன்னரிடமே இருந்து வந்தது. கோவிலுக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல காரியங்களும் அரண்மனையிலேயே கவனிக்கப்பட்டு வந்தன.

இப்படியிருக்கும்போது ஒருநாள் திருக்கோஷ்டியூர் கோவில் யானைக்கு மதம் பிடித்து விட்டது. அது தறிக்கட்டுச் சங்கிலியை அறுத்துக் கொண்டு ஊருக்குள் புகுந்து அனர்த்தம் விளைவித்தது. மக்கள் பயந்து ததிகெட்டுத் தத்தளித்துச் சிதறி ஓடலானார்கள். மாவுத்தனால் யானையைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

உடனே சிவகங்கை மன்னருக்கு செய்தி அனுப்பப்பட்டது. அவர் ஆணைப்படி தண்டோராப் போடப்பட்டது. யானையைக் கட்டுக்குள் கொண்டு வரக் கூடிய வல்லவர்கள் யாராவது யானையை அடக்கலாம்: அல்லது அதைக் கொன்று விடலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

வேல் எறி வீரர்கள் சிலர் யானையை வேல் வீசிக் கொன்று விடத் துடித்தார்கள். அப்படிச் செய்வதால் தங்களுக்கு ஆபத்து இல்லாமல் யானையை முடித்துக் கட்டிவிடலாம்; மன்னரிடம் சன்மானம் பெறலாம் என்பது அவர்கள் எண்ணம்.

நிலைமையை அறிந்தார் காத்தான் தொண்டமான். தன்னுடைய தமையனாரால் கோவிலுக்கு அன்பளிப்புச் செய்த யானையைக் கொன்று விடுவது என்பது அவருக்கு மனச் சங்கடத்தை ஏற்படுத்தியது. அவர் வேல் எறி வீரர்களைத் தடுத்து நிறுத்தி விட்டார்.

"நானே யானையை அடக்குகிறேன்" என்று வரிந்து கட்டிக் கொண்டு புறப்பட்டார். வீர மறவர் அல்லரோ அவர்!

"மதம் பிடித்த யானையை அடக்குவதன் மூலம் ஊர் மக்களையும் காப்பாற்றுவேன், அந்த யானையின் உயிரையும் காப்பாற்றுவேன்" என்று சூளுரைத்துப் புறப்பட்டார்.

என்னே அதிசயம் ! என்னே ஆச்சரியம் !

அவர் செய்தது என்ன? இத்தகைய வல்லமையையும், திறமையையும், கஜஸ்தம்பன சாஸ்திர ஞானத்தையும் எங்கிருந்து பெற்றார்?

காத்தான் தொண்டமான் களிமண்ணை உருண்டை செய்தார். காட்டுக் கிளுவைக் கம்பிலே ஒரு வீச்சு வில் கட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் களிமண் உருண்டையை அந்த வில்லிலே வைத்து மதம் கொண்டு எதிர்கொண்டு வந்த கொடும் யானையின் மத்தகத்தை நோக்கிச் சுண்டினார். அந்த மண் உருண்டை போய் யானையின் வர்மம் பொருந்திய நிலையத்தில் பட்டதும் யானை மயக்கம் உற்றது. அதன் மதம் இறங்கியது. சாந்த நிலை அடைந்தது.

உடனே அவர் காலில் சங்கிலியிட்டு யானையை அழைத்துக் கொண்டு போய் கோவில் கூடாரத்துள் இருந்த தறியில் கட்டிவிட்டார்.

சொன்னபடி ஊரையும் காத்து யானையின் உயிரையும் காத்தார் அந்தக் காத்தான் தொண்டமான்.

செய்தி அறிந்தார் சிவகங்கை மன்னர். காத்தான் தொண்டமானைச் சகல மரியாதைகளுடனும் அழைத்து "உங்களுக்கு என்ன வேண்டும்? பொன்னா பொருளா? எது வேண்டுமானாலும் தருகிறேன் கேளுங்கள்" என்றார்.

> "எனக்குப் பொன்னும் வேண்டாம். பொருளும் வேண்டாம் என் குல மக்களுக்கு புகழும், மரியாதையும், கௌரவமும் தான் வேண்டும். அப்படியான ஓர் அந்தஸ்து சந்ததி சந்ததியாக நிலைக்கவும் வேண்டும்"

என்று கேட்டார்.

"அப்படிப்பட்ட அந்தஸ்து என்ன?" என்று கேட்டார் பெரிய உடையார் தேவர்.

> "நான் வாழும் மூனுபுதூர் மக்களுக்கு, தொண்டமான் வம்சத்தினருக்கு, திருக்கோஷ்டியூர் கோவில் திருவிழாவிலே ஒரு மண்டகப்படி தர வேண்டும்"

என்றார் காத்தான் தொண்டமான்.

"அப்படியே தந்தோம்" என்று வாக்குக் கொடுத்தார் சிவகங்கை மன்னர்.

திருக்கோஷ்டியூரில் பத்து திருவிழாக்கள் நடைபெறுவதுண்டு. பத்து நாளும் மண்டகப்படி மன்னர் பெயரிலும், மன்னர் உறவினர் பெயரிலுமே நடை பெற்று வந்தது. காத்தான் தொண்டமானின் கோரிக்கையை ஏற்ற மன்னர் ஐந்து நாள் மண்டகப்படியையும் அரசருக்கும் அரசகுலத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினருக்கு வைத்துக் கொண்டு ஆறுவது நாள் மண்டகப்படியை மூனுபுதூர் தொண்டமான் வம்சத்தினருக்கு வழங்கினர். அதற்குப் பின்னுல் உள்ள மண்டகப்படிகள் வேறு ஜமீன்களுக்கும், பட்டிகளுக்கும் வழங்கப்பட்டன.

> இப்படிச் செய்தது தொண்டமான் வம்சத்தினர் பெற்ற ஒரு பெரிய மரியாதை, பெரிய கௌரவம், பெரிய மதிப்பு ஆகும். இன்றுவரை இந்த ஆறும் மண்டகப் படியை தொண்டமான் வம்சத்தினரே தலைமுறை தலை முறையாக நடத்தி வருகின்றனர்.
>
> காத்தான் தொண்டமானுக்கு மன்னர் ஆறும் மண்டகப் படியை வழங்கினர். மக்கள் அவருக்கு ஒரு சிறப்புப் பட்டத்தை வழங்கினர்கள். அன்றுமுதல் காத்தான் தொண்டமான் "ஆனைகாத்தான் தொண்டமான்" என்று அழைக்கப்படலானர்.

பெரிய உடையார் தேவர் காலத்துக்குப் பின் மருது சகோதரர்கள் என்பவர்கள் சிவகங்கைச் சீமையைக் கைப்பற்றி ஆட்சிக்கு வந்தார்கள். இவர்கள் உண்மையிலேயே மன்னர் மர பினர் அல்லர் என்பது ஒரு சில சரித்திர ஆசிரியர்களின் கருத்து. எனினும் இவர்கள் வீரம் பொருந்தியவர்களாகவே விளங்கினர் கள். பாஞ்சாலங் குறிச்சி கட்டபொம்மனைப் போல இவர்களும் ஆங்கில ஆட்சியை எதிர்த்தவர்கள் என்பது வரலாறு. அண்ணன் பெரிய மருது. தம்பி சின்ன மருது என்று அழைக்கப் பட்டார்கள்.

பட்டமங்கலம் வைத்திலிங்கத் தொண்டமான் மருது சகோதரர்களுக்கு ஆதரவு தரவில்லை. அதனுல் வைத்திலிங்கத் தொண்டமானை மருது சகோதரர்கள் விரோதியாகக் கருதினர்கள். வைத்திலிங்கத் தொண்டமானுக்கு அந்தப் பிரதேசத்தில் இருந்து வந்த செல்வாக்கையும் சிறப்பையும் கண்டு அச்சங் கொண்டார் கள்.

என்ருவது ஒரு நாள் வைத்திலிங்கத் தொண்டமான் தங்கள் ஆட்சியை எதிர்த்துப் புரட்சி செய்யக் கூடும் என்ற பயம் அவர்கள் நெஞ்சில் நெருப்பாகக் கனன்று வந்தது.

ஒருநாள் வைத்திலிங்கத் தொண்டமான் தமது குல தெய்வமான திருப்பத்தூர் கோட்டைக் கருப்பையா கோவிலுக் குச் சென்று சுவாமி தரிசனம் செய்து கொண்டிருந்த சமயம், மருது சகோதரர்கள், ஆள்வைத்து வைத்திலிங்கத் தொண்ட மானைக் கொலை செய்து விட்டார்கள். அநதோ பரிதாபம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கொலையினால் பட்டமங்கலக் கிராமமே கதறி அழுதது. மக்கள் துடிதுடித்தார்கள்.

வைத்திலிங்கத் தொண்டமானைத் தங்கள் தலைவராகவும், நண்பராகவும், வழிகாட்டியாகவும், வள்ளலாகவும் கருதிய திருப்பத்தூர் பட்டமங்கலம் பெருங்குடி மக்கள் அவரை மறக்கத் துணியவில்லை. என்றும் அவரை, அவர் புகழைத் தங்கள் முன் வாழ வைக்கவே விரும்பினார்கள்.

அதனால், அவர்கள், திருப்பத்தூர் கோட்டைக் கருப்பையா சுவாமி கோவிலுக்குள்ளேயே வைத்திலிங்கத் தொண்டமானின் சிலையைப் பிரதிஷ்டை செய்து அவருக்கென ஒரு கோவில் கட்டினார்கள். அந்தக் கோவிலில் இன்றுவரை நித்திய நைமித்திய பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

*

சரித்திரம் திரும்பியது. பிரிட்டிஷ்காரர்களிடம் மருது சகோதரர்கள் சிறைப்பட்டார்கள். அவர்கள் திருப்பத்தூர்க் கோட்டைக்கு கைதிகளாகக் கொண்டு செல்லப்பட்டார்கள். எந்தக் கருப்பையா சுவாமியின் முன்பு வணங்கிக் கொண்டிருக்கும் போது வைத்திலிங்கத் தொண்டமானை ஆள்வைத்து மருது சகோதரர்கள் கொலை செய்தார்களோ, அந்த கருப்பையா சுவாமியின் சந்நிதானத்தின் எதிராகத் தான் மருது சகோதரர்களும் தூக்கிலிடப்பட்டார்கள். தெய்வத்தின் தண்டனைதான் எத்தகையது !!

தூக்கிலிடப்பட்ட மருது சகோதரர்களின் சடலங்கள் திருப்பத்தூர் கோட்டைச் சுவரினுள்ளே புதைக்கப்பட்டன. தலைகளை மட்டும் வெட்டிக் கொண்டு போய் காளையார் கோவில் ராஜகோபுரத்தின் எதிரே புதைத்தார்கள் வெள்ளைக்காரர்கள். ஏன் இப்படி புதைத்தார்கள். என்பதற்கான விளக்கம் ஒரு தனிக்கதை. உணர்ச்சிகரமான கதை.

மருது சகோதரர்கள் தூக்கிலிடப்பட்டது 1801ஆம் ஆண்டு அக்டோபர் 27ஆம் திகதி ஆகும்.

மூனுபுதூரில் குடியேறிய ஆனைகாத்தான் தொண்டமானுடைய குடும்பம் பல்கிப் பெருகிக் கிளை விட்டு வளர்ந்தது. அடுத்த தலைமுறையில் மூன்று ஆண் குழந்தைகள். அதற்கு அடுத்த தலைமுறையில் ஐந்து ஆண் குழந்தைகள். இந்த ஐந்து குழந்தைகளில் ஒருவர் தான் குமாரவேல் என்பவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திலிங்கத் தொண்டமான் காலத்திலிருந்து திருப்பத்தூர் கோட்டை கருப்பையா சுவாமியை தொண்டமான் குடும்பத்தினர் குல தெய்வமாகக் கொண்டதால், குமாரவேல் பிற்காலத்தில் கருப்பையா என்ற பெயரையும் விரும்பி ஏற்றுக் கொண்டார்.

குமாரவேல் எனப்பட்ட கருப்பையா பிள்ளையின் மகன் தான் இன்று இலங்கை அமைச்சர்களில் ஒருவராக விளங்கும் சௌமியமூர்த்தி தொண்டமான் ஆவார்.

திருக்கோஷ்டியூர் கோவிலின் வருட உற்சவம் சித்திரை பௌர்ணமியை அடுத்துப் பத்துநாட்களுக்கு நடைபெறுகின்றது. இப்போதும் ஆறும் மண்டகப்படி சௌமியமூர்த்தி தொண்டமானலேயே வருடா வருடம் நடத்தப்பட்டு வருகிறது. இதற்கு முன்பு அவர் தந்தையார் இந்த மண்டகப்படியை நடத்தி வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12

## கோதை தொண்டமான் அனைவருக்கும் 'அப்பத்தா'

"மனைவி கிடைப்பதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்" என்று ஒரு கவிஞன் அழகாகப் பாடியிருக்கிறான்.

அப்படி ஓர் அரிய வரத்தை கோதை என்ற பெயரில் பெற்றவர் தொண்டமான்.

கோதை என்பது திருவரங்கநாதரின் பக்தையாக விளங்கிய ஆண்டாளின் திருநாமம். அரங்கநாதரையே மானசீகமாக திருமணம் செய்து அவருடன் திருவரங்க ஆலயத்தில் இரண்டறக் கலந்தவர் ஆண்டாள்.

ஆண்டாளின் தந்தை கோவில் அர்ச்சகர். பெருமாளின் பூஜைக்கும் அலங்காரத்துக்கும் வேண்டிய பூமாலைகளைத் தொடுக்கும் திருப்பணியை அவர் தன் மகள் கோதையிடம் ஒப்படைத்திருந்தார். பூத்தொடுத்த கோதை அரங்கர் மீது தெய்வீகக் காதல் கொண்டுவிட்டாள்.

தான் தொடுக்கின்ற பூமாலை அரங்கருக்கு அழகாக இருக்குமா என்று பார்ப்பதற்காக முதலில் அம்மாலையைத் தானே அணிந்து கண்ணாடியில் அழகு பார்ப்பாள். இப்படி ஒரு நாள் அழகு பார்த்த போது தந்தை கண்டுவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அபசாரம் அபசாரம்' என்று துடித்துப் போனுர். கோதையை கடுமையாக கண்டித்தார்.

ஆனுல், அன்றிரவு அரங்கர் அர்ச்சகரின் கனவில் தோன்றி, "கோதை தொடுத்து தாமே அணிந்து அழகுபார்த்த பின் எனக்கு சூடும் மாலேயே எனக்கு பிரீதியானது. அதையே நான் ஏற்றுக் கொள்வேன். இது கட்டளே" என்ருர்.

கோதை சூடிய மாலேயையே அரங்கர் தொடர்ந்து தின முமம் அணிந்தார். கோதைக்கும் "சூடிக் கொடுத்த நாச்சியார்" என்று ஒரு புதிய பெயர் அப்போது முதல் ஏற்படலாயிற்று.

கோதை என்ற பெயர் கொண்ட அந்த ஆண்டாள் இயற் கையிலேயே கல்வி அறிவு பெற்று, தமிழ்ப்புலமை மிக்கவராக விளங்கினுர். திவ்ய பிரபந்தம் என்ற நாலாயிரம் பாடல்கள் கொண்ட பெருநூலில் ஆண்டாள் பாடிவைத்திருக்கும் பாடல்கள் அனேகம். அவற்றுள் 'திருப்பாவை' என்பது மிகவும் புகழ் வாய்ந்தது. மாணிக்க வாசகப் பெருமான் பாடிய திருவெம்பாவை போல் மார்கழி மாதத்தில் வைஷ்ணவர்கள் இந்த திருப்பாவையை ஓது வார்கள்.

ஆண்டாளின் பெயரான கோதை என்னும் பெயரைத்தான் தொண்டமானின் மனேவியும் பெற்றிருந்தார். பெயரில் கூட எவ் வளவு பொருத்தம். எண்ணுமல், கொள்ளாமல் தானே வந்து பொருந்திய பொருத்தம் இது.

எப்படி?

தொண்டமானின் பிள்ளேத் திருநாமம் சௌமியமூர்த்தி என்பது. அரங்கநாதப் பெருமாளின் மற்ருெரு பெயர்தான் சௌ மியமூர்த்தி. சௌமியமூர்த்திக்கு கோதைதான் மனேவியாக வந் தமைந்தார். இது ஆண்டாண்டு காலமாக, பிறவி பிறவியாக, ஏற் பட்டு வந்த தொந்தத்தின் தொடர்பாகத்தான் இருக்க வேண்டும்.

இது மட்டுமன்றி இன்னெரு தொடர்பையும் காணமுடி கிறது. பட்டமங்கலத்தில் தொண்டமான் மரபு செழித்து வளர் வதற்கு காலாக இருந்தவள் புதுக்கோட்டை செங்கோடத் தொண்டமானின் மனேவிதான். அவள் பெயர் பொற்கோதை என்பதாகும். அந்தக் கோதை என்ற பெயர் இங்கும் பொருந்தி வந்தது அதிசயமே அல்லவா?

கோதை அம்மாளேப் பெண் பார்த்ததும், தொண்டமான் திருமணம் செய்ததும், சுவையான சம்பவங்களாகும். முன் சொன்ன அரங்கர்-ஆண்டாள் தொந்தத்தின் தொடர்பையே ஞாபகப்படுத்துகிறது,தொண்டமானின் திருமண நிச்சயார்த்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் படிப்பை மேலும் தொடராமல் விட்டு விட்டு தந்தையாரான கருப்பையாபிள்ளைக்கு அவர் தோட்ட நிர்வாகத்திலும், வர்த்தக முயற்சிகளிலும் பக்கத்துணையாகச் செயல்பட்டு வந்த சௌமிய மூர்த்திக்கு ஒரு பெண்பார்த்து காலாகாலத்தில் திருமணம் செய்து வைத்து விடவேண்டும் என்று ஆசைப்பட்டார், கருப்பையாபிள்ளை.

அப்படி அவர் நினைத்ததற்கு காரணம் இருந்தது. அவர் தள்ளாமை அடைந்து கொண்டு வந்தார். தமது கண்முன்னலேயே தன்மகன் குடியும் குடித்தனமும் ஆகி தனது பொருளாதாரப் பொறுப்புகளை எல்லாம் மனம் ஒருமித்த கணவனும் மனைவியுமாக சேர்ந்து பொறுப்பேற்றுவிட வேண்டும் என்று அவர் விரும்பினர்.

இன்னெரு காரணமும் இருந்தது. சௌமிய மூர்த்தி சிறப்பும், எடுப்பும், துடிப்பும், பொறுப்பும் உள்ள கட்டிளங் காளையாக விளங்கினர். தூய வெள்ளை கதர் வேஷ்டியும், தூய வெள்ளை கதர் ஜிப்பாவும், ருத்ராட்சம் கரை வைத்த சால்வையும் அணிந்து அவர் வரும்போது நீலத் திரு மேனியுடைய சௌமியமூர்த்தி, யார் கண்ணிலும் பளிச்செனப் படுபவராக விளங்கினர். நிறையப் பணமும் அந்தஸ்தும் அவரிடம் இருந்தன.

இப்படியானல் எத்தனை அழகிய இளம் பெண்களின் கயல் நிகர் கண்கள் அவரைச் சுற்றி வட்டமிட்டிருக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

இந்த மாதிரியான காந்தச் சூழலை எல்லாம் அறியாத சிறு பிள்ளை அல்லரே கருப்பையாபிள்ளை!

சௌமிய மூர்த்தி கவர்ச்சிக்கு உட்பட்டு இலங்கையில் கால் ஊன்றிவிட்டால் என்ன செய்வது? அவருடைய உறவு வேர்கள் இந்திய மண்ணில் நிலை கொள்வதே நல்லது. அங்கிருந்து தான் அவருடைய கிளைகள் இலங்கையில் நிழல் பரப்ப வேண்டும். கருப்பையாபிள்ளையின் அந்தரங்க அபிலாஷை இப்படியாக இருந்தது.

இலங்கையில் ஒரு திருமணம், இந்தியாவில் ஒரு திருமணம் செய்து கொண்டதால் தம்முடைய வாழ்க்கையில் ஏற்பட்ட கசப்பான பங்காளிச் சண்டை, பாகப்பிரிவினை, ஆகியவை அவருடைய மனதில் என்றும் நிழலாடிக் கொண்டே இருந்தன. அதனல், சௌமியமூர்த்திக்கு தமது வம்சத்தினுள்ளேயே, இந்தியாவிலேயே பெண் எடுத்துவிட கருப்பையாபிள்ளை கங்கணம் கட்டிக் கொண்டார்.

பெண் பார்க்கும் படலம் ஆரம்பமாயிற்று. இந்தப் பணி சௌமியமூர்த்தியின் தமக்கையாரிடம் ஒப்படைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிலக்ஷ்மி என்ற பெயருடைய அந்த அம்மையாரே இந்தப் பணியை விருப்புடன் ஏற்றுக்கொண்டார்.

சௌமியமூர்த்திக்கு என்றே ஒரு பெண் பிறந்திருந்தது போல, மூனுபுதூருக்கு பக்கமாக இருந்த கண்டரமாணிக்கம் என்ற ஊரில் ஒரு பெண் 1916ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4ஆம் திகதி பிறந்து, அழகும் லாவண்யமும் பெற்று, வசீகரமாக வளர்ந்திருந்தார். சௌமியமூர்த்தியை விட மூன்று வயது இளையவர் கோதை.

கோதை என்ற அந்தப் பெண்ணைப் பார்த்தவுடனேயே சௌமியமூர்த்தியின் அக்கையாருக்கு அவரைப் பிடித்துவிட்டது. "இந்த கோதை தான் என் தம்பிக்கு ஏற்ற மனைவி" என்று அன்றே தீர்மானித்துவிட்டார் அவர்.

மாப்பிள்ளை பெண்ணைப் பார்ப்பது, பெண் மாப்பிள்ளையைப் பார்ப்பது, அபிப்பிராயம் கேட்பது, சம்மதம் தெரிவிப்பது என்ற வழக்கம் எல்லாம் கிராம சம்பிரதாயங்கள் அல்ல. எனவே, திருமணம் நிச்சயிக்கப்பட்டது. திகதியும் குறிக்கப்பட்டது. இடையில், குல ஆசாரப்படி தொண்டமானின் தமக்கையாரான ஆதி லக்ஷ்மி அம்மாளே மணமகளுக்கு தாலியும் அணிந்து விட்டார்.

சௌமியமூர்த்தி தன் மனைவி கோதை அம்மாளை திருமணம் முடிந்த பின்னர் தான் முதன் முதலாகக் கண்டார். அதற்கு முன் அவருடைய சாயல் கூடக்கண்ணில் பட்டதில்லை. எனினும், முதல் பார்வையிலேயே கோதையை சௌமியமூர்த்திக்குப் பிடித்து விட்டது. அதேபோல் சௌமியமூர்த்தியையும் கோதைக்குப் பிடித்துவிட்டது.

சௌமியமூர்த்தியை கோதையம்மாள் முன்னர் நேரில் காணுவிட்டாலும் அவரைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருந்தார். அவர் இலங்கையில் இருக்கிறார் என்பதையும், எப்படி ஒரு செல்வந்தராக வாழ்கிறார் என்பதையும், அறிந்திருந்தார். தொண்டமானுடைய எடுப்பானதோற்றத்தையும், கருணை தோய்ந்த முக மண்டலத்தையும் நேரில் கண்டபோது கோதை தொண்டமானிடம் மானசீகமாகத் தண்டனிட்டு அடிபணியும் ஒரு பக்தையாகி விட்டார்.

தொண்டமான்-கோதை முதல் சந்திப்பை விளக்குவதானல் அப்பர் என்று அழைக்கப்பட்ட திருநாவுக்கரசு சுவாமிகள் பாடிய தேவாரத்துள் ஒன்றினை எடுத்து ஆளுவது பொருத்தமாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு இளம் பெண் சிவபெருமானிடம் பக்தி கொள்கிறார். அவர் திருவாரூர் தியாகேசர். அவருடைய பெயரையும் ஊரையும் கேட்டறிந்தாள். அவருடைய திருவுருவ வருணனையையும் தெரிந்து கொண்டாள். அவ்வளவுதான். அந்தத் தியாகப் பெருமானிடம் அந்தப் பெண் ஈடுபாடு கொண்டுவிட்டாள். தாய் தந்தையர் அனைவரையும் விட்டு திருவாரூர் பெருமானின் திருவடிகளுக்கு ஆளாகிவிட்டாள்.

அழகாக ஒரு திருத்தாண்டகத்தில் எடுத்துக் கூறுகிறார் இச் சம்பவத்தை திருநாவுக்கரசு நாயனார்.

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

இந்த பாடலில் மூர்த்தி என்ற பதம் தியாக மூர்த்தியான திருவாரூர் தியாகராச மூர்த்தியைக் குறிக்கிறது. அதே இடத்தில் சௌமிய மூர்த்தியை வைத்து விட்டால் கோதை என்ற இந்த இளம் பெண், எப்படி தன்னை மறந்து, தன் உறவினர்களை மறந்து தலைவன் தாளுக்கு ஆளானாள் என்பது பொருந்துவதாகும்.

கோதை என்ற அழகிய பெயரிலேயே தலைவனும் தலைவியும் இணைந்திருக்கிறார்கள். கோ என்றால் தலைவன். தை என்றால் தையல். எவ்வளவு அழகான பெயர்.

திருமணம் முடிந்ததும் தன் தலைவனின் தாளே துணை என்று கோதை அம்மாள் இலங்கைக்கே வந்துவிட்டார்.

அவர் இலங்கை வந்து சேர்ந்ததும் சௌமியமூர்த்தி தன் பெயரை தொண்டமான் என்று மாற்றிக் கொண்டார். மாற்றம் பெயரில் மட்டுமல்ல. அவர் வாழ்க்கையிலேயே பல மாற்றங்களை ஏற்படுத்த ஏதுவாய் அமைந்தது. அந்த அதிஷ்டப் பெயர்.

தோட்டமுதலாளியாக காலங்கழிக்க வேண்டியவரான அவர், தோட்டத் தொழிலாளரின் நம்பிக்கையைப் பெற்ற தலைவராகவும், நாட்டு அதிபதியின் நம்பிக்கையைப் பெற்ற அமைச்சராகவும் ஆவதற்கு ஏற்ற ஒரு பெயராக அமைந்தது. அந்தத் திருநாமம்!

கோதை அம்மாள் அதிகம் படித்தவர் அல்லர். ஆயினும் இயற்கை விவேகமும், புத்திசாதுரியமும் மிக்கவராக விளங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞர். தமது கணவர் பெருந்தலைவராகவும், அரசியல் மேதை யாகவும், சர்வதேச அரங்குகளில் பங்குபற்றும் ஒரு பிரமுக ராகவும் ஆகிவருகிறுர் என்பதைக் கண்டதும் அவர் தமது படிப்பறிவை உயர்த்திக் கொண்டார். பெரும் பெரும் உலகத் தலைவர்களுடன் பழகவும், கோலாகலமான விருந்து வைபவங் களில் கலந்து கொள்ளவும், உயர்ந்த அந்தஸ்திலும் பதவியிலும் இருப்பவர்களைத் தமது இல்லத்துக்கும் ஹோட்டல்களுக்கும் அழைத்து உபசரிக்கவும் தன்னை தகுதியாக்கிக் கொண்டார் கோதை.

அதுமட்டுமல்ல, வேற்று நாட்டு அரசியல், தொழில் சங்க தலைவர்களுடன் ஆங்கிலத்தில் பேசவும், அவர் தம் மனைவி மாருடன் கைகுலுக்கி அளவளாவவும் வேண்டிய அடிப்படை ஆங்கில அறிவையும் மிகச் சாமர்த்தியமாகச் சம்பாதித்துக் கொண்டார் கோதை அம்மாள்.

தொண்டமானுடைய வாழ்க்கை பல்வேறுபட்ட முனை களையும், முகங்களையும் கொண்ட வாழ்க்கையாக மாறிய போது, அவற்றிற்கு ஏற்றுற் போல் ஈடுகொடுக்க கூடிய வல்லமைகளையும் பெற்றுவிட்டார் கோதை.

"சாதனை வீரர் ஒவ்வொருவர் வாழ்வின் பின்னணியிலும் ஒரு பெண்மணி இருப்பார்" என்று மேல்நாட்டு அறிஞர் ஒருவர் கூறியிருக்கின்றுர். அது உண்மையான ஒரு வாக்கு, தொண்டமான் வாழ்வில் அதை நிதர்சனம் காணக் கூடியதாக இருந்தது. எல்லா சந்தர்ப்பத்திலும் தொண்டமானுக்கு உறுதுணையாக நின்று கைகொடுத்து உதவியவர் கோதை அன்னையார் என்றுல் அது முக் காலும் உண்மையாகும்.

திருமணம் செய்து பத்து ஆண்டுகளுக்குள் தன் கணவரை தலை சிறந்த ஒரு தொழில் சங்கவாதியாகவும், பெரும் அரசியல் தலைவராகவும் கண்டவர் கோதை. இலங்கை இந்திய காங்கிரஸின் தலைவராக தொண்டமான் திகழ்ந்தபோது, இலங்கை இந்திய காங் கிரஸின் மாதர் அணியின் பொருளாளர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார் கோதை. தம் கணவரைப் போலவே தோட்டத் தொழிலாளர் நலனில் கோதை அன்னைக்கும் அக்கறை இருந்தது என்பதற்கு இது ஓர் எடுத்துக் காட்டாகும்.

இரக்கமும் கருணை உள்ளமும் கொண்டவர் கோதை அன்னை. செல்வச் சீமாட்டியாக வாழ்ந்தாலும் எளிமையே அவருடைய தோற்றம். தான் வாழுகின்ற தோட்டத் தொழி லாளரின் சூழலைத் தானும் பேணி வாழ்ந்தவர் அவர். பெருமையோ, மேட்டிமைத்தனமோ சிறிதும் அற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த ஏழை வீடு தேடி வந்தாலும் "சாப்பிட்டாயா, அப்பா?" என்று கேட்டு அவனுக்கு உண்டி கொடுத்து அனுப்புவதே அவர் பண்பாடு. விருந்தோம்பல் என்பது அவருக்கு விருப்பமான பணி. பசித்த தொழிலாளியைக் கண்டால் அவர் பரிதவித்துப் போவார்: "சமையல் கட்டுக்கு சென்று சாப்பிட்டு விட்டுப் போ" என்பார்.

அவர் மூஞைபுதூரில் வயி.கரு. இல்லத்தில் இருந்தாலும் சரி, பட்டமங்கலத்து அரண்மனையில் இருந்தாலும் சரி, வெவண்டன் தோட்டத்து உல்லாசமாளிகையில் இருந்தாலும் சரி, கொழும்பு ரேஸ் கோர்ஸ் மாடியில் இருந்தாலும் சரி அங்கு செல்வோர் விருந்து உண்ணத்தயாராகவே செல்ல வேண்டும்.

கணவருடைய உண்டி உடை எல்லாவற்றையும் அவரே கவனித்துக் கொள்வார். டிரைவரையும், வேலைக்காரரையும் அழைத்துக்கொண்டு, அவரே பையைக் கையில் தூக்கிக் கொண்டு சந்தைக்கும், பஜாருக்கும் சென்று தமது கணவருக்கும், பிள்ளைகளுக்கும் பிடித்தமான பண்டங்களை, அவரே தெரிந்து பார்த்து வாங்கி வந்து, வாய்க்கு ருசியாகவும், தேகத்துக்குத் தெம்பாகவும் சமைத்துப் போடுவார்.

*தற்காத்து, தற்கொண்டான் பேணித் தகைசார்ந்த*
*சொற்காத்துச் சோர்விலாள் பெண்*

என்ற திருக்குறளுக்கு இலக்கணமாக வாழ்ந்தவர் கோதை அன்னையார்.

தொண்டமான் அடிக்கடி அயல் நாடுகளுக்குப் பிரயாணம் செய்பவர் அல்லவா? அவர் புறப்படும் போதெல்லாம் அவருக்கு வேண்டிய துணி மணிகளைப் பெட்டியில் அடுக்கி, போகும் இடத்தில் அவருக்கு எதுவித குறையும் இல்லாமல், நிறைவுடன் அனுப்பி வைப்பவரும் கோதை அன்னையார் தான்.

தொண்டமான் ஈட்டிய வெற்றிகளிலும், பெருமைகளிலும், சாதனைகளிலும் தமக்கும் பங்கு உண்டு என்று பலர் பூரிக்கலாம். ஆனால் அவர் கண்ட வெற்றியிலும், தோல்வியிலும், உயர்விலும் தாழ்விலும், கஷ்டங்களிலும் நஷ்டங்களிலும், வேதனைகளிலும் சோதனைகளிலும், சாதனைகளிலும் சமமாகப் பங்கு கொண்டவர் அன்னை கோதையார்தான் என்பதை யாரும் மறுக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தகைய சோதனை வந்தாலும், வேதனை வந்தாலும் உள்ளம் சலிக்காதவர் அவர் என்றும் அவர் முகத்தில் இளம் புன்னகை மலர்ந்த வாறேயிருக்கும். உள்ளத்தில் வீசும் புயலையும் பூசலையும் அவர் வெளிக்காட்டியதே இல்லை. யாரோடும் எரிந்து விழுந்தது கிடையாது. மேலே அலைவீசினாலும் உள்ளே, அடியிலே, அமைதியாக இருக்கும் கடல் போல, அவர் எப்போதும் கொந்தளிப்பு இன்றியே காணப்படுவார்.

கணவர் செய்யும் எந்த முடிவுக்கும் அவர் குறுக்கே நின்றது கிடையாது. சில நடவடிக்கைகளால் தொண்டமான் பல லட்சங்களை இழந்துமிருக்கிறார். தொழிலாளர் நலனுக்காக, அவர்களைப் பஞ்சம் பட்டினி என்ற கோர அரக்கர்களின் பிடியிலிருந்து காப்பாற்றுவதற்காக, வேலை நிறுத்தங்களால் ஏற்பட்ட இழப்புகளை ஈடு செய்வதற்காக, பல சந்தர்ப்பங்களில் அவர் தம்முடைய தோட்டங்களையும், பங்களாக்களையும் அடவு வைக்க வேண்டியும், விற்க வேண்டியும் ஏற்பட்டது. அந்த சந்தர்ப்பங்களில் கூட "ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?" என்று கோதை அன்னையார் குரல் எழுப்பியது இல்லை.

தொழிலாளர் நலமே தாம் சார்ந்த மக்களின் நலம் என்று எப்படி தொண்டமான் தீர்மானித்து செயல்பட்டு வந்தாரோ, அவ்வாறே கோதை அன்னையாரும் செயல்பட்டு வந்தார். இருவருக்கும் ஈருடலாய் இருந்த போதிலும், தொழிலாளர் நலனில் இருவர் சிந்தையும் ஒன்றாகவே இருந்து வந்தது. கணவனைப் போலவே ஒரே வழியில், ஒரே திசையில், ஒரே நிலையில் சிந்திக்கும் மனைவி தொண்டமானுக்கு கிடைத்தது போல சரித்திரத்தில் வெகு சிலரே பெற்றிருந்தார்கள்.

கோதை அன்னையார் தமது கணவருடன் உலகில் நவநாகரிக நாடுகளை எல்லாம் சுற்றி வந்திருக்கிறார். உலகத் தலைநகர்களில் உள்ள உல்லாச ஹோட்டல்களில் எல்லாம் தங்கியிருக்கிறார். உலகின் அரசியல் தலைவர்களையும், அறிஞர் பெருமக்களையும் சந்தித்திருக்கிறார். எனினும், அவர் தோட்டத் தொழிலாளர்களுடன் ஒட்டி உறவாடும் போது பெறும் மகிழ்ச்சியும், மனநிறைவும் அலாதியானது. அவர்களுடைய முகத்தில் காணும் சந்தோஷமே கோதை அன்னையைப் பரவசப்படுத்துவதாக இருந்தது.

அதனால் கோதை அன்னையார் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நடத்தும் வைபவங்களிலும், மாநாடுகளிலும் விருப்போடு கலந்து கொண்டார். அவர் வருகை விழாக்களுக்கு ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியான சோபையைத் தந்தது. அன்னையார் அரங்குக்கு வந்து விட்டார் என்றால் காங்கிரஸின் ஏனைய தலைவர்களும், தொண்டர்களும் உற்சாகம் அடைந்தார்கள். தொழிலாளர் பெருவெள்ளம் உவகையால் ஆர்ப்பரிப்பதைக் காணக்கூடியதாக இருக்கும்.

பொது விழாக்களில் கலந்து கொள்வதைப் போலவே அன்னையார் தனிப்பட்டவர்களின் திருமண விழாக்களிலும் பங்கு கொள்வார்கள். மணமக்களை வாழ்த்துவார்கள். பரிசுகள் வழங்குவார்கள். இளம் தம்பதிகள் அவர் காலில் விழுந்து ஆசிர் வாதம் பெறுவதை பெறற்கரிய ஒரு பேருக மதித்தார்கள்.

கோதை அன்னையாரை ஆரம்பத்திலிருந்து அனைவரும் 'ஆத்தா' என்றே அன்புடன் அழைத்து வந்தார்கள். அருமைத் தாயாரை ஆத்தா என்று அழைப்பது செட்டிநாட்டு வழக்கமாகும்.

காங்கிரஸ் தொண்டர்களுக்கும்,தொழிலாளர்களுக்கும், ஏனையோருக்கும் இவர் ஆத்தாவாகவே விளங்கினார்.

பேரப்பிள்ளைகள் பிறந்ததும் அவர்கள் பாட்டியை அப் பத்தா' என்று அழைக்கலானார்கள். பிற்காலத்தில் எல்லார் வாயிலும் அப்பத்தா என்ற சொல்லே வழக்கில் வந்து விட்டது. கோதை அன்னையார் சகலருக்கும் அப்பத்தா ஆகிவிட்டார். அப் பத்தா என்பது அப்பாத்தா என்ற சொல்லின் பேச்சு வழக்காக அமைந்தது. அப்பாவின் ஆத்தா என்பதே அப்பத்தா ஆயிற்று.

அபபத்தா என்றால் அது கோதை அன்னையாரையே குறிக் கும் உயர்தனிச் சொல் ஆகி அனைவர் வாயிலும் அன்பொழுகத் திகழ்வதாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13

# பொருளாதார மந்தமும் இனவாத தோற்றமும்

பிரிட்டிஷாரின் ஆட்சியின் கீழ், ஓரளவு சுமுகமாகவும் சௌஜன்னியமாகவும் வாழ்ந்து வந்த சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையே இனவாதம் தலைதூக்கியதற்கு வெள்ளைக் காரனின் பிரித்தாளும் தந்திரமே காரணமாக இருந்தது என்று சில சரித்திர ஆசிரியர்கள் எழுதிவைத்திருக்கிறார்கள். இதில் கணிச மான அளவு உண்மையும் இருக்கலாம்.

இனவாதம் தலைதூக்கியதற்கு 1930ஆம் ஆண்டளவில் ஏற்பட்ட உலக பொருளாதார மந்தமும், 1931இல் நடைமுறைக்கு வந்த சோல்பரி கமிஷனர்களின் சர்வஜன வாக்குரிமை சிபார்சுமே காரணங்கள் என்று வேறு சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

நீண்ட நெடுங்காலமாக இலங்கைக்கும் இந்தியாவுக்கு மிடையே வர்த்தகத் தொடர்புகள் நிலவி வந்துள்ளன. பிரிட் டிஷார் இந்தியாவையும் இலங்கையையும் கைப்பற்றி ஆட்சி செலுத்த தொடங்கிய பின்னர், குறிப்பாகத் தென் இந்தியாவிலும் இலங்கையிலும் தெருப்பாதைகள் திறக்கப்பட்டன. இருநாடுகளுக்கு மிடையே கடல்பாதைகளும் நிர்ணயிக்கப்பட்டு கப்பல்களும் ஓடத் தொடங்கின.

இந்திய வர்த்தகர்கள் இலங்கையில் வந்து குடியேறினார் கள். நாட்டுக்கோட்டைச் செட்டியார்களும், திருநெல்வேலி பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்களும் இங்கு வந்து சேர்ந்து பணமுதலீட்டு தொழிலையும், பலசரக்கு இறக்குமதி வியாபாரத்தையும் ஆரம்பித்தார்கள்.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் நடுப்பகுதியில் அதாவது 1850ஆம் ஆண்டளவில், இங்கு தேயிலையைப் பயிரிடுவதற்கு வெள்ளைக்காரத் தோட்ட முதலாளிகள் ஏற்பாடுகளைச் செய்தார்கள். அதற்கு முன்பு கால் நூற்றுண்டுக் காலம் காப்பி விளைந்து கொண்டிருந்தது.

ஹேவா ஹெட்ட பிரதேசத்தில் லூலே கொந்தரா என்ற தோட்டத்தில் ஜேம்ஸ் டெயிலர் என்ற ஆங்கிலேயர் 1866ஆம் ஆண்டில் முதன் முதலாக தேயிலையைப் பயிரிட்டு அதை ஒரு ஏற்று மதிப் பொருளாக ஆக்கிவிட முயற்சி செய்தார். அவருக்கு வெளி நாட்டு விற்பனை வெற்றிகரமாகக் கிடைத்தது.

இதைத் தொடர்ந்தே, இலங்கையின் மத்திய பகுதியான மலையகப் பிரதேசத்தில் பரபரவென்று தேயிலைத் தோட்டங்கள் தோன்ற ஆரம்பித்தன.

தேயிலைத் தோட்டத் தொழில் படுவேகமாக வளர்ந்ததால் அங்கு வேலை செய்வதற்கு ஆட்கள் தேவைப்பட்டார்கள். அதுவும் மலிவான கூலியில் வேலை செய்வதற்கு.

சுற்றுவட்டாரத்தில் வசித்து வந்த சிங்கள மக்கள் இந்த தேயிலைத் தோட்டத் தொழிலில் அதிகம் அக்கறை காட்டவில்லை. அவர்களில் பெரும்பாலோர் நெற்செய்கையில் ஈடுபட்ட கமக்காரர்களாகவும், தோட்டச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளாகவும் இருந்தார்கள். தேயிலைத் தோட்டங்களில் கூலிக்கு வேலை செய்வது இழிவான தொழில் என்று அவர்கள் எண்ணினுர்கள்.

அதனுல், போதிய வேலையாட்களை வெள்ளைக்காரர்களால் பிடிக்க முடியவில்லை. அப்படிப் பிடித்தாலும் உள்ளூர்க்காரர் அதிகப்படியான வேதனம் கேட்டார்கள்.

எனவே, வேறு எங்கு ஆட்களைப் பிடிக்கலாம் என்ற தேடுதல் நடைபெற்றது. ஏற்கனவே, ஒரு குறிப்பிட்ட தொகையினர் - தென் இந்திய தமிழ் மக்கள் - காப்பி தோட்டங்களில் வேலை செய்து வந்தார்கள்.

சிங்களத் தொழிலாளரை விட இந்தியத் தொழிலாளரிடம் அதிகப்படியான உழைப்பு சக்தியும், தொழிலார்வமும், பணிவும், பொறுப்புணர்ச்சியும் இருப்பதை அவதானித்த வெள்ளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரத் தோட்டத் துரைமார்கள், தங்கள் புதிய முயற்சியான தேயிலைத் தோட்டங்களுக்கும் தென் இந்தியாவிலிருந்தே தொழிலாளரை இறக்குமதி செய்வது லாபகரமாக இருக்கும் என்று தீர்மானித்தார்கள்.

காப்பி தோட்டங்களில் வேலை செய்வதற்காக இந்திய தொழிலாளர்கள் 1826ஆம் ஆண்டிலிருந்தே இலங்கையில் இறக்குமதி செய்யப்பட்டிருந்தார்கள். எனினும் 1860 -1870 ஆகிய ஆண்டுகள் முதற்கொண்டு லட்சக்கணக்கான இந்தியத் தொழிலாளர் இலங்கை வந்து சேர்ந்தார்கள். இப்படியாக ஒப்பந்த அடிப்படையில் இந்தியத் தொழிலாளர்களை இலங்கைக்கு ஏற்றுமதி செய்வதை இந்திய அரசாங்கம் 1939ஆம் ஆண்டில் தடுத்து நிறுத்தும் வரை, இந்தியத் தொழிலாளர் இங்கு படைபடையாக வந்து குவிந்து கொண்டேயிருந்தார்கள் என்று கூறலாம்.

இப்படி வந்தவர்கள் பெரும்பாலும் தமிழ் நாட்டின் முக்கிய மாவட்டங்களாகவிருந்த தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், திருநெல்வேலி, சேலம், ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களிலிருந்தே வந்தார்கள். வந்தவர்களில் ஒரு சிறு எண்ணிக்கையினர் கொழும்பு, கண்டி, நுவரேலியா,ஹட்டன் போன்ற நகரங்களில் எடுபிடி வேலைகளிலும் சேர்ந்து கொண்டார்கள். சிறு சிறு வேலைகளில் சேர்ந்து கொண்டவர்களில் கேரளத்தைச் சேர்ந்த மலையாளிகளும், கொச்சியைச் சேர்ந்த மலையாள முஸ்லிம்களும் அடங்குவர்.

இராமநாதபுரம், திருப்பத்தூர் பிரதேசத்திலிருந்து வேலைக்காக இலங்கை வந்தவர்களில் ஒருவரே தொண்டமானுடைய தந்தையார் கருப்பையாபிள்ளை என்று பின்னுல் வழங்கப்பட்ட, குமாரவேல் ஆவார்.

இலங்கையில் வந்து குடியேறிய இந்தியமக்கள் - அதாவது தமிழ் நாட்டிலிருந்து வந்த மக்கள் - முதலில் தமிழ் மக்களாகவே மதிக்கப்பட்டார்கள். ஏற்கனவே இலங்கையிலிருந்த தமிழ்க்குடி மக்களுக்கும், வந்தேறிய இந்திய தமிழ் மக்களுக்கும் இடையே அரசு ரீதியில் எந்தவிதமான வேறுபாடும் காட்டப்படவும் இல்லை, கவனிக்கப்படவும் இல்லை. ஜனத்தொகைக் கணக்கெடுப்பில் கூட அவர்கள் தமிழர்கள் என்ற தலைப்பின் கீழேயே கணிக்கப்பட்டார்கள்.

பிரிட்டிஷ் அரசாங்கம், 1911ஆம் ஆண்டில் மேற்கொண்ட ஜனத்தொகைக், கணக்கெடுப்பில் தான் இலங்கைத் தமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்களையும், இந்தியத் தமிழர்களையும் வேறு வேருகப் பிரித்துக் கணக் கெடுத்தார்கள். ஒரு பிள்ளை பிறந்து பதிவு செய்யும் போது அதன் தகப்பன் தாய் ஆகியோர் இலங்கை தமிழரா அன்றி இந்திய தமிழரா என்று குறிப்பிட்டுப் பதிவு செய்ய வேண்டியிருந்தது.

அருமைத் தமிழ் நாட்டு மக்கள் இலங்கைக்கு வந்து காடழித்து தோட்டமாக்கியும், மேடழித்து நகரமாக்கியும், சிங்களப் பொது மக்கள் மத்தியில் வாழ முற்பட்ட போது சிங்களமக்கள் அவர் களை அன்போடுதான் வரவேற்ருர்கள். புகைச்சலோ பொருமையோ சிங்களமக்கள் மனதில் ஏற்பட்டதில்லை.

1825 முதல் 1925 வரை சுமார் ஒரு நூற்ருண்டு காலம் இப் படியான சுமுகநிலைதான் இலங்கையில் நிலவியது. ஆனால் 1925க் கும் 1930க்கும் இடைப்பட்ட காலத்தில் நிலைமை படிப்படியாக மாறத் தொடங்கியது.

இந்த மனமாற்றம் மலைநாட்டில் மட்டும் அன்றி கொழும் பிலும் ஏனைய நகரங்களிலும் ஏற்படலாயிற்று. இந்த காலகட்டத் தில் தான் இலங்கையில் இனவாதம் முதன் முதலாக தன் அருவருப் பான தலையைக் கிளப்பியது என்று சொல்லலாம்.

1915ஆம் ஆண்டு வெடித்த இனக்கலவரம் சிங்களமக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையில் ஏற்பட்டதொன்ருக இருந்த போதிலும், அது வெள்ளைக்கார ஆட்சியின் அராஜகத்தினலேயே பாரதூரமானதாக மாற்றம் அடைந்தது. அதன் பின்னர், சிறிது காலத்தில், அது தணிந்து சிங்களவர்கள் முஸ்லிம்கள் ஆகிய இரு சாகித்தியத்தாரும் சௌஜன்னிய உறவுகளை ஏற்படுத்திக் கொண் டார்கள்.

> **ஆனல் 1925 - 1930 ஆண்டுகளில் துளிர்விட்ட - இன வாதம் இன்றுவரை தலைவிரித்தாடி இந்த அழகிய இலங்கை மணித்திரு நாட்டினை சீரழித்துச் சின்ன பின்னப்படுத்திக் கொண்டேயிருக்கிறது.**

1928 - 1930 ஆண்டுகளில் உலகெங்கணும் ஒரு பெரிய பொருளா தார மந்தநிலை ஏற்பட்டது..

சரித்திர ஆசிரியர்களும், பொருளாதார விமர்சகர்களும் இந்த நூற்ருண்டில் ஏற்பட்ட மிகப் பெரிய "எகனேமிக் டிப்ரஷன்" (Economic Depression) என்று இந்த மந்த நிலையைக் குறிப் பிடலானர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததால் இலங்கையும் பாதிப்புக்குள்ளானது. பணப்புழக்கம் குன்றிப் போயிற்று. உற்பத்தி பொருள்கள் எல்லாம் விலையில் வீழ்ச்சியடையலாயின. விவசாயிகள் தாங்கள் விளைவித்த நெல் முதலிய தானியங்களை அருவிலைக்கு விற்கவேண்டியவர்கள் ஆனார்கள். நாட்டில் பஞ்சமும் பட்டினியும் பரவலாயின.

உற்பத்திப் பொருள்கள் விலையில் வீழ்ச்சியுற்றதால் சிங்கள விவசாயிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். விவசாயம் அருகியதால் 'அவர்கள் வேறு வேலை வாய்ப்புகள் இன்றி அலைய வேண்டியதாயிற்று. அதே வேளையில், இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்து, வெள்ளைக்கார தோட்டத்துரைமாரிடம் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தார்கள்.

இந்த நிலை மலைநாட்டு சிங்களவர் மத்தியில் ஒருவித துவேஷ உணர்ச்சியைக் கிளப்பிவிட்டது. வெள்ளைக்காரத் துரைமார்களும், இந்திய தொழிலாளருமாகச் சேர்ந்து கொண்டு மலைநாட்டு சிங்களவருக்கு உரிய நிலங்களை அபகரித்துக் கொண்டார்கள். சிங்களவர்களுக்கு தொழில்வாய்ப்பு இல்லை. இந்திய தொழிலாளர் சுகபோகம் அனுபவிக்கிறார்கள். இவ்வாறான ஒரு அசூசை மலைநாட்டு சிங்களவர் மத்தியில் கிளப்பப்பட்டது.

அதே வேளையில், கொழும்பு மாநகரம் போன்ற இடங்களிலும் இந்திய எதிர்ப்பும், துவேஷமும் கிளப்பப் பட்டன.

அதுகாலம் வரை நாட்டுக் கோட்டைச் செட்டிமார் சிங்கள வியாபாரிகளுக்கும்,அரசியல் தலைவர்களுக்கும் பொது மக்களுக்கும் அவர்களுடைய தேவைகளுக்கு ஏற்றவாறு பண உதவி செய்து வந்தார்கள். அதாவது நெருக்கடியான சமயங்களில் எல்லாம் வட்டிக்கு பணம் கொடுத்து உதவி வந்தார்கள். பொருளாதார மந்த நிலை ஏற்பட்டதும், அவர்களிடமும் பணம் வரண்டு போயிற்று. அதே, சமயம் பார்த்து கொழும்பில் இயங்கி வந்த தனியார் வங்கிகள் சிலவும் முறிந்து போயின. அதனால் ஒரு சில வட்டி ஸ்தாபனங்களுக்கு பண நஷ்டமும் ஏற்பட்டது.

எல்லாவற்றிற்கும் மேலாக இன்னொரு சம்பவம் நிகழ்ந்தது. அது காலவரை நாட்டுக் கோட்டை செட்டியார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தக வங்கிகளிடமிருந்து குறைந்த வட்டிக்கு பணம் பெற்று சற்று அதிகமான வட்டிக்கு சிங்கள வர்த்தகர்களுக்கு கடன் கொடுத்து வந்தார்கள். ஆனால், பொருளாதார மந்த நிலை ஏற்பட்டதும் வங்கிகள் செட்டிமார்களுக்கு கடன் கொடுப்பதை நிறுத்திக் கொண்டன. எனவே, செட்டிமார்களும் வியாபாரிகளுக்கு, குறிப்பாக சிங்கள வியாபாரிகளுக்கு, கடன் கொடுக்க முடியாமல் போயிற்று.

இப்படியான தாக்கங்களால் சிங்கள மக்களிடையே தமிழர் மீது ஒரு வித துவேஷம் வளர ஆரம்பித்தது. இந்த துவேஷத்துக்கு ஒரு சில சிங்கள அரசியல்வாதிகளும் தூபமிடலானார்கள்.

இந்தியாக்காரத் தமிழன் வந்து மலைநாட்டில் சிங்கள மக்களுக்குரிய நிலங்களையும், பிரதேசங்களையும் பிடித்துக் கொண்டான் என்பது ஒரு பிரசாரம்.

இந்தியத் தமிழர் வந்து தேயிலைத் தோட்டத்து வேலைகளை எல்லாம் ஏற்றுக் கொண்டதால் மலைநாட்டில் வாழும் சிங்களமக்களுக்கு தொழில் வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது என்பது ஒரு பிரசாரம்.

கொழும்பில் உள்ள அரசாங்க காரியாலயங்கள் எல்லாவற்றிலும் இந்தியர்களே உத்தியோகம் பார்க்கிறார்கள் அதனால் சிங்களவர்களுக்கு அரசாங்க வேலை கிடைக்க வழிஇல்லை என்பது ஒரு பிரசாரம்.

அரசாங்க காரியாலயங்களோடு, முனிஸிபாலிட்டிகளில் உள்ள பியோன் வேலையைக் கூட கொச்சியான்களே (அதாவது மலையாளிகளே) செய்கிறார்கள் அவர்களை விரட்டியடித்து சகல வேலைகளையும் சிங்கள மக்கள் கைப்பற்றவேண்டும் என்பது ஒரு பிரசாரம்.

கொழும்பிலும் ஏனைய நகரங்களிலும் உள்ள சகல வியாபாரங்களும், வர்த்தகங்களும், ஏற்றுமதி இறக்குமதிகளும் இந்தியர் கையிலேயே இருக்கின்றன, ஏன், கள் இறக்குதல், கள்ளுக்கடை வைத்தல், சாராயக்கொந்தராத்து எல்லாமே இந்தியர் வசமும், மலையாளிகள் வசமும் சிக்கியுள்ளன. இப்படியிருந்தால் சிங்களவர்கள் தலைதூக்குவது எப்படி என்பது ஒரு பிரசாரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புத்துறைமுகத்தில் உள்ள வேலைகள் எல்லாவற்றிலும் இந்தியத் தொழிலாளர்களே ஆதிக்கம் செலுத்துகிறார்கள். இந்த நிலை தொடர்ந்தால் சிங்களத் தொழிலாளர் பிழைப்புக்கு என்ன செய்வார்கள் என்பது ஒரு பிரசாரம்.

இவ்வாறாக, இந்திய மக்களுக்கும், தோட்டத் தொழிலாளிகளுக்கும் எதிராக துவேஷப் பிரசாரங்களும், வகுப்புவாத பிரசாரங்களும் படிப்படியாக முடுக்கிவிடப்பட்டன. இப்படியான பிரசாரங்களை ஏ.ஈ. குணசிங்க போன்ற சிங்களத் தலைவர்கள் முன்நின்று வெகு ஆக்ரோஷமாக நடத்தினார்கள்.

இவர்கள் செய்துவந்த பிரசாரங்கள் அனைத்தும் உண்மைக்கு மாறானவை என்றும் சொல்ல முடியாது. அரசாங்க உத்தியோகம், கள்ளுக்கடை சாராயக்கடை கொந்தராத்து, துறைமுகத் தொழில் ஆகிய துறைகளில் ஓரளவு உண்மையும் இருக்கத்தான் செய்தது.

இந்திய எதிர்ப்பு பிரசாரம் சூடு பிடித்து வருவதைக் கண்டு கொழும்பில் வாழ்ந்த இந்தியப் பிரமுகர்கள் சற்று விழிப்படைந்தார்கள். தங்களுக்கு இலங்கையில் எதிர்காலம் இருண்டு வருவதை அவர்கள் கண்டு கொண்டார்கள். இப்படியான ஒரு சூழ்நிலையில் தனித்து நின்று ஒன்றும் செய்ய முடியாது என்றும் ஏதாவது ஒரு வகையில் இலங்கையில் உள்ள இந்தியர்கள் அனைவரும் ஸ்தாபன ரீதியாக ஒன்றுபடவேண்டும் என்றும், இந்தியாவின் உதவியை நாடவேண்டும் என்றும் அவர்கள் நினைத்தார்கள்.

இதன் பயனாக பல்வேறு சங்கங்கள் கொழும்பிலும், இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் தோன்றலாயின.

பாரத இளைஞர் சங்கம், நேரு இளைஞர் சங்கம், தென் இந்திய வர்த்தகர் சங்கம், நாட்டுக்கோட்டையார் நலவுரிமைச் சங்கம், பாரதமாதா நலன்புரி சங்கம், இந்திய தொழிலாளர் சங்கம், துறைமுக சேவையாளர் சங்கம், என்றெல்லாம் பல்வேறு சங்கங்கள் இலங்கைவாழ் இந்திய மக்களால் தோற்றுவிக்கப்பட்டன.

சில சில சங்கங்கள் இந்திய மக்களின் ஜாதி அடிப்படையில் கூடத்தோன்றலாயின. பரதகுல இளைஞர் சங்கம், தட்சணத்து வேளாளர் சங்கம், விஸ்வகர்மா சங்கம், முக்குலத்தோர் சங்கம், திருநெல்வேலி நாடார் சங்கம், அருந்ததியார் சங்கம் என்பன சில. மலைநாட்டுப் பகுதிகளிலும் சில சங்கங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்பட்டன. சுபாஸ் சந்திரபோஸ் சங்கம், காந்தி சேவா சங்கம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இத்தகைய சிறிய சங்கங்களால் எல்லாம் புயல்காலத்து கடல் அலையெனக் கிளம்பி வந்த இந்திய எதிர்ப்பினைத் தடுத்து நிறுத்த முடியவில்லை:

இவற்றினூடே இந்திய சேவாசங்கம் என்று ஒன்று இருந்தது. இதில் கொழும்பில் உள்ள இந்திய வம்சாவழியினரைச் சேர்ந்த படித்தவர்கள், பட்டதாரிகள், சட்ட நிபுணர்கள், வர்த்தகர்கள். வியாபாரிகள் எல்லோரும் அங்கம் வகித்தார்கள். இந்த ஒரு சங்கம்தான் அரசியலைப் பொறுத்தவரையில் பெரிய இடத்துச் செல்வாக்கைப் பெற்ற சங்கமாக இருந்தது.

இந்த இந்தியா சேவா சங்கத்துக்கு கொழும்பில் இருந்த ஒரு பெரிய வர்த்தகரும், பணக்காரருமான எச்.ஆர்.எம். வள்ளியப்ப செட்டியார் என்பவர் தலைவராக இருந்தார்.

வளர்ந்துவரும் இந்திய துவேஷத்தையும், எதிர்ப்பு-வெறுப்பு பிரசாரத்தையும் எப்படித் தடுத்து நிறுத்தலாம், எப்படி அவற்றை மேற்கொள்ளலாம் என்பது பற்றி இந்த இந்திய சேவாசங்கம் கூடி ஆராய்ந்தது.

இலங்கை வாழ் இந்திய மக்களின் நலவுரிமைகளையும், எதிர்கால சுபீட்சத்தையும் பாதுகாப்பதற்கு என்ன செய்யலாம் என்பதே இந்த சங்கத்தின் பிரச்சினையாக இருந்தது.

இந்திய சேவா சங்கத்தின் கூட்டங்களில் எல்லாம், அன்று இலங்கைவாழ் இந்தியர்களின் தலைவர்கள் என்றும் அவர்களில் அக்கறை கொண்டவர்கள் என்றும் மதிக்கப்பட்ட எஸ்.ஆர்.எம். வள்ளியப்ப செட்டியார், எஸ்.சங்கரலிங்கம் பிள்ளை, பி.டி.தானுப்பிள்ளை, ஐ.எக்ஸ் பெரேரா, பெரி.சுந்தரம், வி.ஆர்.எம்.சுப்பிரமணியம் செட்டியார்.எச்.நெல்லையாபிள்ளை, எஸ்.வைத்திலிங்கம், ஏ.அஸீஸ் போன்றவர்கள் கலந்து கொண்டும், வெளியிலிருந்தும், ஆலோசனைகள் கூறிவந்தார்கள்.

தலைநகரான கொழும்பில் நிலைகொண்டவர்கள் எல்லோரும் இரண்டு விதமான கருத்துக்களைத் தெரிவித்தார்கள்.

இலங்கையில் தலைதூக்கிவரும் இந்தியத் துவேஷத்தை முறியடிப்பதற்கு இலங்கையிலுள்ள இந்தியர்கள் ஆங்கிலேயருடன் இரகசியத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவேஷத்தைக் கிளப்பும் சிங்களத் தலைவர்களை முறியடித்துக் ஒடுக்க வேண்டும் என்பது ஒரு சாராரின் கருத்தாக இருந்தது.

இன்னொரு சாரார், ஆங்கிலேயர்களுடன் இந்தியர் எதுவிதத் தொடர்பும் வைத்துக் கொள்ளக்கூடாது. இந்தியாவில் ஆங்கிலேயருக்கு எதிராகப் போராட்டமும் சுதந்திரக் கிளர்ச்சியும் ஏற்பட்டிருக்கும் வேளையில் இலங்கையிலிருக்கும் இந்தியர்கள் ஆங்கிலேயருடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வது துரோகச் செயலாகும். எனவே, இந்தியர்கள் இலங்கையிலுள்ள தேசியவாதக்கட்சிகளுடனும், இடது சாரிக்கட்சிகளுடனும் தொடர்பு கொண்டு, இந்த இந்திய துவேஷத்தைத் தணிக்க வேண்டும் என்று அபிப்பிராயப்பட்டார்கள்.

இவ்வாறான அபிப்பிராயங்களைப் பிரதிபலித்துக் கொண்டிருந்தவர்கள் பெரும்பாலும் கொழும்பில் சொகுசு வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த இந்திய வர்த்தகர்களும், இந்தியாவிலிருந்து இலங்கையில் வந்து குடியேறி வட்டித்தொழில், சட்டத்தொழில், அரசு உத்தியோகம் போன்ற நல்ல வருமானம் உடைய தொழில்களில் ஈடுபட்டிருந்தவர்களுமான மேல் மட்ட உல்லாசவாசிகள் தான்.

இப்படியானவர்களில் சிலர், பின்னர், இலங்கை இந்திய மத்திய சங்கம், இலங்கை இந்திய தேசீய காங்கிரஸ் என்ற அமைப்புகளிலும் இடம் பிடித்துக் கொண்டார்கள்.

மலைநாட்டில் அந்நேரம் தேயிலைத் தோட்டங்களில் கொடுகொடுக்கும் குளிரையும், அட்டைக் கடியையும் சகித்து, உடலைப் பிழிந்து கொண்டு இரவும் பகலும் உழைத்துவந்த லட்சக்கணக்கான இந்தியர்களை இவர்கள் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை.

ஆனால் அந்தக் கால கட்டத்தில் மலை நாட்டில் நிலை கொண்டவரான ஒரு இந்தியர் - தமிழ் நாட்டவர் - மலை நாட்டு இந்தியத் தொழிலாளரிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திக் கொண்டிருந்தார். அவர் பெயர் கோ.நடேச ஐயர். கோதண்டராமையர் நடேச ஐயர் என்பது முழுப் பெயராகும்.

இப்போது இருப்பது போன்ற பலமான தொழிற்சங்க இயக்கத்தை நடேச ஐயரால் அப்போது தோற்றுவிக்கமுடியவில்லை. என்றாலும், தொழிற்சங்க இயக்கம் பின்னால் உறுதியான முறையில் அமைவதற்கான ஓர் உணர்வை, ஒரு சூழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையை உருவாக்கும் ஒரு முன்னோடியாக அவர் அன்று செயல்பட்டார்.

இந்த வகையில், தொண்டமானுக்கு நடேச ஐயரிடம் அன்றும், இன்றும், மதிப்பு உண்டு. நடேச ஐயர் இறந்து மறைந்த பின்னரும் அவருடைய ஆற்றல்களைப் பற்றியும், திறமைகளைப் பற்றியும் விதந்து கூறுவதற்கு தொண்டமான் என்றும் பின் நின்றதில்லை.

நடேச ஐயரின் சில கொள்கைக்ளும், கருத்துக்களும் முற்றாக ஒப்புக் கொள்வதற்கு ஏற்றவை அல்லவாயினும் தொழிலாளர் நலனுக்காக தனிமனிதராக நின்று உழைத்தவர் நடேச ஐயர் என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்வர்.

இந்திய எதிர்ப்புப் பிரசாரத்தினால் ஏற்பட்ட ஒரு வித அமைதியின்மையை எப்படிப் போக்கலாம் என்பதில் இலங்கை வாழ் இந்திய சமூகத்தினர் அனைவரும், குறிப்பாக இலங்கை இந்திய மத்திய சங்கத்தினரும், இலங்கை இந்திய தேசிய காங்கிரஸாரும் பல விதமான ஆலோசனைகளை மேற்கொண்டனர்.

ஆயினும், எந்த விதமான ஒரு மார்க்கமும் அவர்களுக்கு தோன்றவில்லை. அதே வேளையில், இலங்கை அரசாங்கமும், இந்தியர்களை ஒதுக்குவதற்கான-ஒடுக்குவதற்கான-சட்டங்களையும், திட்டங்களையும் உருவாக்க முனைந்து கொண்டிருந்தது.

என்ன நடக்கப் போகிறது என்று யாருக்கும் ஒன்றும் புரியவில்லை. 1930ஆம் ஆண்டுக் காலகட்டம் பொருளாதாரத்தில் மட்டுமன்றி, இந்தியர்களின் சிந்தனையிலும் ஒருவித மந்த நிலையைத்தான் (Depression) ஏற்படுத்தியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14

# இலங்கை இந்திய காங்கிரஸ் நேருஜீ முன்னல் உதயம்

கொழும்பில் உள்ள வர்த்தக ஸ்தாபனங்கள், வெள்ளைக்காரக் கம்பனிகள், ஹோட்டல்கள், டிராம் வண்டி சேவை, முனிஸிபாலிட்டி சுத்திகரிப்பு சேவை, துறைமுக சேவை ஆகியவற்றில் வேலை பார்த்த தொழிலாளர்களின் நலவுரிமைகளுக்காகவும், நியாயமான சம்பளக் கோரிக்கைகளுக்காகவும் போராடுவது என்ற நல்லெண்ணத்தோடு ஏ.ஈ. குணசிங்கவினுல் ஆரம்பிக்கப்பட்ட சங்கங்களும், யூனியன்களும் ஆரம்பத்தில் நல்ல காரியங்களைச் செய்து வந்தன. தொழிலாளர் ஒற்றுமையும் ஓரளவு வளர்க்கப்பட்டு வந்தது. 1925ஆம் ஆண்டுக்கும் 1930ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் இந்த வளர்ச்சி காணப்பட்டது.

குணசிங்கவின் இயக்கத்தில் அப்போது சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், இந்தியத் தமிழர், மலையாளிகள், மலாயாக்காரர்கள் என்று எல்லா வகையினரும் எதுவித வித்தியாசமுமின்றி உறுப்பினராகச் சேர்ந்து இருந்தார்கள். இந்தக் காலகட்டத்தில் தான் நடேச ஐயரும் குணசிங்கவால் தோற்றுவிக்கப்பட்ட இலங்கைத் தொழிலாளர் யூனியன் என்ற அமைப்பில் உதவித் தலைவர் பதவியை ஏற்றிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் குணசிங்கவின் சமுதாயக் கொள்கையிலும், அரசியல் கொள்கையிலும் மாற்றம் ஏற்பட்டது. அவர் படிப் படியாக ஒரு இனவாதியானுர். இந்தியத் துவேஷம் அவர் பேச்சிலும், செயலிலும் தெறிக்க ஆரம்பித்தது. இந்தியாக்காரர் இலங்கையைச் சுரண்டிக் கொழுக்க வந்தவர்கள் என்றும் அவர்களை நாட்டைவிட்டு விரட்டி அடிக்க வேண்டும் என்றும் அவர் மேடைக்கு மேடை முழங்கலானுர். மலையாளிகளை அவர் 'கொச்சியான்' என்ற சொல்லால் குறிப்பிட்டு இழிவுபடுத்த முற்பட்டார்.

1934 ஆம் ஆண்டளவில் குணசிங்க இனவாதப் பிரசாரத் தில் முழுக்க முழுக்க இறங்கிவிட்டார். அப்போது அவருடைய இனவாதக் கொள்கை இந்தியரை மட்டும் சாடவில்லை. இலங் கைத் தமிழரையும், குறிப்பாக யாழ்ப்பாணத்து தமிழரையும் சாடுவதாயிற்று.

இலங்கையிலுள்ள, சிங்கள நகரங்களில் எல்லாம் ஏன் யாழ்ப்பாணத்தார் கடை வைத்திருக்க வேண்டும்? ஏன் சிங்கள மக்கள் யாழ்ப்பாணத்து சுருட்டைப் புகைக்க வேண்டும்? ஏன், எங்குபார்த்தாலும் மலையாளிகள் தான் தொழில் பெறு பவர்களாக இருக்க வேண்டும்? ஏன் முனிஸிபாலிட்டியில் இந்தியக்காரர் மட்டும் தான் சுத்திகரிப்புத் தொழிலாளர்களாக அமர்த்தப்பவேண்டும்? இவ்வாறெல்லாம் பொது மேடைகளில் கேட்டு துவேஷ நெருப்பை மூட்டிவிட்டார்,குணசிங்க.

இதன் பயனுக, இலங்கையின் பல சிங்கள நகரங்களில் உள்ள யாழ்ப்பாணத் தமிழர்களின் கடைகள் பகிஷ்கரிக்கப் பட்டன. யாழ்ப்பாணச் சுருட்டைப் புகைப்பதில்லை என்ற ஓர் இயக்கம் கூட தூண்டி விடப்பட்டது.

இந்தப் பின்னணியில், 1936ஆம் ஆண்டு அரசாங்க சபைத் தேர்தல் வந்தது. அலெக்ஸாண்டர் ஏகநாயக குணசிங்க என்ற ஏ.ஈ.குணசிங்கா கொழும்பு மத்திய தொகுதிக்குப் போட்டி யிட்டு வெற்றி பெற்ருர். அவர் ஒரு எம்.எஸ்ஸி. எம்.எஸ்ஸி என்ருல் மெம்பர் ஒப் த ஸ்டேஸ் கவுன்ஸில் என்று பொருள். குணசிங்காவின் வெற்றி இனவாதத்தின் வெற்றியாக அமைந் தது.

டி.எஸ்.சேனநாயகா பிரதம மந்திரியானுர். அவ ருடைய மந்திரி சபையில் பின்பு ஒரு சமயம் ஏ.ஈ. குணசிங்க இலாகா இல்லாத மந்திரியாக பதவியும் பெற்ருர். 15000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியரை அரசாங்கம் இலங்கையிலிருந்து நாடு கடத்த வேண்டும் என்ற அவருடைய நீண்டநாள் கோரிக்கையை அரசாங்க சபையில் அரங்கேற்றினர்.

அப்போது அரசாங்க சபையில் அங்கத்தவர்களாக இருந்த ஜீ.ஜீ. பொன்னம்பலம், எஸ். நடேசன், கோ. நடேச ஐயர், எஸ்.பி. வைத்திலிங்கம், சேர்.ஏ. மகாதேவா போன்றோர் காரசாரமாக இனவாதக் கொள்கையை எதிர்த்துப் பேசினர்.

அந்த சமயத்தில் ஜீ.ஜீ. பொன்னம்பலம் வீரத்தோடும், தீரத்தோடும் பல வாதங்களில் கலந்து கொண்டு ஆணித்தரமாகப் பேசினர். இந்தியர்களை வெளியேற்ற வேண்டும் என்ற கொள்கையை மூர்த்தண்ணியமாக எதிர்த்து வந்தார். ஒரு சந்தர்ப்பத்தில் அவர் ஆறரைமணி நேரம் தொடர்ந்து அரசாங்க சபைக் கூட்டத்தில் பேசினர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். எஸ்.பி. வைத்திலிங்கமும் அவ்வாறே எதிர்த்துப் பேசினர். நியமன அங்கத்தவரான ஐ.எக்ஸ். பெரேராவும் ஆக்ரோஷமாகப் பேசினர்.

இந்தியரை வெளியேற்ற வேண்டும். அவர்கள் இங்கு இருப்பதால் சிங்கள மக்களின் வேலை வாய்ப்புகள் பறிபோகின்றன. அவர்களுடைய பொருளாதாரம் சுரண்டப்படுகிறது என்ற பிரசாரம் வலுக்கவே கொழும்பில் வாழ்ந்த இந்திய பிரமுகர்கள் கவலையும் பரபரப்பும் அடைந்தார்கள். என்ன செய்வது? எப்படி ஈடு கொடுப்பது என்று கொழும்பில் செயல்பட்டு வந்த இந்தியர்களை கொண்ட சபைகளும் சங்கங்களும் கூடிக் கூடி ஆராய்ந்தன. இங்குள்ள நிலைமையை இந்தியாவில் அனுதாபமாக உள்ள ஸ்தாபனங்களுக்கு அறிவித்து வந்தன.

இந்தப் பின்னணியில் தான் 1939ஆம் ஆண்டில் அரசாங்க சபையில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது! அது, நீண்ட காலம் தூபம் போட்டு வளர்க்கப்பட்டு வந்த தமிழ் இனத் துவேஷிகளின் முதல் வெற்றியின் வெளிப்பாடாக பிரதிபலித்தது.

அதாவது, 1934ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாந் திகதிக்குப் பிறகு அரசாங்க சேவையில் நியமிக்கப்பட்ட இந்திய வம்சாவழியினர் அனைவரையும் நாடு கடத்த வேண்டும்.

இலங்கை அரசு ஊழியர்களாக வேலை பார்த்துவரும் இந்தியர்களில் 10 வருடத்துக்கு குறைவாக சேவையில் இருப்பவர்களை, அவர்கள் வகிக்கும் பதவிகளிலிருந்து நீக்கி விட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்ற தீர்மானத்தை டி.எஸ். சேனநாயகா கொண்டு வந்தார். அது தமிழ் அங்கத்தவர்களின் எதிர்ப்பின் மத்தியிலும் நிறைவேற்றப்பட்டு விட்டது.

அப்போது தான், இலங்கையில் உள்ள இந்தியர் சமுதாயம் முன் எப்போதும் இல்லாதவாறு பேரதிர்ச்சி அடைந்தது. இனி என்ன செய்வது என்று எல்லோரும் ஆங்காங்கே கூடி கூட்டாகவும் தனியாகவும் ஆலோசித்தார்கள்.

இலங்கை வாழ் இந்தியருக்கு இருந்த ஒரே ஆதாரம் இந்திய தேசிய காங்கிரசும், அதன் தார்மீகத் தலைவரான காந்தி மகாத்மாவும் தான்.

இலங்கையில் இந்தியர்களுக்கு ஏற்பட்டு விட்ட இந்த அதோகதியை இங்குள்ள இந்தியர் சங்கங்கள் எல்லாம் காந்தி ஜீக்கு அறிவித்தன. இந்திய தேசிய காங்கிரஸ் ஸ்தாபனத்தின் கவனத்துக்கும் கொண்டு வந்தன. இந்த வகையில் எஸ்.பி. வைத்திலிங்கமும், ஐ.எக்ஸ்.பெரேராவும் காந்திஜீயிடம் முறையீடு செய்தவர்களின் முதன்மையானவர்கள் ஆவர்.

கருணாமூர்த்தியான காந்தி மகாத்மா உடனே செயல்பட ஆரம்பித்தார். இலங்கை அரசுடன் பேசி ஒரு நல்ல முடிவினைக் கண்டு வரும் படி தமது அபிமானத்துக்கு உரிய ஜவாஹர்லால் நேருவை விசேஷ தூதுவராக இலங்கைக்கு அனுப்பி வைத்தார். அதே வேளையில் இந்திய தேசிய காங்கிரஸூம் தமது ஆட்சேபனையை இலங்கை அரசுக்கு ஒரு தஸ்தாவேஜூ மூலம் தெரிவித்தது.

இதற்கிடையில், அரசாங்க காரியாலயங்களில் வேலை செய்யும் இந்தியர்களை விரட்டியடியுங்கள் என்று காரமாக எழுதப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் குணசிங்காவின் நிறுவனங்களால் எங்கும் விநியோகிக்கப்பட்டன. கொழும்பு நகரத்திலும், அரசாங்க காரியாலயங்களிலும் ஒரு விதமான 'டென்ஷன் நிலை' உருவாகிக் கொண்டு வந்தது.

அதே வேளையில், தாம் இலங்கைக்கு விஜயம் செய்து பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்க முடியும் என்று நம்பிக்கை தெரிவித்து நேரு புதுடில்லி பத்திரிகைகளில் ஓர் அறிக்கையை வெளியிட்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1939ஆம் ஆண்டு ஜுலை மாதம் நடுப்பகுதியில் பண்டிட் ஜவாஹர்லால் நேரு இலங்கை வந்து சேர்ந்தார். இலங்கை மந்திரிகளுடன் பேச்சு வார்த்தைகளை நடத்தினர்.

அந்த வாரம் முழுவதும் நேரு கொழும்பில் உள்ள இந்தியர்களின் அமைப்புகளுடனும் சங்கங்களுடனும் பேச்சு வார்த்தைகள் நடத்தினர். இந்த சங்கங்களிடையே ஒற்றுமை இல்லை என்பதை அவர் கண்டுணர்ந்தார்.

நாட்டுக் கோட்டை செட்டியார் சங்கம் நேருவுக்கு ஒரு வரவேற்பளித்தது. அந்த வரவேற்பில், இன்றைய நெருக்கடியை தீர்ப்பதற்கும் வெல்வதற்கும் ஒரே வழி தான் உண்டு. அதாவது இலங்கையில் உள்ள இந்தியர் அனைவரும் ஒரு கொடியின் கீழ் ஒன்று பட வேண்டும். இந்திய தேசிய காங்கிரஸ் போன்ற ஒரு தேசிய அமைப்பு இலங்கையிலும் உருவாக வேண்டும் என்ற கருத்து வெளியிடப்பட்டது.

அரசாங்க சபை அங்கத்தவர்கள், மக்கள் தலைவர்கள், மந்திரிகள், வர்த்தகர்கள், சங்கங்கள், தனிப்பட்டவர்கள், பத்திரிகைப் பிரதிநிதிகள் எல்லாரையும் சந்தித்து உரையாடி, பேச்சுவார்த்தைகள் நடத்தி, ஆலோசனை மாநாடுகள் கூட்டி, பிரச்சினையை அலசி ஆராய்ந்த பின்னர் நேரு ஒரு முடிவுக்கு வந்தார்.

1. கொழும்பில் பிளவுபட்டுக்கிடக்கும் இந்தியர்கள் ஒன்று படவேண்டும்.
2. கொழும்பில் உள்ள பல்வேறு சங்கங்களும் ஒன்றிணைந்து ஒரே ஸ்தாபன்மாக அமைய வேண்டும்.
3. எல்லா ஸ்தாபனங்களும் ஒன்று சேர்ந்து, தங்கள் உரிமைகளையும், தேவைகளையும் ஒரே குரலில் ஒலிக்க வேண்டும்.

இந்த மூன்று அம்சங்கள் மட்டும் நிறைவேறினல் போதாது. இலங்கையில் வாழும் இந்தியர்களின் மிகப் பெரும் சக்தியாக விளங்குவது தோட்டத் தொழிலாளர்களாக வாழும் இந்திய மக்கள்.

அவர்களை இதுகாறும் கொழும்பில் வாழுகின்ற எவரும் ஒரு பெரும் சக்தியாக மதித்து தம்மோடு சேர்ந்துக் கொண்டதில்லை. இணைத்துக் கொண்டதில்லை. அவர்களுடைய உழைப்பிலே தான் இலங்கை அரசாங்கத்தின் பொருளாதாரம் தங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருக்கிறது. எனவே, உத்தேசிக்கப்படும் ஒருமித்த அமைப்பில் தோட்டத்தொழிலாளரும் ஒரு முக்கிய அங்கமாக சேர்த்துக் கொள்ளப்படவேண்டும்.

நேரு தமக்குள் ஏற்படுத்திக் கொண்ட தீர்க்கமான முடிவு இது தான். இதை வைத்துக் கொண்டு ஒவ்வொரு அம்சமாக நிறைவேற்ற முற்பட்டார்.

இலங்கை இந்திய தலைவர்களையும், சங்கங்களையும் முதலில் ஒன்று சேர்க்கும் முயற்சி ஆரம்பித்தது. இது பெரும் பிரயத்தனமாக இருந்தது. தோட்டத் தொழிலாளரையும் தம்முடன் இணைத்துக் கொள்வதில் மேல் மட்டத் தலைவர்கள் முதலில் தயக்கம் காட்டினார்கள். அவர்களுடன் வெகுநேரமாக விவாதித்து சரிப்படுத்த வேண்டியிருந்தது. நேரு ஒரு கட்டத்தில் நம்பிக்கை இழந்து "அப்படியே விட்டுவிட்டுப் போய் விடலாமா?" என்று கூடச் சிந்தித்தாராம்!

கடைசியில் நேருவின் முயற்சி வென்றது.

1939 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 24 ஆம் நாள் காலையில் இருந்து பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. இணக்கம் காணப்படவில்லை. மதிய போசனத்தின் பின் இரவு வரை பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. முடிவு கிடைக்கவில்லை. இரவு சாப்பாட்டின் பின்னர் 9.00 மணி முதல் 10.00 மணி வரை பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. சங்கங்களின் பிரதிநிதிகள் ஒன்று சேர்வதற்கு நிபந்தனைகளும் மாற்று நிபந்தனைகளும் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

புதிதாக ஆரம்பிக்கப்படும் ஸ்தாபனத்துக்கு என்ன பெயர் சூட்டுவது என்பதிலும் எத்தனையோ கருத்துக்கள் நிலவின.

ஈற்றில் நேரு களைப்படைந்து "நான் போய் சற்று கண்ணயர்கிறேன். நீங்கள் சமாதானத்துக்கு வந்தால் என்னை எழுப்புங்கள். அல்லது அப்படியே கலைந்து போய்விடுங்கள்" என்று சற்று கோபமாகச் சொல்லிவிட்டு ஓய்வெடுக்கச் சென்று விட்டார்.

நள்ளிரவு 12.20 மணிக்கு அவரைத் தட்டி எழுப்பினார்கள். நேரு ஓய்வெடுக்கப் போகு முன்னர் ஒரு "பர்முலா" வைச் சொல்லியிருந்தார். ஸ்தாபனத்துக்கு வைக்க வேண்டிய பெயரையும் அவரே குறிப்பிட்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேருவின் ஆலோசனைகளை எதுவித மாற்றமும் இன்றி அனைவரும் ஏற்றுக் கொள்வதாக சம்மதம் தெரிவித்தனர்.

1. இலங்கை இந்திய மத்திய சங்கத்தையும், இலங்கை இந்திய தேசிய காங்கிரஸையும் கலைத்து விடுவது.
2. இந்த இரண்டு அமைப்புகளிலுமிருந்து 7 + 7 அங்கத்தவர்களை அந்த அந்த அமைப்பு நியமிப்பது. அத்தோடு ஒரு தலைவர், இரண்டு இணைக் காரிய தரிசிகள், ஒரு பொருளாளர் என்று நால்வரையும் சேர்ப்பது.
3. இந்த 18 உறுப்பினர்களும் சேர்ந்து வெளியில் உள்ள இதர இந்திய அமைப்புகளிலிருந்து 7 அங்கத்தவர்களை ஒருமித்த முடிவுடன் சேர்த்துக் கொள்வது.
4. இந்த 25 அங்கத்தவர்களும் தோற்றுவிக்கப்படவுள்ள புதிய ஸ்தாபனத்தின் நிர்வாக சபையாகச் செயல் படுவது.
5. புதிதாகத் தோற்றுவிக்கப்படும் ஸ்தாபனத்துக்கு இலங்கை இந்திய காங்கிரஸ் என்று பெயரிடுவது.

இந்த ஏகோபித்த முடிவு ஏற்படும்போது அதிகாலை 1.20 மணியாக இருந்தது.

கூடியிருந்த பிரதிநிதிகள் அனைவரும் இந்த ஏகோபித்த முடிவில் கையொப்பமிட்டனர். பண்டிட் ஜவாஹர்லால்நேரு உறுதிப்படுத்துபவராக உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார். அப்போது மணி அதிகாலை 1.40 ஆக இருந்தது.

**இலங்கை இந்திய காங்கிரஸ் உதயமாயிற்று. அன்று 25ஆம் திகதி அதிகாலை, ஜுலை மாதம், 1939ஆம் ஆண்டாக இருந்தது.**

இ.இ.காவின் இலட்சியங்களையும் செயல் திட்டங்களை யும் நேருஜீயே வகுத்துக் கொடுத்தார். அதன் பிரகாரம் நாட்டின் ஒவ்வொரு ஜில்லாவிலும் (மாவட்டத்திலும்)இலங்கை இந்திய காங்கிரஸின் கிளைகளை அமைத்து செயல்பட வேண்டும் என்பதும், 1939 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குள்ளாக முதலாவது அங்குரார்ப்பண மாநாட்டை நடத்த வேண்டும் என்பதும் விதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பொது மனிதராக வி.ஆர்.எம்.வி.ஏ.லக்ஷ்மணன் செட்டியார் இலங்கை இந்திய காங்கிரஸின் முதலாவது தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவர் அப்போது நாட்டுக்கோட்டை செட்டியார் சங்கத்தின் தலைவராக விளங்கியவராவர். அத்தோடு அவர் இந்தியாவில் செட்டிநாட்டுப் பகுதியில் உள்ள புதுக் கோட்டை என்னும் இடத்திற்கு சட்ட சபையில் ஓர் உறுப்பினராகவும் இருந்தார். அவருடைய இந்த அந்தஸ்துகள் எல்லாம் அவரை இ.இ.காவின் முதலாவது தலைவராகத் தேர்ந்தெடுப்பதற்கு உதவி புரிந்தன.

அவர் இலங்கை இந்திய காங்கிரஸ் தலைவராக இருக்கும் போதே 1939 ஆகஸ்ட் மாதத்தில், நான்காவது முறையாக புதுக் கோட்டை சட்டசபைத் தொகுதிக்கு மீண்டும் ஒரு மெம்பராக தெரிவு செய்யப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

எந்தப் புதுக்கோட்டை ராஜ்யத்திலிருந்து தொண்டமானுடைய மூதாதையர்கள் பட்டமங்கலம் கிராமத்துக்கு வந்து சேர்ந்தார்களோ, அந்தப் புதுக்கோட்டை வாசியான லக்ஷ்மணன் செட்டியார்தான் இலங்கை இந்திய காங்கிரஸின் முதலாவது தலைவராக அமர்த்தப்பட்டார்.

நேரு இலங்கையை விட்டுப் போகும் போது ஒரு பிரியா விடைச் செய்தியையும் வெளியிட்டுவிட்டுச் சென்றார். அந்த செய்தியில் இலங்கை வாழ் இந்திய மக்களின் சகல நலவுரிமைகளுக்காகவும், குறிப்பாகத் தோட்டத் தொழிலாளரின் மேம்பாட்டுக்காகவும் இலங்கை இந்திய காங்கிரஸ் பாடுபடும், அவசியமானால் போராட்டங்களும் நடத்தும் என்று கூறிவிட்டுச் சென்றார்.

நேருவின் கூற்றையும் உறுதிமொழிகளையும் இன்று வரை கடைப்பிடித்து, அவரால் தோற்றுவிக்கப்பட்ட ஸ்தாபனத்தை இன்று வரை கட்டிக்காத்து, வளர்த்துவரும் தலைவர் ஒருவர் உண்டு என்றால் அவர் தொண்டமான் தான் என்பதை யாரும் மறுக்க முடியாது.

இலங்கை இந்திய காங்கிரஸ் துரிதமாகச் செயல்பட ஆரம்பித்தது. ஜில்லாக்களில் (மாவட்டங்களில்) ஜில்லாக் கமிட்டிகள் அமைக்கப்பட்டன. பதுளை, ஹட்டன், பலாங்கொடை, நுவரேலியா, மாத்தளை கம்பளை ஆகிய இடங்களில் எல்லாம் ஜில்லாக் கமிட்டிகள் தோன்றின. கம்பளை ஜில்லாகமிட்டி 1939 ஆகஸ்ட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்பட்டது. அதன் முதலாவது கூட்டத்தில் சௌமிய மூர்த்தி தொண்டமான் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதற்கு இடையில் இலங்கை அரசாங்கத்தின் போக்கில் கொஞ்சம் கூட மனமாற்றம் ஏற்படவில்லை. இந்தியரை நாடு கடத்தும் பணியில் பூர்வாங்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. இலங்கை இந்திய காங்கிரஸின் பிரசாரம் மும்முரமாக நடைபெற்றது. சிங்கள மக்களிடையே ஏ.ஈ. குணசிங்காவின் செல்வாக்கு அதிகரித்ததால் அவர் சிங்கள மகாசபையின் காரிய தரிசியாக நியமிக்கப்பட்டார். இலங்கை இந்தியர் நாடு கடத்துவது பற்றிப் பேசுவதற்காக ஒரு தூதுக்குழுவை இங்கிலாந்துக்கு அனுப்பவேண்டும் என்று யாழ்ப்பாணத்தில் ஒரு பொதுக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆயினும் 800 இந்தியர்களுக்கு கொழும்பில் வேலை நீக்க அறிவித்தல் கொடுக்கப்பட்டது. இந்தியர்களுக்கு வேலை கொடுக்காதே என்று காலி நகர சபை தீர்மானம் நிறைவேற்றியது. இந்தியர்களுக்கு புதிய நியமனங்கள் வழங்கக் கூடாது என்று இலங்கை அரசாங்கம் சகல திணைக்களங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பி வைத்தது.

இலங்கை சர்க்காரின் இந்தியர் நாடு கடத்தும் திட்டம் நியாயமற்றது என்று இந்திய தேசிய காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றியது. இந்த தீர்மானத்துக்கு இலங்கை இந்திய காங்கிரஸ் ஆதரவு தெரிவித்து இலங்கையிலும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.

இந்த சமயம் பார்த்து இந்திய அரசாங்கம் ஒரு எதிர் நடவடிக்கையை அறிவித்தது. அதாவது இனிமேல் இந்தியர்கள் தோட்டத் தொழிலாளராக இலங்கைக்கு செல்ல முடியாது என்று தடை விதித்தது.

இந்த தடை வெள்ளைக்காரத் தோட்ட முதலாளிகளை அதிர்ச்சி அடையச் செய்தது. இந்தியத் தொழிலாளர் தொடர்ந்தும் வராவிட்டால் தங்கள் தோட்டங்கள் பாதிக்கப்படும் என அவர்கள் அஞ்சினார்கள். ஐரோப்பிய சமூகத்தின் நல வுரிமைகளைக் கவனிப்பதற்காக அரசாங்க சபையில் நியமிக்கப்பட்டிருந்த வெள்ளைக்கார உறுப்பினர் ஒருவர் பேசுகையில் "இந்தியாவின் பகை என்றாவது ஒரு நாள் இலங்கைக்கு ஆபத்தை விளைவிக்கும்" என்று எச்சரித்தார்.

நேருவின் முன்பாகச் செய்து கொண்ட ஏற்பாட்டின் படி இலங்கை இந்திய காங்கிரஸ் அந்த வருடம் செப்டம்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதத்துக்குள் அங்குரார்ப்பண மாநாட்டை நடத்தியிருக்க வேண்டும். ஆனால், 1939ஆம் வருடமும் முடிந்து, 1940ஆம் வருடத்தில் ஜுலை மாதமும் வந்து விட்டது. இ.இ.கா. ஆரம்பித்து வருடம் ஒன்றும் கழிந்து விட்டது. ஆயினும், மாநாட்டுக்கான ஏற்பாடுகளைச் செய்ய கொழும்பிலிருந்த காரியக் கமிட்டி தவறிவிட்டது.

முதல் மாநாட்டை எப்படியும் மலைநாட்டுப் பகுதியில் தான் நடத்த வேண்டும் என்பது பலருடைய விருப்பம்.

இதற்கு இணங்க பல ஜில்லா கமிட்டிகள் கேட்கப் பட்டன. அவை எல்லாம் தயக்கம் காட்டிப் பின்வாங்கின அதற்கு காரணமும் இருந்தது. ஒரு மாநாடு என்றால் பல லட்சம் ரூபா பணம் தேவைப்படும் அல்லவா? அன்றைய நிலையில், காங்கிரஸ் ஜில்லா கமிட்டிகளின் பண நிலை அவ் வளவு செழிப்பாக இருக்க வில்லை. தொழிலாளரிடமிருந்து மாதாமாதம் பணம் வசூலிக்கும் முறை அப்போது சீராகச் செயல்படவில்லை. செலவழிப்பதற்கு போதிய பணம் இல்லாத காரணத்தால் தான் பல ஜில்லாக் கமிட்டிகள் தட்டிக்கழித்தன, கையை விரித்தன.

இந்த நிலையில் தொண்டமானைத் தலைவராகக் கொண்ட கம்பளை ஜில்லா கமிட்டி மாநாட்டைத் தங்களால் நடத்த முடியும் என்று முன்வந்தது. இப்படியான ஒரு பொறுப்பும் துணிச்சலும் நிறைந்த முடிவைச் செய்வதற்கு தொண்டமான் பெரும் காரணஸ்தராகவிருந்தார். என்பது பலருக்கு வெளியே தெரியாது. ஏற்படும் செலவை முடிந்த வரை வசூல் செய்வது என்று கமிட்டியினர் தீர்மானித்தார்கள். மேலதிக செலவுக்கான பணம் எல்லாவற்றையும் தாம் தனது சொந்தப் பணத்திலிருந்து தருவதாக தொண்டமான் ஒப்புக் கொண்டிருந்தார். அந்த அளவுக்கு அவர் தந்தை அந்நேரம் செல்வந்தராக இருந்தார்.

கம்பளை ஜில்லா கமிட்டியின் அறிவித்தலை மத்திய கமிட்டியினர் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார்கள். மாநாட்டைப் பொறுப்பு ஏற்று நடத்த வரவேற்பு காரிய சபை ஒன்று அமைக்கப்பட்டது. தொண்டமான் வரவேற்புகாரிய சபையின் தலைவராக ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார். மிகத்திறமை சாலிகளாக இளைஞர்கள் பலர் தொண்டமானுக்கு பக்கபலமாகப் பணிபுரிய முன்வந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது அமைக்கப்பட்ட வரவேற்பு சபையில் சௌமியமூர்த்தி தொண்டமான் தலைவராகவும், கே.இராஜலிங்கம் செயலாளராகவும், எஸ்.சொக்கலிங்கம் செட்டியார் தனாதிகாரியாகவும், மற்றும் டி.ராமானுஜம், எஸ்.சோமசுந்தரம், எஸ்.ஜி.ஸாம்சன், வி.சாத்தப்ப செட்டியார், ஜே.சாமுவேல், வி.அண்ணாமலை, எம்.ராமசுப்பிரமணியன், எஸ்.கே.ஆர்.ராமலிங்கம், எஸ்.சார்லஸ் கே.சுப்பையா, வி.முருகப்பா ஆகியோர் உறுப்பினர்களாகவும் அங்கம் வகித்தனர்.

இவர்களில் பலர் தொடர்ந்தும் தொண்டமானின் தோழர்களாகவும், ஆதரவாளர்களாகவும், தளபதிகளாகவும் சகாக்களாகவும் பணியாற்றினார்கள். என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

வரவேற்புச் சபை அமைக்கப்பட்டதும் இலங்கை இந்திய காங்கிரஸ் முதலாவது அங்குரார்ப்பண மாநாட்டை கம்பளை நகரில் நடத்துவது என்றும் அதற்கான நாள் 1940 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7 ஆம், 8 ஆம் திகதி என்றும் நிர்ணயிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15

## கம்பளை மாநாட்டில் கன்னிச் சொற்பொழிவு

அன்று கம்பளை மாநகர் கண்கொள்ளாக் காட்சி அளித்தது.

1940 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8 ஆம் திகதி.

சரித்திரப் பின்னணியிலும், கலை வளர்ச்சியிலும் புகழ் பெற்று விளங்கிய நகரம் கம்பளை நகரம். அது இலங்கையின் மத்திய மாகாணத்தின் தலைநகரான கண்டிய நகரத்திற்கு அணித்தாக உள்ளது.

முடி அரசர்கள் பலர் கம்பளை நகரைத் தலைநகராகக் கொண்டு அரசு புரிந்திருக்கின்றனர். இந்நகரம் கங்காகிரிபுர என்றும் அழைக்கப்பட்டது. இந்நகரத்திலே பௌத்த மக்கள் ஏற்றிப் போற்றும் லங்காதிலக நியன் கம்பாய என்ற புனித தேவாலயம் உளது.

இத்தகு பெருமை வாய்ந்த கம்பளை நகரத்தில் தான் இலங்கை இந்திய காங்கிரஸ் அங்குரார்ப்பண மாநாடு நடைபெற வேண்டுமென்ற நியதி ஏற்பட்டது தெய்வ சங்கல்ப மாகும்.

கம்பளையில் மாநாட்டு அரங்கம் "நேரு நகர்" என்ற பெயரில் அமைக்கப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வரங்கம் மூவர்ணக் கொடிகளாலும், தென்னங்கீற்றுத் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

அக்கம் பக்கத்து தோட்டங்களிலும் தூரந் தொலைவில் உள்ள நகரங்களிலும் இருந்து பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் மிகுந்த உற்சாகத்துடன் வந்து கூடியிருந்தார்கள். ஆண்களும் பெண்களும் வாலிபர்களும் நடுவயதினரும் வெள்ளம் போல் நிறைந்திருந்தார்கள். தொழிலாளர்களின் அன்பைப் பெற்ற தலைவர்களும் வந்திருந்தார்கள்.

*வெள்ளம் போல் தமிழர் கூட்டம்*
*வீரங்கொள் கூட்டம்! அன்னார்*
*உள்ளத்தால் ஒருவரே மற்*
*றுடலினால் பலராய்க் காண்பார்*
*கள்ளத்தால் நெருங்கொணுதே;*
*என வையம் கலங்கக் கண்டு*
*துள்ளும் நாள் எந்நாள்; உள்ளம்*
*சொக்கும் நாள் எந்த நாளோ?*

என்று புரட்சிக் கவி பாரதிதாசன் கேட்ட அந்த நாள் 1940 செப்டம்பர் 8 ஆம் நாள் தானே என்று எண்ணும்படியாக கம்பளை விழாக் கோலம் பூண்டு விளங்கியது.

பாரத மணித்திரு நாட்டின் முடிசூடா மன்னராக விளங்கிய பண்டிட் ஜவாஹர்லால் நேருவால் 1939ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட இலங்கை இந்திய காங்கிரஸின் முதலாவது மாநாடு அதே வருடம் செப்டெம்பர் மாதத்திற்குள் நடைபெற வேண்டும் என்பதுதான் ஒப்புக் கொள்ளப்பட்ட ஏற்பாடாகும். எனினும் அந்த மாநாடு ஒரு வருடம் கழித்து அன்றுதான் நடைபெற விருந்தது. தாமதமாகிக் கொண்டுவந்த மாநாட்டை மேலும் தாமதமாகிவிடாதபடி நடத்துவதற்கு காலாக இருந்தவர் தொண்டமான் தான்.

மாநாடு நடத்தும் பொறுப்பை தொண்டமானைத் தலைவராகக் கொண்ட கம்பளை ஜில்லாக் கமிட்டி ஏற்றுக்கொண்டது. அதற்கென அமைக்கப்பட்ட வரவேற்புக் கமிட்டியின் தலைவராகவும் அப்போது துடிப்பு மிக்க இளைஞராக விளங்கிய சௌமிய மூர்த்தி தொண்டமானே தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்தியாவிலிருந்து இருபெரும் தலைவர்கள் அழைக்கப்பட்டார்கள். ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர் சென்னை மாநிலத்தின் முன்னாள் தொழிலமைச்சரான வி.வி.கிரி. மற்றவர் இந்திய மத்திய சட்டசபை உறுப்பினரான எஸ்.சத்தியமூர்த்தி. வி.வி.கிரி. பின்னர் ஒரு சமயம் இலங்கையில் இந்திய தூதுவராக விளங்கியவர் என்பதும், அதன் பின்னர் சுதந்திர இந்தியாவில் ஜனாதிபதியாகப் பதவியேற்று பணி புரிந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

மாநாட்டில் வரவேற்பு சொற்பொழிவை தொண்டமான் தான் நிகழ்த்த வேண்டும் என்று அனைவரும் ஒரு முகமாக வேண்டிக்கொண்டார்கள்.

ஆனால் தொண்டமான் தயங்கினார்!

அதுவரை தொண்டமான் தோட்டங்களில் நடைபெற்ற சிறிய சிறிய பிரச்சாரக் கூட்டங்களில் தான் பேசியிருக்கிறார். பெரிய சபைகளில் பெரிய பொதுக்கூட்டங்களில், பெரிய மாநாடுகளில் பேசிய பயிற்சியோ, பழக்கமோ அவருக்கு இருக்கவில்லை.

அதுவும், இந்தியாவிலிருந்து வரும் இரண்டு பெரிய ஜாம்பவான்களுக்கு முன்னால் சொற்பெருக்காற்றுவது என்றால் சாமானியமான காரியமா?

அப்போது இந்திய தேசிய காங்கிரஸ் மேடையில் மிகப் பிரபலமான ஒரு பேச்சாளராக விளங்கினார் சத்தியமூர்த்தி. அவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் ஆற்றொழுக்காகப் பேச வல்ல மேதாவி. சட்டசபைகளிலே பிரிட்டிஷ் அரசாங்கத்தை கிழி கிழியென கிழித்துப் பேசுவதில் 'அப்ளாஸ்' வாங்கிய பேச்சாளர் அவர்.

எல்லோரும் வற்புறுத்துகிறார்கள். இந்த நிலையில் என்ன செய்வதென்று தொண்டமானுக்கு ஒன்றும் புரியவில்லை. தமது அன்பர்களிடமும், நண்பர்களிடமும் ஓடிச் சென்றார். கண்டியில் இருந்த சில பெரிய மனிதர்களையும் சந்தித்து ஆலோசனை கேட்டார். "நான் என்ன செய்யட்டும்? பேசுவதா? விடுவதா?" இதுவே அவர் வினாவாக இருந்தது.

அவருக்கு ஆலோசனை கூறிய சகலரும் ஒரே விசயத்தை தான் சொன்னார்கள். "இப்படியான அரிதான சந்தர்ப்பம் யாருக்கும் எளிதில் கிடைக்கவில்லை. அதிஷ்டவசத்தால் இது தங்களுக்கு தரப்படுகின்றது. விட்டு விடாதீர்கள் ஏற்றுக்கொள்ளுங்கள்" என்பது தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சௌமியமூர்த்தி தொண்டமான் பெரும் தயக்கத்தோடும், பெரும் அடக்கத்தோடும், வலிந்து வரவழைக்கப்பட்ட துணிச்சலோடும் தான் இந்தப் பெருங்காரியத்தை அன்று ஏற்றுக் கொண்டார்.

எதிர்காலத்தில் இலங்கை இந்திய காங்கிரஸையும் பின்னர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸையும் ஏற்ற வழியில் சரியான மார்க்கத்தில் செலுத்த வேண்டிய திடமிக்க மாலுமி இவர் தான் என்பதை அன்று கம்பளை மாநாடே நிர்ணயித்தது. அதனால் தான் 'தெய்வ சங்கல்பம்' என்று முன்னர் குறிப்பிட வேண்டியதாயிற்று.

இலங்கை இந்திய காங்கிரஸ் என்ற தேரின் பார்த்த சாரதி நேரு என்றால், அதில் கம்பீரமாக ஏறிநின்று பாணங்கள் தொடுத்து வெற்றிகளை ஈட்டிய பார்த்தனாகத் தம்மை ஆக்கிக் கொண்டார் தொண்டமான்.

நேரு தோற்றுவித்த இலங்கை இந்திய காங்கிரஸின் முதலாவது மாநாட்டில் முதலாவது பேச்சாளராக மேடையேறிய முதலாவது தலைவர் தொண்டமான் தான் என்று சரித்திரத்தில் இடம் பெற்று விட்டார் தொண்டமான்.

> "அன்று நான் தயக்கத்துடனும் நடுக்கத்துடனும் தான் பேச ஆரம்பித்தேன். ஆயினும் பெருந்தலைவர்கள் முன்பாகவும், பெருங் கூட்டத்தின் முன்பாகவும் நான் பேசி முடித்ததும் எனக்கு ஒரு தெம்பும், பலமும், துணிவும் ஏற்படலாயின. அதுகாலவரை என்னுள்ளே அடங்கிக் கிடந்த அரசியல் உத்வேகம் ஒன்று, இன்று தானாகவே வெளிப்படுவதை நான் உணர்ந்தேன் அன்று முதல் நான் எந்த சந்தர்ப்பத்திலும், எந்தத் தலைவர்கள் முன்னும் என்னைச் சரிநிகர் சமானமானவனாக ஏற்படுத்திக்கொண்டு எடுத்த காரியத்தைத் தொடுத்து முடிக்கும் ஆற்றலைப் பெற்றேன்."

என்று தொண்டமானே ஒரு சந்தர்ப்பத்தில் கூறியிருக்கிறார்.

அன்று தொண்டமான் ஆற்றிய முதல் சொற்பொழிவு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்த சொற்பொழிவிலே இவர் பல அரிய கருத்துக்களை மட்டுமன்றி தீர்க்க தரிசனமான வாக்கியங்கள் சிலவற்றையும் கூடச் சொல்லியிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் பேச்சின் முக்கிய பகுதிகளை இங்கு பொறித்து வைப்பது அவசியமாகும்.

தொண்டமான் ஆற்றிய வரவேற்புரை:-

இம்மகாநாட்டை நடாத்தும் பொறுப்பு மகத்தான தென்பதை யாமறிந்திருந்தும், அதனை உவகையுடன் ஏற்றுக் கொண்டதற்கு காரணம் உண்டு. காங்கிரஸ் மகாசபை அமைப்பைத் தயாரித்து 1939 செப்டம்பர் மாதத்திற்குள்ளாக அங்குரார்ப்பண மகாநாட்டை நடத்த வரையறுக்கப்பட்டிருந்தும் முடிவில்லாமல் தவணை போட்டுக்கொண்டே கொழும்பில் நிறுவிய கமிட்டியினர் சென்று கொண்டிருந்தது எமக்கு பெருங்கவலை அளித்துக் கொண்டிருந்தது.

காங்கிரஸ் மகாசபை பொதுமக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமான சபையாக இருக்க வேண்டுமாயின், அந்த ஸ்தாபனத்தின் நிர்வாகம் பொதுமக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டே நிர்வகிக்கப்பட்டு வர வேண்டும்; அவ்விதமான நிலை ஏற்படுவதற்கு அங்குரார்ப்பண மகாநாட்டை ஒரு நிமிட நேரமாவது தாமதிப்பது விரும்பத் தகுந்ததல்ல என்பது வெள்ளிடை மலையாகும்.

★

இந்தியாவிற்கும் , இலங்கைக்கும் ஏற்பட்ட தொடர்பு இன்று - நேற்றையதல்ல. இது சரித்திர காலத்திற்கு முந்தியது. அரசியல், பொருளாதாரம், கலை இவைகளால் ஏற்பட்ட தொடர்பு மட்டுமல்ல. நம்மவர்களின் ரத்தமும், தோலும், சதையும் இலங்கையர்களின் ரத்தமும் தோலும், சதையும் பிரிக்க முடியாத ஒன்றேயாகும் எனப் பண்டித ஜவஹர்லால் நேரு கூறியது உண்மையிலும் உண்மையாகும்.

இலங்கையர்களுக்கும், இந்தியர்களுக்குமிடையில் சமீப காலம்வரை அந்நியயோன்னியமான தொடர்பும், நல்லெண்ணமும், மற்றும் விரும்பத் தகுந்த சகல அம்சங்களும் நிலைத்திருந்தன. நெடுக வெகு அந்நியோன்னியமாக இலங்கையர்களும் இந்தியர்களும் வாழ்ந்து வந்திருக்கின்றனர். இன்னும் பல இந்தியக் குடும்பங்கள் சிங்களக் குடும்பங்களோடு ஒன்றி வாழ்ந்து வருதல் கண்கூடு. இது வாழையடிவாழையாக வந்த தொடர்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய நெருங்கிய தொடர்பின் காரணத்தால், இந்தியர்கள் தனித்து தமது உரிமைகளைப் பாதுகாக்க வேண்டு மென்று சமீப காலம் வரை சிந்திக்கவுமில்லை. உண்மையைக் கூறுமிடத்து சமீப காலம் வரை அது தேவைப்படவுமில்லை. பெருந்தொகையான அங்கத்தவர்களைக் கொண்ட அல்லது இந்தியப் பொதுமக்களின் ஆதரவைக் கொண்ட பொதுஸ்தா பனம் இதுவரை ஏற்படாததற்குக் காரணம் இதுவேயாகும்.

இன்னும் கூறப்புகின் சமீப காலம் வரை அநேக இந்தியர்கள் இலங்கைத் தேசிய காங்கிரஸில் சாதாரண அங்கம் வகித்தது ஒரு புறமிருக்க அதன் நிர்வாக சபையிலும் அங்கம் வகித்திருக்கிறார்கள். வருடந்தோறும் இந்தியர் சங்கங் கள் இலங்கைத் தேசிய காங்கிரஸ் மாநாடுகளுக்கு டெலிக் கேட்டுகளும் அனுப்பிவந்ததுண்டு. உண்மையில் இந்தியர்கள் தம்மை இலங்கையர்களாகவே கருதி வந்துள்ளனர். தம்மை அவ்வாறே நடத்துவார்கள் எனவும் எதிர்பார்த்திருந்தனர்.

★

டொனமூர் கமிஷனர்கள் சர்வஜன வாக்குரிமை அளித் ததின் காரணமாக இலங்கை ஜன சமுதாயத்தினிடையே அரசியல் எழுச்சி ஏற்பட்டது. ஆனால் ஜன சமுதாயத்தின் தலைவர்கள் அதனை சரியான வழியில் செலுத்தத் தவறிவிட்டார்கள். இப்புதிய உத்வேகத்தை உருப்படியான பிரச்சனைகளை தீர்ப்ப தற்குப் பயன்படுத்திக் கொள்ளுவதற்குப் பதிலாக, வகுப்புத் துவேஷத்தை மூட்டும் வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டனர். அவர்களுக்கு இது மிகவும் சுலபமாக இருந்தது.

விவசாயத்தில் ஈடுபட்டுள்ள இலங்கைத் தொழிலாளர் கள் வருடத்தில் பாதிக்காலம் வேலையில்லாமலிருப்பதற்குக் காரணம் இந்தியர்களே எனப் பிரசாரம் செய்யத் தலைப்பட் டனர். ஆனால் இந்தியர்கள் செய்யக் கூடிய வேலைகளை செய்யத் தகுந்த இலங்கைத் தொழிலாளர்கள் அகப்படாத நிலைமையை தெளிவு படுத்தாது விட்டனர்.

போலிக் கல்வி பெற்றதன் காரணமாக உடலை வளைத்து உழைப்பது கௌரவக்குறைவு என்னும் மனப்பான்மை ஏற்பட் டிருந்ததின் பயனாக வேலையற்றிருந்தோரை, நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபடும் இந்தியனைக் கண்டு பொறாமையும் மாச்சரியமும் கொள்ளத் தூண்டினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாட்டின் நிலப்பரப்பில் ஐந்தில் மூன்று பாகமே இதுவரை பண்படுத்தப்பட்டிருக்கிறது. இன்னும் ஐந்தில் இரண்டு பகுதியை பயன்படுத்தும் முறையில் கவனத்தைச் செலுத்தினல் வேலையில்லாத் திண்டாட்டத்தை அறவே ஒழித்து விடலாம். தினமும் நசிந்து கொண்டு வரும் குடிசைத் தொழிலையேனும் புனருத்தாரணம் செய்ய முயற்சித்தார்களில்லை. பிரசங்க மேடைகளிலேறி சாங்கோபாங்கமாக இலங்கையின் சாபத்தீடுகளுக்கெல்லாம் இந்தியனே காரணமெனக் கூறுவதே இலேசான உபாயமாகக் கொண்டார்கள்.

★

சென்ற பத்தாண்டுகளுக்குள்ளாக வகுப்பு பாகுபாட்டை வலியுறுத்தும் அநேக சட்டங்களை இந்தியர்களுக்கு விரோதமாக ஒன்றன்பின் ஒன்ருய் சரமாரியாகத் தொடுதது விட்டார்கள். இப்பாகுபாடு நிறைந்த சட்டங்கள் சட்டப்புத்தகங்களிலே நுழைய தலைப்பட்டது வருந்தத்தக்கதாகும்.

இதனல் ஏற்பட்ட பலன் தான் என்ன? இவ்வித துவேஷ பிரசாரத்திற்கு காரணஸ்தர்களாயிருந்தவர்களுக்கு நிறைந்த விளம்பரம் கிடைத்தது. பிரிக்கமுடியாதபடி இணைக்கப்பட்டிருந்த இரு நாடுகளுக்கிடையே பெருத்த மனக்கசப்பை ஏற்படுத்தி, அத்தியந்த நட்பை பாதித்ததே கண்ட பலன்.

★

இந்தியத் துவேஷத்தினல் ஒன்றன் பின் ஒன்ருக அடுத்தடுத்து கையாளப்பட்ட முறைகள் இந்திய சமுதாயத்தினிடையே அச்சத்தை ஏற்படுத்தின. சீமைச்சாமிகளுக்கும், மே.த. கவர்னருக்கும் இம்முறைகளைப்பற்றி செய்த முறையீடுகளெல்லாம் அவலக்குரலாயின. இம்முறைகளை வளர விடாமல் தடுப்பதை விடுத்து, அம்முறைகளுக்கு தங்களது ஆசியைக் கொடுப்பது போல் தம் அங்கீகாரத்தை அரசாங்கத்தினர் அளித்தார்கள். இந்திய அரசாங்கமும் தம்மக்களுக்கிழைக்கப்படும் அநீதியை நீக்க சிரத்தைகாண்பிக்க வில்லை. அத்தருவாயில் இலங்கை வாழ் இந்திய சமூகம் உருவற்று சின்ன பின்னப்பட்டுக் கிடந்தது. ஆனல் இந்திய தேசிய காங்கிரஸ் மகா சபையின் முன் எவ்வளவோ அபாரமான உள்நாட்டு விஷயங்கள் தீர்த்து வைப்பதற்கு காத்துக் கிடந்தபோதிலும் இவ்விதமான சந்தர்ப்பத்தில் இலங்கை வாழ் இந்தியர்களைப்பற்றி இந்தியத் தேசிய காங்கிரஸ் மட்டுமே கவனஞ்செலுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியர்கள் எடுத்ததற்கெல்லாம் இந்திய அரசாங்கத்தையும் இந்திய ஸ்தாபனங்களையும் நாடுகிறார்கள் என்று குறைகூறப்படுகிறது. உண்மையில் இலங்கையின் க்ஷேமத்தில் அக்கறையுள்ளவர்கள் அவ்வாறு செய்தல் கூடாதெனவும் கூறப் படுகிறது.

அநீதிக்குமேல் அநீதி தொடர்ந்து இழைக்கப்படுகையில் ஒரு சிறுபான்மை சமூகம் நீதியையும், நிவாரணத்தையும் தேடிக்கொள்ள சாத்தியப்பட்ட வழிகளிலெல்லாம் கடைசி பட்ச மாக வேனும் முறையீடு செய்யாமலிருக்க முடியுமா? எவ் விடத்தில் முறையிட்டாலும் இலங்கை அரசாங்கத்தினிடத்தில் நீதிபெற முயற்சிக்கு மாறே வேண்டப்படுகிறது. அம்முறை பலனளிக்காவிட்டால் தனது மக்களை மதியாமல் நடத்தும் ஒரு தேசத்திற்கு மேன்மேலும் தனது மக்களை அனுப்பவேண்டா மென்றே கோருகிறோம். கடைசியாக பொருளாதாரத்துறையில் ஒத்துழைக்க மறுக்கும்படி கோருகிறோம்.

இந்நாட்டில் சிறுபான்மையினரை விட பெரும்பான் மைச் சமூகம் வகுப்பு வாதத்தில் மூழ்கிக் கிடக்கிறது. ஆனால் இந்தியாவின் தொடர்பு அவ்வித இருளை அகற்றி ஒளியைக் கொடுத்து வருகின்றது என்பது வெளிப்படையாகத் தெரி கின்றது.

இந்திய தேசிய காங்கிரஸினிடத்தில் முறையிட்டதன் பயனாக பண்டித ஜவஹர்லால் நேரு இலங்கைக்கு விஜயம் செயதார். இந்தியர்களுக்கும், இலங்கையர்களுக்கும் பரஸ்பர நல்லெண்ணத்தை ஏற்படுத்த வேண்டுமென்பதே அன்னார் விஜயத்தின பிரதான நோக்கம். அவரது பரிசீலனையில் இந்நாட் டில் வாழும் இந்திய சமுதாயம் கட்டுப்பாடும் ஒற்றுமையுமின் றியும், ஒரு பொதுஸ்தாபனம் இன்றியும் இருந்துவரும் நிலமை யானது அன்னாரது மனதை புண்படுத்தியது. எனவே இலங் கையை விட்டுத் திரும்புமுன்னர் இலங்கை இந்தியர் காங்கிரஸ் என்ற மத்திய ஸ்தாபனத்தை நிறுவுவதற்காக ஒரு கமிட்டியை நிறுவிச் சென்றார். இந்த ஸ்தாபனம் இதுவரை ஒரு இலட்சத் திற்கு அதிகமான அங்கத்தவர்களைக் கொண்டதாக இருக்கிறது.

ஒரு சில மாதங்களுக்குள்ளாக இலட்சக்கணக்கான அங் கத்தினர்கள் சேர்ந்து ஆதரவு பெற்றுவரும் இந்த ஸ்தாபனம் குறிப்பாக நமது சமுதாயத்திற்குப் பெரும்பணியாற்றவும், இத்தேசத்தின் விமோசனத்திற்கு பாடுபடவும் முற்படுமென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிபூரணமாக நம்புவோமாக. இந்த ஸ்தாபனம் வகுப்பு ஸ்தாபனமாகத் தோன்றினும் அப்பெயர் நம் தற்பாதுகாப்பை முன்னிட்டு அளிக்கப்பட வேண்டியதாயிற்று. எனினும் லட்சியம் உன்னதமானது என்பதை எவரும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது.

★

இந் நாட்டின் இந்தியர்கள் ஜனத்தொகை மொத்தத்தில் சுமார் எட்டரை இலட்சம். அதில் சுமார் ஆறரை லட்சம் பேர்கள் தோட்டத் தொழிலாளர்கள். இதனைத் தவிர முனிஷிபாலிட்டி போன்ற ஸ்தல ஸ்தாபனங்களிலே ஏராளமான இந்தியத் தொழிலாளர்கள் உழைத்து வருகின்றனர். எனவே இந்திய சமுதாயத்திற்காக பொதுவாகப் பாடுபட வேண்டியது இந்த ஸ்தாபனத்தின் கடமையாகவிருப்பினும், குறிப்பாகத் தொழிலாளர்களின் உரிமைக்காகப் போராடுவது இந்த ஸ்தாபனத்தின் முதற் கடனாக இருத்தல் அவசியமாகும்.

சில சுயநலமிகள் காங்கிரஸ் ஸ்தாபனம் முதலாளிவர்க்கத்தினரின் கோட்டையென்றும், முதலாளி வர்க்கத்தைப் பாதிக்கும் இலங்கை — இந்திய வர்த்தகப் பேச்சு முதலியவைகளில் தொழிலாளர்களின் உரிமைகளை விட்டுக் கொடுத்து பேரம் பேசி தமது சுயநலத்தை சித்தி செய்ய சூழ்ச்சி செய்கிறார்களென்றும், விஷமப் பிரச்சாரம் செய்கிறார்கள். இவ்வித பொய்ப் பிரசாரங்களினால் ஒரு சில காலத்திற்கு தொழிலாளர்களின் மனதில் தப்பெண்ணத்தை புகட்ட முடியலாம். ஆனால் எத்தனை நாள் தான் அப்படிச் செய்ய முடியும்?

இலங்கை இந்திய காங்கிரஸ் ஒரு ஜனநாயக ஸ்தாபனம். அதன் உறுப்பினர் பணக்காரர்களாயினும், ஏழைகளாயினும் இரு திறத்தாருக்கும் அதில் சம உரிமையுண்டு. எவ்வளவு செல்வாக்கும், பணமும் படைத்தவர் ஆயினும் தனிப்பட்ட எந்த கோஷ்டியினரும் தம் இஷ்டப்படி தம் கைப்பொம்மையாக இந்த ஸ்தாபனத்தை ஆட்டி வைக்க முடியாது. மற்றும் இலங்கையிலுள்ள பணக்கார இந்தியர் ஈவு, இரக்கம் பச்சாத்தாபம் அற்றவர்களல்லர். அவர்களிடம் நீதியும் நேர்மையும் சூனியம் ஆகிவிடவில்லை. அவர்களும் மற்றத் திறத்திலுள்ள இந்தியர்கள் போல் தொழிலாளியாயினும், சகோதர இந்தியனின் நலவுரிமையில் அக்கறையோடு தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறார்கள். ஏனெனில் அன்னவர்களின் சுய நலத்தைக் கருதியேனும் தொழிலாளி இந்தியனின் நலவுரிமையைக் கருதவேண்டிய நிர்ப்பந்தமான நிலமையிலிருக்கிறார்கள். பணக்கார இந்தியனும் சுயமதிப்போடு இந்நாட்டில் வாழ வேண்டுமானால் அந்நிலையை தொழிலாள இந்தியனால்தான் பெற்றுத்தர முடியும்.

★

கங்காணிமுறையைப்பற்றி அடிக்கடி பேசப்படுகிறது. தோட்டத் தொழிலாளர் கங்காணிகளின் உதவியையும் ஆதரவையும் எதிர்பார்த்த காலமுண்டு. அந்தக் காலத்தில் தொழிலாளிகளை கங்காணிகள் தங்களது குழந்தைகள் போல் நடத்தி வந்தார்கள். ஆகையால் எப்பொழுதும் அவனுக்கு உதவி செய்வதற்கு ஆவலுடன் இருப்பார்கள்.

கங்காணிமார்களின் மனப்பான்மை முன்னை நாட்களில் விரும்பத்தக்கதாக விருந்தது. அக்காலத்தில் கங்காணிமார்கள் தொழிலாளர்களை தமது குழந்தைகளைப் போல நடத்தி வந்தனர். மற்றும் பல வழிகளிலும் உதவியும் அளித்து வந்தனர். தொழிலாளர்களுக்கேற்படும் மான, அவமானங்களை தமக்கே ஏற்பட்டதாக அக்காலத்தில் கங்காணிமார்கள் கருதி வந்தார்கள். ஏதேனும் அவமானம் ஏற்படினும் தொழிலாளர்களின் சார்பிலே கங்காணிமார்கள் போராடியும் வந்தார்கள்.

ஆனால் கங்காணிமார்களுக்கும், தொழிலாளர்களுக்குமிடையே இருந்த அத்தியந்த நட்பு மாறி ஒருவரை ஒருவர் சந்தேகத்துடன் நோக்கத் தலைப்பட்டு விட்டனர். சொந்தச் சம்பாத்தியமே பெரிதெனக் கருதி கங்காணிமார்களில் பலர் தொழிலாளர்களுக்குப் பாதகமாகவும், முதலாளிகளுக்குச் சாதகமாகவும் தமது போக்கை மாற்றத் தலைப்பட்டுவிட்டார்கள்.

இக்காரணத்தால் கங்காணி முறையை பற்றியே பெருந் துவேஷமேற்பட்டிருக்கிறது. எனவே இந்நிலையிலேனும் கங்காணிமார்கள் தமது போக்கைத் திருத்திக் கொண்டு தொழிலாளிகளுடன் ஒன்று சேர்ந்து தமது நிலையை கால தேச வர்த்தமானத்திற்கேற்ப மாற்றிக் கொள்வது அவசியம் என்பதை உணர வேண்டும்.

★

தோட்டக்காரர்கள் சொற்பக்காலத்திற்கிடையில் தமது போக்கை காலதேச வர்த்தமானத்திற்கேற்றவாறு திருத்தி அமைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக் கொண்டுவிட்டார்கள். இன்றைய ராமசாமி விழித்துக் கொண்டிருக்கிறான் என்பதையும், தன் உரிமையை அடைவதற்கு அவன் துணிந்து விட்டால், அதனை சாதிக்கும் சக்தி அவனிடம் இருக்கிறது என்பதையும், பொருள் திரட்டும் இயந்திரமாக இனி அவனைப் பயன்படுத்த முடியாதென்பதையும் உணரத்தலைப்பட்டு விட்டார்கள் தோட்ட முதலாளிகள்.

தொழிலாளர்களுக்கு சமுதாயத்திலும், பொருளாதாரத்திலும் நடுக்கண்ட நியாயம் வழங்கப்பட வேண்டுமென்பதே எமது அவா. தொழிலாளர்கள் இதனைப்பெற நாம் செய்யும் முயற்சிகளுக்கு தோட்டக்காரர்கள் ஆதரவளிப்பார்களென நம்புகின்றேன்.

இன்னமும் சில தோட்டக்காரர்கள் காலப்போக்கை அறியாதவர்களாக இருக்கிறார்கள். ராமசாமியினிடத்தில் காணப்படும் மாற்றங்களை அறிந்து கொள்ளாதவர்களாக விருக்கின்றார்கள். இந்த நிலை அதிகநாள் நீடிக்க முடியாது.

★

ஓட்டுரிமை சம்பந்தமாக தோட்டக்காரர்கள் தமது தொழிலார்களை பதிவு செய்ய ஒரு விதமான ஊக்கமும் காட்டாதது ஆச்சரியமாக இருக்கிறது. அவர்கள் இது விஷயத்தில் போதிய ஊக்கங்காட்ட வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்தியத் தொழிலாளிக்கு வழங்கப்பட்டுள்ள ஓட்டுரிமையை பறிமுதல் செய்ய பல முயற்சிகள் செய்யப்பட்டன. இன்னும் செயயப்பட்டுவருகின்றன. வருடமொன்றுக்கு ரூபாய் 600 வருமானமுடையவர்களுக்கு ஓட்டுரிமை அளிக்கப்படுமாம். இந்நாட்டை பொன்கொழிக்கும் பூமியாக்கி இன்றும் அல்லும் பகலும் உழைத்துவரும் தொழிலாளர்களுக்கு வாக்குரிமை கிடையாதாம்.

இந்நாட்டில் வசித்த கால எல்லை ஒன்றே ஓட்டுரிமை பெற யோக்கிய தாம்சமாக நிர்ணயிக்கப்பட வேண்டும். இந்தியத் தொழிலாளி இந்நாட்டுக்கு ஆற்றிய அருந்தொண்டையும், உழைத்துத்தந்த செல்வத்தையும் உத்தேசித்தேனும் இவ்வாறு செய்வது அரசியல் வாதிகளின் கடமையாகும்.

★

இந்தியன் பரந்த நோக்கத்தினின்று மாற்ற மடைந்ததற்கு காரணம் பெரும்பான்மையார் அவனிடத்தில் காண்பித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்போக்கேயாகும். இந்தியர்கள் தமக்கு நியாயமாக வழங்கப்பட வேண்டிய உரிமைகளுக்காக மட்டுமே போராடுகிறார்கள். அவர்களிடத்தில் நீதியாக மட்டும் நடந்து கொண்டிருந்தால் எவ்வளவு தூரம் இந்நாட்டின் நன்மைக்காகப் பாடுபட்டிருப்பார்களென்பதை எளிதில் உணரலாம். இந் நாட்டின் நலனில் அவர்களுக்குரிய அக்கறையை அறிந்து கொள்ளலாம். பரஸ்பர நல்லெண்ணமும், நேசப்பான்மையும் மீண்டும் நிலவுமானல் மிகுந்த நன்மை பயக்கும். ஆனல் துவேஷம் நிரம்பிய, சரமாரியாக இயற்றப்பட்ட சட்டங்களையெல்லாம் ரத்து செய்தாலன்றி மீண்டும் அன்னியோன்னியமாக வாழ்வது பெரிதும் சிரமமாகும். ஆயினும் பெரும் பகுதி சிங்கள மக்களான கிராம வாசிகளும், படித்த மாணவர்களும் இன்னும் அன்னியோன்னியமாகவே இந்தியர்களோடு பழகி வருகிறார்கள். இந்தியத் துவேஷ உணர்ச்சியைப் பரப்புவது அவர்களிடத்தில் பலிக்கவில்லை.

★

தலைவர் அவர்களே! இப்பொழுது இம்மகாநாட்டை வெற்றிகரமாக நடத்திவைக்கும் பொறுப்பை மகிழ்ச்சியுடன் தங்களிடம் ஒப்புவிக்கிறேன். ஒரு சிறு ஆறு உபநதிகளுடன் சேர்ந்து பெரிய பிரவாகமாக மாறி கடலுடன் கலப்பது போல இலங்கை இந்தியர் காங்கிரஸ் தினே தினே பலம் பெற்று வளர்ந்து, இறுதியாக எல்லாச் சமூகங்களையும் கொண்ட இலங்கையின் நன் நலத்திற்குப் பாடுபடக்கூடிய ஸ்தாபனத்துடன் சேர்ந்துவிட ஈசன் அருள்புரிவாராக.

தொண்டமான் தமது பேச்சை முடிக்கும் போது "வந்தே மாதரம்! அல்லாஹு அக்பர்!" என்று கூறி முடித்தார். கடலோசையெனக் கரகோஷம் எழுந்தது.

இந்த முதலாவது மாநாட்டில் பேசிய எஸ். சத்தியமூர்த்தி -

> *"ஒரு வருட காலத்திற்குள் நீங்கள் ஒன்றரை லட்சம் அங்கத்தினர்களை சேர்த்திருப்பது எனக்கும் பெருமை அளிக்கின்றது. என் முன் இங்கு அலை மோதும் ஜன சமுத்திரத்தைக் காண எனக்கு மகிழ்ச்சி பொங்குகிறது. உங்கள் ஸ்தாபனம் இந்த ஓராண்டில் வளர்ந்ததைப் போல் என்றும் வளர்பிறைச் சந்திரனை ஒத்து வளர வேண்டும். என நான் விரும்புகிறேன். என்றும் உங்கள் ஸ்தாபனம் பௌர்ணமி போல் பிரகாசிக்க வேண்டுமென நான் பிரார்த்திக்கிறேன்."*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பாராட்டி வாழ்த்தினர்.

வி.வி.கிரி பேசுகையில், "இந்தியர்கள் இந்நாட்டை அந்நிய நாடாகக் கருதக்கூடாது. இந்நாட்டு மக்களாகத் தம்மை கருத வேண்டும். இன்று உங்களைப்பற்றி இலங்கை அரசாங்கம் என்ன நினைத்த போதிலும், உங்களை கண்ணியமான முறையில் இலங்கை அரசாங்கம் நடத்தும் காலம் ரொம்ப தூரத்தில் இல்லை. நீங்களும் இலங்கை அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் தான் என்பதை அவர்கள் சீக்கிரம் உணர்வார்கள்."

என்றார்.

இந்த முதலாவது மாநாட்டுக்கு தலைமை தாங்கியவர் இலங்கை இந்தியர் காங்கிரஸின் முதலாவது தலைவர் வ. ராம. லெட்சுமணன் செட்டியார்.

அவர் தலைமை உரையில் ஒரு முக்கியமான விஷயத்தைக் குறிப்பிட்டு வலியுறுத்தினர். "தோட்டத்தில் வேலை செய்வது ஒரு தொழில். அங்கு வேலை செய்பவர்களுக்கு தொழிலுக்கு உரிய மதிப்பு கணிக்கப்பட வேண்டும். தேயிலை நடுவதும் வளர்ப்பதும் ஒரு கண்ணியமான தொழில் மட்டும் அல்ல. நுண்ணியமான தொழிலுமாகும். எனவே தோட்டத்தில் வேலை பார்ப்பவர்களை 'கூலி' என்ற ஆங்கில இழி சொல்லால் அழைக்கக்கூடாது., அவர்கள் தோட்டக் கூலிமார் அல்லர். அவர்கள் மதிப்பு மிக்க தோட்டத் தொழிலாளர்கள். அரசாங்கம் கூட தனது கடிதப் போக்குவரத்துகளில் கூலி' என்றே இழிவாகக் குறிப்பிடுகிறது. நமது ஒற்றுமையின் மூலமும் பலத்தின் மூலமும் இந்த துர்ப்பிரயோகத்தை நாம் வெகு விரைவில் மாற்றி அமைப்போம்." "

இவ்வாறு வ.ராம. லெட்சுமணன் செட்டியார் சூள் உரைத்தார்.

இந்த கம்பளை மாநாட்டில் களியாட்டங்களும், அரசாங்க திணைக்களங்களின் பொருட்காட்சிகளும், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

கம்பளை மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடித்ததன் மூலம் தொண்டமான் திட்டமிட்டுச் செயலாற்றும் ஒரு செயல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரர் என்பதையும், சிறந்த ஒரு பேச்சாளர் என்பதையும், தமது தோழர்களைக் கொண்டு ஒரு பெரிய ஸ்தாபனத்தையே சிக்கலின்றி இயக்கக்கூடிய ஒரு நிர்வாகி என்பதையும் அன்றே நிலைநாட்டிக் கொண்டு விட்டார்.

தொண்டைமானுடைய கன்னிப் பேச்சு பல உண்மைகளைத் தெளிவாக்கும் ஒரு ஆளமான பேச்சாக அமைந்தது. முதலில் அவருடைய தன் நம்பிக்கை பேச்சில் பளிச்சிட்டது. அது காலவரை தன்னுள்ளே அடங்கிக் கிடந்த உத்வேகம் ஒன்று, அன்று தானகவே வெளிப்பட்டதை அவர் உணர்ந்ததாகக் கூறுகிறார். அத்தோடு அன்று முதல் தான் எந்தச் சந்தர்பத்திலும் எவர் முன்னும் தன்னைச் சரிநிகர் சமானமான ஒருவராக எண்ணிக் கொண்டு, எந்தக் காரியத்தையும் ஏற்று முடிக்கும் திறன் பெற்றதாகவும் கூறுகிறார்.

இன்று தொண்டமான் பெருந்தலைவராக, நாட்டின் அமைச்சராக உயர்ந்து நிற்கிறார் என்றால், அதற்குரிய அடிக்கல் கம்பளை மாநாட்டிலேயே நடப்பட்டுவிட்டது என்பது ஊர்ஜிதமாகிறது.

தொண்டமான் ஒரு சிறந்த ஜனநாயகவாதி என்பதும், ஜனநாயக தத்துவத்தில் அசையா நம்பிக்கை கொண்டவர் என்பதும் அவர் பேச்சின் இன்னொரு பந்தி ஐயந்திரிபுகளுக்கு இடமின்றி ஆணித்தரமாக கூறிவிட்டது. அந்தப் பந்தி இதுதான்:

> **"இலங்கை இந்திய காங்கிரஸ் பொதுமக்களின் ஸ்தாபனமாக இருக்க வேண்டுமாயின், ஸ்தாபனத்தின் நிர்வாகம் பொதுமக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு நிர்வகிக்கப் படவேண்டும்."**

என்ற இந்த வாக்கியம் இன்றுவரை கடைப்பிடிக்கப் படுவதால் தான், இலங்கை இந்திய காங்கிரஸ், பின்னர் இலஙகைத் தொழிலாளர் காங்கிரஸாக மலர்ந்து இன்று ஜனநாயக ரீதியில் செயல்படும் மகோந்நதமான ஒரு ஸ்தாபனமாக பரிணமித்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16

# முதல் பெரிய போராட்டமும் பிரிவி கவுன்ஸில் வெற்றியும்.

தொண்டமான் ஒரு முதலாளியா அல்லது அவர் ஒரு தொழிலாளியா?

காலையில் தோட்டத்துரைமார் சம்மேளனக் கூட்டத்துக்கு உயர்ரக மோட்டார் வண்டியில் சென்று தானும் ஒரு துரை மகனாக கலந்து கொண்டு, மதியம் நட்சத்திர ஹோட்டலில் 'லஞ்ச்' சாப்பிட்டுவிட்டு வருகிறார். மாலையில் தோட்டத் தொழிலாளர்கள் ஏற்பாடு செய்துள்ள ஒரு கூட்டத்துக்குத் தலைமை தாங்கி தொழிலாளர் உரிமைகள் பற்றி குரல் எழுப்புகிறார்.

இவர் பேரிலேயே பல நூறு ஏக்கர் தேயிலைத் தோட்டங்களும், பல பெரிய பங்களாக்களும் உண்டு. அதே வேளையில் ஏழைத் தொழிலாளர் லைன்களுக்கு கால் நடையாகச் சென்று காங்கிரஸ் உறுப்பினர்களின் குறைகளைக் கேட்கிறார்.

இவரை முதலாளி என்பதா? அல்லது தொழிலாளி என்பதா?

இலங்கை இந்திய காங்கிரஸின் தலைவராக தொண்டமான் பதவி ஏற்ற காலங்களில் — அதாவது முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு முன்பாக — பலர் இவ்வாறு கேள்விகளை எழுப்பியது உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் கேள்விகள் நியாயமானவை தாம். அவர் முதலாளியாகத்தான் இருந்தார். அதே வேளையில் தொழிலாளர் உள்ளம் படைத்தவராகவும் அவர் விளங்கினர்.

இல்லாவிட்டால், கோர்ட்டில் கிரிமினல் வழக்கில் மாட்டிக் கொண்ட ஏழைத் தொழிலாளர்களைப் பிணை எடுக்க தமது சொந்தத் தோட்டத்தை அடவு வைத்து, வட்டிக்குப் பணம் பெற்று, அந்தப் பணத்தைக் கோர்ட்டில் கட்டி அந்தத் தொழிலாளர்களை வெளியே எடுப்பாரா?

முதலாளியாக இருந்தாலும் கஷ்டத்தில் சிக்கிய தொழிலாளருக்காக உருகும் உள்ளம் இருப்பவரே இத்தகைய செயலைச் செய்வார் அல்லவா? அதுவும் இந்த நாட்டை வெள்ளைக்காரன் ஆண்ட நாட்களில்!

இலங்கை இந்திய காங்கிரஸ் உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து, இந்திய வம்சாவழி மக்களின் நலவுரிமைப் போராட்டங்கள் பலவற்றை தொண்டமானே முன்னின்று காங்கிரஸ் சார்பில் நடத்திவந்தார்.

புளத்கொஹபிட்டி எனப்படும் வெற்றிலையூருக்கு அருகில் நேவ்ஸ்மேரி என்ற தோட்டம் இருந்தது. அதை தொழிலாளமக்கள் உருளைவள்ளித் தோட்டம் என்று அழைத்து வந்தார்கள். இந்த இடத்திலே இந்தியத் தொழிலாளர்கள் சுமார் 400 ஏக்கர் கொண்ட பிரதேசத்தில் காடு வெட்டி நிலம் திருத்தி மரக்கறித் தோட்டம் போட்டிருந்தார்கள்.

இந்தத் தொழிலாளர்களை அந்த இடத்திலிருந்து குடி எழுப்பி விட்டு மேற்படி இடத்தை தேயிலைத் தோட்ட விஸ்தரிப்புக்கும், வேறு இனமக்களைக் குடியமர்த்துவதற்கும் பயன்படுத்தவேண்டும் என்று ஆட்சியாளர்கள் திட்டமிட்டார்கள். அதன்படி அவர்களுக்கு வெளியேற்ற அறிவித்தல் கொடுக்கப்பட்டது.

அவர்கள் ஓடிவந்து இலங்கை இந்திய காங்கிரஸ் தலைவர் தொண்டமானிடம் முறையிட்டார்கள். உடனே தொண்டமான் தொழிலாளர்களின் உரிமையை நிலைநாட்ட வேண்டும் என்று முடிவு கட்டினர். இலங்கை இந்திய காங்கிரஸையும் அதற்கு இணங்கச் செய்தார்.

இலங்கையில் தொடர்ந்து ஐந்து வருடங்கள் வாழ்ந்து ஒரே இடத்தில் குடியமர்ந்திருப்பவர்களுக்கு எல்லா உரிமைகளும் உண்டு. அவர்களை நினைத்தபடி வெளியேற்ற முடியாது. அந்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணியை அங்கு வாழ்ந்து வருபவர்களுக்கே பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று தொண்டமான் வாதாடினார்.

அரசாங்க உத்தரவுப் பிரகாரம் அந்த ஏழைத் தொழி லாளர் அந்த இடத்தைக் காலி செய்யவில்லை என்பதால் அவர் களில் 363 பேர் மீது அத்து மீறல் என்னும் கிரிமினல் குற்றச் சாட்டு சுமத்தப்பட்டு, கேகாலையில் ஒரு விசேஷ நீதி மன்றம் இந்த வழக்கை விசாரிப்பதற்கென்று அமைக்கப்பட்டது. அந்த நீதி மன்றத்தின் முன்னால் தொழிலாளர்கள் ஆஜர் செய்யப்பட்டார் கள்.

அவர்களை விசாரித்த நீதிவான், அவர்கள் ஒவ்வொரு வரையும் குற்றவாளியாகக் கண்டார். ஒவ்வொருவருக்கும் ரூபா 1000 தண்டமும் 3 மாதச் சிறையும் விதித்தார்.

தண்டனையைக் கேட்டு தொழிலாளர் கலங்கவில்லை. உற் சாகத்தோடு அவர்கள் காணப்பட்டார்கள். கைக்குழந்தை களோடு பெண்கள் வந்திருந்தார்கள். கிழவர்களும், கிழவிகளும் கூட அவர்களில் காணப்பட்டார்கள். இ.இ.கா. இருக்கிறது, எங்களைக் கைவிடாது என்று அவர்கள் நம்பினார்கள். தொண்ட மான் இருக்கிறார் எங்களைக் காப்பாற்றுவார் என்று அவர்கள் துணிவுடன் இருந்தார்கள்.

ஆயினும் தண்டம் தலா ரூபா 1000 கட்ட அவர்களிடம் பணம் இருக்கவில்லை. உடனடியாக அவர்களைச் சிறைச் சாலைக்கு இழுத்துச் செல்லாமல் தடுக்க வேண்டுமானால் அந்த 363 பேரையும் பணம் கட்டிப் பிணை எடுக்க வேண்டும். பணத்துக்கு என்ன செய்வது?

இலங்கை இந்திய காங்கிரஸ் தோன்றி ஆரம்ப ஆண் டுகள் அந்தக் கால கட்டம். இ.இ.காவிடம் போதிய நிதி வசதி இருக்கவில்லை. நாலு லட்சம் ரூபா தேவைப்பட்டது. அந்த நேரத்தில் நாலு லட்சம் என்றால் இன்றைய நாலு கோடி ரூபா என்று கொள்ளலாம்.

எல்லோரும் தலைவர் தொண்டமானுடைய முகத்தையே பார்த்தார்கள். தொண்டமானிடமும் அந்நேரம் நாலு லட்ச ரூபா பணமாக இருக்கவில்லை. ஆயினும் அவர் கலங்கவில்லை.

**உடனடியாக அவர் தமது சொந்தத் தேயிலைத் தோட் டத்தை அடமானம் வைத்து வட்டிக்குப் பணம் புரட்டி, கோர்ட்டில் பிணை கட்டி அவ்வளவு தொழிலாளர்களை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் விடுதலை செய்தார். இந்த அரிய செயல், பரோ பகாரச் செயல், அவரை ஒரு முதலாளியாக அல்ல, தொழிலாளர்களுள் ஒரு தொழிலாளியாக உயர்த்தி வைத்தது. அன்று முதல் தொண்டமானை தோட்டத்து மக்கள் முதலாளியாக எண்ணவில்லை, தொழிலாளரைக் காப்பாற்றி விடுதலை வாங்கித்தரப் பிறந்த ஆபத் பாந்தவராகவே கருதினார்கள்.

இந்த சம்பவம் இலங்கை அரசாங்கத்தை மட்டுமன்றி இந்திய அரசாங்கத்தையும், பிரிட்டிஷ் அரசாங்கத்தையும் கூட ஈர்த்தது. பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் இந்த நிகழ்ச்சி பற்றி கேள்வியும் எழுப்பப்பட்டது.

உருளைவள்ளித் தோட்டத் தொழிலாளர்களுக்கு நேர்ந்த கதிக்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல் விட்டால் இலங்கையில் ஏனைய தோட்டங்களில் வாழும் தொழிலாளர்களுக்கு இதே கதி ஏற்படலாம் என்று இலங்கை இந்திய காங்கிரஸ் கருதியது. எனவே உருளைவள்ளித் தோட்டத் தொழிலாளர்களின் விடுதலைக் காகப் போராட வேண்டும் என்று இலங்கை இந்திய காங்கிரஸ் முடிவு எடுத்தது.

இதன் பிரகாரம் 1946 ஆம் ஆண்டு ஜூலை 15ஆம் திகதி முதல் ஒரு வேலை நிறுத்தம் பல தோட்டங்களில் ஏற்பாடு செய்யப்பட்டது. இதுவே இலங்கை இந்திய காங் கிரஸ் மேற் கொண்ட முதலாவது பெரிய போராட்டமாகும். முதலாவது பெரிய வேலைநிறுத்தம் ஆகும்.

அன்று முதல் 21 நாட்களுக்கு ஹட்டன், ரத்தினபுரி, எட்டியாந்தோட்டை, கேகாலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 1 லட்சம் 21 ஆயிரம் தோட்டத் தொழிலாளர்கள் உருளைவள் ளித் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவாக வேலை நிறுத்தம் செய்தனர்.

இலங்கை அரசு, தோட்டங்களில் ஏற்பட்டு வந்து எழுச்சியைக் கண்டு அசைந்து கொடுக்கவேண்டியதாயிற்று, அப்போது இந்திய அரசின் பிரதி நிதியாக எம்.எஸ்.அனே இங்கு இருந்தார். விவசாய அமைச்சரான டி.எஸ்.சேனநாயகா விரைந்து சென்று அனேயுடன் பேச்சு வார்த்தைகள் நடத் தினர். இருவரும் பிரிட்டிஷ் கவர்ணராக கொழும்பில் இருந்த சேர் ஹென்றி மேஸன் மூர் என்பவருடன் பேசினர்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பயனாக, கவர்னர் குற்றஞ்சாட்டப்பட்ட 363 தொழிலாளருக்கும் பொது மன்னிப்பு வழங்கி அவர்களை விடுதலை செய்தார்.

> இந்த இடத்தில் தான் தொண்டமான் ஒரு பெரும் சாதனையை நிலை நாட்டினார். 363 பேரில் 362 பேரைப் பொது மன்னிப்பை ஏற்கும்படி செய்தார். ஒருவரை மன்னிப்பை ஏற்க வேண்டாம் என்று தடுத்துவிட்டார். மன்னிப்பை ஏற்க மறுத்தவரின் பெயர் செல்வநாயகம்.
>
> இப்படி தொண்டமான் செய்ததற்கு காரணம் இருந்தது. அத்துமீறல் குற்றச் சாட்டு சட்டப்படி செல்லுபடியாகுமா என்பதை அவர் பரீட்சித்துப் பார்க்க விரும்பினார்.

எனவே, செல்வநாயகத்தின் மீது இருந்த கிரிமினல் குற்றச்சாட்டும், தீர்ப்பும் சம்பந்தமாக பிரிட்டிஷ் அரசாங்கத்தின் உயர்ந்த நீதி மன்றமான பிரிவிக் கவுன்ஸிலுக்கு மேல் முறையீடு (அப்பீல்) செய்யப்பட்டது. அதற்கான செலவினங்களையும் தொண்டமானே ஏற்றுக் கொண்டார்.

பிரிட்டிஷ் பிரிவி கவுன்ஸில் செல்வநாயகத்துக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கியது. அதாவது ஏற்கனவே பல வருடங்களாக ஒரு இடத்தில் குடியேறியிருந்தவர் ஒருவர் மீது அத்துமீறல் குற்றச்சாட்டு சுமத்தி அவர்களை வெளியேற்ற முடியாது என்பதே பிரிவிக்கவுன்ஸில் தீர்ப்பு ஆகும்.

இந்த வழக்கை இறுதிவரை ஆடி முடித்ததால் தொண்டமான் ஒரு பெரும் வெற்றிவீரரானார். இது இலங்கை இந்திய காங்கிரஸுக்கு கிடைத்த முதலாவது கொள்கைப் போராட்ட வெற்றியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17

# தொண்டமானும் பாராளுமன்ற பிரவேசமும்

தொண்டமானுடைய முதலாவது பாராளுமன்றப் பிரவேசம் 1947 ஆம் ஆண்டு இடம் பெற்றது. அப்போது அவர் நுவரேலியாத் தொகுதியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரு பிரதிநிதியாக பாராளுமன்றம் புகுந்தார்.

தொண்டமானுக்கு 9386 வாக்குகளும், ஜேம்ஸ் இரத்தினத்துக்கு 3251 வாக்குகளும், லோரன்ஸ் பெரேரா என்பவருக்கு 1124 வாக்குகளும் கிடைத்தன. தொண்டமான் 6135 மேலதிக வாக்குகள் பெற்று வெற்றிவாகை சூடினார்.

1947 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் இலங்கை இந்திய காங்கிரஸ் எட்டு தொகுதிகளுக்குப் போட்டியிட்டது. அப்புத்தளை தவிர்ந்த ஏழு தொகுதிகளில் அது அமோக வெற்றியீட்டியது.

நுவரேலியா தொகுதியில் எஸ். தொண்டமான், மஸ்கேலியா தொகுதியில் ஜோர்ஜ் ஆர் மோத்தா, நாவலப்பிட்டி தொகுதியில் கே. இராஜலிங்கம், கொட்டகலைத் தொகுதியில் கே. குமாரவேல், தலாவாக்கொல்லை தொகுதியில் சி.வி. வேலுப்பிள்ளை., பதுளைத் தொகுதியில் எஸ்.எம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுப்பையா. அளுத்நுவர தொகுதியில் டி. ராமானுஜம் ஆகிய ஏழு பேருமே வெற்றி பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களுமாவர்.

இந்த ஏழு பேரும் தமது குழுவுக்கு எஸ். தொண்டமானைத் தலைவராகத் தேர்ந்தெடுத்து, பாராளுமன்ற உறுப்பினர்களாக 15.10.1947 இல் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

இந்த ஏழு பேரில் கே. இராஜலிங்கம் தொண்டமானுக்கு மிகவும் வேண்டியவராகவிருந்தார். தொண்டமானின் நெருங்கிய நண்பரும், எப்பொழுதும் தொண்டமானை ஆதரித்து நிற்பவருமாக அவர் விளங்கினார். சில காலம் அவர் இலங்கை இந்திய காங்கிரஸ் தலைமைப்பதவியையும் வகித்திருக்கிறார்:

கே. குமாரவேல், தொண்டமானின் இனபந்து. தொண்டமானுக்கு என்றும் கீழ்ப்படிவான ஒரு 'தம்பி' யாகவே அவர் இருந்தார்.

சி.வி. வேலுப்பிள்ளை ஓர் எழுத்தாளரும் கவிஞருமாக விளங்கினார். தோட்டத்து பின்னணியை வைத்து அவர் ஆங்கிலத்தில் கவிதைகளும், கட்டுரைகளும், நாவலும் எழுதுபவராக இருந்தார்.

ஏனையோரும் ஒவ்வோர் துறையில் வல்லுநராக விளங்கினார்கள்.

உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்ட மறுநாள் செனட்டர் தெரிவு நடைபெற்றது. இலங்கை இந்திய காங்கிரஸ் சார்பில் பெரி. சுந்தரம் செனட்டராகத் தெரிவு செய்யப்பட்டார். இவர் பெயரைத் தொண்டமான் பிரேரிக்க எஸ்.எம். சுப்பையா அனுவதித்தார்:

செனட்டர் பெரி. சுந்தரம் பழம் பெரும் அரசியல் வாதி. வழக்கறிஞராகவும் அவர் விளங்கினார். முந்திய தலைமுறையில் அவரே இந்திய வம்சாவழி மக்களின் வழி காட்டியாகக் கருதப்பட்டார். தொண்டமானுக்கு முன்னர் அவர் சிலகாலம் இலங்கை இந்திய காங்கிரஸின் தலைவராகவும் இருந்தார்.

முதலாவது அரசாங்க சபையில், 1931 முதல் 1935 வரை அவர் தொழில் வர்த்தகத் துறை அமைச்சராக விளங்கினார். 1931 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரி. சுந்தரம் ஹட்டன் தொகுதிக்குப் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். பெரி. சுந்தரம் ஒரு சிறந்த அரசியல் வாதியும் நெறி நிதானம் கொண்ட தலைவருமாக விளங்கினார். இந்திய வர்த்தக வட்டாரத்தில் அவருக்கு அளவிறந்த மதிப்பும் இருந்து வந்தது.

அவருடைய புத்திரர் தான் ஜெயா பெரிசுந்தரம். இவர் என்றும் தொண்டமானிடம் விசுவாசம் உடையவராக இருந்து வருகிறார். படித்தவர். பட்டதாரி. வழக்கறிஞர். இன்றைய இலங்கை இந்திய காங்கிரஸின் உப தலைவர் ஜெயா பெரிசுந்தரம். ஸ்தாபனத்தின் சட்டத்துறைக்குப் பொறுப்பாக உள்ளவரும் இவரே. இவரிடம் தொண்டமானுக்கு பற்றும் பரிவும் உண்டு.

ஐ.எல்.ஓ. எனப்படும் சர்வதேச தொழில் நிறுவனத்தில் 1954 ஆம் ஆண்டு முதல் நிர்வாக கவுன்ஸில் உறுப்பினராக அமர்ந்து இலங்கையையும், இலங்கைத் தொழிலாளர்களையும் பிரதிநிதித்துவப் படுத்தி வந்திருக்கிறார் தொண்டமான். 1978 இல் தொண்டமான் அமைச்சரானதும் இந்தப் பதவியை சம்பிரதாய பூர்வமாகத் துறக்க வேண்டியதாயிற்று.

1947 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கை அரசு கொண்டு வந்த பிரஜா உரிமைச் சட்டங்களினால் இந்திய வம்சாவழியினர் தங்கள் வாக்குரிமைகளையும், குடியுரிமைகளையும் இழந்தனர். அதன் காரணமாக அவர்களுடைய பிரதிநிதிகள் எவரும் பாராளுமன்றத்துக்குத் தேர்தல் மூலம் தெரிவாக முடியவில்லை.

இந்த துர்ப்பாக்கிய நிலை 30 ஆண்டுகளாக நீடித்தது. அதாவது 1947 முதல் 1977 வரை மலைநாட்டுத் தமிழ் மக்களில் எந்த ஒரு தேர்ந்தெடுத்த பிரதிநிதியும் பாராளுமன்றத்துள் பிரவேசிக்க முடியவில்லை.

1977 பொதுத் தேர்தலில் தான் நுவரேலியா மஸ்கேலியாத் தொகுதியிலிருந்து ஒரே ஒரு மலைநாட்டுத் தமிழ் பிரதிநிதி பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார். அவர்தான் தலைவர் தொண்டமான். 1977 இல் தேர்ந்தெடுக்கப்பட்ட அவரை 1978 இல் தமது மந்திரி சபையில் சேருமாறு ஜனாதிபதி ஜயவர்த்தன கேட்டுக் கொண்டார். அதன்படி அவரும் சேர்ந்து கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் ஆனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைப்பட்ட 30 வருடகாலத்தில், இரண்டு தடவைகள் தொண்டமான் பாராளுமன்றத்தில் நியமன அங்கத்தினராகும் வாய்ப்பினைப் பெற்ருர். இந்த வாய்ப்பை தொண்டமான் கேட்டோ, இரந்தோ பெற்றவர் அல்லர்.

சுமார் ஆறு லட்சம் தோட்டத் தொழிலாளர்கள் அவருக்குப் பின்னல் அணிதிரண்டிருப்பதால், தமிழர் சிங்களவர் என்ற பேதம் இன்றி இவ்வளவு தொழிலாளரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பின்னல் அணிதிரண்டு இருப்பதால், தொண்டமானுடைய ஆதரவும் அனுசரணையும் தங்களுக்குத் தேவை என்று கருதிய ஆட்சித் தலைவர்கள் அவரைத் தத்தமது அரசாங்கத்தில் நியமன அங்கத்தவராகத் தெரிவு செய்து ஏற்றுக் கொண்டார்கள். எனினும் அவர் எப்போதும் தனித்துவமான கொள்கைகளையே கடைப்பிடித்து வந்தார்.

1960 ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது பொதுத் தேர்தலில் தொண்டமான் நுவரேலியா தொகுதியில் போட்டி யிடாமல் ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆதரித்தார். பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே வெற்றியீட்டியது. ஸ்ரீமாவோ பண்டாரநாயகா பிரதம மந்திரியானுர். அவர் தொண்டமானை ஒரு நியமன அங்கத்தவர் பதவியை ஏற்குமாறு கேட்டுக் கொண்டார். 1960 முதல் 1964 வரை தொண்டமான் ஸ்ரீமாவோ பண்டார நாயகாவின் அரசாங்கத்தில் ஒரு நியமன அங்கத்தவராக விளங்கினுர்.

ஸ்ரீமாவோவின் அரசாங்கத்தில் இருக்கும் போது தொண்டமான் இலங்கை வாழ் இந்தியர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும், இந்திய மக்களுக்குப் பிரஜா உரிமைபெற்றுக் கொடுப்பதற்கும் எவ்வளவோ உள் முயற்சிகளை மேற் கொண்டார். தொண்டமான் எதிர் பார்த்தபடி காரியங்கள் நடைபெறவில்லை. இலங்கை வாழ் இந்திய மக்களின் பிரதி நிதித்துவத்தைக் கொண்ட ஒரே ஸ்தாபனமாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் விளங்கிய போதிலும் அதன் கருத்துக்களை அனுசரிக்காமல் ஸ்ரீமாவோ பண்டாரநாயகா இந்திய பிரதமர் லால் பகதூர் சாஸ்திரியுடன் ஓர் ஒப்பந்தத் தைச் செய்து கொள்ள ஏற்பாடுகள் மேற் கொண்டார். இந்த ஒப்பந்தம் சம்பந்தமாக ஸ்ரீமாவோ அரசாங்கத்துக்கும் இலங்கை இந்தியக் காங்கிரஸுக்கும் இடையே ஒருமித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்து ஏற்படவில்லை. வெடிப்பு ஏற்பட்டது. எனினும் தொண்டமான் பொறுமையைக் கடைப்பிடித்தார்.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னுல் இந்த ஒப்பந்த சரத்துகள் பற்றி ஸ்ரீமாவோவுடன் கலந்து ஆலோசிப்பதற்கு தொண்டமானைத் தலைவராகக் கொண்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் விருப்பந் தெரிவித்தது. ஆனுல் அப்படி ஒரு சந்திப்புக்கு ஸ்ரீமாவோ இடங்கொடுக்கவில்லை.

ஸ்ரீமாவோ டில்லிக்குப் புறப்பட்டுச் சென்ற சமயம் இந்திய வம்சா வழியினரின் பிரதிநிதியாகத் தம்மால் பாராளுமன்றத்தில் நியமிக்கப்பட்ட தொண்டமானை அவர் கலந்தாலோசிக்கவும் விரும்பாததால் கசப்பு வளரலாயிற்று. அப்போதே இந்த அரசைவிட்டுத்தாம் வெளியேற வேண்டும் என்ற முடிவுக்கு வந்து விட்டார் தொண்டமான்.

ஸ்ரீமாவோ சாஸ்திரி ஒப்பந்தம் 1964 அக்டோபர் 30ஆம் திகதி கைசாத்திடப்பட்டது:

1964 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் திகதி இலங்கைப் பத்திரிகைச் சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்தச் சட்டத்தை நிறைவேற்றி லேக்ஹவுஸ் பத்திரிகைகளைச் சுவீகரிக்க திட்டமிட்டார் ஸ்ரீமாவோ. இதை எதிர்த்து 28ஆம் திகதி பெரிய ஆர்ப்பாட்டப் பொதுக்கூட்டம் ஒன்று நகரமண்டபத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பௌத்த மகா சங்கத்தை சேர்ந்த மூன்று நிக்காயாத் தலைவர்களும் கலந்து கொண்டனர். நாட்டில் ஒருவித கிளர்ச்சி உருவாகிக் கொண்டு வந்தது.

1964 ஆம் ஆண்டு டிசெம்பர் 3ஆம் திகதி ஒரு முக்கிய நாள் ஆகும். அன்று கவர்னர் ஜெனரலுடைய சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றிதெரிவிக்கும் பிரேரணைக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்று தாக்கலாகியிருந்தது. இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் ஸ்ரீமாவோ அரசாங்கம் கவிழ வேண்டிய நிலை.

அன்றைய தினம் சபையின் முதல்வராகவும், காணி நீர்ப்பாசனம் மின்சக்தி அமைச்சராகவும் விளங்கிய ஸி.பி.த. ஸில்வாவும் 13 அங்கத்தவர்களும் எதிர்க்கட்சிக்குத் தாவினர்.

வாக்கெடுப்பு நிகழ்ந்த போது அரசாங்கத்துக்கு 73 வாக்குகளும் எதிர்க்கட்சிக்கு 74 வாக்குகளும் கிடைத்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் தொண்டமான் எந்தப் பக்கமும் வாக்களிக்கவில்லை. நடு நிலை வகித்தார்.

நன்றி மறவாத பண்பு தொண்டமானுக்கு உண்டு. இரண்டு காரணங்களுக்காக அவர் எதிர்த்து வாக்களிக்கவே விரும்பியிருப்பார். பத்திரிகைச் சட்டம் அவருக்கும் பிடித்தமானது அல்ல என்பது ஒரு காரணம். மற்றது, ஸ்ரீமாவோ இலங்கை தொழிலாளர் காங்கிரஸைப் புறக்கணித்து விட்டு புதுடில்லி சென்று ஒப்பந்தம் செய்து கொண்டமை.

அன்றையத் தினம் தொண்டமான் அரசாங்கத்தின் சார்பில் வாக்களித்திருந்தால் 74-74 ஆக வாக்குப் பதி வாகியிருக்கும். சபாநாயகரின் வாக்கோடு அரசாங்கம் தப்பிப் பிழைத்திருக்கும்.

அப்படி நிகழாமல் ஸ்ரீமாவோவின் அரசாங்கம் கவிழ்ந்து போயிற்று.

அதற்குப் பின்னர் வந்த 1965 பொதுத் தேர்தலில் ஐ.தே.க.வை ஆதரிக்க இ.தொ.க. முடிவு செய்தது. ஐக்கிய தேசியக் கட்சி அந்தத் தேர்தலில் வெற்றியீட்டியது. டட்லி சேனநாயகா பிரதம மந்திரியானார். பாராளுமன்றத்தில் தொண்டமான் போன்ற ஒரு சிரேஷ்ட அரசியல்வாதியும் அனுபவஸ்தரும் இருக்கவேண்டியதன் அவசியத்தை அவரும் உணர்ந்தார். தொண்டமான் மீண்டும் பாராளுமன்றத்தில் ஒரு நியமன அங்கத்தவரானார். 1965 முதல் 1970 வரை அந்தப் பதவியை வகித்தார்.

இந்த சந்தர்ப்பத்தில் தொண்டமான் தான் மட்டும் ஒரு நியமன அங்கத்தவராக ஆகிவிட்டால் போதும் என்று நினைத்தார் இல்லை. இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு அதிக பிரதிநிதித்துவம் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று நினைத்தார். எனவே பாராளுமன்றத்தில் மூன்று உறுப்பினர், செனட் சபையில் இரண்டு உறுப்பினர், மொத்தம் ஐந்து பிரதிநிதிகள் வேண்டும் என்று கோரினர். அவருடைய மதி யூகமும், பேரம் பேசும் சாமார்த்தியமும் இங்கு புலனாயிற்று.

டட்லி சேனநாயகா நான்கு பிரதிநிதிகள் தருவதற்கு இணங்கினர். பாராளுமன்றத்தில் தொண்டமான் ஒரு நியமன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கத்தவர் ஆனார். இன்னொரு நியமன அங்கத்தவராக வி. அண்ணாமலை நியமனம் பெற்றார்.

செனட் சபையில் இரண்டு இடங்கள் கிடைத்தன. எஸ். நடேசன், கியூ.ஸி. ஆர். ஜேசுதாஸன் ஆகிய இருவரும் செனட்டர்களாக நியமனம் பெற ஏற்பாடு செய்தார் தொண்டமான்.

டட்லி அரசாங்கத்தில் ஒரு பாராளுமன்ற அங்கத்தவராக இருந்த போது தொண்டமான் குறிப்பிடக் கூடிய ஒரு சாதனையைப் புரிந்தார்.

ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் படி 1964 ஆம் ஆண்டில் இந்திய வம்சா வழி மக்கள் 975, 000 பேர் இலங்கையில் இருப்பதாகக் கணக்கிடப்பட்டது. இதில் 375, 000 பேருக்கு இலங்கை பிரஜா உரிமை வழங்குவதெனவும், 600, 000 பேரை இந்தியா திருப்பி ஏற்றுக் கொள்வது என்றும், இந்த இரண்டு எண்ணிக்கையிலும் ஏற்படும் இயற்கைப் பெருக்கத்தையும் முறையே இருநாடுகளும் கணக்கில் எடுத்துக் கொள்வது என்றும் முடிவு செய்யப்பட்டது.

ஆனால், ஒரு நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது. அதாவது 7 பேர் இந்தியா போய்ச் சேர்ந்தால் 4 பேருக்கு இலங்கை பிரஜா உரிமை வழங்கப்படும் என்பதே அந்த நிபந்தனையாகும்.

**இந்த நிபந்தனையை இலங்கை அரசாங்கம் மாற்றியமைக்க வழி செய்தார் தொண்டமான். 7 பேர் இந்தியப் பிரஜையாகப் பதிவு செய்து கொண்டால் போதும் அதன் அடிப்படையில் 4 பேருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்படும் என்று விதியை மாற்றுவதற்கு டட்லியிடம் இணக்கம் பெற்றார்.**

**அத்தோடு டட்லி காலத்தில் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த அவசரகால சட்டத்தை சாதகமாகப் பயன்படுத்தி தோட்டத் தொழிலாளருக்கு ஒரு சம்பள ஏற்றத்தையும் பெற்றுக் கொடுத்தார் தொண்டமான்.**

இவ்வாறாக நியமன அங்கத்தவராக இருந்த போதும் இந்திய வம்சாவழியினருக்கும், குறிப்பாகத் தோட்டத் தொழிலாளருக்கும் ஏனையோருக்கும் அளப்பரிய பணிபுரிந்தார் தொண்டமான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970 ஆம் ஆண்டு முதல் 1977 ஆம் ஆண்டு வரை தொண்டமானின் பிரதிநிதித்துவம் பாராளுமன்றத்தில் இடம் பெறவில்லை. இந்தக் காலம் ஸ்ரீமாவோ பண்டாரநாயகா ஆட்சியிலிருந்த காலம் ஆகும்.

ஸ்ரீமாவோ பண்டாரநாயகா தமது ஆட்சிக்காலத்தில் இந்திய வம்சாவழியினருக்கு எண்ணற்ற இன்னல்கள் விளைவித்தார். இந்தியர்கள் காலங்கடந்து இலங்கையில் தங்கி யிருக்கிறார்கள் என்று அவர்களைக் கைது செய்து காம்பில் அடைத்தது எல்லாம் இந்தக் காலத்தில் தான். ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவுக்கு ஏற்ற ஒரு அமைச்சராக பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா பணிபுரிந்தார்.

இலங்கையின் மிகப் பெரிய தொழில் சங்கம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தொழில் சங்கம் தான். ஆகக் கூடுதலான எண்ணிக்கை கொண்ட உறுப்பினர்களை உடையதும் இந்த சங்கம் தான். எனவே, வெளிநாட்டில் உள்ள தொழில் ஸ்தாபனங்களுக்கு இலங்கைப் பிரதிநிதியாகச் செல்லும் உரிமை தொண்டமானுக்கே இருந்தது. ஆனால் இந்த உரிமையை மறுத்து, தொண்டமான் ஜெனிவா செல்ல முடியாதபடி தடுத்து நிறுத்தியது ஸ்ரீமாவோ அரசாங்கம். அதற்கு ஆதரவாக வேறு தொழிற் சங்க தலைவர்கள் ஸ்ரீமாவோவுக்கு ஒத்து ஊதலானார்கள். தொண்டமானுடைய இடத்தில் அவரைப் போல புகழும் பெருமையும் பெற வேண்டும் என்று கனவு கண்டவர்கள் அவர்கள். அதனால், அரசாங்கச் செல்வாக்கைப் பயன்படுத்தி தொண்டமானை நசுக்க முற்பட்டனர்.

இந்த நிலையைப் பொறுப்பாரா தொண்டமான்? எதிரிகளையும் எதிர்ப்பையும் முறியடித்து வெற்றி வாகை சூடுவது தானே அவர் தமது அரசியல் வாழ்வில் நிலைநாட்டிய சாதனை.

வெளிநாட்டு ஸ்தாபனங்களிடமும், வெளிநாட்டு தொழில் தலைவர்களிடமும் தமக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி, ஜெனிவா மாநாட்டுக்கு வரும் தகைமை இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்குத்தான் உண்டு என்ற அறிவிப்பை இலங்கை அரசுக்கு அனுப்பும்படி செய்து விட்டார்.

அதற்கு மேல் அரசு என்ன செய்ய முடியும்? வழக்கம் போல தொண்டமானின் சிம்மக் குரல் ஜெனீவா மாநாட்டில் ஒலிக்கவே செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது ஸ்ரீமாவோ அரசாங்கத்தில் காணி விவசாய அமைச்சராக இருந்தவர் ஹெக்டர் கொப்பேகடுவ. இவர் மலையகத்தில் தொண்டமானுக்கு உள்ள செல்வாக்கைக் கண்டு புழுங்கிப் பொருமைப் பட்டுக் கொண்டிருந்தார். தொண்டமானை ஒழித்துக் கட்ட வேண்டும் என்பது அவர் திட்டம்.

"தொண்டமான் யுகத்தை அழிப்பேன். தொண்டமானைக் கடலுக்கு அப்பால் தூக்கி எறிவேன்" என்றெல்லாம் சூளுரைத்திருந்தவர் கொப்பேகடுவ. இவரும், ஒரு நியமன அங்கத்தவரும் பின்னணியில் நின்றுதான் தொழில் அமைச்சர் எம்.பி.டி. சிறீவர்த்தனவைக் கொண்டு தொண்டமானின் ஐ.எல்.ஓ. பிரதிநிதித்துவத்துக்கு அதிர் வேட்டு வைத்தனர். ஆனால் அந்த வெடியைப் பிசுபிசுத்துப் போகச் செய்துவிட்டார் செயல் வீரர் தொண்டமான்.

1960 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஸ்ரீமாவோ 1965 ஆம் ஆண்டு பதவி விலகி பொதுத் தேர்தலை நடத்தியிருக்க வேண்டும். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. தமக்கிருந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பயன்படுத்தி ஆட்சியை மேலும் இரண்டு ஆண்டுகள் எதேச்சாதிகாரமாக நீடித்துக் கொண்டார்.

இதை எதிர்த்து ஜே.ஆர். ஜயவர்த்தன தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி பலவித எதிர்ப்புகளையும் ஆர்ப்பாட்டங்களையும் பேரணிகளையும், சத்தியாக்கிரகங்களையும் நடத்தியது. இவற்றிற் கெல்லாம் பக்கபலமாக நின்றார் தொண்டமான். இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் முழு ஆதரவையும் கொடுத்தது.

ஜே.ஆர். ஜயவர்த்தன அத்தனகலை சத்தியாக்கிரகத்தை ஏற்பாடு செய்த போது அதில் பங்கு கொள்ளுமாறு தொண்டமானையும் அழைத்தார். தொண்டமான் ஜனநாயகத்தில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டவர். பலாத்காரத்தையும் வன் செயல்களையும் தொண்டமான் என்றுமே ஆதரித்ததில்லை. காந்தி காட்டிய சாத்வீக வழியே தொண்டமானுடைய வழியுமாகும். அதனால், தொண்டமான் அத்தனகலைச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஜயவர்த்தனவுக்கு வலதுகரமாக நின்று ஒத்துழைத்தார். தமது உயிருக்கும் உடலுக்கும் ஆபத்து ஏற்படும் என்று தெரிந்தும் தொண்டமான் பின்வாங்கியதில்லை. தொண்டமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமன்றி இதர இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்களும் ஐக்கிய தேசியக்கட்சியினருடன் சேர்ந்து ஸ்ரீமாவோ அரசு எதிர்ப்பு போராட்டத்தில் பங்கு பற்றினர்.

1977 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சி ஆறில் ஐந்து பங்கு உறுப்பினர்களைப் பெற்று அமோக வெற்றி யீட்டியதற்கு தொண்டமானின் பங்களிப்பும், ஆதரவும் பெருங் காரணங்களாக இருந்தன.

1977 ஆம் ஆண்டில் தொண்டமான் நுவரேலியா மஸ்கேலியா தொகுதியில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசியல் பிரிவின் வேட்பாளராக சேவல் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றியீட்டினர். 1947 இல் தேர்ந்தெடுக்கப் பட்ட ஓர் அங்கத்தவராக அவர் பாராளுமன்றத்துள் பிர வேசித்தார். பின்னர் இரண்டு தடவைகள் நியமன அங்கத்தவராக விளங்கினர். முப்பது ஆண்டுகளுக்குப் பின்னர் அவர் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தவராக பாராளு மன்றத்துள் நுழைந்தார்.

தொண்டமானுடைய பாராளுமன்றப் பிரவேசம் இப்படியாக அமைந்துள்ளது. 1977இல் ஓர் அங்கத்தவராக பாராளுமன்றத்துக்குச் சென்றவரை தமது அரசாங்கத்தில் ஓர் அமைச்சராகப் பணியாற்றும்படி ஜனதிபதி ஜயவர்த்தன அழைக்கலானர்.

1978 முதல் தொண்டமான் அமைச்சராக விளங்குகிறர் கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமான் என்றல் அவருக்கு ஒரு தனிமதிப்பும், தனி கௌரவமும், தனி மரியாதையும் இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கிறது.

அதனல், இன்று அவர் மலையகத்தின் முடிசூடா மன்னராகவும், ஏனைய பகுதிகளில் வாழும் தமிழ் மக்களின் இன்னல்களையும் இடைஞ்சல்களையும் பாராளுமன்றத்தில் எடுத் துரைக்கும் ஒரு "பேசும் பிரதிநிதியாகவும், உலக அரங்கில் இலங்கையின் தமிழர் தலைவராகவும் அவர் பிரகாசிக்கின்றர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18

# தொண்டமான் இலங்கையின் முதலாவது சத்தியாக்கிரகி

சத்தியாக்கிரகம் என்ற சக்திவாய்ந்த ஆயுதத்தை அரசியலில் பயன்படுத்தி அரிய பல சாதனைகளைப் புரிந்தவர் மகாத்மா காந்தி.

முதன் முதலாக இந்த ஆயுதத்தை காந்தி தென் ஆபிரிக்காவில் பிரயோகித்தார். பின்னர் அவர் இந்திய அரசியலிலே, மகத்தான பராக்கிரமம் பொருந்திய பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக சத்தியாக்கிரக இயக்கங்களை நடத்தினார்.

இலங்கையின் அரசியலில் சத்தியாக்கிரகத்தை முதன் முதலாக உபயோகித்து சாத்வீகப் போராட்டம் நடத்திய முதல் மனிதர் சௌமியமூர்த்தி தொண்டமான்தான். இந்த வகையில் அவர் ஒரு முன்னோடி என்றே கூறவேண்டும்.

இலங்கை தமிழரசுக்கட்சி எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையில் காலிமுகத் திடலில் சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து நடத்திய சத்தியாக்கிரகம் 1956 ஆம் ஆண்டில் தான் இடம் பெற்றது. இதற்கு நான்கு வருடங்களுக்கு முன்பே தொண்டமான் சத்தியாக்கிரகம் என்ற ஆயுதத்தை அரசியலில் பயன்படுத்தி இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதிலிருந்து, தொண்டமான், தமது ஆரம்பகால அரசியல் வாழ்க்கையிலேயே காந்திஜியிடம் எவ்வளவு ஈடுபாடு கொண்டிருந்தார் என்பது தெரிகிறது அல்லவா?.

1948ஆம் ஆண்டில் பிரதம மந்திரியாகவிருந்த டி.எஸ். சேனநாயகா பாராளுமன்றத்தில் இரண்டு சட்டங்களை நிறைவேற்றினார். ஒன்று இலங்கை பிரஜா உரிமைச் சட்டம். மற்றது, இந்தியர் பாகிஸ்தானியர் (வதிவிட) பிரஜா உரிமைச் சட்டம்.

இந்த இரண்டு சட்டங்களும் இலங்கைவாழ் இந்தியர்களைப் பெரிதும் பாதித்தன. தோட்டத் தொழிலாளரை மிகுந்த கஷ்டத்துக்குள்ளாக்கின. இந்திய வம்சாவழியினரை மட்டுமன்றி, இலங்கைத் தமிழர்களையும், முஸ்லிம்களையும் கூட இந்தியர் பாகிஸ்தானியர் (வதிவிட) பிரஜா உரிமைச் சட்டம் சந்தேகப் பிரஜைகளாக ஆக்கியது.

இந்த இரு சட்டங்களையும் டி.எஸ். சேனநாயகா ஒரு பழிவாங்கும் செயலாகவே கொண்டுவந்தார் என்று தமிழ்த் தலைவர்கள் அப்போது அபிப்பிராயம் தெரிவித்தார்கள்.

அதாவது 1947 ஆம் ஆண்டில் நடைபெற்ற முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் இலங்கை இந்திய காங்கிரஸின் கொடியின் கீழ் மலைநாட்டுத் தொகுதிகளில் போட்டியிட்ட எட்டு வேட்பாளர்களில் ஏழு பேர் வெற்றி பெற்றுப் பாராளுமன்றத்துக்கு வந்தார்கள். இந்த வெற்றியே, டி.எஸ். சேனநாயகாவையும், பெரும்பான்மை மக்களையும் ஓரளவு உலுக்கிவிட்டது.

மலைநாட்டுத் தமிழ் மக்களான தோட்டத் தொழிலாளர் கணிசமான எண்ணிக்கையில் வசித்த தொகுதிகளில் அவர்களுடைய வாக்குகள் டி.எஸ். சேனநாயகாவின் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைக்கவில்லை. அவை, இடது சாரிக் கட்சிகளான லங்கா சமசமாஜக்கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர்களுக்கே கிடைத்தன. இதன் காரணத்தினாலும் டி.எஸ். சேனநாயகா இந்திய வம்சாவழி மக்கள் மீது கொதிப்படைந்திருந்தார்.

இந்த நிலைமை அடுத்துவரும் தேர்தல்களிலும் சம்பவிக்குமானால் ஐக்கிய தேசியக் கட்சி பலமிழந்து போகும் என்று எண்ணிய சேனநாயகா, அதற்கு ஒரு மாற்றுவழியாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் இந்தியர்களின் பிரஜா உரிமையைப் பறிக்கும் சட்டங்களைக் கொண்டு வந்தார்.

இந்த சட்டங்களுக்கு இலங்கை இந்திய காங்கிரஸ் தனது பலமான எதிர்ப்பைத் தெரிவித்தது. இந்தியர் பாகிஸ்தானியர் பிரஜா உரிமைச் சட்டத்தின்படி சில குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டவர்களே பிரஜா உரிமை பெறும் வாய்ப்பினைப் பெற்றவர்களாக கருதப்பட்டனர். அப்படியான தகுதிகளைப் பெற்றிருந்தவர்கள் கூட பிரஜா உரிமை கோரி ஒரு குறிப்பிட்ட திகதிக்கு முன் விண்ணப்பிக்க வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது.

இந்த நிபந்தனைகளை ஏற்று பிரஜா உரிமை கோரி விண்ணப்பிக்கக் கூடாது என்று இலங்கை இந்திய காங்கிரஸ் தமது உறுப்பினர்களையும், ஏனைய இலங்கை வாழ் இந்தியர்களையும் கேட்டுக் கொண்டது. இந்தக் கோரிக்கைக்கு இணங்க 90 சத விகிதம் இலங்கை இந்தியர் கட்டுப்பட்டு நடந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதற்கிடையில் இந்த மனிதாபிமானமற்ற சட்டங்களை வாபஸ் பெற வேண்டும், அல்லது இந்திய வம்சாவழி மக்கள் சுலபமான வழியில் இலங்கைப் பிரஜைகள் ஆவதற்கு ஏற்றவகையில் சட்டங்களில் திருத்தம் கொண்டுவர வேண்டும் என்று இலங்கை இந்திய காங்கிரஸ் தொண்டமான் தலைமையில் மூன்று ஆண்டு காலம் வலியுறுத்தி வந்தது. ஆனால் இலங்கை அரசு நியாயத்தை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது.

எனவே, 1952 ஆம் ஆண்டில் இலங்கை இந்திய காங்கிரஸ் ஒரு போராட்டத்தை நடத்துவது என்று முடிவு செய்தது. அதுதான் இலங்கை இந்திய காங்கிரஸின் சத்தியாக்கிரகப் போராட்டமாகும்.

இதற்கு இடையில் இலங்கை அரசாங்கத்தில் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டிருந்தது. பிரதம மந்திரியாயிருந்த டி.எஸ். சேனநாயகா 1952 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22ஆம் திகதி காலமானார். அவருடைய இடத்தில் அவர் மகன் டட்லி சேனநாயகா பிரதம மந்திரியானார்.

பிரதம மந்திரி டட்லி சேனநாயகாவின் காரியாலயத்தின் முன்னால் தலைவர்களும் தொண்டர்களும் உண்ணாவிரதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து சத்தியாக்கிரகம் புரிவது என்று தீர்மானிக்கப்பட்டது. கோஷ்டி கோஷ்டியாக தொடர்ந்து சத்தியாக்கிரகத்தை நடத்துவது என்பது தான் திட்டமாகும். இதில் இலங்கை இந்திய காங்கிரஸ் தலைவர்களும், சுமார் 1000 தொண்டர்களும் பங்கு பற்றினார்கள்.

முதல் நாள் சத்தியாக்கிரக கோஷ்டிக்கு தொண்டமான் தலைமை தாங்கினார். இவரோடு கே. ராஜலிங்கம், எஸ். சோமசுந்தரம், ஏ.அஸீஸ், கே. குமாரவேல் ஆகிய தலைவர்களும் சுமார் 500 தொண்டர்களும் சேர்ந்து கொண்டார்கள். இந்த சத்தியாக்கிரகம் நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அரசாங்கமும் சற்று அதிர்ச்சியடைந்திருந்தது.


கொழும்பு மெயின் வீதியில் அப்போது அமைந்திருந்த இலங்கை இந்திய காங்கிரஸ் தலைமை காரியாலயத்திலிருந்து ருந்து தலைவர்களும் தொண்டர்களும் காலையில் ஊர்வலமாக புறப்பட்டு பிரதம மந்திரி டட்லி சேனநாயகாவின் காரியாலயத்தை நோக்கிச் சென்றனர். கபூர் மாடிக் கட்டட சந்தியை அடைந்ததும் பொலீஸார் வந்து சூழ்ந்து கொண்டார்கள். தடுத்து நிறுத்த முற்பட்டார்கள். எனினும் அவர்களை மீறிக் கொண்டும் விலத்திக் கொண்டும் தொண்டமானும் மற்றும் சில தலைவர்களும், தொண்டர்களும் போகவேண்டிய இடத்துக்குப் போய்ச் சேர்ந்து விட்டார்கள். அங்கு சத்தியாக் கிரகமும் உண்ணாவிரதமும் ஆரம்பமாயின.

கோபத்தோடு வந்து சேர்ந்த பொலீஸார் குண்டாந்தடியினால் தொண்டர்களை அடித்து விரட்டினார்கள். தலைவர்கள் பெரும்பாலும் எம்.பி.க்களாக இருந்தார்கள். அதனால் அவர்களை அடிக்கும் துணிவு பொலீஸாருக்கு ஏற்படவில்லை. அவர்கள் இன்னொரு காரியம் செய்தார்கள். தலைவர்களைப் பிடித்துப் பலவந்தமாக பொலீஸ் மோட்டார் வான்களில் ஏற்றினார்கள். அவர்களைக் கொழும்பிலிருந்து 25 அல்லது 30 மைல்களுக்கு அப்பால் கொண்டுபோய் நடுத்தெருவில் இறக்கிவிட்டுவிட்டார்கள்.


தொண்டமான் போன்ற பெருந்தலைவர்கள் கால் நடையாக கொழும்பு நோக்கி வர வேண்டியிருந்தது. வழியில் கண்ட கார்க்காரர்களும் இவர்களை யார் என்று கேட்டு அடையாளம் கண்டு கொண்டு, ஏற்றிவர மறுத்துவிட்டார்கள். பஸ்வண்டிகளும் அப்படியே. அதனால் தலைவர்கள் இரவு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ்நாடு முதலமைச்சர் காமராஜருடன் தொண்டமான்.



தமிழ்நாடு முதலமைச்சர் எம்.ஜி. ராமச்சந்திரனுடன் கைகுலுக்கும் தொண்டமான்.



மகாத்மா காந்தியின் காரியதரிசி மகாதேவ தேசாயுடன் தொண்டமான். கூட இருப்பவர் ஐ.எக்ஸ். பெரேரா. இடம் — வார்தா மகாத்மா கல்லூரி




இலங்கை இந்தியத் தூதுவர் டி.என். டிக்ஷிட் அமைச்சர் தொண்டமானின் காரியாலயத்துக்கு வந்தபோது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்திய பிரதமர் மொரார்ஜி தேசாய் இலங்கை வந்த போது வரவேற்பு. கோதை தொண்டமான், ஜே.ஆர். ஜயவர்த்தன, தொண்டமான் ஆகியோர் காணப்படுகின்றனர்.




சென்னை கவர்னர் பிரகாஷ் உடன் தொண்டமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜனாதிபதி ஜயவர்த்தனாவுடன் அந்தரங்கப் பேச்சு.



பேத்தி பெற்ற மகனுடன் தொண்டமான். கூட இருப்பவர்கள்
புதுடில்லி உதவி அமைச்சர் சிதம்பரம்,
எம்.எஸ். செல்லசாமி, மூப்பனார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நேரு — தொண்டமான் சந்திப்பு. கூட இருப்பவர்
எஸ். டபிள்யு. ஆர்.டி. பண்டார நாயகா, கே. ராஜலிங்கம்



ஜயபிரகாஷ் நாராயண் குடும்பமும் தொண்டமான்
குடும்பமும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புது டில்லி விவசாய துணை அமைச்சர்
ஆர்.வி. சுவாமிநாதன், இலங்கை ஜனாதிபதி, தொண்டமான்.



இலங்கை இந்திய காங்கிரஸ் முதலாவது அங்குரார்ப்பண
மாநாட்டின் வரவேற்பு கமிட்டி (கம்பளை-1940). மத்தியில்
இருப்பவர் கமிட்டித் தலைவர் தொண்டமான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெகு நேரத்துக்குப் பின் கால் நடையாகவே கொழும்பை அடைய வேண்டியிருந்தது.

அடுத்த நாள் பாராளுமன்றக் கூட்டத் தொடரின் புதிய ஆரம்பம். கோலாகல திறப்பு விழாவுக்காகவும், கவர்னர் ஜெனரல் சோல்பரி பிரபுவின் சிம்மாசனப் பிரசங்கத்துக் காகவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அன்றைய தினம் தலைவர்களும், தொண்டர்களும் தனித்தனியாக மோட்டார் வண்டிகளில் ஏறிக்கொண்டு சரியான சமயத்தில் பாராளுமன்ற முன் வாயிலை அடைந்தார்கள். பொலீஸார் வந்து தொண்டர்களை அடித்துத் துரத்தினார்கள். ஆனால் தலைவர்கள் குறிப்பாக தலைவர் தொண்டமான் மறுத்துவிட்டார். தான் ஒரு எம்.பி. என்றும் பாராளுமன்ற கோட்டத்துள் இருக்க தனக்கு உரிமை உண்டு என்றும் வாதிட்டார். அத்தோடு தாம் இலங்கை இந்திய காங்கிரஸ் தலைவர் என்ற ஹோதாவில் பிரதம மந்திரிக்கு ஒரு மகஜர் கையளிக்கப்போவதாகவும் மிகுந்த தீரத்தோடு சொன்னார்.

பொலீஸார் பிரதம மந்திரியைத் தொடர்பு கொண் டார்கள். அவர் யாரையும் பாராளுமன்றப் படிகளில் உட்கார அனுமதிக்க வேண்டாம் என்று கட்டளை பிறப்பித்தார். உடனே பொலீஸார் தொண்டமானையும் ஏனைய காங்கிரஸ் எம்.பிக் களையும் அலக்காகத் தூக்கி புல்தரையில் வீசினார்கள். இந்த பலாத்காரப் பிரயோகத்தை ஒரு சத்தியாக்கிரகி என்ற அடிப்படையில் தொண்டமான் பொறுத்துக் கொண்டார்.

ஆனால், மற்றொருநாள் இன்னொரு சுவையான சம்பவம் நிகழ்ந்தது. அப்போதுதான் தொண்டமானின் துணிச்சலும் வீரதீர சாகஸமும் புலனாயிற்று.

தொண்டமான் தலைமையில் ஏனைய தலைவர்களும் தொண்டர்களும் சத்தியாக்கிரக நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது தொண்டமானின் தொண்டர் களான சத்தியாக்கிரகிகளை குதிரையைக் கொண்டு மிதிக்க வைத்துத் துவம்சம் செய்ய ஒரு பொலீஸ் அதிகாரி திட்டமிட்டார்.

தொண்டமானிடம் ஒரு சிறந்த குணம் உண்டு. எந்த இன்னலையும் தான் அனுபவிக்கச் சித்தமாக இருப்பார். ஆனால், பிறர் தாக்கப்படுவதையோ, துன்பப்படுவதையோ அவர் சகிக்கமாட்டார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென் ஆபிரிக்காவில், ஜொஹனஸ்பர்க் நகரில், ஒரு சத்தியாக்கிரகப் போராட்டத்தை காந்தி மகாத்மா ஏற்பாடு செய்தார். அப்போது, அங்கு அதிகாரத்திலிருந்த முரட்டுத் தளபதி ஒரு நடவடிக்கையைத் திட்டமிட்டான். அதை காந்தி என்ற சினிமா படத்தைப் பார்த்தவர்கள் அறிவார்கள். அந்த வெள்ளைக்கார தளபதி குதிரைப் படையைக் கொண்டு காந்தியின் சத்தியாக்கிரகிகளை குதிரைக் குளம்புகளால் மிதித்து துவம்சம் செய்தான்.

அப்படியே தலைவர் தொண்டமானின் சத்தியாக்கிரகிகளையும் மிதிக்க வைக்க இலங்கை பொலீஸ் பாதுகாப்புப் படையினர் திட்டமிட்டனர். பொலீஸ் அதிகாரி ஒருவன் மிகவும் உயரமும் பருமனுமான அராபியக் கருங்குதிரை ஒன்றின் மீது ஏறிக் கொண்டு, வேகமாக குதிரையை முடுக்கி விட்டான். மிக மூர்க்கத்தனமாக அந்தக் குதிரையின் குளம்புகளால் அப்பாவி சத்தியாக்கிரகிகளை மிதித்து துவம்சம் செய்ய வந்தான்.

எப்படித்தான் இந்த தாக்குதலை தொண்டமான் நொடிப் பொழுதில் கவனத்தில் கொண்டாரோ தெரியாது. அந்தக் கணத்தில் குதிரையை முன்நோக்கிப் பாய்ந்தார். அவருடைய இடது கரம் குதிரையின் கடிவாளத்தைப் பற்றியது. போலீஸ் அதிகாரி சற்றும் எதிர்பார்க்கவில்லை.

மறுகணம் தொண்டமானின் வலது கரம் குதிரையின் முகத்தில் ஓங்கி ஓர் அடி கொடுத்தது. குதிரையும் இப்படி ஒரு தாக்குதலை எதிர்பார்க்கவில்லை. அது தட்டுத்தடுமாறித் திசை திரும்பியது. மேலே கம்பீரமாக அமர்ந்து வந்த பொலீஸ் அதிகாரியும் நிலை குலைந்தான். அவன் நினைத்துவந்த காரியம் நடக்கவில்லை.

தொண்டமானுடைய இந்தத் தீரச் செயலினால் அன்று பல தொண்டர்கள் படுகாயம் அடையாமல் காப்பாற்றப் பட்டனர். இந்த சத்தியாக்கிரகப் போராட்டம் சுமார் 140 நாட்களுக்கு நடைபெற்றது. பின்னர் வாபஸ் பெறப்பட்டது.

காந்தீயவழிப் போராட்டங்களில் எப்பொழுதுமே அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர் தொண்டமான். அதனால் தான் 1975 - 1977 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில், ஸ்ரீமாவோ அரசாங்கத்தை எதிர்த்து, பொதுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தல் ஒன்றை நடத்துமாறு ஜே.ஆர்.ஜயவர்த்தன தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி நடத்திய சத்தியாக்கிரகப் போராட்டங்களிலும் தொண்டமான் பங்கு பற்றினர். அத்தளகலை சத்தியாக்கிரகப் போராட்டத்தில் உயிர் ஆபத்துக்களையும் எதிர்கொண்டார்.

தொண்டமானுடைய காந்திய வழிப் போராட்டத்துக்கு அவர் தோற்றுவித்த பிரார்த்தனைப் போராட்டமும் ஒரு சான்று.

இந்த புதிய முறைப் பிரார்த்தனைப் போராட்டம் அதிசயிக்கத்தக்க எத்தகைய வெற்றிகளை தந்தது என்பதைப் போராட்டங்களைப் பற்றி எழுதப்படும் பகுதிகளில் காண்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19

# தூக்கு மரத்திலிருந்து காப்பாற்றினர்

தூக்குக் கயிற்றிலே துடிதுடித்துத் தொங்க வேண்டிய தோட்டத் தொழிலாளர் எட்டுப் பேரைக் காப்பாற்றினர் தொண்டமான். இது ஒரு சம்பவம்.

வாடகை வீட்டைவிட்டு வெளியே துரத்தப்பட்ட ஒரு சிறிய அரசாங்க அதிகாரிக்கு வீடு கொடுத்து உதவினர் தொண்டமான். இது இன்னெரு சம்பவம்.

தொண்டமானுடைய கருணை தோய்ந்த உள்ளத்தை உணர்ந்து கொள்வதற்கு மேற்குறிப்பிட்ட இரண்டு சம்பவங்களையும் எடுத்துக் காட்டாக, அதாவது 'சாம்பிளாக' கொள்ளலாம்.

அபயம் என்று வந்தோருக்கு ஆறுதல் அளிக்கவும், உதவி என்று வருவோருக்கு உதவி வழங்கவும் தொண்டமான் ஒரு போதும் பின் நிற்கமாட்டார். அவரை நாடி வருபவர்களுடைய கஷ்ட நஷ்டங்களை அக்கறையோடு கேட்டு, தம்மால் முடிந்த ஒத்தாசைகளைப் புரிவது என்பது அவருடைய உயிரோடு ஊறிய பண்பாகும்.

தொண்டமான் பிறந்த பிரதேசத்துக்கு அருகிலேதான் பிரான் மலை இருக்கிறது. பாரி வள்ளல் பிரான் மலையில்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்தான் என்பது வரலாறு. பாரி வள்ளலைப் போல வாரி வழங்கும் அருங்குணமும் தொண்டமானிடம் உண்டு. நல்ல காரியம் என்று அவர் மனதுக்குப்பட்டுவிட்டால், செலவைப் பற்றிக் கவனியாமல் அந்த நல்ல காரியத்தை முன்நின்று முடித்து விட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பார்.

இவர் பிறந்த பிரதேசத்திலிருந்தும், இவர் தந்தை யாரிடமிருந்தும் கொடை கொடுக்கும் வள்ளல் தன்மை இவருக்குப் பாரம்பரியமாக வந்த ஒரு பண்பாக அமைந்து விட்டது.

இலங்கை இந்திய காங்கிரஸ் பிளவுபட்டிருந்த காலத்தில் குட்டாப்பிட்டி என்ற இடத்தில் ஒரு கலவரம் நடைபெற்றது. ஏதோ தனிப்பட்ட தகராறு ஒன்றில் அந்த தோட்டத்தைச் சேர்ந்த ஒருவர் கொலை செய்யப்பட்டார். அவரைக் கொன்றவர் யார் என்பது சரியாகத் தெரியாது. ஆனால் பொலீஸார் தோட்டத் தொழிலாளர் எட்டுப் பேர் மீது வழக்குத் தொடர்ந்தார்கள். கூட்டம் கூடி திட்டமிட்டு அவரைக் கொன்றதாக குற்றம் சாட்டினார்கள். பயங்கரமான கொலைக் குற்றம்.

ஒன்றும் அறியாத தோட்டத் தொழிலாளர் பதறிப் போனார்கள். அவர்களுடைய உறவினர்கள் கொழும்புக்கு வந்து ஒரு தொழிற் சங்கத் தலைவரைச் சந்தித்தார்கள். அந்த தொழிற்சங்கத்தில்தான் குற்றம் சாட்டப்பட்டு விளக்க மறியலிலிருந்த தோட்டத் தொழிலாளர்கள் உறுப்பினராக இருந்தார்கள்.

"அந்தத் தோட்ட தொழிலாளர்கள் ஒன்றும் அறி யாதவர்கள். எதுவித குற்றமும் செய்யாதவர்கள். பொலீஸார் வேண்டுமென்று அவர்களை மாட்டி வைத்திருக்கிறார்கள். எப்படியாவது அவர்களை விடுவிக்க வழி செய்யவேண்டும்" என்று அந்த தொழிற்சங்கத் தலைவரிடம் மன்றாடினார்கள் உறவினர்கள்.

முதலில் தலைவர் தயங்கினார். வற்புறுத்தல் தாங்கமுடி யாமல் ஒரு வழக்கறிஞரிடம் பேசினார். அந்த வழக்கறிஞர் பிரபலமானவர். சிங்களவர். அவரும் ஒரு அரசியல்வாதிதான். இடது சாரி கட்சி ஒன்றின் தலைவர்களுள் அவரும் ஒருவராக விளங்கினார். பாராளுமன்றத்தில் கூட அங்கத்தவராக இருந்தவர் அவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வழக்கில் ஆஜராவதற்கு தமக்கு ரூபா 5000 பீஸ் தரவேண்டும் என்று கேட்டார் அந்த வழக்கறிஞர். அவ்வளவுதான். தொழிற்சங்கத் தலைவர் அப்படியே இந்த சமாச்சாரத்தைக் கைவிட்டுவிட்டார். ஐயாயிரம் ரூபா பணம் செலவழிக்க தமது தொழிற்சங்கத்தால் முடியாது என்று சொல்லிவிட்டார்.

அதன்பின்னர் குற்றஞ்சாட்டப் பட்டவர்களின் சார்பில் கொழும்புக்கு வந்த உறவினர் தொண்டமானிடம் சென்றனர். நடந்த சம்பவங்களை எல்லாம் எடுத்துச் சொல்லி, அந்த எட்டு தோட்டத் தொழிலாளிகளையும் காப்பாற்ற வேண்டும் என்று முறையிட்டனர்.

விவரங்களை எல்லாம் கேட்டறிந்த தொண்டமான் அந்த தொழிலாளர் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டு அபாண்டமானதுதான் என்பதை உணர்ந்து கொண்டார். அவர்கள் எந்த தொழில்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைப் பற்றி அவர் கவலைப்படவில்லை. 'இவர்கள் நம்ம ஆட்கள் அல்லவே' என்று அவர்களை ஒதுக்கிவிடவில்லை. நிரபராதிகள் அநியாயமாக தூக்குமரம் ஏறப்போகிறார்களே என்றுதான் கவலைப்பட்டார். இழக்கப்பட்ட ஒரு உயிருக்காக எட்டு உயிர்களை மாய்ப்பதா என்றுதான் அவர் மனம் வாதித்தது.

"கவலைப்படாதீர்கள். நான் முடிந்ததைச் செய்கிறேன்" என்று வாக்குறுதியளித்தார் தொண்டமான்.

அடுத்த கணம் அவர் டெலிபோனை எடுத்து அப்போது பிரபல கிரிமினல் வழக்கறிஞராகவிருந்த ஜீ.ஜீ.பொன்னம்பலத்துடன் பேசினார். குட்டாம்பிட்டி வழக்கை அவர் ஏற்று வாதாட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். ஜீ.ஜீ. பொன்னம்பலமும் ஒப்புக் கொண்டார்.

வழக்கு விசாரணைக்கு வந்தது. ஜீ.ஜீ.பொன்னம்பலம் தமது வாதத்திறமையினால் வழக்கைத் தவிடு பொடியாக்கினார்.

அந்த எட்டுத் தோட்டத் தொழிலாளிகளும் விடுதலையானார்கள். தூக்கு மரத்தில் தொங்குவதிலிருந்து தப்பித்துக் கொண்டார்கள். அவர்கள் உயிரைக் காப்பாற்றி உதவினார் தொண்டமான். அந்த தொழிலாளர்களின், மனைவிமாரும் பிள்ளை குட்டிகளும் தொண்டமானுக்கு கோடி கோடி நன்றி தெரிவித்துக் கொண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீ.ஜீ.பொன்னம்பலம் வழக்கில் வெற்றியீட்டிவிட்டார் என்ற செய்தியை அறிந்ததும், அன்று மாலை தமது செக் புத்தகத்தை எடுத்துச் சட்டைப் பையில் போட்டுக் கொண்டு பொன்னம்பலத்தின் வீட்டுக்குப் போனார் தொண்டமான். பொன்னம்பலம் வரவேற்றார். அவர் வழக்கில் ஈட்டிய வெற்றிக்காக ஜீ.ஜீ.யின் திறமையை மனமாரப் பாராட்டினார் தொண்டமான்.

பின்னர், "உங்களுடைய பீஸ் எவ்வளவு?" என்று கேட்டார். பொன்னம்பலம் ரூபா 5000 என்று கூறினார்.

தொண்டமான் தமது சட்டைப் பையில் இருந்து செக் புத்தகத்தை வெளியே எடுத்து ரூபா 5000 க்கு செக் எழுதிக் கையொப்பமிட்டார்.

அந்தச் செக் இலங்கை இந்திய காங்கிரஸ் உடைய செக் அல்லவென்பதைக் கண்டு கொண்டார் பொன்னம்பலம். "இது யாருடைய செக்?" என்று கேட்டார் அவர்.

"ஏன், என்னுடைய செக் தான்" என்றார் தொண்டமான். "எதற்காக உங்கள் செக் தருகிறீர்கள்? இலங்கை இந்திய காங்கிரஸ் செக் இல்லையா?" இது பொன்னம்பலத்தின் கேள்வி.

"இல்லை. இலங்கை இந்திய காங்கிரஸ் கணக்கில் வங்கியில் போதிய நிதி இல்லை. அதனால் என் செக்கைத் தருகிறேன்" என்றார் தொண்டமான்.

"அப்படியானால் எனக்கு பணம் வேண்டாம். ஸ்தாபனத்தின் பணம் என்றால் தாருங்கள். உங்கள் சொந்தப் பணம் என்றால் வேண்டாம்" என்று பெருந்தன்மையாகக் கூறித் தொண்டமானிடமிருந்து பணம் வாங்க மறுத்துவிட்டார் பொன்னம்பலம்.

பொன்னம்பலத்துக்கும் தொண்டமானுக்கும் இடையே இப்படியான ஒரு நட்பும் ஒட்டுறவும் நீண்டகாலமாக இருந்து வந்தது. தொண்டமான் வாயால் சொன்னால் போதும் எந்த வழக்கையும் ஏற்று, அட்வான்ஸ் கூட வாங்காமல் ஆஜராகி விடுவார். அப்படித்தான் ஏனைய வழக்கறிஞர்களும் நடந்து கொண்டார்கள். தொண்டமானுடைய ஒரு சொல் எந்த அளவு தொகைக்கும் ஈடானது என்று மதிப்புப் பெற்றிருந்தது.

இலங்கை இந்திய காங்கிரஸின் பல வழக்குகளில் ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஆஜராகியிருக்கிறார். பல கமிஷன்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னால் இ.இ.காவின் சார்பில் தெரிபட்டு அவர் வாதாடி யிருக்கிறார். தோற்ற வழக்குகள் அதிகம் இல்லை. பெரும்பாலும் வெற்றியீட்டிய வழக்குகளாகவே இருந்தன.

சில சமயங்களில் பாரிய வழக்குகளை நடத்துவதற்கு இலங்கை இந்திய காங்கிரஸில் போதிய நிதி இல்லாமல் வாடிய சந்தர்ப்பங்களும் உண்டு. அப்படியான வழக்குக்ள் சிலவற்றிற்கு தொண்டமான் ஜீ.ஜீ.பொன்னம்பலம், கியூ.ஸி. எஸ்.நடேசன் கியூ.ஸி.போன்றவர்களைத் தமது சொந்தச் செலவிலேயே ஏற்பாடு செய்திருக்கிறார்.

தோட்டத் தொழிலாளர் வேலை நீக்கம் செய்யப்பட் டால், அல்லது அவர்களுடைய உரிமைகள் மறுக்கப்பட்டால் உடனே வழக்குத் தாக்கல் செய்ய தொண்டமான் பின் நிற்பதில்லை.

வழக்கு வென்றாலும் சரி, தோற்றாலும் சரி என்ற முடிவோடு உடனே தோட்ட முதலாளிகளைக் கோர்ட்டுக்கு இழுத்துவிடுவார். நல்ல தரமான வழக்கறிஞர்களை ஏற்படுத்தி நல்ல முறையில் வழக்குகளை நடத்துவார்.

இப்படி அவர் செய்வதற்கு காரணம் உண்டு. தோட்ட முதலாளிகள் தாம் நினைத்தபடி தொழிலாளர் விஷயத்தில் எதேச்சாதிகாரமாக நடந்து கொள்ள இடமளிக்கக் கூடாது. வழக்கு என்று போய்விட்டால் முதலாளிகள் பெரும் அளவில் பணத்தையும் செலவழித்துக் கொண்டு இரண்டு மூன்று வருடம் கோர்ட்டுக்கு அலைய வேண்டியிருக்கும். இப்படி அவர்களை அலைக்கழித்தால் நல்ல பாடம் படிப்பார்கள். சிறு சிறு விஷயங்களுக்கெல்லாம் தொழிலாளருடன் தாறுமாறாக நடந்து கொள்ளமாட்டார்கள்.

ஒரு தோட்டத்துரை மீது தொடர்ந்து வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டால் அப்படியான தோட்டத்துரையை நிர்வாகம் தொடர்ந்து பதவியில் வைத்துக் கொண்டிருக்க மாட்டாது. இப்படிப் பல தோட்டத் துரைமார்களுக்கு தண்டனை பெற்றுக் கொடுத்திருக்கிறார் தொண்டமான்.

தொழிலாளர் சார்பில் பேசப்படும் வழக்கு வென்றாலும் சரி, தோற்றாலும் சரி அது தொழிலாளிக்கு வெற்றி என்றே கருத வேண்டும். அதே சமயம் முதலாளி நஷ்டமும் கஷ்டமும் அடைந்து, நல்ல புத்தி புகட்டப்பட்டிருப்பார். அதனாலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர் சார்பில் வழக்காடுவதை ஒரு கடமையாகக் கொண்டு செயல்பட்டு வந்திருக்கிறது எமது ஸ்தாபனம் என்று தொண்டமான் கூறிக்கொள்வார்.

ஒரு சமயம் வழக்குகளின் செலவுகளை ஈடு செய்வதற்காக தொண்டமான் கண்டியில் தமக்கு சொந்தமாக இருந்த ஒரு தோட்டத்தை இரண்டு லட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்து அந்தப்பணத்தை வழக்கறிஞர்களுக்கு கொடுக்கவேண்டியும் ஏற்பட்டது.

தம்மிடம் உதவி நாடி வந்தவர்களுக்கு தொண்டமான் எப்படி ஒத்தாசை செய்தார் என்பதற்கு குட்டாப்பிட்டி கொலை வழக்கு ஒரு தக்க சான்று. இது தோட்டத் தொழிலாளரான தமிழ் மக்களுக்கு செய்த உதவியாகும்.

இன்னொரு உதாரணத்தைப் பார்ப்போம். இது தமக்கு கொஞ்சம் கூட சம்பந்தமில்லாத, அறிமுகம் இல்லாத, ஒரு சிங்களவருக்கு செய்த உதவியாகும்.

அவருடைய பெயர் ஆர்.எஸ்.ராமநாயகா. பிற்காலத்தில் இலங்கை அரசாங்கத்தில் காணி சீர் திருத்தக் கமிஷன் தலைவராக விளங்கியவர். பின்னர் யூகோஸ்லாவிய நாட்டில் இலங்கையின் தூதுவராகப் பதவி ஏற்றவர். இவ்வளவு அந்தஸ்தும், உயர்வும் பெற்ற அந்த மனிதர் தொண்டமானைப் பற்றி தம் கைப்படவே ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அந்தக் கட்டுரையில் அவர் தொண்டமானை மலைநாட்டு தமிழ் மக்களின் மோஸஸ் என்று குறிப்பிடுகிறார். மோஸஸ் என்பவர் பைபிள் நூலின் பழைய ஏற்பாட்டில் வரும் ஒரு பாத்திரம்.

மோஸஸ் நினைத்திருந்தால் ஒரு ராஜகுமாரனாக வாழ்ந்து, வாழ்க்கையின் சகல இன்பங்களையும் நுகர்ந்திருக் கலாம். அந்த இன்பங்களை எல்லாம் துறந்தார் மோஸஸ். அவர் தனது மக்களுக்காக வாழ்ந்தார். எகிப்து நாட்டின் உல்லாசங்களை எல்லாம் உதறித் தள்ளிவிட்டு தனது மக்களை இறைவனால் வாக்குறுதி அளிக்கப்பட்ட ஒரு நாட்டுக்கு அழைத்துச் சென்றார். கஷ்டங்களையும் துன்பங்களையும் அவர் பொருட்படுத்தியதே இல்லை. தனது மக்களுக்காக அவர் எல்லா இன்னல்களையும் ஏற்றுக் கொண்டார். தான் வருந்திய போதிலும் தனது மக்களுக்கு ஒரு நல்ல வாழ்வை அமைத்துக் கொடுக்கவேண்டும் என்று மோஸஸ் பாடுபட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டமான் நினைத்திருந்தால் அவருக்கு இருந்த செல்வச் சிறப்புக்கும், வாழ்க்கை வசதிகளுக்கும் அவர் ஒரு மன்னரைப் போல வாழ்ந்திருக்கலாம். பக்கா சாகிப் வாழ்க்கையை அதாவது ஒரு வெள்ளைக்காரத் துரை மகனுடைய வாழ்க்கையை நடத்தியிருக்கலாம். உலகின் எல்லா இன்பங்களையும் அனுபவித்திருக்கலாம். எல்லாப் போகங்களிலும் துய்த்திருக்கலாம்.

ஆனால் தொண்டமான் தன் மக்களுக்காக மோஸஸ் போல எளிய வாழ்க்கையைத் தழுவிக் கொண்டார். நாடற்றவர்களாக, வாக்குரிமை அற்றவர்களாக, அடிமைகளாக, ஒடுக்கப்பட்டவர்களாக வாழ்ந்த தோட்டத் தொழிலாளரான இலங்கை வாழ் இந்திய மக்களுக்காக, அவர் தமது வாழ்க்கையை அர்ப்பணித்தார்.

அவர்களை இந்த நாட்டின் முதலாந்தர பிரஜைகளாக உயர்த்திவிட வேண்டும் என்ற இலட்சியத்துக்காக அவர் ஆண்டாண்டாக உழைத்து வருகின்றார். இந்திய வம்சாவழி மக்களுக்கு கிடைத்த ஓர் அருஞ் செல்வம் தொண்டமான். அவர் உண்மையிலேயே மற்றொரு மோஸஸ் தான்.

இப்படி எழுதுகிறார் ஆர்.எஸ்.ராமநாயகா.

இந்த அளவுக்கு தொண்டமானை ஏற்றிப் போற்றி எழுதுவதற்கு அவருக்கு கிடைத்த அனுபவம்தான் என்ன?

அவரே முழு விவரங்களையும் தமது கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அப்போது 1944 ஆம் ஆண்டு. வெள்ளைக்காரன் இந்த நாட்டை ஆண்ட காலம். ராமநாயகா படிப்பை முடித்துக் கொண்டு உத்தியோகம் தேடினார். அவருக்கு டி.ஆர்.ஓ.பதவி கிடைத்தது. டிஸ்ட்ரிக் ரெவ்னியூ ஆபீஸராக அவர் கொத்மலைக்கு நியமிக்கப்பட்டார்.

நுவரேலியா உதவி அரசாங்க அதிபரிடம் சென்று தமது பெயரைப் பதிவு செய்து கொண்டு, கொத்மலைக்குப் போய்ச் சேர்ந்தார். அவருக்கு முன் அங்கு பதவியிலிருந்தவரிடம் வேலையை ஒப்புக் கொண்டார். அவர் வாடகைக்கு இருந்த வீட்டையும் ராமநாயகாவுக்கே கொடுத்துவிட்டார், வெளியேறும் அந்த உத்தியோகஸ்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன வாடகை என்று கேட்டார் ராமநாயகா. "நான் இவ்வளவு காலமும் மாதம் ரூபா 25 கொடுத்துவருகிறேன். நீங்களும் அப்படியே கொடுக்கலாம்" என்று சொல்லி அவர் வீட்டைக் காலி செய்து விட்டார்.

ராமநாயகாவுக்கு அப்போது மாதச் சம்பளம் ரூபா 250 தான். எனவே, வீட்டுக்கு ரூபா 25 நியாயமான வாடகைதான் என்று நினைத்துக் கொண்டார் ராமநாயகா.

மாதம் முடிந்தது. ஒரு நாள் வீட்டுச் சொந்தக்காரர் வீட்டு வாடகை அறவிட வந்தார். அவரிடம் ரூபா 25ஐக் கொடுத்தார் ராமநாயகா. வீட்டுக்காரர் சீற்றம் அடைந்தார். "இது என்ன ரூபா 25 தருகிறீர்கள்?" என்றார்.

"எனக்கு முன் இருந்தவர் இந்த வாடகைதான் கொடுத்ததாகச் சொன்னார்" என்றார் ராமநாயகா. "அது அவருக்கு நான் அளித்த சலுகை. நீங்கள் மாதம் ரூபா 250 வாடகை தரவேண்டும்" என்றார் வீட்டுச் சொந்தக்காரர்.

ராமநாயகாவுக்கு தலை சுற்றியது. அவருடைய மாதச் சம்பளமே ரூபா 250 தானே. இந்த நிலையில் வீட்டு வாடகையாக அவரால் எப்படி ரூபா 250 கொடுக்க முடியும்?

"இந்த வாடகை என்னால் தரமுடியாது. நான் வீட்டைக் காலி செய்து விடுகிறேன்." என்று சொல்லி விட்டார் ராமநாயகா.

அப்படி ராமநாயகா சொல்லிவிட்ட போதிலும் வேறு வீட்டுக்கு எங்கே போவார் அவர்? கொத்மலைப் பிரதேசத்தில் நல்ல வீடே கிடைக்கவில்லை. தேடித் தேடி அலுத்துப் போனார்.

அந்த சமயம் ராமநாயகாவின் தலைமைக் கிளார்க் ஒரு ஆலோசனை கூறினார். "இந்தப் பகுதியில் தொண்டமான் என்று ஒருவர் இருக்கிறார். பெரிய தனவந்தர், தோட்ட முதலாளி. இந்த பகுதி மக்களுக்கு அவர் ஒரு முடிசூடா மன்னராக விளங்குகிறார். அவரிடம் போய்க் கேளுங்கள். அவர் உங்களுக்கு நிச்சயம் உதவி செய்வார்" என்று சொன்னார் அந்த குமாஸ்தா.

ராமநாயகா அப்போது வயதில் இளையவர். புதிதாக அரசாங்க உத்தியோகம் பெற்றவர். அவருடைய கர்வமும் கௌரவமும் அவரைத் தொண்டமானிடம் செல்வதற்கு அனுமதிக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் ஒரு அரச உத்தியோகஸ்தன். எந்த முடிசூடா மன்னனிடமும் நானுகப் போகமாட்டேன். அது என் பதவிக்கு இழுக்கு" என்று கருதினுர் ராமநாயகா. அந்தக் காலத்தில் ஒரு பிரதேசத்துக்கு டி.ஆர்.ஓ. என்ருல் ஒரு குட்டி ராஜா மாதிரி. ராமநாயகா தொண்டமானிடம் போகவில்லை.

ஆனுல் தொண்டமான் ராமநாயகாவின் உதவிக்கு தாமாகவே முன்வந்தார். இளம் உத்தியோகஸ்தரான ராமநாயகா வீடு இல்லாமல் தவிக்கிருர் என்பதைக் கேள்விப் பட்டதும், அவர் ராமநாயகாவுக்கு ஆள் அனுப்பி, அவரை வரவழைத்து தமக்கு சொந்தமாக இருந்த வீடு ஒன்றை எந்தவித வாடகையும் இன்றி ராமநாயகாவுக்கு கொடுத்து உதவினுர்.

இந்த பரோபகாரச் செய்கையை நினைத்து நினைத்து "இவரன்ருே மனிதர்!" என்று வியந்து எழுதியிருக்கிருர் ராமநாயகா.

அதன் பின்னர் ராமநாயகாவும் தொண்டமானும் அத்தியந்த நண்பர்கள் ஆகிவிட்டார்கள். பின்னுளில் இந்திய ஜனுதிபதியாக விளங்கிய வி.வி.கிரி போன்ற பிரமுகர்களை, பெரிய மனிதர்களை, தான் தொண்டமானுடைய இல்லத்தில் சந்தித்து உறவாடிய அனுபவங்களை எல்லாம் அழகாக எடுத்துரைகிருர் ராமநாயகா.

1944 ஆம் ஆண்டில் தான் தொண்டமான் முதன் முதலாக இலங்கை இந்திய காங்கிரஸின் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த தெரிவு நுவரேலியாவில் நடைபெற்ற இ.இ.கா.வருடாந்த மாநாட்டில் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து தொண்டமானுக்கு அந்தப் பகுதியில் உள்ள கிராமத்துமக்கள், தோட்டத் தொழிலாளர்கள் எல்லாரும் சேர்ந்து ஒரு வரவேற்பு அளித்தார்கள். அந்த வரவேற்பின் போது மக்கள் சார்பில் முன் நின்று தொண்டமானை வரவேற்றுப் பேசவேண்டிய பணி, பகுதி டி.ஆர்.ஓ. என்ற முறையில் தனக்கு கிடைத்ததாகவும் பெருமைப் படுகிருர் ராமநாயகா.

அது மட்டுமா? அந்த வரவேற்பில் இந்திய மக்கள் மட்டுமன்றி, பல்லாயிரக்கணக்கான சிங்கள மக்களும் கலந்து கொண்டு தொண்டமானை ஏகோபித்து வாழ்த்தினுர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு காரணம் தொண்டமான் தமிழ் மக்கள், சிங்களமக்கள் என்ற பேதம் இல்லாமல் சகலருக்கும் உதவி புரிந்து வந்தார். அதனுல் தான் அவர் அந்தப் பகுதியில் "முடிசூடா மன்னர்" என்று மதிக்கப்பட்டார் என்று கூறுகிருர் ராமநாயகா.

தொண்டமானுடைய பண்புக்கும், கருணை தோய்ந்த உள்ளத்துக்கும், கஷ்டத்துள் சிக்கியவர்களுக்கு கை கொடுத்து உதவும் பரோபகார சிந்தைக்கும் மேற்கூறிய இரண்டு சம்பவங்களும் ஒரு பானைச் சோற்றுக்கு இரு சோறு பதம் என்ற பாங்கில் அமைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20

# போராட்ட வீரர் தொண்டமான்

இலங்கை இந்திய காங்கிரஸ், பின்னர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்ற ஸ்தாபனங்களின் தன்னிகரில்லாத் தலைவர் என்ற முறையில் தொண்டமான் தலைமை தாங்கி நடத்திய தொழிலாளர் போராட்டங்கள் மிகப் பல. வெற்றியீட்டிய போராட்டங்களும் மிகப்பலவாகும். ஒரு சிலவற்றில் வெற்றிகாண முடியாவிட்டாலும், தொழிற்சங்க வரலாற்றில் கொள்கை ரீதியான சாதனைகளுக்கு அத்தகைய போராட்டங்கள் மூலம் வழி வகுத்திருக்கிறார்.

இலங்கையில் உள்ள வேறு எந்த தொழிற்சங்கமோ, அன்றி தொழிற்சங்கவாதியோ, இ.தொ.காவைப் போலவும், தொண்டமானைப் போலவும் போராட்டங்களை நடத்தி வெற்றிக்கு மேல் வெற்றியீட்டியதில்லை.

போராட்டங்கள் மூலமே இ.தொ.காவின் பெயரையும், புகழையும், செல்வாக்கையும் வளர்த்துக் கொண்டவர் தொண்டமான். இன்று இலங்கையில் மட்டுமின்றி, கிழக்கு ஆசியாவிலேயே மிகப் பெரிய தொழிற்சங்கமாக இ.தொ.கா. விளங்குகிறது என்றால், அந்த வளர்ச்சி தொண்டமான் சிந்தித்து, திட்டமிட்டு, காலமறிந்து; நடத்திய போராட்டங்களின் மூலமே ஏற்பட்ட வளர்ச்சியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டமான் தலைமை தாங்கி நடத்திய போராட்டங்கள் பெரும்பாலும் பிசுபிசுத்துப் போனதே கிடையாது. அந்த அளவிற்கு தொண்டமான் தனது தனித்துவத்தை ஸ்தாபித்திருக்கிறார்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு தொழிற்சங்கத்தை ஸ்தாபித்துக் கட்டி எழுப்புவது என்றால் சாமானியமான காரியம் அல்ல. இந்த நாட்டை ஆண்ட வெள்ளைக்காரனின் இனபந்துக்களான ஆங்கிலேயர்களே தோட்டங்களின் சொந்தக்காரர்களாக இருந்தார்கள். அவர்கள் தங்கள் தோட்டங்களில் தொழிற் சங்கம் முளைப்பதை விரும்பவில்லை. முளையிலேயே நசுக்கிவிட முனைந்தார்கள்.

தொழிற்சங்கங்களைப் பாதுகாக்கச் சட்டங்கள் இருக்கவில்லை. இருந்தாலும், அவை நல்லமுறையில் நடைமுறைப்படுத்தப் படவில்லை.

சங்கங்களின் வளர்ச்சியைத் தடுப்பதற்கு சங்க அங்கத்தினர்களைப் பழி வாங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. தொழிற்சங்கங்களை அழிப்பதற்கு பணமும், அதிகாரமும், காடைத்தனமும் கட்டுமீறிப் பயன்படுத்தப்பட்ட காலம் அது. தோட்டத் தொழிலாளர், தொழிற்சங்கம் என்றால் கேவலமாக நினைத்த காலம் அது.

ஒரு தொழிற்சங்கம் சற்றுத் தலைதூக்கினால் அதை உடைத்துக் குலைத்து விட போட்டித் தொழிற்சங்கங்கள் குழிபறித்தன. முதலாளிகளுக்கு ஒற்று வேலை செய்து தொழிலாளியைக் காட்டிக் கொடுக்கும் கோடாரிக் காம்புகளுக்கும் குறைவிருக்கவில்லை.

இப்படியான பின்னணியில் தான் தொண்டமான் இலங்கை இந்திய காங்கிரஸின் தலைமையை ஏற்று இந்த நாட்டில் தோட்டத் தொழிலாளரை ஒரு மாபெரும் சக்தியாகத் திரட்டி இன்றைய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை உருவாக்கினர். வளர்த்து எடுத்தார்.

தொழிலாளியைத் தண்டிப்பதற்காக அவனைத் திடுதிப்பென்று வேலையிலிருந்து நீக்கிவிடுவது சகஜமான காரியமாக இருந்தது. யாராவது தொழிலாளி தொழிற்சங்கத்தில் சேர்ந்தால் கூட, அல்லது தொழிற்சங்கம் அமைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்பட்டால் கூட, அவன் பழிவாங்கப்படுவான். வேலையிலிருந்து டிஸ்மிஸ் செய்யப்படுவான்.

தோட்ட முதலாளிகளின் இப்படியான செயல்களை எதிர்த்து நிறுத்துவதற்கு தொழிற்சங்கங்களுக்கு இருந்த ஒரே சக்தி போராட்டம் தான். போராட்டம் என்றால் அப்போது அது வேலைநிறுத்தப் போராட்டமாகவே இருந்தது.

தொழிற்சங்கப் போராட்டங்கள் மூன்று வகைப்பட்டன.

1. தொழிலாளர்களின் தொழில் உரிமைகளைப் பெறுவதற்காக நடைபெறும் போராட்டம்.
2. தொழிற்சங்க தத்துவத்தின்படி ஒரு கொள்கையை நிலைநாட்டுவதற்காக நடைபெறும் போராட்டம்.
3. உரிமையையும், கொள்கையையும் ஏககாலத்தில் பெறுவதற்காகவும், நிலைநாட்டுவதற்காகவும் நடைபெறும் போராட்டம்.

இந்த மூன்று வகையான போராட்டங்களிலும் தொண்டமான் ஈடுபட்டு, தலைமை தாங்கி, வெற்றிகளைப் பெற்றிருக்கிறார். போராட்டம் நடத்துவது என்றால் ஆள்பலம் மட்டும் இருந்தால் போதாது. நிதிப்பலமும் வேண்டும். ஆரம்ப காலங்களில் இ.இ.கா.விடமும் இ.தொ.கா.விடமும் பண பலம் இருக்கவில்லை.

அந்த நேரங்களில் எல்லாம் தொண்டமான் தன் சொந்தப் பணத்தை வாரி இறைத்துப் போராட்டங்களை நடத்தியிருக்கிறார்.

ஆரம்ப கட்டத்தில் அவர் முப்பெரும் சக்திகளை ஒரே சமயத்தில் எதிர்த்துப் போராடி தமது தொழிற்சங்கத்தை வளர்க்க வேண்டியிருந்தது. ஒன்று, அரசாங்கம் விரோதமாக இருந்தது. இரண்டு, தோட்ட முதலாளிகள் விரோதமாக இருந்தார்கள். மூன்று, போட்டி தொழிற்சங்கங்கள் விரோதமாகச் செயல்பட்டன. என்றாலும் போராட்ட வீரரான தொண்டமான் இந்த விரோதங்களை எல்லாம் முறியடித்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸை வளர்க்கலானார்.

இடைப்பட்ட காலத்தில் உள்ளுக்குள்ளேயே போட்டியும், பொறாமையும், பகையும், விரோதமும் தலைதூக்கின. அவற்றையும் வெற்றிகரமாக முறியடித்து இ.தொ.கா.வை இன்றைய உன்னத நிலைக்கு உயர்த்தி விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலையை அடைவதற்கு தொண்டமான் தன்னுடைய அயராத உழைப்பு, தன்னுடைய நேரம், தன்னுடைய பணம் ஆகிய எல்லாவற்றையும் ஈந்து இ.தொ.கா.வை வளர்த்திருக்கிறார். இப்படியாக ஆரம்பத்தில் வளர்த்த பின்னர்தான் இ.தொ.கா. தன் காலில் தானே நிற்கக்கூடிய பொருளாதார பலத்தை அடைந்தது.

இன்று உயர்ந்து நிற்கும் இ.தொ.கா.வை பின்நோக்கிப் பார்த்தால் தொண்டமான் தலைமையில் நடைபெற்ற போராட்டங்களின் பட்டியல் தெரிய வரும்.

1946-ஆம் ஆண்டு நடைபெற்ற உருளைவள்ளித் தோட்ட போராட்டத்துடன் தொண்டமானின் போராட்ட வரலாறு ஆரம்பிக்கிறது. அந்தப் போராட்டம் முதல், இந்த நூல் எழுதப்படுகிற காலம் வரை எத்தனையோ போராட்டங்கள். மூலோயா, கந்தஹேன, ஹைபோரஸ்ட், வனராஜா, கலேபொக்க, செண்ட் ஜேம்ஸ், மொண்டி கிறிஸ்டோ, கடியன்லேன, செண்ட் கிளயர் - இன்னும் எத்தனை எத்தனையோ போராட்டங்கள்.

இவற்றுள், வத்தேகம பகுதியில் உள்ள கலேபொக்க தோட்டப் போராட்டம் குறிப்பிடத்தக்கதாகும்.

கலேபொக்க தோட்டத்தில் ரேஸ் என்று ஒரு வெள்ளைக் காரத் துரை இருந்தார். இரக்கமற்றவரான அவர் தொழிலாளரைத் துன்புறுத்தினார். வேலைக்குப் பத்து நிமிஷம் பிந்திவந்தாலும் தொழிலாளிக்கு அரைநாள் பேர்தான் போடுவார். இதை மாயாண்டி என்ற ஒரு தொழிலாளி எதிர்த்த போது அவரை டிஸ்மிஸ் செய்துவிட்டார் ரேஸ் துரை.

மாயாண்டி இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர். எனவே, அவர் சார்பில் இ.தொ.கா. தலையிட்டு மீண்டும் மாயாண்டியை வேலைக்கு எடுக்க வேண்டும் என்று தோட்டத் துரைமார் சம்மேளனத்துடன் வாதாடியது. கோரிக்கை ஏற்றுக்கொள்ளப் படாததால், தொண்டமான் இந்தப் பிரச்சினையை நேரடியாகக் கையேற்றார்.

எட்டு டிவிஷன் கொண்ட பெரிய தோட்டம் அது. வேலை நிறுத்தம் செய்வது என்று முடிவு செய்தார் தொண்டமான். 5000 தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள். மூன்று மாதம் போராட்டம் நீடித்தது. எனினும் தோட்டத் துரைமார் சம்மேளனம் இறங்கி வரவில்லை.

அந்தக் காலத்தில் தோட்டத் தொழிலாளருக்கு கொடுக்கப் படும் ரேஷன் அரிசி தோட்டத்துரை மூலம் தான் கொடுக்கப் பட்டு வந்தது. உணவு கட்டுப்பாட்டுத் திணைக்களம் தோட்டத் துரையைத்தான் அதிகாரம் பெற்ற அரிசி விநியோகஸ்தராகப் பதிவு செய்திருந்தது.

தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்யவே அவர்களுக்கு அரிசி கொடுக்க மறுத்து விட்டார் தோட்டத்துரை. தொழிலாளரைப் பட்டினி போட்டால் அவர்கள் வேலைக்குத் திரும்புவார்கள் என்பது தோட்டத் துரையின் எண்ணம்.

தொண்டமான் விடவில்லை. உடனே, உணவு அமைச்சராக இருந்த பிலிப் குணவர்த்தனவிடம் சென்றார். நிலைமையை விளக்கினார். தொழிலாளருக்கு உரிய அரிசியைப் பெறுவதற்கு அரசு ஆடரோடு வந்தார்.

ஆனால் அரிசி வாங்குவதற்கு பணத்துக்கு எங்கே போவது? வாரம் ஒன்றுக்கு ரூபா 5000 தேவைப்பட்டது. இ.தொ.கா.வின் பணநிலை சரியாக இல்லை. எனவே, தொண்டமான் தனது சொந்தப் பணத்தைக் கொடுத்தே அரிசியும், ஏனைய உணவுப்பொருளும் வாங்கி அந்த 5000 தொழிலாளருக்கும் கொடுத்து உதவினார்.

துரைமார் சங்கம் சமரசத்துக்கு வரமறுத்து விட்டது. வத்தேகமபன்விலைப் பகுதியில் உள்ள தோட்டங்கள் எல்லா வற்றிலும் உள்ள 25000 தொழிலாளரை வேலைநிறுத்தத்தில் ஈடுபடுத்தினார். 16 நாள் இந்த வேலை நிறுத்தம் நடந்தது. அப்போதும் துரைமார் சங்கம் அடம் பிடித்தது. உடனே இலங்கை முழுவதும் வேலைநிறுத்தம் என்று அறிவித்தார் தொண்டமான். ஒரு நாள் மட்டும் அப்படி வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது. தோட்டத் துரைமார் சம்மேளனம் பணிந்தது. பிரச்சினைகளை லேபர் ஆர்பிற்றேஸனுக்கு விட்டு முடிவு காண்பதற்கு இணக்கம் தெரிவித்தது.

ஆர்பிற்றேஸனுக்கு வந்தபோது தொண்டமான் வெகு சாதுரியமாக தொழிலாளருக்கு அவசியமான வேறு சில கோரிக்கைகளையும் சேர்த்துக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் கேட்டவைகளில் சில: ஓவர் பவுண்டேஜ், காஷ் பிளாக்கிங்கிற்கு பணம், கவாத்து வெட்டலுக்கு பணம், குளொக்கிங் டைம் போன்றவையும் அடங்கின. தொழிலாளி வேலைக்கு என்று வந்தால் வேலை இல்லை என்று துரத்தி விட முடியாது. வேலை கொடுத்தாக வேண்டும் என்ற கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

துரைமார் சம்மேளனத்துடன் கைச்சாத்தான ஒப்பந்தத்தின்படி சகல தொழிலாளருக்கும் மாதாமாதம் ஒரு ரூத்தல் தேயிலை 40 சதத்துக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன் பிரகாரம் இன்றுவரை தொழிலாளி இந்த தேயிலையை 40 சதத்துக்குப் பெற்று வருகிறான்.

ஆர்பிற்றேஷன் தீர்ப்புப்படி எந்தத் தொழிலாளிக்காக தொண்டமான் போர் தொடுத்தாரோ, அந்தத் தொழிலாளியான மாயாண்டி திரும்பவும் வேலைக்கு எடுக்கப்பட்டார். தொண்டமான் தாமே திட்டமிட்டு, தாமே பொறுப்பேற்று, தாமே தலைமை தாங்கி நடத்திய இந்த கலேபொக்க போராட்டம் பரிபூரண வெற்றியில் முடிந்தது.

இந்தப் போராட்டத்தில் தொண்டமானுக்குப் பக்கபலமாக நின்று, ஆர். ஜேசுதாசன் பெரும் பாடுபட்டு உழைத்தார். கிடைத்த வெற்றியில் டிஸ்ரிக் பிரதிநிதியாக கடமையாற்றிய ஜேசுதாசனுக்கும் பெரும் பங்கு உண்டு. இந்த ஜேசுதாசனைத்தான் தொண்டமான் பின்பு ஒரு செனட்டர் ஆக்கினார்.

அந்தக் காலத்தில் தோட்டத் துரைமார் சம்மேளனத்துடன் போராட்டம் நடத்துவது என்பது சாமான்யமான விஷயம் அல்ல. வெள்ளைக்காரத் தோட்டத் துரைமார் கர்வம் பிடித்தவர்கள். பேச்சுவார்த்தைக்கு அழைத்தால் வரவே மாட்டார்கள். தொழிலாளர் பிரதிநிதிகளுடனும், தொழிற்சங்க உத்தியோகஸ்தர்களுடனும் சமமாக உட்கார்ந்து பேசுவது கௌரவக் குறைவு என்று நினைப்பவர்கள் அவர்கள்.

எனினும் அவர்களுடைய ஜம்பம் தொண்டமானிடம் பலிக்கவில்லை. தொண்டமானிடம் ஒரு குணம் உண்டு. நியாயத்தை ஏற்றுப் பணிந்து வந்தால் தானும் விட்டுக் கொடுத்துச் சமரசம் செய்து கொள்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டி போட்டு சவால் விட்டால் அவர் ஒரு போதும் பணிந்துபோக மாட்டார். என்ன செலவானாலும், என்ன நஷ்டம் ஏற்பட்டாலும், எந்த வகையிலும் பிரயாசைப் பட்டு வெற்றியை ஈட்டிவிடவே விரும்புவார்.

அது மட்டுமல்ல. ஒரு பிரச்சினையில் முரண்டிக் கொண்டால், அதைப் பக்க வேராகப் பிடித்துக் கொண்டு ஆணிவேரைத் தேடிப் பிடித்துக் கிண்டியெடுக்க முற்படுவார். ஒரு கோரிக்கையை வைத்து வேலைநிறுத்தம் செய்தாலும், சமரசம் பேசும்போது இன்னும் பல கோரிக்கைகளைப் பெற்றுக் கொள்வார். இது அவரிடமிருக்கும் ஓர் அதிசயமான திறமையாகும்.

எந்தப் போராட்டத்திலும் தொழிலாளர் நலனே அவர் மனதில் ஓங்கி நிற்கும். அவர் அணுகுமுறை அதற்கு ஏற்றாற்போலிருக்கும்.

ஒரு போராட்டத்தை தொண்டமான் எப்படி நடத்தி முடித்து வெற்றி கண்டார் என்பதற்கு கலேபொக்க போராட்டம் ஒரு சிறந்த உதாரணமாகும்.

மாயாண்டியை டிஸ்மிஸ் செய்து கலேபொக்க தோட்டத்தில் ஒரு போராட்டம் நடைபெறுவதற்கு காரணரா யிருந்தவர் ரூேஸ் என்ற தோட்டத் துரையாவார் என்று ஏற்கனவே சொல்லப்பட்டது. இவர் ஒரு வெள்ளைக்காரர்.

இதே வெள்ளைக்கார ரூேஸ் துரை ஓய்வு பெற்று இங்கிலாந்துக்குத் திரும்பிப் போகும் போது எப்படி மாறியிருந்தார் என்பது ரசமான செய்தியாகும். போராட்டம் நடந்து முடிந்த சில மாதங்களிலேயே அவர் தொண்டமானுடன் நெருங்கிய நண்பர் ஆகிவிட்டார். "தொழிலாளருக்காக தொண்டமான் ஆக்ரோஷத்துடன் போராடினாலும், தனிப்பட்ட முறையில் அவர் நல்ல மனிதர். விரோதியையும் நண்பர் ஆக்கிக்கொள்ள விரும்புபவர்" என்று ரூேஸ் அபிப்பிராயப் பட்டார்.

ரூேஸ் இங்கிலாந்துக்குப் புறப்படும் சமயத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மாநாடு ஒன்று நடைபெற்றது. அந்த மாநாட்டுக்கு ரூேஸ் நேரில் வருகைதந்து காங்கிரஸ் கொடியை ஏற்றி வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டம் என்ருல் தோட்டத் தொழிலாளரின் நலனிலேதான் நாட்டம் உடையவராக இருப்பார் தொண்டமான் என்பதற்கு இன்னும் ஓர் உதாரணத்தைப் பார்க்கலாம்.

கலஹா பகுதியில் இரும்புக் கொல்லே - எரின் எஸ்டேட் என்று ஒரு தோட்டம். அதன் முதலாளி ஒரு தமிழர். அதாவது இந்திய வம்சாவழித் தமிழர். தொண்டமானுக்குத் தனிப்பட்ட முறையில் வேண்டியவர். நண்பர் என்று கூடச் சொல்லலாம். அவர் பெயர் வீரப்பபிள்ளே.

வீரப்பபிள்ளே தமது இரும்புக் கொல்லேத் தோட்டத்தில் சில தொழிலாளர்களே வேலேநீக்கம் செய்தார். அந்தத் தொழிலாளர்கள் எந்தவித குற்றமும் செய்யவில்லே. அவருடைய இரும்புக் கொல்லேத் தோட்டத்தில் தொழில் சங்கம் அமைக்கப் பாடுபட்டார்கள். இ.தொ.கா.கிளே நிறுவ முற்பட்டார்கள்.

அந்தக் காலத்தில் தொழில் சங்கத்தை இல்லாமல் செய்ய வேண்டும் என்ருல் அதில் உள்ள உத்தியோகத்தர்களே யும், உறுப்பினர்களேயும் டிஸ்மிஸ் செய்வது ஒரு வழியாக இருந்தது.

தொண்டமான் அதற்கு இடம் கொடுக்கவில்லே. ஆட்களே டிஸ்மிஸ் செய்ததை அவர் ஆட்சேபித்தார். வீரப்பபிள்ளே மறுத்தார். உடனே இ.தொ.கா. இந்த விஷயத்தை கோர்ட்டுக்கு கொண்டு போவதென முடிவு செய்து வழக்குத் தொடர்ந்தது.

வீரப்பபிள்ளே கோர்ட்டுக்கு வந்தார். சாட்சிக் கூண்டில் ஏறி வாக்கு மூலம் அளித்தார். இ.தொ.கா.வுக்காக ஆஜரான வழக்கறிஞர் ஜீ.ஜீ.பொன்னம்பலம். அவர் வீரப்பபிள்ளேயைக் குறுக்கு விசாரணே செய்தார்.

பொன்னம்பலத்தின் சாதுரியமான குறுக்கு விசாரணேகளுக்கு வீரப்பபிள்ளேயால் ஈடுகொடுக்க முடியவில்லே. அவர் சாட்சிக் கூண்டிலேயே மயங்கி விழுந்தார். அந்த இடத்திலேயே மரணமானர்!

வீரப்பபிள்ளேக்கு ஏற்பட்ட முடிவைக் குறித்து தொண்டமான் பெரிதும் வருந்தினர். ஆனலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளருக்காக தாம் தம் கடமையை ஆற்றியது பற்றி ஆறுதல் அடைந்தார்.

இதில் ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால், வீரப்பபிள்ளை தொண்டமானுக்கு நன்கு பரிச்சயமானவர். நண்பர். இந்திய வம்சாவழித் தமிழர். ஆயினும் தொண்டமான் இ.தொ.கா.வின் தலைவர் என்ற முறையில் எது செய்ய வேண்டுமோ அதைச் செய்யப் பின் நிற்கவில்லை.

தொழிலாளருக்கு நன்மை தேடிக் கொடுக்கும் விஷயத்தில் நட்பையோ, உறவையோ பார்க்க மாட்டார் தொண்டமான். தமிழ் முதலாளியா, சிங்கள முதலாளியா, வெள்ளைக்கார முதலாளியா என்று பேதம் பாராட்டி, விட்டுக் கொடுக்க மாட்டார். தொழிலாளர் உரிமை நிலைநாட்டப்பட வேண்டும் என்ற ஒரே நோக்கோடு போராடுவார்.

இரும்புக் கொல்லை போராட்டம் பெரிய போராட்டமாக நடந்து இறுதியில் கோர்ட்டில் வெற்றியோடு முடிந்தது. வேலை இழந்த தொழிலாளர் திரும்பவும் வேலை பெற்றார்கள். தொண்டமானின் பாரபட்சமற்ற போராட்டத் துக்கு இரும்புக்கொல்லைப் போராட்டம் தக்க சான்றாகும்.

வீரப்பபிள்ளை மரணமடைந்து விட்டார் என்றதும் மனம் வருந்திய தொண்டமான் அவரைத் தம் விரோதியாகக் கருதவில்லை. நண்பர் என்ற ஸ்தானத்திலேயே வைத்திருந்தார்.

வீரப்பபிள்ளையின் மனைவியார் இந்தியாவிலிருந்து இலங்கை வரவேண்டியிருந்தது. அவருக்கு வேண்டிய விஸா முதலியவற்றை உடனுக்குடன் கவனித்து எடுத்துக் கொடுத்து, அவரை இலங்கைக்கு வரவழைத்தவர் தொண்டமான் தான்.

இப்படியான பண்புள்ள காரியங்களால் தொண்டமானை எவரும் பகைவராகக் கருதவில்லை. பல சிங்களத் தோட்ட முதலாளிகள் கூட அவரை நல்ல மனிதர் என்றே சொல்வார்கள். தொண்டமான் ஒரு போராட்ட வீரராக இருந்தாலும், பொதுமக்களுக்கு இனியவராகவே மதிக்கப்படுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21

# அச்சம் என்பதை அறியாத தலைவர்

பயம் என்றால் என்னவென்று அறியாதவர் தொண்டமான். பணக்காரர்களாய் இருப்பவர்கள் பயந்த சுபாவம் உடையவர்களாக இருப்பது சகஜம். இதற்கு மாறாக கோடீஸ்வரரான தொண்டமான் சிறுவயதிலிருந்தே துணிச்சல் மிக்கவராக விளங்கினார்.

அஞ்சாமை என்பது ஒரு தலைவருக்கு இருக்க வேண்டிய அருங்குணங்களில் ஒன்றாகும். பொய், களவு, காமம், புறங்கூறல், கொலை போன்ற தீய செயல்களுக்கு ஒருவர் அஞ்சத்தான் வேண்டும். ஆனால் ஒருவர் தம் கடமையைச் செய்யப் புறப்படும்போது தமது உயிருக்கோ, உடைமைக்கோ, அன்றி உடலுக்கோ ஆபத்து நேரும் என்று அஞ்சிக் கடமையிலிருந்து வழுவுவது அறிவுடைமை ஆகாது.

செய்ய வேண்டிய ஒரு காத்திரமான காரியத்தைப் பயம் காரணமாகச் செய்யாமல் விடுவது கோழைத்தனம். தொண்டமானிடம் கோழைத்தனம் என்றுமே இடம் பெற்றதில்லை. ஒரு காரியம் தர்ம நியாயமானது, அதனால் செய்தே தீரவேண்டும் என்று அவருக்குத் தோன்றினால், அவர் எந்த ஆபத்தையும், எந்த நெருக்கடியையும் பொருட்படுத்தாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரத்துடன் செய்து முடிப்பார். இதற்கு எத்தனையோ சான்று களைச் சொல்லலாம்.

எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டார நாயகா, பிரதமராக இருந்து நாட்டை ஆட்சி செய்த போது 1958 ஆம் ஆண்டு ஓர் இனக்கலவரம் வெடித்தது. அந்த நேரத்தில் பொகவந்த லாவையில், உணர்ச்சி வசப்பட்ட இரண்டு தோட்டத் தொழிலாளர்களான வாலிபர்கள், ஒரு மோட்டார் வண்டியில் பொறிக்கப்பட்டிருந்த சிங்கள ஸ்ரீ எழுத்தை அழித்து விட்டார் கள். அவர்கள் இருவரையும் பொலீஸார் பிடித்துக் கொண் டுபோய், பொலீஸ் ஸ்டேஷனில் அடைத்து விட்டார்கள். ஏனைய தொழிலாளர்கள் ஆவேசம் கொண்டவர்களாக பொலீஸ் ஸ்டேஷன் முன்னால் குவிந்தார்கள். அடைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு தொழிலாளர்களையும் விடுதலை செய்யுமாறு ஆர்ப்பாட்டம் செய்தார்கள். பொலீஸ் ஸ்டேஷ னைத் தாக்கி விடுவார்களோ என்ற பயம் பொலீஸ்காரர்களுக்கு ஏற்பட்டது. அதனால் அவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். இந்த துப்பாக்கிச் சூட்டில் ஐயாவு பிரான்ஸிஸ் என்ற தோட்டத்தொழிலாளி கொல்லப்பட்டான்.

தோட்டத் தொழிலாளர் கொதித்து எழுந்தார்கள். கடைகள் கட்டடங்கள் கொளுத்தப்பட்டன. வேற்று இன மக்கள் தாக்கப்பட்டார்கள். பதில் தாக்குதல்களும் தாராளமாக நடைபெற்றன.

கலவரம் கட்டுக்கடங்காமல் போயிற்று. பண்டார நாயகாவுக்கு நிலைமை அறிவிக்கப்பட்டது. அவர் முதலில் பொலீஸாரை மேலும் அனுப்பி நிலைமையைச்சீர் செய்ய முயற்சித்தார். பொலீஸார் அங்கு புகமுடியவில்லை. பின்னர் படைகளை அனுப்ப ஏற்பாடு செய்தார்

படை வருகிறது என்பதை அறிந்ததும் தோட்டத் தொழிலாளர்கள், தெரு கல்வெட்டுகளையும், மதகுகளையும் தகர்த்து விட்டார்கள். பாதைகளின் மத்தியில் பாரிய மரங்களை வெட்டித் தறித்துச் சரித்து விட்டார்கள். மோட்டார் டிரக்கோ, ஜீப் வண்டிகளோ போக முடியவில்லை. பட்டாளம் முன்னேற முடியாமல் தவித்தது.

இது முப்பது வருடங்களுக்கு முன்பு நடந்த சம்பவம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அப்போது, பட்டாளம் வருகிறது என்றால் பயந்த சுபாவம் படைத்த பாட்டாளி மக்கள் பதைத்துத் துடித்து ஓடிப் போய் விடுவார்கள். ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலீஸ் காரனின் தொப்பியைக் கண்டால் தோட்டத்தொழிலாளிகள் கண்ட கண்ட இடத்தில் பதுங்கிச் கொள்வார்கள். ஆனல், பொகவந்தலாவைத் தொழிலாளிகள் அசையவில்லை. வரட்டும் போராடுவோம் என்று எதிர்த்து நின்ருர்கள். மலைகளின் உச்சியில் ஏறி நின்று பாறுங்கற்களைக் கீழே உருட்டி விட்டு பட்டாளத்தை துவம்சம் செய்யத் தயாராஞர்கள்.

செய்தியை அறிந்ததும் பிரதமர் பண்டாரநாயகாவுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. உடனே அவருக்கு தொண்டமானுடைய ஞாபகம்தான் வந்தது. அவர் ஒருவருக்குத்தான் தோட்டத்தொழிலாளர் கட்டுப் படுவார்கள். அவர் சொல்லை மட்டுந்தான் கேட்பார்கள் என்பதை பண்டாரநாயகா உணர்ந்திருந்தார்.

உடனே அவர் தொண்டமானுடன் தொலை பேசியில் தொடர்பு கொண்டார். "தொண்டா, உங்கள் ஒருவரால் தான் இந்த நேரத்தில் எனக்கு உதவி செய்ய முடியும். செய்வீர்களா?" என்று கேட்டார்.

யார் உதவி கோரினலும் மறுத்து உரைக்கும் குணம் தொண்டமானிடம் இல்லை. தாமே, பொகவந்தலாவைக்கு நேரில் சென்று நிலைமையைச் சீர் செய்வதாக பண்டாரநாயகாவுக்கு உறுதியளித்தார் தொண்டமான். அதன்படி அங்கு புறப்பட்டுச் சென்ருர்.

நோர்வூட் என்ற இடத்திலிருந்து பொகவந்தலாவை சுமார் ஏழு மைல் தொலைவில் இருந்தது. இந்த ஏழு மைல்களையும் கடந்து செல்ல முடியவில்லை. பாதைகள் அடைக்கப் பட்டும், உடைக்கப்பட்டும் கிடந்தன. சுற்றி வளைத்து, மலைப் பாதைகளால் ஏறி இறங்கி அங்கு செல்ல வேண்டியிருந்தது.

எதுவந்தாலும் சரி என்ற மனேபாவத்துடன், மிக்க துணிவோடு தொண்டமான் அங்கு போய்ச் சேர்ந்தார். முதலில் ஆவேசமாக நின்றவர்கள் வருபவர் தொண்டமான் என்று அறிந்ததும் ஆத்திரம் தணிந்தார்கள். மோதலைத் தவிர்த்தார்கள்.

கொலைசெய்யப்பட்ட ஐயாவு பிரான்ஸிஸ் உடைய பிரேதத்தை அடக்கம் செய்ய முடியாத நிலை தோட்டத் தொழிலாளருக்கு ஏற்பட்டிருந்தது. தொண்டமான் மோதிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட இரு சாரருடனும், பொலீஸாருடனும் பேசி, நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார். ஐயாவு பிரான்ஸிஸ் உடைய மரணச் சடங்கை நடத்தி வைத்தார். வேண்டிய செலவுகளையும் தாமே ஏற்றுக் கொண்டார்.

பொகவந்தலாவையில் அப்போது நிலவிய பயங்கர சூழ்நிலையில் தொண்டமானைத் தவிர வேறு யாரும் அங்கே சென்றிருக்க முடியாது. ஆபத்தையும் நெருக்கடியையும் துணிச்சலோடு எதிர்கொள்ளும் தொண்டமானுடைய வீரம் அப்போது நிரூபணமாயிற்று.

கொதிப்பைத் தணித்து நிலைமையைச் சீராக்கி சௌஜன்னியத்தை ஏற்படுத்தியமை குறித்து பிரதமர் பண்டாரநாயகா மகிழ்ச்சியடைந்தார். தொண்டமானுக்கு நன்றி தெரிவித்தார்.

★

அச்சம், பயம் எதுவுமின்றி அநியாயத்தை எதிர்த்து நிற்கும் பண்பு தொண்டமானிடம் மட்டுமல்ல, அவருடைய தொண்டர்களிடமும் உண்டு. தொண்டமான் கட்டியெழுப்பியிருக்கும் ஸ்தாபனமான இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் அங்கம் வகிக்கும் பெண்கள் கூட வீராங்கனைகளாகவே விளங்குகிறார்கள். தங்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டால் அவர்கள் தங்கள் உயிரையோ, பிள்ளை குட்டிகளின் உயிரையோ துச்சமாக மதித்து உரிமைப் போராட்டத்தில் குதித்து, எந்தவித தியாகத்தையும் செய்யத் தயாராகிவிடுவார்கள்.

தொண்டமானிடம் குடி கொண்டிருக்கும் அஞ்சா நெஞ்சமும், வீர உணர்ச்சியும், தியாக சீலமும் அவருடைய தொண்டர் குழாத்திடமும் நிரம்பியிருப்பதில் ஆச்சரியம் இல்லை அல்லவா?

சிம்மாசனப் பிரசங்கத்தின் மீது வாக்கெடுப்பு நடைபெற்ற போது தொண்டமான் வாக்களிக்காமல் நடுநிலை வகித்ததனாலேயே ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவின் அரசாங்கம் 1964 ஆம் ஆண்டில் கவிழ வேண்டியதாயிற்று என்பது முன்பே விளக்கப்பட்டது அல்லவா? அப்போதிலிருந்தே தொண்டமான் மீதும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மீதும் பழிவாங்கும் உணர்ச்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டிருந்தது. தொண்டமானுடைய சக்தியையும் செல்வாக்கையும் முறியடிக்க வேண்டுமானல் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை உடைக்க வேண்டும் என்ற எண்ணம் ஸ்ரீமாவோ உட்பட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பலருடைய உள்ளத்தில் உதயமாகியிருந்தது. இதற்கு வழி என்ன?

வெள்ளைக்காரக் கம்பெனிகளிடமும், தனியார்களிடமும் உள்ள தேயிலை, ரப்பர் தோட்டங்களை தேசிய மயம் என்ற போர்வையில் அரசுடைமை ஆக்கி, அவற்றைத் துண்டு துண்டாகப் பிரித்து விட்டால், தொண்டமானுக்கு உள்ள தொழிலாளர் பலத்தை நசுக்கி விடலாம் என்று திட்டமிட்டது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி.

*1970* ஆம் ஆண்டு ஸ்ரீமாவோ பண்டாரநாயகா ஆட்சியைக் கைப்பற்றியதும் காணிச் சீர்திருத்தச் சட்டம் என்ற சட்டத்தைக் கொண்டுவந்து தோட்டங்களை எல்லாம் தேசிய மயமாக்கினர் ஸ்ரீமாவோ. தொண்டமானுடைய பல நூறு ஏக்கர் தோட்டங்கள் கூடப் பறிக்கப்பட்டன. ஆயினும் அவர் கலங்கவில்லை. சொந்தமாகத் தோட்டம் பெருமளவில் இல்லாத நிலையில் தான் இன்னும் அதிகமாக, இன்னும் வேகமாக தொழிலாளர்கள் நலனுக்காகப் பாடுபடலாம் என்று கூறினர் தொண்டமான்.

இந்தக் கால கட்டத்தில் முழு அரசாங்கமுமே தன் பலத்தை ஒன்று திரட்டி இலங்கை தொழிலாளர் காங்கிரஸை அழித்து ஒழித்து விடப் பாடுபட்டது. முழு மந்திரி சபை உறுப்பினர்களும், முழு சுதந்திரக்கட்சி அங்கத்தவர்களும், இடது சாரித் தொழிற்சங்கங்களும், இ.தொ.காவின் ஜன்ம விரோதியான ஒரு தொழிற்சங்கமும் சேர்ந்து தொண்டமானைப் பலவீனமாக்கும் முயற்சியில் மும்முரமாக இறங்கியிருந்த சமயத்தில் ஹெக்டர் கொப்பேகடுவ போன்ற அமைச்சர்கள் "தொண்டமானை கடலில் தூக்கி வீசுவோம்" என்று பகிரங்கமாகப் பேசியும் வந்தனர். ஆனல், தொண்டமான் எதற்கும் கலங்கினர் இல்லை.

தனியார் தோட்டங்கள் கையேற்கப்பட்டதும், அங்கிருந்த இ.தொ.கா. தொழிலாளர்கள் விரட்டியடிக்கப்பட்டார்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுடைய தொழிற்சங்க உரிமைகள் மறுக்கப்பட்டன, பலவித துன்பங்களுக்குள் அவர்கள் தள்ளப்பட்டார்கள். இப்படியெல்லாம் செய்வதன் மூலம் இ.தொ.கா. என்ற ஸ்தாபனத்தை மூடிவிடலாம் என்று மனப்பால் குடித்தது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம். இந்த நிஷ்டூரங்களை எல்லாம் வீரதீரத்தோடு எதிர்த்து நின்றார்கள் தொண்டமானுடைய இ.தொ.கா. தொழிலாளர்கள். நீண்ட போராட்டங்கள் கண்டிப் பகுதிகளிலும், கம்பளைப் பகுதிகளிலும், டெல்ரா, சொய்ஸி சங்குவார் தோட்டங்களிலும் இடம் பெற்றன.

தோட்டங்களை எடுத்து, அவற்றைத் துண்டு போட்டு, தங்களுக்கு வேண்டிய மக்களை அங்கு குடியேற்ற வேண்டும் என்ற கொள்கை 1975 முதல் 1977ஆம் ஆண்டுகளில் மும்முரம் அடைந்தது. இறுதிக் கட்டத்தில் நுவரெலியா பகுதியில் 7000 ஏக்கர் காணியை அரசாங்கம் சுவீகரிப்பது என்று முடிவு செய்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த ஏழாயிரம் ஏக்கர் கொண்ட பகுதிகளை பறித்தெடுப்பதன் மூலம் நுவரெலியாப் பகுதியில் நிலைபதியாக வாழ்ந்து தொழில் செய்து வரும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களை விரட்டியடிக்க முடியாது. அதை நான் அனுமதிக்கமாட்டேன் என்று மிகுந்த வீரத்தோடு எச்சரித்துக் கூறினார் தொண்டமான். நுவரெலியாப் பகுதியில் உள்ள இந்திய வம்சாவழியினரைக் கலைத்து விட்டால் தொண்டமானுக்கு அங்கு உள்ள ஆதரவு குறைந்துவிடும், இ.தொ.காவும் ஆட்டங்கண்டு விடும் என்பது அரசாங்கத்தின் எண்ணமாக இருந்தது. இந்த சூழ்ச்சித் திட்டத்துக்கு தொண்டமான் இடமளிக்க மறுத்துவிட்டார்.

அரசாங்கத்தின் திட்டத்தை யாரும் தடுத்து நிறுத்த முடியாது. அவசரகாலச் சட்டம் நடைமுறையிலிருக்கிறது. அந்தச் சட்டத்தின் கீழ், எதிர்ப்புத் தெரிவிப்பவர்களை எல்லாம் கைது செய்து சிறையில் தள்ளிவிடுவோம் என்று பயமுறுத்தியது அரசாங்கம். இ.தொ.கா. தொண்டர்கள் பணிய மறுத்துவிட்டார்கள். தொண்டமானும் அசைந்து கொடுக்கவில்லை. இந்தப் ஏழாயிரம் ஏக்கரை நீங்கள் எந்தக் காரணம் கொண்டும் எடுக்க முடியாது என்று சொல்லிவிட்டது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்தின் இந்த அநீதியான சுவீகரிப்பை எதிர்த்து தோட்டத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். டெவன் தோட்டத்தில் போராட்டம் நடைபெற்றபோது அதைத் தடுப்பதற்காக பொலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. லட்சுமணன் என்ற ஒரு தொழிலாளி சூடுபட்டு மரணமானுர். எனினும் போராட்டம் நிற்கவில்லை. தொடர்ந்து கொண்டே யிருந்தது.

வெஸ்வேட் ஹேறா என்று ஒரு தோட்டம். அந்த தோட்டத்தை சுவீகரிக்கும் நோக்கத்துடன் நுரவெரெலியா கவர்ண் மெண்ட் ஏஜண்ட் நிலத்தை அளந்து எடுப்பதற்காக அவரும், நிலை அளவைக்காரர்களும், மற்றும் பொலீஸ் சிப்பந்திகளும் பல ஜீப் வண்டிகளில் ஏறிக்கொண்டு தோட்டத்துக்குள் புக வந்தார்கள். தோட்டத் தொழிலாளர்கள் அவர்களுடைய பிர வேசத்தை எதிர்த்து நின்ருர்கள். வந்தவர்கள் பலவந்தமாக உள்ளே புக முயன்ருர்கள்.

அந்த சமயத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸைச் சேர்ந்த வீராங்கனைகளான தோட்டத் தொழிலாளப் பெண்கள் செய்த துணிகரமான காரியம் மயிர்க்கூச்செறிவதாகும்.

அவர்கள் என்ன செய்தார்கள்?

ஜீப் வண்டிகள் ஒன்றன்பின் ஒன்ருக வரிசையாக வந்து கொண்டிருந்தன. தொழிலாளர் தடுத்தும் அவை நிற்க வில்லை. உடனே, பெண்கள் தங்கள் இடுப்பில் இருந்த பச்சைக் குழந்தைகளைத் திடீரென்று ஜீப் வந்து கொண்டிருந்த பாதை யில் வரிசையாகக் கிடத்திவிட்டார்கள்.

"வேண்டுமானல் இந்தக் குழந்தைகளைக் கொன்று, நசுக்கிவிட்டு முன்னேறுங்கள்" என்று சொல்லி விட்டார்கள்.

"இது நாங்கள் வேலை செய்யும் தோட்டம். இந்தத் தோட்டத்திலிருந்து எங்களை அகற்ற உங்களுக்கு உரிமை கிடையாது" என்றும் சொன்ஞர்கள்.

வந்தவர்களுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. வந்த வழியே திரும்பிப் போனார்கள்.

அந்தப் பெண்கள் காட்டியது எத்தகைய வீரம். அவர் களிடம் நிரம்பியிருந்த துணிச்சலும், தியாக சக்தியும் தான் என்னே! அஞ்சா நெஞ்சம்தான் எத்தகையது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டமான் எப்படி துணிச்சல் நிரம்பிய வீரராக விளங்குகிறாரோ, அப்படியே அவர் தலைமையின் கீழ் உருவாக்கப்பட்ட ஆண்களும், பெண்களுமான தொழிலாளர்களும் வீரர்களாகவும், வீராங்கனைகளாகவும் விளங்குகிறார்கள்.

பெண்கள் இப்படித் தம் அருமைக் குழந்தைகளைப் பலிகொடுத்து தாங்கள் வாழ்ந்த பூமித்தாயைக் காப்பாற்ற முன்வந்த சம்பவம் காட்டுத் தீபோல் எங்கும் பரவியது. உடனே தலவாக்கொல்லை, ஹட்டன், மற்றும் பகுதிகளில் ஒரு பெரிய வேலை நிறுத்தப் போராட்டம் ஆரம்பித்துவிட்டது. ஒரு லட்சம் பேர் வேலை நிறுத்தம் செய்தார்கள். இந்த நிலைமையை அரசாங்கத்தால் சமாளிக்க முடியவில்லை. உடனே அரசாங்கம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸை அழைத்துப் பேசி, அந்தப் எழாயிரம் ஏக்கர் தோட்டத்தை கையேற்கும் நடவடிக்கையைக் கைவிட்டது.

அன்று அப்படி ஒரு போராட்டத்தை தொண்டமான் நடத்தாமல் இருந்திருந்தால், நுவரேலியாப் பகுதியில் உள்ள தோட்டங்கள் எல்லாம் இன்று அழிந்து போயிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22

# அமைப்பு நிர்வாக ஆற்றல் கொண்டவர்

ஒரு நிறுவனத்தைக் கட்டியெழுப்பி, அதைப் பலம் வாய்ந்த ஒரு ஸ்தாபனமாக்கி, அதன் தலைவராகப் பல ஆண்டு காலம் நிலைத்திருப்பதற்கு ஒருவருக்கு பலவிதமான ஆற்றல்களும் திறமைகளும் இருக்க வேண்டும்.

இந்த ஆற்றல்களையும், திறமைகளையும் ஒருவர் தன் சுய முயற்சியால் சம்பாதிக்கலாம் என்பது உண்மைதான். எனினும் இந்தப் பண்புகள் பிறப்பிலேயே அவருக்கு அமைந்திருந்தால் அந்தத் தலைவர் தன்னிகரில்லாத ஒரு தலைவராகப் பிரகாசிப்பார்.

தலைவர் தொண்டமான் ஒரு பிறவித்தலைவர். அவரிடம் எத்தனையோ ஆற்றல்களும், திறமைகளும், அருங்குணங்களும் நிரம்பியிருக்கின்றன. அதனுல் அவர் பெருந் தலைவராக விளங்குகிருர்.

தமது 31 ஆவது வயதிலேயே ஆசியஜோதி பண்டிட் ஜவாஹர்லால் நேருவால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இலங்கை இந்திய காங்கிரஸ் என்ற ஸ்தாபனத்தைக் கையேற்று, தமது 37 ஆவது வயதிலே அதை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பெயர் மாற்றம் செய்து, இன்று அதை கிழக்கு ஆசியாவின் மிகப் பெரிய தொழிற்சங்கமாக வளர்த்து. எடுத்திருக்கிறார் தொண்டமான்.

ஒரு ஸ்தாபனத்தைக் கட்டிக்காத்து வளர்ப்பதற்கு அதன் தலைவருக்கு அடிப்படையாக இரண்டு திறமைகள் இருக்க வேண்டும்.

*ஒன்று, அமைப்புத் திறன்* (Organising capacity)
*மற்றது, நிர்வாகத் திறன்* (Administrative ability)

இந்த இரண்டு திறமைகளும் தொண்டமானிடம் நிறைய உள்ளன.

அவருடைய அமைப்புத் திறன் 1940 ஆம் ஆண்டி லேயே தெரிந்துவிட்டது. இலங்கை இந்திய காங்கிரஸின் முதலாவது அங்குரார்ப்பண மாநாட்டை யார் நடத்துவது, எங்கே நடத்துவது, எந்த ஜில்லாக் கமிட்டி பொறுப்பேற்று, செலவு செய்து நடத்துவது என்ற தயக்கமும், நிச்சயமற்ற நிலைமையும் நிலவிய வேளையில், கம்பளையில் தாமே ஒரு வரவேற்புக் கமிட்டியை அமைத்து அதன் தலைவர் பொறுப் பையும் தாமே ஏற்றுக்கொண்டு, அந்த அங்குரார்ப்பண மாநாட்டை வெகு சிறப்பாக நடத்திக் காட்டினார் தொண்ட மான். அன்றே அவரிடம் நிறைந்திருந்த அமைப்புத் திறன் வெளிப்படத் தொடங்கிவிட்டது.

அதன் பின்னர் அவர் தோட்டந் தோட்டமாகச் சென்று, மேடை மேடையாகப் பேசி, தோட்டக் கமிட்டி களையும், ஜில்லாக் கமிட்டிகளையும், கிளைகளையும், மாகாண அமைப்புகளையும் ஏற்படுத்தி, இலங்கை இந்திய காங்கிரஸை மலையகம் எங்கும் வேர் கொள்ளச் செய்து, பின்னர் அதை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்ற ஆல விருட்சமாக வளர்த்தெடுத்தார். ஒரு லட்சமாக இருந்த அங்கத்தவர் தொகையை நாலு லட்சமாக அதிகரித்தார். இதுவும் அவரு டைய அமைப்புத் திறனுக்கு எடுத்துக் காட்டாகும்.

நாலு லட்சம் தோட்டத் தொழிலாளரைக் கொண்ட ஒரு ஸ்தாபனத்தைக் கட்டுக் குலையாமல் நிர்வகிப்பது என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலேசுப்பட்ட காரியமல்ல. கொழும்பில் உள்ள தலைமைக் காரியாலயத்தைத் தவிர, இன்னும் எத்தனை எத்தனை கிளைக் காரியாலயங்கள் எத்தனை எத்தனை ஊழியர்கள்!

இலங்கை தொழிலாளர் காங்கிரஸில், மாதர் காங்கிரஸ், இளைஞர் காங்கிரஸ், சமூக அபிவிருத்தித்துறை, தோட்ட சேவையாளர் காங்கிரஸ், இலங்கை ஆசிரியர் காங்கிரஸ், காங்கிரஸ் தொழில் நிறுவனம், சட்டப்பிரிவு, சர்வதேச உறவுகள் பிரிவு என்று எத்தனை எத்தனை உள்ளமைப்புகள், உட்பிரிவுகள்.

இவ்வளவையும் இயக்குவதற்கு அதற்கதற்கென்று அதிகாரிகளையும், சேவகர்களையும், சிப்பந்திகளையும் நியமித்து எல்லாவற்றையும் கட்டிக் காத்து திறம்பட நிர்வகித்து வரும் தனிப்பெருந் தலைவராக விளங்குகிறார் தொண்டமான். அவருடைய நிர்வாகத் திறமை ஒவ்வொரு செயலிலும், ஒவ்வொரு அமைப்பிலும் பிரதிபலிப்பதைக் காணும் போது தொண்டமான் ஒரு தலை சிறந்த நிர்வாகி என்பது நிலை நாட்டப்படுகிறது.

இவ்வளவு ஒரு பெரிய ஸ்தாபனத்தின் வருமானத்தையும், செலவினத்தையும் கட்டுப்படுத்துவதே கிரமசாத்தியமான காரியமாகும். வருடாந்தம் சுமார் ஒன்றரைக் கோடி ரூபா வருமானம் உள்ள ஸ்தாபனம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ். இந்த வருமானத்தைச் சீராகச் செலவு செய்து மாநாடு கூடும்போது முறையாகக் கணக்குகள் சமர்ப்பிப்பதில் எப்போதும் தொண்டமான் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறார். கணக்கு விவரங்கள், கணக்கு அறிக்கைகள் பிரசுரிக்கப்படுகின்றன. வைப்புகள், இருப்புகள், நிலையான ஆஸ்திகள் எல்லாம் உறுப்பினர்கள் அறியும் வண்ணம் பகிரங்கப்படுத்தப்படுகின்றன. சிறந்த நிர்வாகியான தொண்டமான் நிதி விஷயத்தில் காட்டும் அக்கறையும் கண்காணிப்பும் ஸ்தாபன வளர்ச்சிக்கு உறுதுணை செய்கின்றன.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் வளர்ச்சியில் எத்தனையோ தாக்கங்களை அது எதிர் நோக்க வேண்டியிருந்தது. அரசாங்கத்தால் ஏற்பட்ட தாக்கங்கள், தோட்ட முதலாளிகளால் ஏற்பட்ட தாக்கங்கள், போட்டி, தொழிற்சங்கங்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்ட தாக்கங்களைப் போலவே, உள்தாக்கங்களும் சில அவ்வப் போது உருவாகின. ஸ்தாபனத்தின் உள்ளேயே ஒரு சில பதவிப் போட்டிகள், பிளவுகள் ஏற்பட்டு அவற்றை எல்லாம் தொண்டமான் வெற்றிகரமாகச் சமாளிக்க வேண்டி யிருந்தது. அவருக்கு இருந்த அமைப்புத் திறனும், நிர்வாகத் திறனும், உறுப்பினர்களின் பக்கபலமுமே அவரை தோல்வி கண்டு துவண்டு விடாதபடி கைகொடுத்து உதவின.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைமைப்பதவி யைப் பிடிப்பதற்கு எப்போதுமே எஸ்.தொண்டமானுக்கும் ஏ.அஸீஸுக்கும் இடையே உள்போட்டி நிலவி வந்தது. இதன் ஆரம்பம் 1945 ஆம் ஆண்டு முதல் என்று சொல்லலாம். 1945 ஆம் ஆண்டில் இலங்கை இந்திய காங்கிரஸ் மாநாடு நுவரேலியாவில் நடைபெற்றது. அந்த மாநாட்டின் போது தலைவர் பதவிக்கு தொண்டமானும் அஸீஸும் போட்டியிட் டனர். தொண்டமான் வெற்றியீட்டினார். இந்தப் போட்டி தொடர்ந்து வந்தது. 1954 ஆம் ஆண்டு ஹட்டனில் மாநாடு நடைபெற்ற போது தலைவர் பதவிக்கு அஸீஸும் சோம சுந்தரமும் போட்டியிட்டனர். தொண்டமான் சோமசுந்தரத்தை ஆதரித்தார். போட்டியில் அஸீஸ் வெற்றி பெற்றார். அதைத் தொடர்ந்து மீண்டும் காங்கிரஸுக்குள் இரண்டு கோஷ்டிகள் உருவாகின. பிளவு ஏற்பட்டது. அஸீஸ் தமது ஆதரவாளர் களுடன் பிரிந்து சென்றார். ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் என்று தனிக்கட்சி அமைத்தார்.

இதே போல காங்கிரஸில் இருந்து பணிபுரிந்த வெள்ளையன், சி.வி.வேலுப்பிள்ளை, போன்றவர்களும் பிரிந்து சென்றார்கள். அந்த வேளையில் எல்லாம் இலங்கை தொழி லாளர் காங்கிரஸ் பலவீனப்பட்டு விடாதபடி கட்டிக் காத்தவர் தொண்டமான் தான்.

அஸீஸ் பிரிந்து சென்ற போது ஏற்பட்ட தாக்கம் பலமானதாக இருந்தது. காரணம் என்ன வென்றால், பல மாவட்டங்கள், பதுளை, எட்டியாந்தோட்டை, தலவாக்கொல்லை, மத்துகம, அப்புத்தளை போன்ற மாவட்டங்கள் அஸீஸ் கைக்குப் போய்விட்டன. கொழும்பு மெயின் வீதியில் இருந்த தலைமைக் காரியாலயத்தையும் பைல்கள், புத்தகங்கள், மற்றும் தஸ்தாவேஜுக்கள் எல்லாவற்றையும் அஸீஸுடைய ஆட்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். தலைமைக் காரியாலயமும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியூர்களில் இருந்த காரியாலயங்கள் பலவும் அஸீஸ் கைக்குப் போய்விட்டன.

இந்த நெருக்கடியான கட்டத்தில் தொண்டமானுடைய அமைப்புத் திறனும், நிர்வாகத்திறனும் எத்தகையன என்பது மேலும் புலனாவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அஸீஸின் ஆட்கள் எல்லாவற்றையும் கைப்பற்றிக் கொண்டு போன பின்னரும் தொண்டமான் தைரியம் இழக்கவில்லை. சோர்ந்து விடவும் இல்லை.

போனது போகட்டும் என்று விட்டுவிட்டு, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நமக்குத்தான் உரியது என்ற திட சித்தத்துடன், ஸ்தாபனத்தைப் புனரமைப்புச் செய்தார் தொண்டமான். கொழும்பில் தமக்கென ஒரு தலைமைக் காரியலயத்தை உருவாக்க வேண்டியிருந்தது. வெளியிடங்களிலும் புதுப்புதுக் காரியாலயங்களை, இடந் தேடிப்பிடித்து அமைக்க வேண்டியிருந்தது. இதற்கு எல்லாம் பெரும் பணம் தேவைப் பட்டது. தொண்டமான் தன்னுடைய சொந்தப் பணத்தையே செலவிட்டு, இந்தக் காரியங்களை எல்லாம் கனகச்சிதமாகச் செய்து முடித்தார்.

தொண்டமான் அன்று இல்லை என்றால் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்ற ஸ்தாபனம் அன்றே குலைந்து ஒழிந்து போயிருக்கும்.

இந்தப் பிளவு ஏற்பட்டது 1955 ஆம் ஆண்டில். பிரிந்து போன அஸீஸ் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் என்ற ஸ்தாபனத்தை 1956 ஆம் ஆண்டு ஜனவரி முதலாந்திகதி பதிவு செய்து 1960 ஆம் ஆண்டு வரை நடத்தி வந்தார். 1960 ஆம் ஆண்டில் பொதுத் தேர்தல் வந்தது. அந்த சமயம் அஸீஸ் திரும்பவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் வந்து இணைந்து கொள்ள விரும்பினார். இலங்கை இந்திய காங்கிரஸ் 1939 ஆம் ஆண்டில் தோன்றுவதற்கு காலாயிருந்தவர்களுள் ஒருவரான தானுப்பிள்ளை என்பவரின் மத்தியஸ்தத்தின் பேரில் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸுடன் வந்து இணைந்து கொண்டது. இந்த இணைப்புக்கு சம்மதித்தார் தொண்டமான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1960 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நான்கு தொகுதிகளில் போட்டியிட்டது. தொண்டமான் நுவரேலியா தொகுதியிலும் அஸீஸ் கொழும்பு மத்திய தொகுதியிலும் போட்டியிட்டனர். இ.தொ.கா. சார்பில் போட்டியிட்ட நால்வருமே தோல்வியுற்றனர். பின்னர் அடுத்த பொதுத்தேர் தல் அதே ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்றது. அந்தப் பொதுத்தேர்தலில் தொண்டமான் போட்டியிடவில்லை.

1960 ஜூலை பொதுத்தேர்தலின் போது தொண்ட மானும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவை ஆதரித்த காரணத்தினாலும், சிங்களப் பொதுமக்களின் ஆதர வினாலும், ஸ்ரீமாவோ வெற்றியீட்டி அரசாங்கம் அமைத்தார். அந்த அரசாங்கத்தில் தொண்டமான் ஒரு நியமன அங்கத்த வராக இடம் பெற்றார்.

தொண்டமானுடைய அமைப்புத் திறனுக்கும், நிர்வாக ஆற்றலுக்கும் இன்னொரு சம்பவத்தையும் குறிப்பிடலாம். பிரஜா உரிமைச் சட்டங்களை எதிர்த்து 1950 ஆம் ஆண்டு பகிஷ்கரிப்பு, சத்தியாக்கிரகம் எல்லாம் நடத்தப்பட்டன. இரண்டு ஆண்டுக்காலம் இந்த பகிஷ்காரம் நீடித்தது. அதன் பின்னர், பல ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தியும், இந்தி யாவின் ஆலோசனைகளைப் பெற்றும், பிரஜா உரிமைச் சட்ட எதிர்ப்புப் பகிஷ்காரத்தைக் கைவிடுவது என்றும், இந்திய வம்சாவழி மக்கள் இலங்கைப் பிரஜா உரிமை கோரி விண் ணப்பிப்பது என்றும் இ.தொ.கா.முடிவு செய்தது. இந்த முடிவு ஹட்டனில் நடைபெற்ற இ.தொ.கா. மாநாட்டில் மேற் கொள்ளப்பட்டது.

இந்த மாநாட்டிற்கு இந்தியாவிலிருந்து அசோக் மேத்தா, சிவஞான கிராமணியார், ஆசாரிய கிருபளானி, சுஜாதா கிருபளானி போன்ற தலைவர்கள் வந்து கலந்து கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பகிஷ்காரத்தை வாபஸ் பெறுவது என்று தீர்மானித் தும், ஒரு பாரிய வேலையை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஏற்க வேண்டியிருந்தது. அதாவது பிரஜா உரிமை விண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணப்பம் அனுப்புவதற்கு இருந்த கால அவகாசம் மூன்று மாதங்களே. இந்த மூன்று மாதங்களுக்குள் ஆறு லட்சம் தோட்டத் தொழிலாளர்களின் பிரஜா உரிமை விண்ணப்பங் களைத் தயாரித்து அனுப்பி வைக்க வேண்டியிருந்தது. போதிய படிப்பறிவும், ஆதார பத்திரங்களைத் தேடிப் பெறும் அனு பவமும் இல்லாத தோட்டத்து ஆண்களும் பெண்களும் விண்ணப்பங்களை முறைப்படி நிரப்பி, சமாதான நீதி வானுடைய அத்தாட்சி பெற்று அனுப்புவது எளிதான காரியமாக இருக்கவில்லை.

எனவே, தொண்டமான் இந்தப் பொறுப்பை ஏற்ருர். தமது இ.தொ.கா. ஸ்தாபனத்தின் மூலம் இந்த ஆறு லட்சம் விண்ணப்பங்களும் உரிய காலத்துக்குள் போய்ச் சேர வேண் டும் என்று திட்டமிட்டார். வேறு யாரும் உதவிக்கு வரவில்லை. இந்திய வர்த்தக சங்கம், இந்திய வியாபாரிகள் ஸ்தாபனங்கள் போன்றவை கூட உதவி செய்யவில்லை. இந்தக் காரியத்தைச் சாதிப்பதற்கு ஆள்பலம் தேவைப்பட்டது. 125 உத்தியோகஸ் தர்களைத் தொண்டமான் நியமித்தார். அவர்களுக்கு கொடுக்க வேண்டிய சம்பளம், போக்குவரத்து, இதர செலவுகள் யாவற்றிற்கும் வேண்டிய பணத்தைத் தொண்டமானே கொடுத்து உதவினுர்.

மனு அனுப்ப உதவிபுரியும் உத்தியோகஸ்தர்களும், இ.தொ.கா. தலைவர்களும், தொண்டர்களும் தோட்டந்தோட்டமாக, இரவு இரவாக சென்று மனுக்களைத் தயாரித்தார்கள். அந்தக் காலத்தில் தோட்ட லைன்களுக்கு இரவு வேளைகளில் வெளியார் பிரவேசிப்பது தடுக்கப்பட்டிருந்தது. அப்படி யிருந்தும் எப்படியோ சென்று இந்தக் காரியத்தை வெற்றி கரமாக முடித்தார்கள் இ.தொ.கா. ஊழியர்கள்.

அன்று ஆறு லட்சம் பேர் விண்ணப்பித்ததால் தான் இன்று பிரஜா உரிமை, வாக்குரிமை பெற்ற மக்கள் தோட்டத் தொழிலாளரிடையே கணிசமான அளவு இருக்கிருர்கள். அவர் கள் தமது வாக்குரிமையைப் பிரயோகித்து பாராளுமன்றத் தேர்தல்களிலும், மாவட்ட, மாகாண சபைத் தேர்தல்களிலும் தமது தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு அன்று இடப்பட்ட அத்திவாரமே காரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று மாத கால எல்லையுள் ஆறுலட்சம் பேரை பிரஜா உரிமை கோரி விண்ணப்பம் அனுப்பச் செய்த சாதனை இருக்கிறதே, அது அசகாய சாதனையாகும். தொண்டமானுடைய அமைப்புத் திறனும், நிர்வாகத்திறனுமே இந்த சாதனையில் வெற்றி கிடைப்பதற்கு வழி செய்தன என்றால் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23

# தொண்டமான் ஈட்டிய மிகப் பெரிய வெற்றி

தொழிலாளர் தலைவர் தொண்டமான் ஆயிரக்கணக்கான மக்களுக்கு இலட்சிய புருஷராக விளங்குகிறார். அதே வேளையில் அவரும் பல உயர்ந்த இலட்சியங்களை உடையவராக மிளிர்கின்றார்.

இ.இ.கா., இ.தொ.கா. ஆகிய ஸ்தாபனங்களின் தலைமைப் பதவியை ஏற்றதும் அவர் பல இலட்சியங்களை முன் வைத்து உழைக்கத் தலைப்பட்டார். பல்வேறு இலட்சியங்களைக் குறிக்கோளாக வைத்துப் பணி புரிந்து வந்த போதிலும், அவற்றுள் ஐந்து இலட்சியங்களை முக்கியமானவையாகக் கொள்ளலாம்.

1. இலங்கை வாழ் இந்திய வம்சாவழியினர் அனைவரும், குறிப்பாக ஆண்டாண்டு காலமாக இந்த நாட்டில் பாடுபட்டு உழைத்துவரும் தோட்டத் தொழிலாளர் அனைவரும், பிரஜா உரிமை பெற்று இதர சமூகத்தவரைப்போல் சரி நிகர் சமானமாக வாழ வேண்டும்.
2. மலையகத்தில் தொழில் புரியும் தேயிலைத் தொழிலாளருக்கும், ரப்பர் தொழிலாளருக்கும், மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயத் தொழிலாளர்களுக்கும், நாட்டின் ஏனைய தொழிலாளர் பெறும் சம்பளத்துக்கு சமமாகச் சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

3. தோட்டத் தொழிலாளர்களிடையே ஆண் தொழிலாளி, பெண் தொழிலாளி என்ற பேதம் இன்றி, இருசாராருக்கும் சமசம்பளம் கிடைக்க வழி செய்ய வேண்டும்.

4. மலைநாட்டுச் சிறுவர்களும், இளைஞர்களும் தரமான கல்வியைப் பெற்று நாட்டின் வசதி படைத்த மக்களுக்குச் சமமாக வாழ்க்கையில் ஏற்றம் பெறவேண்டும்.

5. தோட்டங்களும், தோட்டக் குடியிருப்புகளும் கிராமங்களாக புனர் நிர்மாணம் செய்யப்பட்டு, அங்கு வசிக்கும் தோட்டத் தொழிலாளிகள் வீட்டு வசதியும், வீட்டோடு கூடிய, உடன் இணைப்புக் காணியும் பெற வழி செய்யப்படவேண்டும்.

இந்த ஐந்து இலட்சியங்களையும் அடைவதற்காக தொண்டமான் பாடுபட்டு வந்திருக்கிறார், வருகிறார். இந்த இலட்சியங்களில் சிலவற்றை கணிசமான அளவு அடைவதில் அவர் வெற்றியும் கண்டிருக்கிறார்.

உதாரணமாக, தோட்டத் தொழிலாளரின் சம்பள உயர்வை எடுத்துக் கொள்ளலாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்பகுதியில் தொண்டமானுடைய தந்தையார் இலங்கைக்கு வந்த சமயத்தில் தோட்டத் தொழிலாளியின் சம்பளம் மிகக் குறைவாகவே இருந்தது. அவர் பெற்ற சம்பளம் நாள் ஒன்றுக்கு 13 சதம் தான்.

1970 - 1980 ஆம் ஆண்டுகளில் தேயிலைத் தோட்டங்கள் அதிகரித்து வந்தன. மேலதிக தொழிலாளர்கள் தேவைப்பட்டார்கள். இந்தியாவிலிருந்து அதிகம் தொழிலாளர்களை ஈர்த்தெடுப்பதற்காக சம்பளம் சிறிது உயர்த்தப்பட்டது. ஆண் தொழிலாளருக்கு 33 சதம் முதல் 37 சதம் வரையிலும், பெண் தொழிலாளருக்கு 25 சதம் முதல் 29 சதம் வரையிலுமாக நாள் சம்பளம் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்துக்கு காலம் தேயிலையின் விலை வீழ்ச்சியடைந்த போது, அல்லது நாட்டின் பொருளாதாரம் பொதுவாகப் பாதிக்கப்பட்டபோது, தொழிலாளரின் நாட்சம்பளமும் அதற்கு ஏற்றாற் போல குறைக்கப்பட்டது.

தோட்டத் தொழிலாளருக்கு இவ்வளவு தான் சம்பளம் கொடுக்க வேண்டும் என்று அந்தக் காலத்தில் எந்த ஒரு நியதியும் வகுக்கப்படவில்லை. தொழிலாளிகள் முதலாளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியோ அல்லது பேரம் பேசியோ சம்பளத்தை உயர்த்திக் கொள்வதற்கான வாய்ப்போ, அமைப்போ இருக்கவில்லை.

இந்திய தோட்டத் தொழிலாளர் சட்டம் என்று 1865 ஆம் ஆண்டிலும் 1889 ஆம் ஆண்டிலும் இரண்டு சட்டங்கள் உருவாக்கப்பட்டிருந்த போதிலும், அந்த சட்டங்கள் தோட்டத் தொழிலாளரின் அடிப்படைச் சம்பளத்தை நிர்ணயிக்கவில்லை. முதலாளிகளுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தப்படி தொழிலாளர் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்று பொதுப்படையாகவே அந்த சட்டங்களில் குறிப்பிடப்பட்டிருந்தது.

முதலாளிகள் இந்த சரத்தைத் தங்களுக்குச் சாதகமாகவே பயன்படுத்தி வந்தனர். ஒவ்வொரு தோட்டத்திலும் ஒவ்வொருவிதமான ஒப்பந்தத்தின் கீழ் தொழிலாளர் பணிபுரிந்து ஏற்றத்தாழ்வான சம்பளங்களைப் பெறவேண்டியிருந்தது.

எனினும், 1920 ஆம் ஆண்டளவில் பெரும்பாலான வெள்ளைக்காரத் தோட்டத்துரைமார் ஒன்று சேர்ந்து சம்பள நிர்ணயம் ஒன்றைத் தாங்களாகவே செய்து அமுல் படுத்தலாயினர். இதன் பிரகாரம் நாள் ஒன்றுக்கு ஆண் தொழிலாளிக்கு 33 சதமும், பெண் தொழிலாளிக்கு 25 சதமும் கொடுப்பது என்றும், வாரத்துக்கு அவர்களுக்கு 5 அல்லது 6 நாள் வேலை வழங்குவது எனவும் முடிவு செய்து கொண்டனர்.

தொழிலாளர்களுக்கு ஏதோ ஒரு பெரும் சலுகை செய்வது போல தோட்டத் துரைமார் இன்னொரு காரியத்தையும் செய்தனர். அதாவது ஒரு ஆண் தொழிலாளி மாதம் ஒன்றுக்கு ஒரு புசல் அரிசியையும், பெண் தொழிலாளி முக்கால் புசல் அரிசியையும் தோட்ட நிர்வாகத்திலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக் கொள்ளலாம் என்றும் அதற்காக அவர்களிடமிருந்து முறையே ரூபா 4ம், ரூபா 3ம் அறவிடப்படும் என்றும் ஏற்பாடு செய்தார்கள்.

20 நாள் வேலை செய்யும் ஒரு ஆண் தொழிலாளி மாதம் ரூ.6.60 தான் சம்பளமாகப் பெற்றான். இதில் அரிசிக்கு அவன் ரூ.4 கொடுத்து விட்டால் அவனிடம் எஞ்சியிருக்கும் தொகை ரூ.2.60 தான். இதைக் கொண்டுதான் அவன் தனது மற்றச் செலவுகள் அனைத்தையும் ஒரு மாத காலத்துக்குச் செய்ய வேண்டியிருக்கும். கணவனும் மனைவியும் சேர்ந்து வேலை செய்தால், குடும்பச் செலவுக்கு அவனுக்கு மாதம் ரூ.5 தான் கையில் கிடைக்கும் பணமாக இருக்கும். இந்தப் பணத்தைக் கொண்டு அவன் பிள்ளை குட்டிகளுடன் எப்படி வாழ முடியும்? அதனால், தோட்டத் தொழிலாளி தோட்டத்து கங்காணியிடமும், வெளியிலும், ஈட்டிக் காரனிடமும் கடன் வாங்க வேண்டியவனானான். அனேகம் தொழிலாளர்கள் வாழ்நாள் முழுவதும் கடனாளிகளாகவே வாழ்ந்தார்கள். உழைத்து உழைத்து வட்டி கட்டியே ஓட்டாண்டிகளானார்கள்.

தோட்ட நிர்வாகம் வலிந்து மாணிய விலையில் தோட்டத் தொழிலாளிக்கு அரிசி வழங்கியதிலும் ஒரு தந்திரமும் சுயநலமும் இருந்தது. தோட்டத் தொழிலாளி எப்படிக் கஷ்டப்பட்டாலும் பாதகம் இல்லை. ஆனால் அவன் வயிறு அன்றாடம் நிரம்பிவிடவேண்டும். அப்படி நிரம்பினால் தான் மறுநாள் அவன் தேக பலத்துடன், தங்களுடைய தோட்டவேலைகளை தெம்போடு செய்ய முடியும் என்று நினைத்தது தோட்ட நிர்வாகம்.

இந்த மதிப்பீட்டின் அடிப்படையில், தோட்டத் தொழிலாளிக்கு குறைந்த பட்ச சம்பளம் என்று ஒன்று நிர்ணயிக்கப்பட்டு, 1927-ஆம் ஆண்டில் அது "இந்தியத் தொழிலாளர் குறைந்த பட்ச சம்பளச் சட்டம்" என்று ஒரு சட்டமாக இலங்கை அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்டது. இந்த சம்பளம் 1929-ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. ஆயினும் 1930-ஆம் ஆண்டில் நாட்டில் "பொருளாதார மந்தம்" என்று ஒரு நிலை உருவானதால், மேற்படி சம்பளத்திட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்படவில்லை.

தோட்டத் தொழிலாளர் மிகக் குறைந்த சம்பளத்தைப் பெற்று எப்படி வாழ்ந்தார்கள் என்பது ஓர் அதிசயமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியம் தான். தோட்டத் தொழிலாளர்கள் மாமன், மாமி, குடும்பத் தலைவன், அவன் மனைவி, வயது வந்த புதல்வர்கள், புதல்விகள் என்று எல்லோரும் ஒன்றாக வேலை செய்தார்கள். எல்லோரும் ஒன்றாகக் கூட்டுக் குடித்தனமாக வாழ்ந்தார்கள். எல்லோருடைய சம்பளங்களையும் ஒன்று சேர்த்து குடும்பச் செலவினங்களை ஈடுசெய்தார்கள். இந்த முறையினால் தான் மிகக் குறைந்த சம்பளத்தில் கூட அவர்கள் வாழ்நாளைக் கழிக்க முடிந்தது. ஆயினும் போதிய போஷாக்கு இன்மையாலும், சுகாதார நிலைமையைப் பேண முடியாத காரணத்தினாலும், தோட்டத் தொழிலாளர் குடும்பத்தினர் அடிக்கடி நோய்வாய்ப் பட்டார்கள். அவர்களிடையே மரணவிகிதம், சிசுமரணவிகிதம் அதிகரிக்கவும் ஏது வாயிற்று.

1924-ஆம் ஆண்டில் தொண்டமான் இலங்கை வந்து சேர்ந்த போதே தோட்டங்களில் தொழிலாளருடைய சம்பளப் பிரச்சினைகள் பிரஸ்தாபிக்கப்படுவதை அவர் அறிந்திருந்தார். அவருடைய தகப்பனார் ஒரு தோட்ட முதலாளியாக இருந்ததால் இந்த விஷயங்கள் அவருக்கு தெரிய வந்தன. ஆயினும் அப்போது அவர் அவ்வளவு அக்கறை கொள்ள வில்லை.

1932-ஆம் ஆண்டில் தொண்டமான் தமது தந்தையாருடன் சேர்ந்து தோட்ட நிர்வாகங்களில் ஈடுபடலானார். அப்போது தோட்டத் தொழிலாளரின் சம்பள விகிதங்களும், அவர்கள் படும் கஷ்டங்களும் தொண்டமானுக்கு நன்கு தெரிய வந்தன.

அந்த வயதிலேயே தோட்டத் தொழிலாளர்கள் மீது அவருக்கு அனுதாபம் ஏற்படலாயிற்று. தொழிலாளர் களுடைய சம்பளம் அதிகரிக்கப்படவேண்டும் என்ற நல்லுணர்வு அவர் மனதில் துளிர்விட ஆரம்பித்தது. ஆயினும் அந்த நேரத்தில் அவரால் செய்யக் கூடியது எதுவும் இருக்கவில்லை. ஏனென்றால் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் என்பது சகல தோட்ட முதலாளிகளின் கூட்டு மொத்தமான முடிவிலும், அரசாங்கத்தின் வழிநடத்தலிலும் தங்கியிருந்தது.

ஆயினும் அந்த இள வயதிலேயே தொண்டமானுடைய உள்ளத்தில் ஓர் எண்ணம் பளிச்சென்று உதயமாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இன்று என்னுடைய தந்தை ஒரு பணக்காரராக இருக்கிறார். அவர் தம்முடைய கடும் உழைப்பினாலும், அதிஷ்டம் அவருக்கு சாதகமாக அமைந்ததாலும் அவர் வாழ்க்கையில் உயர்ந்து விட்டார். இன்று அவர் எல்லா வசதிகளும் உடைய ஒரு தனவந்தராக விளங்குகிறார். இதற்கு மாறாக அவர் தொடர்ந்தும் ஒரு தோட்டத் தொழிலாளியாக இருந்திருந்தால் அவர் நிலைமை என்ன? நான் காணுகின்ற இதர தோட்டத் தொழிலாளரைப் போலத்தான் அவரும் கஷ்டப்பட்டிருப்பார். என்னுடைய கதிதான் என்ன? நானும் எங்கோ ஒரு தோட்டத்தில் இந்தத் தொழிலாளரைப் போலத் தானே குறைந்த சம்பளத்துக்கு உழைக்க வேண்டியிருந்திருக்கும்? ஆகையால், தோட்டத் தொழிலாளரின் நிலையை உயர்த்த நான் பாடுபட வேண்டும். அவர்களுடைய சம்பளத்தை உயர்த்த நான் என்னால் ஆனதைச் செய்ய வேண்டும். தோட்டத் தொழிலாளர் நல்ல வாழ்வும், அவர்களுடைய பிள்ளைகள் நல்ல கல்வியும் பெற வழி செய்ய வேண்டும்.”

இதுதான் அன்று தொண்டமானுடைய உள்ளத்தில் உதித்த எண்ணமாக இருந்தது. தொண்டமான் மக்கள் தொண்டனாக உருவெடுப்பதற்கான சிந்தனையின் வித்து அன்றே இடப்பட்டு விட்டது.

*

1925 ஆம் ஆண்டுலிருந்து 1930 ஆம் ஆண்டு வரை தோட்டத் தொழிலாளரின் சம்பளம் ஐந்து தடவைகள் உயர்வை பெற்றது. நான்கு தடவைகள் குறைக்கப்பட்டது. 1925 ஆம் ஆண்டில் மலையகப்பகுதிகளில் ஆணுக்கு 54 சதம் பெண்ணுக்கு 43 சதம், சிற்றுளுக்கு 32 சதம் என்ற அடிப்படையில் நாள் சம்பளம் வழங்கப்பட்டது. 1930 ஆம் ஆண்டு நாட்டில் பொருளாதார மந்த நிலை ஏற்பட்ட போது இந்த சம்பளம் குறைக்கப்பட்டது. ஆணுக்கு 41 சதம். பெண்ணுக்கு 33 சதம், சிற்றுளுக்கு 25 சதம் என்ற கணக்கில் நாட்சம்பளம் வழங்கப்பட்டது.

1927 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட “இந்தியத் தொழிலாளர் குறைந்தபட்ச சம்பளச் சட்டம்” 1941 ஆம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு வரை நடைமுறையில் இருந்தது. 1941 ஆம் ஆண்டில் சம்பள நிர்ணய சபைச் சட்டம் என்ற பெயரில் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்த சட்டத்தின் கீழ் தோட்டத் தொழிலாளர்கள் பல நன்மைகளைப் பெற்றனர் என்று சொல்லலாம்.

அதாவது, அவர்களுடைய வேலை நேரங்கள் நிர்ணயிக்கப்பட்டன. வார விடுமுறை நாட்கள், வருட விடுமுறைகள் நிர்ணயிக்கப்பட்டன. என்ன அடிப்படையில் மேலதிக வேலைப்படி, அதாவது "ஓவர் டைம்" சம்பளம் வழங்கப் படவேண்டும் என்பதற்கான விதிமுறைகள் எல்லாம் தீர்மானிக்கப் பட்டன.

எனினும், தொழிலாளரின் சம்பளம் எதிர்பார்த்த அளவிற்கு உயர்வு பெறவில்லை. 1945 ஆம் ஆண்டில் அடிப்படைச் சம்பளமாக நாள் ஒன்றுக்கு, ஆணுக்கு 58 சதமும், பெண்ணுக்கு 46 சதமும், சிற்றூழுக்கு 40 சதமுமே நிர்ணயிக்கப்பட்டது.

இவற்ேறாடு கூட வாழ்க்கைச் செலவுப் படி என்றும், பஞ்சப்படி என்றும், வேறு பெயர்களிலும் சிறு சிறு அலவன்சுகள் சேர்த்துக் கொடுக்கப்பட்டன. இந்த அலவன்சுகளும் மனம் உவந்து கொடுக்கப்பட்டவை அல்ல. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் போன்ற தொழிற் சங்கங்கள் அவ்வப்போது நடத்திய வேலை நிறுத்தப் போராட்டங்கள், போராட்டப் பயமுறுத்தல்கள், சம்பள நிர்ணய சபையின் முடிவுகள், கூட்டு ஒப்பந்தங்கள் மூலமே இந்த சிறு சிறு சம்பள ஏற்றங்கள் சாத்தியப்பட்டன.

கிடைத்த சம்பள உயர்வுகள், விசேஷ அலவன்சுகள் ஆகியவற்றைப் பெற்றுக் கொடுத்த பெரும்பங்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸையும் அதன் தலைவர் தொண்டமானை யும் சார்ந்ததாகும்.

1965 முதல் 1970 வரை டட்லி சேனநாயகா பிரதம மந்திரியாக இருந்தார். அவர் அரசாங்கத்தில் தொண்டமான் ஒரு நியமன அங்கத்தவராக விளங்கினார். அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவராக இருந்தும் கூட தோட்டத் தொழிலாளரின் சம்பள உயர்வுக்காகப் போராடுவதை தொண்டமான் கைவிடவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1967 ஆம் ஆண்டில் தோட்டத் தொழிலாளருக்கு சம்பள உயர்வு வழங்கப்படவேண்டும் என்று கோரி இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஒரு வேலை நிறுத்தத்துக்கு முன்னறிவித்தல் கொடுத்தது. அப்போது நாட்டில் அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த வேளை. இந்த வேலை நிறுத்தத்தை தடுத்து நிறுத்தி விட அரசாங்கம் எவ்வளவோ முயன்றது. முடியவில்லை. அவசரகால நிலை நாட்டில் நிலவும் போது வேலை நிறுத்தம் செய்வது சட்ட விரோதமானது என்று அரசாங்கம் பயமுறுத்தல்களையும் விடுத்துப் பார்த்தது. தொண்டமான் பணிந்து கொடுக்கவில்லை.

மறுநாள் வேலை நிறுத்தம் ஆரம்பமாக இருந்த போது பிரதமர் டட்லி சேனநாயகா தம்மை வந்து பார்க்கும்படி தொண்டமானுக்கு அழைப்பு அனுப்பினர். பிரதமரின் காரியாலயத்துக்கு தொண்டமான் சென்ருர்.

*"மிஸ்டர் தொண்டமான், நீங்கள் இந்த வேலை நிறுத்தத்தை செய்யக் கூடாது. இன்றுள்ள நிலையில் நான் உங்கள் வேலை நிறுத்தத்தை அனுமதிக்க முடியாது. சம்பள உயர்வும் தர முடியாது. அப்படி சம்பள உயர்வு வழங்கினல் நான் எனது நாட்டு மக்களுக்குப் பதில் சொல்லியாக வேண்டும். தெரிகிறதா..?" என்ருர் டட்லி சேனநாயகா.*

*"தெரிகிறது. ஆனல் நாளைய வேலை நிறுத்தத்தை நான் நிறுத்த முடியாது. சம்பள உயர்வு பெற்றே தீர வேண்டும். அப்படி சம்பள உயர்வைப் பெருவிட்டால் நான் எனது தோட்ட மக்களுக்குப் பதில் சொல்லியாக வேண்டும்" என்று கூறினர் தொண்டமான்.*

பிரதமர் டட்லி சேனநாயகாவுக்கு கோபம் வந்து விட்டது. "நீர் வேலை நிறுத்தத்தை உடனடியாக நிறுத்தா விட்டால், அவசரகால சட்டத்தைப் பயன்படுத்தி நான் உம்மைக் கைது செய்ய வேண்டி வரும்" என்ருர் டட்லி.

***"வரட்டுமே. அதனல் பாதகம் இல்லை. எனது மக்களுக்காகச் சிறை செல்ல நான் எப்போதும் தயாராகவே இருக்கிறேன். நான் சிறை பிடிக்கப்படுவதன் மூலம் நீங்கள் தொழிலாளர்களின் எழுச்சியை முறியடிக்க முயன்ருல், ஏமாந்து போவீர்கள். பணிவாக எச்சரிக்கிறேன்" என்ருர் தொண்டமான்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு ஒரு சூடான வாக்கு வாதமாக அமைந்தது அந்தச் சந்திப்பு. எனினும் தான் வழி நடத்தவிருக்கும் வேலை நிறுத்தத்துக்கான காரணங்களையும், தோட்டத் தொழிலாளர் படும் துன்பங்களையும் பிரதமருக்கு நன்கு விளக்கிக் கூறிவிட்டு வெளியேறினார் தொண்டமான். ஒரு நாட்டின் பிரதமரை எதிர்த்து இப்படி வீர வசனம் பேச யாரால் முடியும்? ஆறு லட்சம் தோட்டத் தொழிலாளரின் திரண்ட சக்தி தொண்டமானுக்குப் பின்னால் நின்று அவருக்கு இந்த அசகாய பலத்தைக் கொடுத்தது!

டட்லி சேனநாயகாவினால் நியமிக்கப்பட்ட ஓர் அரசாங்க பாராளுமன்ற உறுப்பினராக இருந்தும் கூட தொழிலாளர் உரிமையைப் பாதுகாப்பதற்காக தொண்டமான் டட்லி சேனநாயகாவுடன் இவ்வேலை நிறுத்தம் சம்பந்தமாக முரண்பட்டு நிற்க வேண்டியதாயிற்று.

முடிவில் டட்லி சேனநாயகா தொண்டமானை மீண்டும் அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். சம்பள உயர்வு வழங்க ஒப்புக் கொண்டார்.

வழங்கப்படும் சம்பள உயர்வுக்கு சட்ட அங்கீகாரம் கொடுக்கப்பட வேண்டும் என்று வாதாடினார் தொண்டமான். அதற்கு இணங்கிய டட்லி சேனநாயகா அவசரகால நிலைச் சட்டத்தின் கீழ் பிரதமருக்கு உள்ள அதிகாரத்தைப் பயன் படுத்தி சம்பள உயர்வுக்கான சட்டப் பிரகடனத்தை அவர் நிறைவேற்றினார்.

முன் எப்போதும் நடைமுறையில் இல்லாத வழக்கப்படி இந்த சம்பள ஏற்றம், சட்ட அங்கீகாரம் பெற்றது. அவசர கால சட்டத்தின் கீழ் தோட்டத் தொழிலாளர் சம்பள ஏற்றம் பெற்றதும் அதற்கு சட்ட அங்கீகாரம் கிடைத்ததும் ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும். இப்படியான ஒரு அரிய சாதனையை நிறைவேற்றிய புகழும் பெருமையும் பெற்றவரானார் தொண்டமான்.

1967 ஆம் ஆண்டில் தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளம் பின்வருமாறு அமைந்தது: நாள் ஒன்றுக்கு ஆண் ரூபா 1.35, பெண் ரூபா 1.15 சிற்றுள் 95 சதம்.

1979 ஆம் ஆண்டில் இந்த சம்பளவிகிதம் ஆண் ரூபா 2.51, பெண் ரூபா 2.32 சிற்றுள் ரூபா 2.07 என்று அதிகரித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1982 ஆம் ஆண்டில் மேலும் அதிகரிக்கப்பட்டது. ஆண் ரூபா 4.51, பெண் ரூபா 4.30 சிற்றாள் ரூபா 4.07 இவற்றுடன் சேர்த்து அலவன்சுகளும் வழங்கப்பட்டன.

இந்த அதிகரிப்புகளுக்கெல்லாம் தொண்டமான் தலைமையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அவ்வப்போது நடத்தி வந்த கிளர்ச்சிகளும், பேச்சுவார்த்தைகளும், துரைமார் சங்கத்துடனும் அரசாங்கத்துடனும் நடத்திய கூட்டு ஒப்பந்தங்களும் பெரும்பாலும் காரணங்களாக அமைந்தன.

தோட்டத் தொழிலாளரின் சம்பளம் அவர்களுடைய வாழ்க்கைச் செலவுகளுக்கு போதுமானதாகவும், தேவைகளைப் பூர்த்தி செய்வதாகவும் நியாயரீதியில் அமைய வேண்டும் என்ற கொள்கை உடையவர் தொண்டமான். அதனாலேயே அவர் தோட்டத் தொழிலாளர் சம்பள உயர்வுக்காகத் தொடர்ந்து போராடி வந்திருக்கிறார்.

1982 ஆம் ஆண்டில் ஒரு தோட்டத் தொழிலாளியின் அடிப்படைச் சம்பளம் நாள் ஒன்றுக்கு ரூபா 4.51 ஆக அமைந்தது. வாழ்க்கைச் செலவுப்படி உள்ளாக மற்றும் பல அலவன்சுகளும் சேர்த்து இது நாள் ஒன்றுக்கு ரூபா 16 என்று முடிவானது. இந்தத் தொகை கூட பாடுபட்டு உழைத்து, நாட்டுக்கு தேவையான அந்நியச் செலாவணியைத் தேடித்தரும் பாட்டாளிக்குப் போதிய சம்பளம் ஆகாது என்று குரல் எழுப்பினார் தொண்டமான். நாட்டில், வெவ்வேறு தொழில்களில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் இந்த தொகையைப் போல மூன்று நான்கு மடங்கு சம்பளத்தைப் பெறுகிறார்கள். தோட்டத் தொழிலாளரை மட்டும் தாழ்ந்த நிலையில் வைத்திருப்பது நியாயமா என்று கேட்டார்.

தோட்டத் தொழிலாளரின் சம்பளம் நியாயமான அளவு உயர்த்தப்படவேண்டும் என்பதை தொண்டமான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த கால கட்டத்தில் எல்லாம், அதாவது 1947 முதல் 1952 வரை, 1960 முதல் 1965, வரை, 1965 முதல் 1970 வரை உள்ள காலங்களில் எல்லாம், பாராளுமன்றத்தில் பல தடவைகள் வற்புறுத்திப் பேசியிருக்கிறார்.

தொழிலாளர் வர்க்கத்துக்காக எப்போதும் உருகி உருகிப் பேசுபவர்களான லங்கா சமசமாஜக் கட்சியினரும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்யூனிஸ்ட் கட்சியினரும் 1970 முதல் 1976 வரை அரசாங்கத்தில் உறுப்பினர்களாக இருந்தார்கள். அந்த நேரத்தில் தோட்டத்தொழிலாளர் சம்பள விஷயத்தில் எவ்வளவோ செய்திருக்கலாம். ஆனால் அவர்கள் எதுவுமே செய்யவில்லை.

ஸ்ரீமாவோ பண்டாரநாயகா ஆட்சி அமைத்தபோது அந்த அரசாங்கத்தில் லங்கா சமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் இணைந்து கொண்டன. 1970 ஆம் ஆண்டில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஒரு கோரிக்கையை விடுத்தது. அதாவது ஏனைய தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவது போல தோட்டத் தொழிலாளருக்கும் மாதச் சம்பளம் வழங்கப்படவேண்டும் என்பது தான் அந்தக் கோரிக்கையாகும்.

அந்தக் கோரிக்கையை அப்போது நிதியமைச்சராக விருந்த டாக்டர் என். எம். பெரேரா மனிதாபிமானத்தோடு நோக்கக் கூட மறுத்து விட்டார். அந்தக் கோரிக்கைக்கு அவர் அளித்த பதில் " விவசாயத் தொழிலாளிகளுக்கு மாதச் சம்பளம் வழங்க முடியாது. அது வழக்கத்தில் இல்லாத ஒரு நடைமுறை. எனவே தோட்டத் தொழிலாளரின் கோரிக்கையை ஏற்பது சாத்தியம் இல்லை" என்பதாகும்.

டாக்டர் என்.எம். பெரேராவின் இந்தப் பதிலுக்கு, டாக்டர் கொல்வின் ஆர்.டி. சில்வா, பீட்டர் கெனமன் போன்ற தலைவர்களும் தலையாட்டி விட்டார்கள். இவர்கள் தான் பதவிக்கு வரமுன் தோட்டத் தொழிலாளிகளுக்காக முதலைக் கண்ணீர் வடித்து வந்தவர்கள் என்பதை அப்போது தொழிலாளர்கள் உணர்ந்து கொண்டார்கள்.

இவ்வாறு தொண்டமான் அடிக்கடி பொதுக் கூட்டங்களில் சுட்டிக் காட்டிப் பேசி வருவது வழக்கம்.

தொண்டமான் தலைமை தாங்கிய இலங்கை இந்திய காங்கிரஸ் தொழிலாளர் யூனியனும், பின்னர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் தான் 1940 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றையக் காலகட்டம் வரை தோட்டத் தொழிலாளரின் நலவுரிமைகளில் நாட்டம் கொண்டு தொடர்ந் தேர்ச்சியாக பாடுபட்டு வந்திருக்கின்றன.

தோட்டத் தொழிலாளர் சம்பள ஏற்றம்பற்றி தொண்டமான் உள்ளூரில் குரல் எழுப்பியதோடு மட்டும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கவில்லை. உலக அரங்குகளிலும் அவர் இந்தப் பிரச்சினையைக் கிளப்பி வந்திருக்கிறார். குறிப்பாக ஐ.எல்.ஓ எனப்படும் உலகத் தொழிலாளர் ஸ்தாபனத்தில், ஜெனிவாவில் அவர் பலதடவைகள் பேசியிருக்கிறார். இதன் பயனாக 1970 ஆம் ஆண்டில், தோட்டத் தொழிலாளர் சம்பளம் எந்த அடிப்படையில் அமைக்கப்படவேண்டும் என்பதற்கான நான்கு அம்சம் கொண்ட ஒரு அறிக்கையையே ஐ.எல். ஓ., வெளியிடலாயிற்று. இந்த அறிக்கையின்படி தொழிலாளர் களுக்கு வாழ்க்கைச் செலவுக்கு ஏற்றபடி சம்பளம் காத்திரமாக வழங்கப் படவேண்டும் என்ற கொள்கை ஏற்றுக் கொள்ளப் பட்டதொன்றாயிற்று.

ஐ.எல்.ஓ., ஸ்தாபனத்தின் அறிக்கையின்படி தொழி லாளர்கள் உணவு உடை வாழ்விடம் முதலியவற்றைப் பெற்று சுகபலத்தோடு வாழ்வதற்கான அளவு சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்ற தத்துவம் நிலைநாட்டப்பட்டது.

இப்படி வழங்கப்படும் சம்பள அளவுக்கு ஒரு புதிய சொற்பிரயோகமும் நடைமுறைக்கு வந்தது. **Living Wage** என்பது தான் அது. "வாழும் சம்பளம்" என்று இதைச் சொல்லலாம். இப்படியான ஒரு வாழும் சம்பள விகிதம் இலங்கையில் உள்ள தோட்டத் தொழிலாளிக்கு என்றுமே வழங்கப்பட்ட தில்லை.

1977 ஆம் ஆண்டில் ஜயவர்த்தன அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து அரசாங்க தொழிலாளர்களுக்கும் கூட்டுத்தாபனத் தொழிலாளருக்கும் பல தடவைகளில் சம்பளப் படியேற்றம் வழங்கப்பட்டு விட்டது. அவற்றைக் கூட்டிப்பார்த்துக் கணக்கில் கொண்டால் ஒரு தொழிலாளி மாதம் ரூபா 361 வரை சம்பள உயர்வு பெற்றிருக்கிறான் என்பது தெரியவரும். அதேவேளையில் தோட்டத் தொழிலாளிக்கு கிடைத்திருக்கும் சம்பள உயர்வு மாதம் ரூபா 136 மட்டுமே. இது நியாயமாகுமா?

எனவேதான் தொண்டமான் தலைமையில் உள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தோட்டத் தொழிலாளரின் சம்பளத்தை கணிசமான அளவு உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கையை ஜயவர்த்தன அரசாங்கத்திடம் சமர்ப்பித்து வலியுறுத்தத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1977 ஆம் ஆண்டு ஜயவர்த்தன அரசாங்கம் பதவிக்கு வருவதற்கு தொண்டமானும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் புரிந்த உதவி மிகப் பெரியதாகும். அதனால் சம்பள உயர்வுக் கோரிக்கையை தொண்டமான், ஜயவர்த்தன அரசாங்கத்திடம் உரிமையோடு கேட்க முடிந்தது. இது சம்பந்தமாக மாநாடுகளும், பேச்சுவார்த்தைகளும் அவ்வப்போது நடைபெற்றன. ஆனால் தீர்க்கமான முடிவு எதுவும் ஏற்படவில்லை.

நிலைமை இப்படியிருக்கும் போது, தமது அமைச்சரவை யில் ஒரு உறுப்பினராகச் சேரும்படி 1978 ஆம் ஆண்டில் ஜனாதிபதி ஜயவர்த்தன தொண்டமானுக்கு அழைப்பு விடுத்தார். இந்த அழைப்பைத் தொண்டமான் ஏற்பதற்கு முன் இ.தொ.கா.நிர்வாக சபையைக் கலந்து ஆலோசித்து அதன் பின்னர் அமைச்சர் பதவியை ஏற்றுக் கொண்டார். கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் என்ற பதவி அவருக்கு வழங்கப்பட்டது.

பதவி ஒன்றைப் பெறுவதற்காக தொண்டமான் அமைச்சர் ஆகவில்லை. அமைச்சர் என்ற பதவியை வைத்து நல்ல பல காரியங்களைச் செய்யலாம் என்று அவர் எண்ணினார்.

அப்போது அவர் மனதில் உதித்த முக்கியமான காரியங்களில் ஒன்று. அமைச்சர் என்ற செல்வாக்கை வைத்து இந்திய வம்சாவழியினரான தமிழ் மக்களுக்கு பிரஜா உரிமை உட்பட பல்வேறு உரிமைகளையும் பெற்றுக் கொடுக்க முயற் சிக்கலாம் என்பது.

மற்றது ஒடுக்கப்பட்டுக் கிடக்கும் தோட்டத் தொழிலாளருக்கு "வாழும் சம்பள விகிதம்" ஒன்றினைப் பெற்றுக் கொடுக்கலாம் என்பது. மந்திரிப் பதவியை ஏற்பதற்கு இந்த இரண்டு நோக்கங்களும் தான் முக்கிய காரணங்களாக அமைந்தன.

ஆனால் அவர் அமைச்சர் ஆகி ஆறு ஆண்டுகள் கழிந்த பின்னரும் கூட, அதாவது 1984 ஆம் ஆண்டு வரை, தோட்டத் தொழிலாளர் சம்பள ஏற்றம் சம்பந்தமாக அவரால் முன்னேற்றம் காணமுடியவில்லை. எவ்வளவோ முயன்றும் சம்பள நிர்ணய சபை ஒரு நல்ல முடிவை எடுப்பதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. தொழிலாளருக்கு வாழும் சம்பளம் ஒன்றையோ நீதியான சம்பளம் ஒன்றையோ, நிர்ணயிப்பதற்கு அது தவறிவிட்டது.

அரசாங்கத்தின் சம்பள சபை என்பது ஒரு கண்துடைப்பு. இதனுல் ஸ்தாபன ரீதியாக அமைந்துள்ள தொழிலாளர்களுக்கு எந்தவித பலனும் கிடையாது. தனித்தனியாக வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு இந்த சம்பள சபை ஏதாவது விமோசனத்தைத் தேடிக் கொடுக்கலாம். ஆனுல் இந்த நாட்டின் பிரதான தொழிலாக விளங்கும் தேயிலைத் தோட்டத் தொழிலாளியின் இன்னல்களையும் தேவைகளையும் இந்த சம்பள நிர்ணய சபை என்றுமே அனுதாபத்தோடு நோக்கியது கிடையாது. இதுவே தொண்டமானுடைய அபிப்பிராயமாக இருந்து வந்திருக்கிறது.

எனவேதான், தோட்டத் தொழிலாளருக்கு சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வேலை நிறுத்தம் ஒன்றை நடத்துவது என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தொண்டமான் தலைமையில் கூடி முடிவு செய்தது. கோரப்படும் சம்பள உயர்வை வழங்குவதற்கு மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை, ஸ்ரீலங்கா அரச தோட்டக் கூட்டுத்தாபனம் ஆகிய அரச அமைப்புகள் இணங்கி வர வேண்டும் என்று ஏனைய தொழிற்சங்கங்களும் வற்புறுத்தல்களை வெளியிட்டன.

வேலை நிறுத்தம் ஆரம்பமாகும் நாள் 1984 ஏப்ரல் மாதம் 1 ஆம் திகதி என்றும் அறிவிக்கப்பட்டது.

நாட்டில் உள்ள தோட்டத் தொழிலாளர் சங்கங்களில் 15 சங்கங்கள் ஒன்று சேர்ந்து 1983 ஆம் ஆண்டிலேயே சம்பள உயர்வுக் கோரிக்கை ஒன்றை உருவாக்கின. இந்த கூட்டு அமைப்பில் அரசாங்க ஆதரவு தொழிற்சங்கமான லங்கா ஜாதிக தொழிலாளர் யூனியன் மட்டும் சேர மறுத்து விட்டது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உட்பட பதினைந்து சங்கங்களின் பிரதிநிதிகளும் சேர்ந்து அமைத்த கமிட்டி, சம்பள உயர்வு தரப்படாவிட்டால், தொழிற்சங்க நடவடிக்கைகளில் இறங்கவேண்டிவரும் என்று சூசகமாக எச்சரிக்கை விடுத்தும் கூட, அப்போது அரசாங்கம் அந்த எச்சரிக்கையைக் கவனத்தில் கொள்ள மறுத்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1983 ஜூலையில் நாட்டில் நடைபெற்ற கலவரத்தின் எதிரொலி இன்னும் தணியாதிருந்த வேளையில், தோட்டத் தொழிலாளரின் போராட்டம் நாட்டில் அனுதாபத்தைப் பெறுவது சாத்தியம் இல்லை என்று அந்த நேரம் அரசாங்கம் கருதியிருக்கக்கூடும். அதனால், சம்பள உயர்வுக் கோரிக்கையை அது அலட்சியம் செய்துவிட்டது.

ஆனால், 1984 ஆம் ஆண்டில் இதே கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தும் முயற்சியில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முன்நின்றது. அரசாங்கப் பண்ணைகளிலும், விவசாய வேலைத் தலங்களிலும் ஈடுபடும் அரசாங்க ஊழியர்களான தொழிலாளர்கள் நாள் ஒன்றுக்கு குறைந்த பட்சம் ரூபா 40 பெறுகிறார்கள். எனவே தோட்டத் தொழிலாளர்களுக்கும் நாள் சம்பளமாக ரூபா 40 வழங்கப் பட வேண்டும் என்பதே இ.தொ. கா. வின் கோரிக்கையாக இருந்தது. கோரிக்கை இதுவாக இருந்த போதிலும், இந்த சம்பளம் சம்பந்தமாக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தவும், பேரம் பேசவும் இது ஆயத்தமாக இருந்தது.

தோட்டத் தொழிலாளருக்கு சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என்பதில் ஜனதிபதி ஜயவர்த்தன அனுதாபம் உடையவராகவே இருந்தார். ஆனால், அவரைச் சுற்றியிருந்த சக்திகள், தோட்டத் தொழிலாளருக்குப் பணிந்து போவதா? தொண்டமானின் கோரிக்கைக்கு இணங்கிப் போவதா என்று தூபமிடலாயின. என்றும் இல்லாதவாறு தேயிலையின் விலை உலக சந்தையில் நல்ல ஏற்றம் கண்டிருந்தது. அதனால் தோட்டத் தொழிலாளருக்கு சம்பள ஏற்றம் வழங்குவது நியாயமானதே என்ற கருத்துடைய பலரும் அரசாங்கத்தில் இருந்தார்கள். அவர்கள் தொண்டமானுக்கு ஆதரவு உடையவர்களாகவும் இருந்தார்கள்.

ஏப்ரல் மாதம் முதலாம் திகதிக்கு முன்பாக ஒரு நல்ல முடிவை செய்து, வேலை நிறுத்தம் ஏற்படாதவாறு ஜனதிபதி ஜயவர்த்தன தடுத்துவிடுவார் என்று தொண்டமான் நம்பினர். அதனல் அவர் மார்ச் 1984 கடைசிப் பகுதியில் ஒரு வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டார்.

இதற்கிடையில் வேலை நிறுத்தத்துக்கு முன் அறிவித்தல் கொடுத்திருந்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸுடனே அன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்துழைப்பு வழங்கிய ஏனைய தொழிற்சங்கங்களுடனே எதுவித பேச்சுவார்த்தையும் இல்லாமல் அரசாங்கம் தன் இஷ்டத்துக்கு ஒரு அறிக்கையை வெளியிட்டது.

இந்த அறிக்கையின்படி தோட்டத் தொழிலாளருக்கு ஏப்ரல் 1 ஆம் திகதி முதல் சம்பள உயர்வு கொடுக்க அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது. ஆண் தொழிலாளிக்கும் பெண் தொழிலாளிக்கும் சமசம்பளம் கொடுக்கப்படும். ஆண் தொழிலாளி இது கால வரை நாள் ஒன்றுக்கு ரூபா 18.01 பெற்று வந்தார். பெண் தொழிலாளி ரூபா 15.03 பெற்று வந்தார். இனிமேல் இருவருமே நாள் ஒன்றுக்கு ரூபா 21.75 பெறுவார்கள். அதாவது ஆண் தொழிலாளிக்கு நாள் ஒன்றுக்கு ரூபா 3.74ம், பெண் தொழிலாளிக்கு நாள் ஒன்றுக்கு ரூபா 6.72ம் சம்பள உயர்வாகக் கிடைக்கும். இவ்வாறு அரசாங்க அறிக்கை கூறியது.

ஆனால், இந்த அறிக்கை ஏப்ரல் 2 ஆம் திகதிதான் பத்திரிகைகளில் வெளிவந்தது. இப்படியான ஓர் அறிக்கையை வெளியிட்டு இ.தொ.கா.உட்பட 15 தொழிற்சங்கங்கள் மேற் கொள்ளவிருந்த வேலை நிறுத்தத்தை சாகடிப்பதற்கு அரசாங்க சார்பு தொழிற்சங்கமான லங்கா ஜாதிக தோட்டத் தொழிலாளர் யூனியன் பின்னணியில் நின்று வேலை செய்தது என்று பலரும் கருதினார்கள்.

இந்த அறிக்கையைப் பொருட்படுத்தாமல் தோட்டத் தொழிலாளர்கள் ஏப்ரல் 1 ஆம் திகதியே தமது வேலை நிறுத்தத்தை ஆரம்பித்துவிட்டார்கள். அன்று ஞாயிற்றுக் கிழமை. ஆகையால் எவ்வளவு தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளார்கள் என்ற விவரம் தெரியவில்லை. அடுத்த நாள் திங்கட்கிழமை நிலைமை தெரிந்தது. இ.தொ. காவையும் ஏனைய 14 தொழிற்சங்கங்களையும் சேர்ந்த சுமார் 6 லட்சம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக் கிறார்கள் என்று இ.தொ.கா. பொதுச் செயலாளர் எம்.எஸ் செல்லசாமி தெரிவித்தார்.

இந்த எண்ணிக்கை தவறானது என்றும் தமது யூனியனைச் சேர்ந்த தொழிலாளர்கள் வேலைக்குப் போயிருக்கிறார்கள் என்றும் ல.ஜா.தோ.தொழிலாளர் யூனியன் தெரிவித்தது. ஆயினும், இது உண்மையல்ல. உண்மையாக இருந்தால் இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலே நிறுத்தத்தைப் பற்றி அரசாங்கமும் அமைச்சர்களும் அவ்வளவு தூரம் கவலே கொண்டிருக்கத் தேவையில்லே. தோட்டப்பகுதிகளில் வேலே நடைபெறுகிறது என்று அவர்கள் சும்மா இருந்திருக்கலாம். ஆனல், வேலே நிறுத்தத்தை நிறுத்தி விட அவர்கள் வெகு மும்முரமாகப் பாடுபட்டனர்.

பத்திரிகைகள் வேலே நிறுத்தம் பற்றிய செய்திகளே முக்கியத்துவம் கொடுத்து முன்பக்கச் செய்திகளாக வெளியிட்டன. இவ்வளவு தொழிலாளர் வேலேக்குப் போகவில்லே என்று பத்திரிகைகள் புள்ளி விவரங்களே வெளியிட்டன. ஒரு நாளேக்கு நாட்டின் வருவாயில் ஏற்படும் நஷ்டம் பற்றிப் பல்வேறு மதிப்பீடுகளேயும் அவை தெரிவித்தன. ஒரு நாளேய நஷ்டம் 32 மில்லியன் ரூபா என்றது. ஒரு பத்திரிகை. அப்படியல்ல 525 மில்லியன் என்றது இன்னெரு பத்திரிகை.

வேலேநிறுத்தம் ஏப்ரல் 1 ஆம் திகதி ஆரம்பித்தது. வெளிநாடு சென்றிருந்த தொண்டமான் 3ஆம் திகதிதான் நாடு திரும்பினர். மறுநாள் புதன்கிழமை காலேயில் மந்திரி சபைக் கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்தில் தொண்டமான் பிரசன்னமாக இருந்தார்.

இதற்கிடையில் எத்தனே எத்தனேயோ ஆலோசனேக் கூட்டங்களும், மாநாடுகளும், பேச்சுவார்த்தைகளும் நடை பெற்றிருந்தன. ஆனல் முடிவு ஏற்படவில்லே.

பத்திரிகைகளில் அறிக்கைகளும் எதிர் அறிக்கைகளும் பெரும் அளவில் வெளியாகிக் கொண்டிருந்தன. லங்கா ஜாதிக தோட்டத் தொழிலாளர் யூனியன் சார்பில் அமைச்சர் காமினி திஸாநாயகா வேலே நிறுத்தம் படு தோல்வி என்ற சாரப்பட கருத்துத் தெரிவித்தார். அதற்கு பதிலடி கொடுப்பது போல இ.தொ.கா. பொதுச் செயலாளர் எம்.எஸ். செல்லசாமி வேலேநிறுத்தம் உத்வேகமாக நடைபெற்று வருகிறது என்றும் அரசாங்க சார்புடைய ல.ஜா.தோ தொழிலாளர் யூனியனேச் சேர்ந்த தொழிலாளர்களில் 90 சத வீதமானேர் இ.தொ.கா. தொழிலாளருடன் ஒன்று சேர்ந்து வேலே நிறுத்தத்தில் ஈடு பட்டுள்ளார்கள் என்றும் அறிக்கை வெளியிட்டார்.

4ஆம் திகதி கூடிய மந்திரி சபை தொழிற் சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு சுமுகமான முடிவை ஏற்படுத்துமாறு தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மொண்டேகு ஜயவிக்கிரமவை நியமித்தது. அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டமான், காமினி திஸாநாயகா உட்பட ஏனைய தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தினார். அந்தப் பேச்சுவார்த்தைகளும் சுமுகமான முடிவை ஏற்படுத்தவில்லை.

இந்த நிலையில் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தாமாக ஒன்று சேர்ந்து ஒரு இடைக்கால சமரசமாக ஒரு திட்டத்தை முன் வைத்தனர். இந்தத் திட்டம் பற்றி தொண்டமான் பின்வருமாறு கருத்துத் தெரிவித்தார்.

> தொழிற்சங்கங்களின் கூட்டுக் கோரிக்கை என்னவென்றால், தோட்டத் தொழிலாளிக்கு ஆண் பெண் என்ற பேதம் இன்றி நாள் ஒன்றுக்கு ரூபா 40 வீதம் சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்பதுதான். எனினும் ஓர் இடைக்கால சமரஸமாக ரூபா 27.04 என்ற தொகையை ஏற்றுக் கொள்ள தொழிற்சங்கங்களின் கூட்டுக் கமிட்டி இணக்கம் தெரிவித்துள்ளது. சம்பளத்தோடு சேர்த்து மேலதிகப்படி வழங்கும் முறை ஏற்கனவே இருந்து வந்தது. சில வருடங்களுக்கு முன்னர் அரசாங்கம் இந்த மேலதிகப்படியை நிறுத்தியது. அந்தத் தொகையை மீண்டும் சேர்த்துக் கொண்டால் ரூபா 27.04 வழங்குவது அரசாங்கத்துக்கு சிரமமான காரியமாக இருக்காது. அத்தோடு வாரத்துக்கு 6 நாட்கள் வேலை வழங்கப்படவும் வேண்டும். இவ்வாறு தொண்டமான் தெரிவித்தார்.

இதற்கிடையில் தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மொண்டேகு ஜயவிக்கிரம ஒரு அறிக்கையை வெளியிட்டார். தோட்டத் தொழிலாளர் எல்லோரும் வேலைக்குத் திரும்பினால் ஒழிய, வேலை நிறுத்தம் பற்றி தொடர்ந்து எந்த வித பேச்சுவார்த்தைகளும் தொழிற் சங்கங்களுடன் நடத்தப்பட மாட்டாது என்று அந்த அறிக்கை கூறியது. இது தொழிலாளர்களிடையே ஆத்திரத்தையும், இறுதிவரை போராடுவது என்ற முடிவையும் ஏற்படுத்தியது.

அதே வேளையில் இலங்கை வர்த்தக சங்கம் தோட்டத் தொழிலாளரின் போராட்டம் நியாயமானது என்றும் அதற்கு இலங்கை வர்த்தக சங்கம் பூரண ஆதரவு வழங்குவதாகவும் அறிக்கை வெளியிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமை இறுக்கம் அடைந்து கொண்டு போவதை உணர்ந்த ஜனாதிபதி ஜயவர்த்தன உடனடியாக இ.தொ.கா. தலைவர் தொண்டமானை அழைத்து பேசினர்.

வேலை நிறுத்தம் ஆரம்பித்து பத்தாவது நாள் சமரஸம் ஏற்பட்டது. வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி ஜயவர்த்தன, இ.தொ.கா.தலைவர் தொண்டமான், லங்கா ஜாதிக தோட்டத் தொழிலாளர் யூனியன் தலைவர் காமினி திஸா நாயகா ஆகியோரும் ஏனைய அலுவலர்களும் பங்குபற்றினர்கள்.

இந்த சமரஸ கூட்டம் நடைபெற்றபின் வெளியிடப்பட்ட அரசாங்க அறிக்கையில் தோட்டத் தொழிலாளரின் அதிகரித்த சம்பள விவரம் தரப்பட்டிருந்தது. ஆண் தொழிலாளருக்கும் பெண் தொழிலாளருக்கும் சமசம்பளம் வழங்கப்பட்டது. முன்னர் ஆண் தொழிலாளர் ரூபா 18.01 பெற்ருர். இது ரூபா 23.75 ஆக உயர்த்தப்பட்டது. முன்னர் பெண் தொழிலாளர் ரூபா 15.03 பெற்ருர். இதுவும் ரூபா 23.75 ஆக உயர்த்தப்பட்டது. இது ஒரு இடைக்கால சமரஸ முடிவுதான். மேற்கொண்டு தோட்டத் தொழிலாளரின் சம்பளக் கோரிக்கை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை ஜனதா தோட்டத் தொழிலாளர் யூனியன் மற்றும் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோரைக் கொண்ட ஒரு குழுவினுல் மறு பரிசீலனை செய்யப்படும் என்றும் முடிவாகியது. அத்தோடு வாரத்துக்கு 6 நாட்கள் வேலை வழங்குவது என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

இந்த விவரங்களை அரசாங்க அறிக்கை வெளியிட்டது. வேலை நிறுத்தமும் முடிவுற்றது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முன் நின்று நடத்திய மிகப் பெரிய வேலை நிறுத்தமும், அது அடைந்த மிகப் பெரிய வெற்றியும் இதுவாகும். இந்த அரிய சாதனையை நிலை நாட்டியதில் பெரும் பங்கு தலைவர் தொண்டமானைச் சார்ந்ததுதான்.

இந்த வேலை நிறுத்தத்தின் மூலம் நிலைநாட்டப்பட்ட சாதனைகளைப் பட்டியல் இட்டால் இவ்வாறு அமையும்.

**1. இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைமையை ஏற்று, மலைநாட்டில் இயங்கி வரும் 15 தொழிற்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கங்கள் எல்லாவித பேதங்களையும் மறந்து ஒரே இலட்சியத்துக்காக ஒன்று பட்டது ஒரு சாதனை.

2. இலங்கையில் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள் யாவற்றிலும், சுமுகமான பேச்சுவார்த்தை மூலம் சகல தரப்பினரும் திருப்தியோடு ஒப்புக் கொண்ட ஒரு முடிவைப் பெற்ற பொது வேலை நிறுத்தம் இது ஒன்று தான் என்பது ஒரு சாதனை.

3. எடுத்ததற்கெல்லாம் முரண்டிக் கொள்ளும் இடதுசாரி இயக்கங்களும் அதன் தலைவர்களும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முன்னணியில் நின்று அரசுடன் நடத்திய பேரங்களை எல்லாம் அங்கீகரித்து ஆதரித்து, நின்றமை ஒரு சாதனை.

4. ஆரம்பத்தில் இந்த வேலை நிறுத்தத்தை மூர்த் தண்ணியமாக எதிர்த்து நின்ற அரச சார்புத் தொழிற் சங்கமான லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியனும், இதன் தலைவர் காமினி திஸாநாயகாவும் இறுதியில் சுமுகமான முடிவுக்கு இணங்கி வந்ததோடு அல்லாமல், இறுதிப் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்ள "நாமும் வரலாமா?" என்று தொண்டமானிடம் நட்பு முறையில் கேட்டு, அவருடன் கைகோத்துச் சென்று ஜனாதிபதியுடன் பேசி சுமுகமான முடிவுக்கு ஒப்புக் கொண்டது ஒரு சாதனை.

5. 1880 ஆம் ஆண்டில் நாள் ஒன்றிற்கு 33 சதமும் 25 சதமும் பெற்ற ஆண் பெண் தோட்டத் தொழிலாளருக்கு இப்போது நாள் ஒன்றிற்கு ரூபா 23.75 பெற்றுக் கொடுக்கப்பட்டதோடு, சம்பளம் வேறு, அலவன்ஸ் வேறு என்று போட்டுக் கணக்குக் கூட்டாமல் கூட்டு மொத்த சம்பளமாக முழுத் தொகையையும் பெற்றது ஒரு சாதனை.

6. ஆண் தொழிலாளர், பெண் தொழிலாளர் என்ற பேதம் இன்றி 1984 ஏப்ரல் மாதம் முதல் இரு சாராரும் சம சம்பளம் பெறக் கூடியதாக இருப்பது ஒரு சாதனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. தேயிலை தோட்டத் தொழிலாளர், ரப்பர் தோட்டத் தொழிலாளர் என்ற வித்தியாசம் இன்றி சகல தொழிலாளரும் நாள் ஒன்றுக்கு ரூபா 23.75 பெற வழி செய்யப்பட்டிருப்பது ஒரு சாதனை.

8. தோட்டத் தொழிலாளருக்கு வாரம் ஒன்றுக்கு 6 நாட்கள் வேலை வழங்கப்படும் என்ற உறுதி பெறப்பட்டிருப்பது ஒரு சாதனை.

9. வேலை நிறுத்தத்தின் போது இலங்கை வர்த்தக சங்கம் போன்ற அமைப்புகளின் ஆதரவையும் ஆசியையும் பெற்றது ஒரு சாதனை.

10. வேலை நிறுத்தத்தின் போது எந்த தோட்டத்திலும், எந்த நகரத்திலும் எதுவித அசம்பாவிதமும் நிகழாமல், எதுவித வன்செயலும் தலைதூக்காமல், அமைதியும், அஹிம்சையும், சாத்விகமும், இறுதிவரை உறுதியான ஒற்றுமையும் நிலவும்படி தொழிலாளர்கள் நடந்து கொண்டது ஒரு சாதனை.

இந்த பத்து சாதனைகளுக்கும் மேலான ஒரு பெரிய சாதனையையும் நிலைநாட்டிவிட்டார் அமைச்சர் தொண்டமான். இது சரித்திரத்தில் பொறிக்கப் படவேண்டிய இமய சாதனையாகும்.

அதாவது, தொண்டமான் ஒரு புறம் ஆளும் அரசாங்கத்தில் ஓர் அமைச்சர், மறுபுறம் தொழிலாளர் அமைப்பான இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர். நடந்தது அரசாங்கத்துக்கு எதிரான தொழிற் சங்கப் போராட்டம். அதாவது, அமைச்சர் தொண்டமான் அங்கம் வகிக்கும் அரசாங்கத்திடம் உரிமை கோரி, தொழிலாளர் தலைவர் தொண்டமான் இ.தொ.கா சார்பிலும் இதர தொழிற் சங்கங்களின் சார்பிலும் நடத்திய போராட்டம். இன்னொரு விதமாகச் சொல்லப்போனால் தொண்டமானை எதிர்த்து தொண்டமான் நடத்திய போராட்டம். இந்தப் போராட்டத்தில் அமைச்சர் தொண்டமானை வெற்றி கொண்டார் தொழிலாளர் தலைவர் தொண்டமான். இப்படியான ஓர் அதிசயப் போராட்டம் உலகில் எங்கும் நடந்ததில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால்தான் இந்தப் போராட்டம் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த போராட்டம் என்ற அந்தஸ்தைப் பெறுகிறது.

தொழிற்சங்க போராட்டக் களங்களிலே அதுகால வரை போர் தொடுத்த வீரர்களில் மிகப் பெரிய வெற்றிகண்ட வீரர் என்ற பெயரையும் புகழையும் பெற்று விட்டார் தொண்டமான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24

## தமிழ்மொழி வளர்ச்சியில் தொண்டமான் பங்கு

**1956** ஆம் ஆண்டு தனிச் சிங்கள சட்டத்தை கொண்டுவந்து, தமிழ் பேசும் மக்களின் ஏகோபித்த எதிர்ப்புக்கு மத்தியில், பாராளுமன்றத்தில் நிறைவேற்றினர் பிரதமர் எஸ். டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயகா.

இதனால் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் தங்கள் மொழி உரிமையை இழந்தார்கள். அது காலவரை, நாட்டில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளும் அரச மட்டத்தில் சரி சமமாகப் பிரயோகிக்கப்பட்டு வந்தன.

சிங்களம் மட்டும் சட்டம் சிங்கள மொழியை அரசகரும மொழியாக்கியது. தமிழையும் ஆங்கிலத்தையும் ஒதுக்கியது. இதனால் இலங்கையின் பூர்வ குடிகளில் ஒரு சாராரான தமிழ் மக்கள் தமது மொழி உரிமையை இழந்து தரங்குறைந்த பிரஜைகள் ஆனார்கள்.

தமிழ் மொழியின் உரிமையை மீண்டும் பெறுவதற்காக தமிழ்த் தலைவர்கள், அரசியல் வாதிகள் எவ்வளவோ முயன்று பாடுபட்டார்கள். சத்தியாக்கிரகம், மொழிப் போராட்டம், பொதுக்கூட்டம், கண்டனத் தீர்மானம் என்றெல்லாம் பல் வேறு வழிகளில் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்த தமிழ் உரிமையோடு ஏனைய அரசியல் உரிமைகளையும் திரும்பப் பெறுவதற்காக பிரதமர் பண்டாரநாயகா, பிரதமர் டட்லி சேனநாயகா போன்றவர்களோடு ஒப்பந்தங்களும் செய்து கொண்டார்கள். காலக்கிரமத்தில் ஒப்பந்தங்கள் தகர்க்கப்பட்டனவே தவிர, தமிழ் மொழி உரிமை கிடைக்கப் பெறவில்லை.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா பிரதமராக வந்து ஆட்சி நடத்தியபோதும் தமிழ் மொழி உரிமைக்கான கோரிக்கை விடுக்கப்பட்டது.

"தமிழ் கட்சிகள் எல்லாம் தனித்தனியாக நின்று தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடுவது தக்க பலனைத்தராது. ஆகையால் எல்லாக் கட்சிகளும் ஒருங்கிணைந்து போராட வேண்டும்" என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. இதன் பிரகாரம் தமிழ் பேசும் மக்களிடையே செல்வாக்குப் பெற்று விளங்கிய மூன்று கட்சிகள் ஒன்றிணைவது என்று முடிவு செய்யப்பட்டது. இந்த ஒன்றிணைப்புக் கூட்டம் திருகோணமலையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சி, இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்ற மூன்று கட்சிகளின் பிரதிநிதிகளும் ஒன்றுகூடி தமிழ் ஐக்கிய முன்னணி என்ற ஒரு புதிய அமைப்பைத் தோற்றுவித்தார்கள்

தமிழ் மக்கள் அனுபவித்து வந்த இன்னல்களைப் போக்குவதற்காக தமிழர் ஐக்கிய முன்னணி 1972 ஆம் ஆண்டில் ஓர் ஆறு அம்சக் கோரிக்கையைத் தயாரித்து பிரதமர் ஸ்ரீமாவோவுக்கு கையளிப்பது என்று முடிவு செய்தது. அந்த ஆறு அம்சக் கோரிக்கையில் தமிழ் மொழி உரிமையும் ஒரு கோரிக்கையாக அடங்கியிருந்தது.

தமிழர் ஐக்கிய முன்னணி கையளித்த இந்த ஆறு அம்சக் கோரிக்கையும் பலனளிக்கவில்லை. ஸ்ரீமாவோ பண்டாரநாயகா அதை அலட்சியப்படுத்திவிட்டார். இதற்கு இடையில் நாட்டின் தென்பகுதியில் பயங்கரவாதம் முதன் முறையாகத் தலைதூக்கியதால், தமிழ் மக்களின் ஆறு அம்ச கோரிக்கை மறக்கப்பட்ட கதை ஆயிற்று. 1977 ஆம் ஆண்டில் ஸ்ரீமாவோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சி முற்றுப் பெறும்வரை தமிழ் மொழியின் உரிமையை யாராலும் மீளப் பெற முடியவில்லை.

தமிழ் மக்கள் நியாயபூர்வமாக விடுத்த எந்தக் கோரிக்கையையும் ஆட்சியாளர்கள் அலட்சியப்படுத்தி வந்ததால் தலைவர்கள் விரக்தி நிலையை அடைந்தார்கள். எனவே அவர்கள் மாற்று வழியை நாட முற்பட்டார்கள்.

தமிழர் ஐக்கிய முன்னணி மாநாட்டை யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் கூட்டி காத்திரமான ஒரு தீர்மானத்தை நிறை வேற்றுவது என்று முடிவு செய்தார்கள்.

"இந்த நாட்டில் ஒரு தனித் தமிழ் ஈழத்தை நிறுவுவது" என்பது தான் அந்த தீர்மானமாகும்.

செயற்குழு கூடி தீர்மானத்தை தயாரித்து அதன் பிரதியை தமிழரசுக் கட்சி, தமிழ் காங்கிரஸ் கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் தலைவர்களுக்கு அவர் தம் அங்கீகாரத்துக்காக அனுப்பி வைத்தது.

தொண்டமான் இந்த தீர்மானத்துக்கு தமது அங்கீகாரத்தைக் கொடுக்கவில்லை. தனித்தமிழ் நாட்டுக் கோரிக்கை மலைநாட்டுத் தமிழருக்கு சாதகமாக அமையுமா பாதகமாக அமையுமா என்ற விஷயத்தை ஆராய்வதற்கு போதிய அவகாசம் தேவை என்று கருதினார் தொண்டமான். அதனால் தான் அங்கீகரிக்கவில்லை என்று தெரிவித்து விட்டார்.

வட்டுக்கோட்டையில் மகாநாடு நடைபெற்றது. தொண்டமான் கலந்து கொள்ளவில்லை. அந்த சமயம் அவர் இந்தியா சென்றிருந்தார். எனினும் "தனித்தமிழ் நாடு" என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு விட்டது.

அத்தோடு விஷயம் நிற்கவில்லை. தமிழர் ஐக்கிய முன்னணி என்றிருந்த கட்சியின் பெயரையும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி என்று மாற்றினார்கள். தனித்தமிழ் நாட்டுக்காகப் போராடப்போகும் ஒரு கட்சிக்கு "விடுதலை முன்னணி" என்று இருப்பதே பொருத்தம் என்று கொள்ளப் பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின்னர் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிக்கு தலைவர்களாக மூன்று பேரைத் தேர்ந்து எடுப்பது என்று முடிவு செய்தார்கள். எஸ்.ஜே.வி. செல்வநாயகம், ஜீ.ஜீ. பொன்னம்பலம், எஸ். தொண்டமான் ஆகிய மூவரும்தேர்ந் தெடுக்கப்பட்டார்கள்.

*தொண்டமான் இந்தியாவிலிருந்து திரும்பியதும் நிலை மையை அறிந்தார். வட்டுக் கோட்டை தீர்மானம் சம்பந்தமாக அவர் ஓர் அறிக்கையை வெளியிட்டார். தனித்தமிழ் நாட்டுக் கோரிக்கை தமக்கோ, இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கோ உடன்பாடானதல்ல என்று அந்த அறிக்கையில் தெரிவித்து விட்டார். அந்த விளக்கத்தை அவர் இ.தொ.காவின் உத்தியோக பூர்வப் பத்திரிகையிலும் வெளியிட்டார்.*

***1977** ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் வந்தது. அதற்கு இடையில் எஸ்.ஜே.வி.செல்வநாயகமும், ஜீ.ஜீ.பொன் னம்பலமும் காலஞ்சென்றுவிட்டார்கள். எனவே, முப் பெருந்தலைவர்களுள் தொண்டமான் மட்டுமே ஜீவவந் தரான தலைவராக விளங்கினர்.*

பொதுத் தேர்தலில் தமிழ் மக்களுடைய ஆதரவையும் பெரும் அளவில் பெற விரும்பியது ஐக்கிய தேசியக் கட்சி. அதற்கு ஏற்றாற் போல தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரிக்க விரும்பியது. அதனால் தமிழ்த் தலைவர்களுடன் பேச விரும்புவதாக ஐக்கிய தேசியக்கட்சி தலைவர் ஜே.ஆர்.ஜயவர் த்தன தொண்டமானிடம் தெரிவித்தார். தொண்டமான் அதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

*வெகு இரகசியமாக, தமிழ்த் தலைவர்களான அ.அமிர் தலிங்கம், எம்.சிவசிதம்பரம், எஸ்.கதிரவேலுப்பிள்ளை ஆகியோர் ஜே.ஆர்.ஜயவர்த்தனவைச் சந்தித்தனர். தொண்டமானுடைய றேஸ் கோர்ஸ் அவெனியு இல் லத்திலேயே இந்த சந்திப்பு நிகழ்ந்தது.*

அப்போது தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியினர் விடுத்த மொழி, குடியேற்றம் சம்பந்தமான கோரிக்கைகளையும், தொண்டமான் விடுத்த இந்திய பிரஜா உரிமைக் கோரிக்கை யையும் ஏற்றுக் கொள்வதாக ஜயவர்த்தன தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கோரிக்கைகளை அனுசரித்தே ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் பின்னர் தயாரிக்கப்பட்டது.

1977 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் சார்பில் போட்டியிடும்படி தொண்டமான் கேட்கப்பட்டார். அந்தக் கோரிக்கையை தொண்டமான் ஏற்கவில்லை. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசியல் பிரிவின் கீழேயே, சேவல் கொடி சின்னத்தில், போட்டியிட்டார் தொண்டமான்.

ஆயினும் அவர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார். வடக்கு மாகாணம் கிழக்கு மாகாணம் நீங்கலாக, ஐக்கிய தேசியக் கட்சி அபேட்சகர்கள் போட்டியிடும் தொகுதிகளில் எல்லாம், இலங்கை இந்திய காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்து பிரசாரம் செய்யும். ஆனுல், வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணியை எதிர்த்து எந்த வித பிரசாரத்திலும் இ.தொ.கா. ஈடுபடாது என்பதே அந்த ஒப்பந்தமாகும். ஒப் பந்தத்தை ஐ.தே.க. தலைவர் ஐயவர்த்தனவும் ஏற்றுக் கொண்டார்.

தொண்டமான் நுவரேலியா - மஸ்கேலியா தொகுதி யில் மூன்ருவது உறுப்பினராக வெற்றியீட்டினர். தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி வடக்கிலும் கிழக்கிலும் அமோக வெற்றியீட்டியது. அந்த சமயத்திலும் தொண்டமான் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவராகவே இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எதிர்க்கட்சித் தலைவர் யார் என்ற பிரச்சினை வந்த போது, எதிர்க் கட்சித் தலைமைப் பதவி தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியையே போய்ச் சேரும் நிலை ஏற்பட்டது. அக்கட்சிக்கு தொண்டமானே தலைவராக இருப்பதால் எதிர்க் கட்சி தலைவர் பதவி தொண்டமானையே சென்றடைய வேண் டும் என்று பலர் அபிபிராயம் தெரிவித்தனர்.

**"நான் அக்கட்சியில் போட்டியிடவில்லை. ஆகையால் எதிர்க்கட்சி தலைமைப் பதவிக்கு எனக்கு உரிமை**



17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடையாது" என்று பெருந்தன்மையாக கூறிவிட்டார் தொண்டமான்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் வவுனியாவில் கூட்டம் கூடி அ.அமிர்தலிங்கத்தை எதிர்க்கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள். ஆனால் "நீங்கள் தானே கட்சித் தலைவர். இப்போது எம்.பியும் கூட. அதனால், எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஏற்கிறீர்களா?" என்று உலக ஒப்பனைக்கு கூட தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியினர் தொண்டமானிடம் கேட்கவில்லை.

தொண்டமான் ஆழ்ந்த தமிழ் பற்று உடையவர். சிறுவயதில் தமிழ் மொழி மூலமே கல்வி கற்றார். பின்னர் ஓரளவு ஆங்கிலமும் கற்றார். அவருடைய அரசியல் அறிவும் பொது அறிவும் ஆரம்ப காலத்தில் தமிழ்ப் பத்திரிகைகளைப் படிப்பதன் மூலமே பெறப்பட்டனவாகும். காந்தியின் நூல்களையும், உபதேசங்களையும், இந்திய சுதந்திரப் போராட்ட சம்பவங்களையும், வரலாறுகளையும் தமிழ் மொழி மூலமே படித்துத் தெரிந்து கொண்டார் தொண்டமான்.

அவருடைய தந்தையார் வயதாகி நோயுற்றிருந்த வேளையில், அவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்து தமிழ்ப்பத்திரிகைகளில் வரும் செய்திகளை அவர் கேட்கும் வண்ணம் படிப்பது தொண்டமானின் தினப்படி வேலையாகவும் இருந்தது.

இதனால் எல்லாம் அவருக்கு தமிழ் மொழியில் ஓர் ஆர்வமும், பற்றும் சிறுவயதிலிருந்தே ஏற்பட்டு விட்டன.

ஆங்கில மொழியிலும் இன்று அவர் நல்ல தேர்ச்சி பெற்றவராக விளங்குகிறார். இந்த அறிவையும், ஆற்றலையும் கூட, பின்னர் அவர் சுயமாகவே தேடிக் கொண்டார். தொழிற்சங்க விவகாரங்களில் வெள்ளைக்காரத் துரைமாரோடு அவர் சரிநிகர் சமானமாக ஆங்கிலத்தில் பேசி, விவாதித்து தன் கட்சிக்கு வெற்றியைத் தேடிய நிகழ்ச்சிகள் பல உண்டு.

இன்று அவர் பாராளுமன்றத்தில் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுகிறார். இடையீடு செய்யும் எதிர்க்கட்சி உறுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பினர்களுக்கு காரமாக ஆங்கிலத்திலேயே பதில் அடி கொடுக்கிறார். விவாதங்களில் ஈடு கொடுத்து தன் பக்க நியாயங்களை கேட்போர் ஏற்குமாறு எடுத்துரைக்கிறார்.

இவை மட்டுமல்ல, உலக அரங்குகளிலே, உலக மாநாடுகளிலே, ஐ.எல்.ஓ. போன்ற சர்வதேச ஸ்தாபனங்களிலே ஆங்கிலத்திலேயே சொற்பொழிவாற்றுகிறார். அமைச்சர் என்ற முறையில், அமெரிக்கா முதல் ஆஸ்திரேலியா வரையுள்ள சகல உலக நாடுகளுக்கும் விஜயம் செய்து, தன் காரியங்களை, தமது அமைச்சின் உத்தியோக பூர்வமான காரியங்களை, நாட்டுக்கு நாடு கைசாத்திடப்படும் ஒப்பந்தங்களை எல்லாம் அவர் ஆங்கிலத்திலேயே முடித்துக் கொள்கிறார்.

ஆங்கிலப் புத்தகங்களையும், ஆங்கிலப் பத்திரிகைகளையும், சட்ட நூல்களையும் ஞான நூல்களையும், வழக்கு விவரங்களையும், பாராளுமன்ற வெளியீடுகளையும் படித்துப் படித்து ஆங்கில மொழியில் அரிய மெருகினைப் பெற்றிருக்கிறார் தொண்டமான்.

ஆங்கிலப் பத்திரிகையாளர்கள், உலக பத்திரிகை நிருபர்கள் அவரை ஆங்கில மொழியில் பேட்டிகாணும் போது அவர் நறுக் நறுக்கென்று கொடுக்கும் பதில்கள் சுவாரஸ்யமானவை. நிருபர்கள் அவரை மடக்க முயன்றால், அவர் நிருபர்களை மடக்கிவிடுவார். அரசியல் பிரச்சினைகளுக்கு ஆணித்தரமாகப் பதில் கொடுப்பார். பக்கத்திலிருந்து கேட்டால் இவ்வளவு ஆங்கில அறிவு, இவ்வளவு விஷய ஞானம் இவருக்கு எப்படி வந்தது என்று அதிசயிக்க வேண்டியிருக்கும். இவர் கருவில் திருவுடையவராகப் பிறந்த ஒருவர் என்றே எண்ணத் தோன்றும்.

ஆங்கிலத்தில் இவ்வளவு ஆற்றல் இருந்தும் தமிழ் மொழியை உயிராக நேசிப்பவர் தொண்டமான். அதனால் தான் அவர் தமிழ் உரிமைப் போராட்டத்தை விட்டு விடவில்லை. தமிழ் மொழியின் உரிமைகளை மீண்டும் பெறுவதற்கு ஒரு பலமான அடித்தளத்தை 1979 இல் நிறைவேறிய இலங்கையின் புதிய அரசமைப்புத் திட்டத்தில் பெற்றுக் கொடுத்தார். எப்படி என்று பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25

# இழந்த தமிழ் உரிமையை மீட்டவர்

தமிழ் மொழியை ஒதுக்கிவிட்டு, சிங்கள மொழியை மட்டும் இலங்கையின் அரச கரும மொழியாக்கியவர் பிரதமர் எஸ். டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயகா. "24 மணி நேரத்தில் சிங்கள மொழியை ஆட்சி மொழியாக்குவேன்" என்று கூறிப் பதவிக்கு வந்தவர் அவர். எனவே 1956ஆம் ஆண்டில் தனிச்சிங்கள மொழிச் சட்டத்தைப் பாராளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றினுர்.

இன்றைய தமிழ்-சிங்கள இனப்பிரச்சினை அன்று முதல் விஸ்வரூபம் எடுத்தது. அப்போது முதல் 1979ஆம் ஆண்டில் இலங்கையின் புதிய அரசமைப்புச்சட்டம் ஒன்று நிறைவேற்றப்படும் வரை — அதாவது 23 வருட காலம் — தமிழ்மொழி ஒதுக்கப்பட்ட மொழியாகவே இருந்து வந்தது.

தமிழினத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய எந்த ஒரு அரசியல் கட்சியாலும், எந்த ஒரு தமிழ்த் தலைவராலும் இந்தப் பரிதாப நிலையை மாற்ற முடியவில்லை.

இந்தப் பின்னணியில் 1979ஆம் ஆண்டில், இழந்த தமிழ் உரிமையை மீண்டும் பெற்றுத் தந்த பெருமை தலைவர் தொண்டமானுக்கே உரியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1977ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலுக்கு முன் ஐக்கிய தேசியக் கட்சியினர் வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில், "நாங்கள் பதவிக்கு வந்தால் ஒரு புதிய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்குவோம்" என்று வாக்குறுதி அளித்திருந்தார்கள்.

அதன்படி பதவிக்கு வந்ததும் 1978ஆம் ஆண்டில், ஒரு புதிய அரசமைப்புச்சட்டத்தை உருவாக்குவதற்காக ஜே.ஆர். ஜயவர்த்தனு ஒரு குழுவை அமைத்தார். அந்தக் குழுவில் ஓர் அங்கத்தவராக தொண்டமானும் இடம் பெற்றார். ஆனல், அந்தக் குழுவில் அங்கம் வகிக்க, அப்போது தமிழர் தலைவர்கள் என்று இருந்தவர்களான தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியினர் மறுத்துவிட்டனர்.

அவர்கள் மறுத்ததற்கு காரணம் இருந்தது. அவர்கள், "தமிழ் மக்களுக்கு ஒரு தனித்தமிழ் நாடு பெற்றுத் தருவோம்" என்று கூறிப் பாராளுமன்றத்துக்கு வந்தவர்களாவர். அப்படிப் பட்டவர்கள் ஓர் ஒற்றையாட்சி அரசமைப்புச் சட்டத்தை வகுப்பதில் எப்படிப் பங்கு கொள்ள முடியும்? அதனல் அரசமைப்புக் குழுவை அவர்கள் பகிஷ்காரம் செய்தார்கள்.

அரசமைப்புக் குழு கூடியபோதெல்லாம் தொண்டமான், தமிழ்மொழி உரிமையை அரசியல் சட்டத்தில் இடம் பெற வைப்பதற்காக தவருமல் வாதாடி வந்தார். அரசமைப்புக் குழுவில் அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த தமிழர் இருவர் இருந்தார்கள். ஆனல் தமிழர்களின் உரிமைகளைப் பாதிக்கும் விஷயங்களை காத்திரத்தோடும், சுதந்திரத்தோடும் வாதாடி எடுத்துச் சொல்லக்கூடியவராகத் தொண்டமான் ஒருவரே இருந்தார். அவரே இலங்கையில் உள்ள தமிழர்கள் எல்லாருக்கு மாக குரல் கொடுத்தார். அவர் குரல் தனித்துவமான குரலாக வும், துணிச்சலான குரலாகவும் ஒலித்தது.

புதிய அரசமைப்பு சட்டத்தில் தமிழ் மக்களுக்கு மிகச் சாதகமாக இரண்டு அத்தியாயங்கள் சேர்க்கப்பட்டன. ஒன்று நான்காவது அத்தியாயம். மற்றது ஐந்தாவது அத்தியாயம்.

நான்காவது அத்தியாயம் "மொழி" என்ற தலைப்பின் கீழ் உள்ளது.

**இந்த அத்தியாயத்தின் படி சிங்களம் அரச கரும மொழியாகவும், சிங்களமும் தமிழும் இலங்கையின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசியமொழிகளாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இது அல்ல முக்கியம்
தமிழ் மொழி தமிழர்கள் பெரும்பான்மையினராக வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உத்தியோக மொழியாக்கப்பட்டிருக்கிறது. அத்தோடு தமிழ்மொழி இலங்கை முழுவதும் கோர்ட்டில் வழக்காடக்கூடிய மொழியாக்கப்பட்டிருக்கிறது.
முன்பெல்லாம் வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய சிங்களப் பகுதி மாகாணங்களில் கோர்ட்டில் ஒரு வழக்கைத் தாக்கல் செய்வதானால் சிங்கள மொழியிலேயே தாக்கல் செய்ய வேண்டியிருந்தது.
அரசமைப்புச் சட்டக்குழுவில் தொண்டமான் இந்த நிலைமையை மாற்ற வேண்டும் என்று வாதாடியதன் பயனாக, கோர்ட்டுகளில் தேசிய மொழிகளாகிய சிங்களம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளில் ஏதாவது ஒன்றில் பத்திரங்களைத் தாக்கல் செய்து, வழக்காடலாம் என்ற சரத்தும் அரசமைப்புச் சட்டத்தில் சேர்க்கப்பட்டது.

இந்தச் சரத்தின் ஆங்கில வடிவம் பின்வருமாறு அமைந்துள்ளது :

Any party or applicant or any person legally entitled to represent such party or applicant may initiate proceedings, and submit to court pleadings and other documents, and participate in the proceedings in court, in either of the National Languages.

இப்படி ஒரு உரிமை அரசமைப்புச் சட்டத்தில் புகுத்தப்பட்டது தொண்டமானுடைய சாதனையேயாகும்.

ஐந்தாவது அத்தியாயம் "பிரஜா உரிமை" என்ற தலைப்பின் கீழ் உள்ளது.

**இந்த அத்தியாயத்தின்படி, அரசமைப்புச்சட்டம் நடைமுறைக்கு வந்த நாளிலிருந்து, இலங்கையில் வம்சாவழிப் பிரஜையானாலும் சரி, பதிவுப் பிரஜையானாலும் சரி, இருசாராரும் "ஸ்ரீலங்கா பிரஜை" என்ற அந்தஸ்தையே பெறுவார்கள். அப்படியே அழைக்கப்படுவார்கள். அப்படியே சகல ஆவணங்களிலும் குறிப்பிடப்படுவார்கள் என்பதாகும்.**

இப்படி ஒரு சரத்தும் அரசமைப்புச் சட்டத்தில் இடம் பெற்றமைக்கு தொண்டமானே காரணஸ்தர் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1981ஆம் ஆண்டில் ஐந்தாவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடு சங்கத்தமிழ் வளர்ந்த மதுரையில் நடைபெற்றது. அதில் அரச விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய தொண்டமான் இலங்கையில் தமிழ்மக்களுக்கு கிடைத்திருக்கும் தமிழ் உரிமை பற்றிப் பெருமிதத்தோடு பேசினார்.

அவர் கூறியதாவது :

எங்கெங்கு தமிழர்கள் வாழ்கின்றார்களோ, அங்கு அவர்கள் தமிழை வளர்ப்பதற்கு நாம் உதவி செய்ய வேண்டும். நம்மாலான அளவு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

உதாரணமாக, நாங்கள் வாழும் இலங்கை நாட்டை எடுத்துக்கொள்ளலாம். அங்கு முப்பது வீதம் தமிழ் பேசுபவர்கள், எழுபது வீதம் தமிழ் பேசாதவர்கள், வேற்று மொழி பேசுபவர்கள்.

சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம் என்று பாரதியார் கூறுமளவுக்கு சிங்கள மொழி வழங்கும் நாடு அது. அங்கு அரசாங்க மொழி தமிழ் அல்ல, சிங்கள மொழிதான் என்ற பொழுது அங்குள்ள தமிழர்கள் சும்மா இருக்கவில்லை. பலவித எதிர்ப்புக்களைக் காட்டினார்கள்.

இன்றைய அரசாங்கம் நியாயத்தை உணர்ந்து புதிய அரசமைப்புக்கான நிர்ணயசபையிலே உரியபடி திருத்தங்களைக் கொண்டு வந்து, இன்று தமிழ்மொழியை நாட்டின் தேசிய மொழி என்ற அளவில் பெரும்பான்மை மக்களை ஏற்றுக் கொள்ளச் செய்திருக்கின்றோம்.

இன்று எந்தத் தமிழனும் அரசாங்கத்துடன் தமிழ் மொழியிலேயே தொடர்பு கொள்ளவும், பதில் பெறவும், தமது கருமங்களைத் தமிழ் மொழியிலேயே செய்து முடிக்கவும் வழி வகுத்திருக்கிறோம்.

**எந்த அரசியலமைப்பில் தனி ஒருவனாக நான் திருத்தங்கள் கொண்டு வந்தேனோ, அந்தப் புதிய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்ததும், அந்த அரசில் நான் ஒரு அமைச்சனாக இருந்து இன்று தமிழ் மக்களுக்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறேன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகையால் நண்பர்களே! இதுபோன்ற மகாநாடுகள் விழாக்கள் நடத்துவதும் அவசியம்தான். இது தமிழ் மக்களிடையே ஆர்வத்தை ஊட்டுகிறது. ஒற்றுமை உணர்ச்சியை ஏற்படுத்துகிறது. பல நாடுகளிலே உள்ள தமிழர்களும் ஒன்று சேர்ந்து தங்களுக்கு உள்ள குறை நிறைகளை ஆராய்ந்து பரிமாறிக் கொள்வதற்கும், திருத்திக் கொள்வதற்கும், மற்றவர்களுடைய ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கும் இத்தகைய மகாநாடுகள் நல்லதொரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கின்றன. அதே வேளையில் தமிழ் மொழி எங்கு புறக்கணிக்கப்பட்டாலும் அதற்காகக் குரல் கொடுக்க வேண்டிய கடமையும் இப்படியான உலக அமைப்புக்கு உண்டு என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

ஒரு சமயம் பிரான்ஸ் நாட்டின் ஜனாதிபதியாக இருந்த டீகால், கனடாவின் விருந்தினராக அங்கு போயிருந்தார். அங்கு வாழும் பிரஞ்சு மக்களுக்கு நியாயம் வழங்கப்படவில்லை என்று தெரிய வந்ததும் விருப்பு வெறுப்புகளைப் பொருட்படுத்தாமல், தமது மக்கள் சார்பில் கனடாவைப் பகிரங்கமாகக் கண்டித்துப் பேசினார். தாய்மொழிப் பற்று அவரிடம் உணர்ச்சியை ஏற்படுத்தியது. தாம் பிற நாட்டின் விருந்தினர் என்பதையும் மறந்து பேசி விட்டார்.

இன்னொரு நாட்டின் விவகாரங்களில் தலையிடக்கூடாது என்ற கோட்பாட்டை நான் கொள்கையளவில் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் தமிழ் என்ற அடிப்படையில் தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் அவர்களுடைய உரிமைகள் நசுக்கப்படுவதை நாம் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது. உண்மையில் இந்தத் தமிழாராய்ச்சிக் குழு இன்னும் தீவிரமான துறையிலே தலையிட வேண்டும். ஐக்கியநாடுகள் சபையில் பல கலாச்சார ஸ்தாபனங்கள் இணைந்து செயல்படுகின்றன. மக்களின் பிறப்புரிமைகளைக் காப்பதில் அவை அக்கறை கொண்டுள்ளன. அவற்றைப் போல இந்தத் தமிழாராய்ச்சி நிறுவனமும் அங்கு இடம்பிடித்துப் பங்கு கொள்ள வேண்டும்.

உதாரணத்துக்கு ஒன்று சொல்கிறேன். நான் அனைத்துலகத் தொழில் ஸ்தாபன நிறுவனக் குழுவின் அங்கத்தவனாக இருந்த பொழுதிலும், இந்நிறுவனம் தமிழ் மொழியிலும் கருத்தரங்கு நடத்தக்கூடிய நிலையை உருவாக்கினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி மக்களுக்கு ஜீவாதாரமானது. இன்றைய விஞ்ஞான உலகில் நமது வாழ்வைப் பாதிக்கும் சகல அம்சங்களையும் எண்ணங்களையும் எளிதில் எடுத்துரைக்கக் கூடிய முறையில் நம் மொழியான தமிழ்மொழி மேலும் வளர்ச்சியடைய இந்த ஆராய்ச்சி மகாநாடு பணிபுரிய வேண்டும். இப்படியான துறைகளில் ஆராய்ச்சியாளர்கள் தமது கவனத்தைச் செலுத்துமாறு வேண்டி மகாநாடு வெற்றிபெற வாழ்த்தி முடிக்கிறேன்.

இவ்வாறு தொண்டமான் மதுரையில் பேசினார்.

இந்தப் பேச்சிலே ஒரு பந்தி முக்கியமானது. அவர் கூறுகிறார்.

**"இன்று எந்தத் தமிழனும் அரசாங்கத்துடன் தமிழ் மொழியிலேயே தொடர்பு கொள்ளவும், பதில் பெறவும், தமது கருமங்களைத் தமிழ் மொழியிலேயே செய்து முடிக்கவும் வழி வகுத்திருக்கிறோம்" என்று.**

1957 ஆம் ஆண்டில் சிங்கள மொழிச் சட்டம் அமுலுக்கு வந்த பின் இந்த உரிமை தமிழ் மக்களுக்கு இருக்கவில்லை. வேறு எந்தத் தமிழ்த் தலைவராலும் இந்த உரிமையைப் பெற்றுத் தரவும் முடியவில்லை.

தொண்டமானே சொல்கிறார்: "எந்த அரசமைப்பில் தனி ஒருவனாக நான் திருத்தங்கள் கொண்டுவந்தேனோ, அந்த அரசில் நான் ஓர் அமைச்சனாக இருந்து இன்று தமிழ் மக்களுக்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறேன்" என்று.

அன்று 1981 இல் இப்படிச் சொன்னார். இன்றும், இனிமேலும் இதற்கு மேலாக தமிழ் உரிமைகள் கிடைப்பதற்கான அறிகுறிகள் தோன்றுகின்றன.

அன்று அதாவது 1979 ஆம் ஆண்டில் தமிழ் மொழிக்காக இவ்வளவு உரிமையைப் பெற்றார் தொண்டமான். இன்று நிலைமை என்ன? இந்திய பிரதமர் ராஜீவும், ஸ்ரீலங்கா ஜனாதிபதி ஜயவர்த்தனாவும் கையொப்பமிட்ட இலங்கை இந்திய சமாதான ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படும் போது நாடு முழுவதற்கும் சிங்களமும், தமிழும், ஆங்கிலமும் அரசாங்க மொழிகளாக, உத்தியோக மொழிகளாக ஆகப் போகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி ஒரு நிலை ஏற்பட்டதற்கு அன்று தொண்டமான் ஏற்படுத்திவைத்த அடித்தளமே காரணம் என்று கூறுவது மறுக்க முடியாத உண்மையாகும்.

அதுமட்டும் அல்ல. 1979 ஆம் ஆண்டு நிறைவேற்றப் பட்ட ஸ்ரீலங்காவின் ஜனநாயக சோஷலிஸ குடியரசின் அரசமைப்புச் சட்டம் இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங் களின் மொழி தமிழ்தான் என்பதை சட்டபூர்வமாக ஒப்புக் கொண்டதால் தான், இன்று அந்த அடிப்படையில், மேற்கூறிய இலங்கை இந்திய சமாதான ஒப்பந்தத்திலும் பிரதேச உரிமை கள், நில உரிமைகள் எல்லாம் கோரப்படுகின்றன.

தொண்டமான் அன்று எவ்வளவு பெரிய அரசியல் மதியூகியாகச் செயல்பட்டு, அந்த அரசமைப்புத் திட்டத்தில் மொழி உரிமைச் சரத்தைப் புகுத்துவதில் வெற்றி கண்டார் என்பதை எண்ணிப் பார்க்கும்போது ஆச்சரியப் படாமல் இருக்க முடியவில்லை. இதன் மூலம் தொண்டமானுடைய தீர்க்க தரிசனம் நன்கு புலனாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26

# பிரார்த்தனை இயக்கம் ஒரு புதிய ஆயுதம்

தொழிற்சங்கப் போராட்ட வரலாற்றிலே "பிரார்த்தனை இயக்கம்" என்ற ஒரு புதிய போராட்ட முறையைப் புகுத்திய பெருமை தொண்டமானைச் சார்ந்ததாகும்.

பிரார்த்தனை இயக்கம் என்பது தொழிற்சங்க சக்தியை ஆத்மீக சக்தியாக மாற்றும் ஓர் அதிசய ரஸவாதம் என்று சொல்லலாம்.

தொழிலாளர்களின் உரிமைகளைப் பெறுவதற்கு வேலை நிறுத்தமே இறுதி ஆயுதமாகப் பயன்பட்டது.

அரசியல் இலட்சியங்களை அடைவதற்கு மகாத்மா காந்தி சத்தியாகிரகம், உண்ணாவிரதம் என்பவைகளை ஆயுதங்களாகப் பயன்படுத்தினார். காந்தி மகாத்மா பிரார்த்தனைக் கூட்டங்களை நடத்தினார். ஆனால் பிரார்த்தனையை ஓர் அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தவில்லை.

இலங்கை அரசியலில் முதன்முதல் சத்தியாக்கிரகத்தையும், உண்ணாவிரதத்தையும் பிரயோகித்தவர் தொண்டமான் தான் என்பது ஏற்கனவே சொல்லப்பட்டது. அதே தொண்டமான் தான் அரசியல் உரிமையைப் பெறுவதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த 'பிரார்த்தனை இயக்கம்' என்ற சாத்வீக ஆத்மீக போராட்ட முறையின் காரிய கர்த்தா ஆவார்.

தொண்டமானுடைய பிரதான இலட்சியங்கள் ஐந்தில், தோட்டத் தொழிலாளருக்கு சம்பள உயர்வு பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதும், இந்திய வம்சாவழியினர் இந்த நாட்டில் நாடற்றவர்களாக அல்லாமல், இந்த நாட்டில் சகல உரிமைகளும், சம உரிமைகளும், வாக்குரிமையும் பெற்ற முழுப் பிரஜைகளாக ஆக வேண்டும் என்பதும், மிகப் பிரதானமான இரண்டு இலட்சியங்களாகும்.

இந்த இரண்டு இலட்சியங்களையும் தனது தலைமைத்துவத்திலேயே பெற்று விட வேண்டும் என்ற குறிக்கோளை வைத்துத்தான் தொண்டமான் ஜனாதிபதி ஜயவர்த்தனவுடைய அரசாங்கத்தில் ஓர் அமைச்சராகச் சேர்ந்து பணியாற்ற ஒப்புக் கொண்டார்.

1984 ஆம் ஆண்டில் அவர் நடத்திய மிகப் பெரிய வேலை நிறுத்தப் போராட்டத்தின் மூலம் அவர் தோட்டத் தொழிலாளருக்கு கணிசமான அளவு சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுத்தார். அத்தோடு ஆண் பெண் தொழிலாளருக்கு சமசம்பளத்தையும், வாரத்தில் ஆறுநாட்கள் வேலை என்ற உறுதியையும் பெற்றுக் கொடுத்தார். இது அவர் சாதித்த வெற்றியாகும்

அடுத்தபடியாக அவர் பெற வேண்டியிருந்தது இந்திய வம்சாவழியினரின் பிரஜா உரிமை. அரசாங்கத்தில் சேர்ந்து ஏழு ஆண்டுகள் கடந்த பின்னரும் பிரஜா உரிமை விஷயத்தில் எந்தவித முன்னேற்றமும் காணப்படவில்லை.

1983 ஆம் ஆண்டு கலவரத்தின் பின்னர் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக கூட்டப்பட்ட சர்வகட்சி மகாநாட்டில், இந்திய வம்சாவழிப் பிரச்சினையை ஒரு முக்கிய பிரச்சினையாகக் கிளப்பினார் தொண்டமான். இந்த நாட்டு மக்களில் ஒரு சாராரை நாடற்றவர்களாக, வாக்குரிமை அற்றவர்களாக ஒதுக்கி, ஒடுக்கி வைத்துக் கொண்டு இனப் பிரச்சினைக்கு சுமுகமான முடிவைத் தேடுவது வேடிக்கையான செயலாகும். சகல இனமக்களும் சமமானவர்கள் என்ற அடிப்படைத் தத்துவம் ஒப்புக் கொள்ளப்பட்டால் தான் சகல இனமக்களுக்கும் இடையே ஒற்றுமையும், நாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானமும் ஏற்பட முடியும். ஆகையால் இந்திய வம்சாவழி மக்கள் அனைவருக்கும் பிரஜா உரிமை, வாக்குரிமை உட்பட சகல உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தினார் தொண்டமான்.

சர்வகட்சி மாநாட்டை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பகிஷ்கரித்தது. அதனால் அந்தக் கட்சியின் பிரதிநிதிகள் மாநாட்டில் பங்குபற்றவில்லை. அந்த ஒரு கட்சியைத் தவிர, ஏனைய அரசியல் கட்சிகள் எல்லாம் பங்குபற்றிய ஒரு மாநாடு சர்வகட்சி மாநாடு.

எல்லாவற்றிற்கும் மேலாக, பௌத்த மகாசங்கத்தைச் சேர்ந்த பீடாதிபதிகள், மாநாயகர்கள், மற்றும் கல்விமான்களான பௌத்த பிக்குகள் எல்லாரும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்திய மக்களுக்கு பிரஜா உரிமை வழங்கும் விஷயத்தில், கடந்த காலங்களில், பௌத்த குருமார்களின் அபிப்பிராயங்கள் ஆதரவாக இருந்ததில்லை.

ஆனால், சர்வகட்சி மாநாட்டில் சகல அரசியல் கட்சிகளும், சகல சமயப் பிரதிநிதிகளும், பௌத்த மகா சங்கத்தினர் உட்பட சகல பௌத்த பிக்குகளான பேராளர்களும், இலங்கையில் உள்ள இந்திய வம்சாவழியினர் எல்லாருக்கும் பிரஜா உரிமை வழங்கவே வேண்டும் என்று ஒரு மனதான முடிவுக்கு வந்தார்கள்.

இப்படியான ஒரு முடிவு சர்வகட்சி மாநாட்டில் ஏற்படுவதற்கு தொண்டமானே காரணராக இருந்தார். அவர் சமர்ப்பித்த அறிக்கைகளும், ஆவணங்களும், அவர் ஆற்றிய உரைகளும் சகலரையும் ஒருமித்த கருத்துக்கு வரச் செய்வனவாக அமைந்தன. அந்த அளவிற்கு அவர் வெற்றி பெற்றார்.

சர்வகட்சி மாநாடு சுமுகமாக முடிந்திருந்தால், பெரும்பான்மை மக்களின் சலசலப்போ, அன்றி பௌத்த மகாசங்கத்தினரின் எதிர்ப்போ இன்றி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் புறக்கணித்துவிட்டு, இந்திய வம்சாவழி மக்களின் பிரஜா உரிமையைப் பெற்றுக் கொடுப்பது சாத்தியமாகி யிருக்கலாம்.

சர்வகட்சி மாநாட்டின் கருத்துக்கள் சிலவற்றைத் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியினர் நிராகரித்ததால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த மாநாடு தோல்வியில் முடிந்தது. அத்தோடு இந்திய பிரஜா உரிமை விஷயமும் ஊறப்போட்ட விஷயமாயிற்று.

பின்னர், ஒரு சில தடவைகளில் தொண்டமான் இந்த பிரஜா உரிமைப் பிரச்சினையை மீட்ட போதெல்லாம் அரசாங்கம் பராமுகமாக இருக்க முற்பட்டது. எனவே தான், இனி ஏதாவது உறைப்பாகச் செய்ய வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார் தொண்டமான்.

***1985 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஒரு நாள்.***

*திடீரென்று அவர் உள்ளத்திலே பொறிபோல ஒரு எண்ணம் உதித்தது.*

*மலைநாட்டின் தோட்டப்பகுதிகள் முழுவதிலும் மூன்று தினங்கள் ஒரு பிரார்த்தனை இயக்கத்தை நடத்த வேண்டும் என்பது தான் அந்த எண்ணம் ஆகும்.*

இந்த் எண்ணத்தை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஸ்தாபனத்தின் கிளைகள் மூலம் மூன்று தினங்கள் நடைமுறைப் படுத்தினர் தொண்டமான்.

தொழிலாளர்கள் காலையில் தோட்டங்களிலே கூடி மதியம்வரை பிரார்த்தனையிலும், தியானத்திலும் ஈடுபட்டார் கள். அதன் பின்னரே வேலைக்குச் சென்றார்கள். மூன்று நாள் பிரார்த்தனை இயக்கம் என்பதை யாரும் ஆரம்பத்தில் அவ்வளவு 'சீரியஸ்' ஆக, அவ்வளவு காத்திரமாக, நினைக்க வில்லை. பிரார்த்தனை நடவடிக்கைகளால் தேயிலை உற்பத்தி வீழ்ச்சியடையும் என்பதை உணர்ந்த தோட்ட முதலாளிகளும், நிர்வாகத்தினரும் கவலையடைந்த போதிலும், மூன்று நாட்கள் தானே என்று அலட்சியமாக இருந்தார்கள்.

தொண்டமான், இலங்கை தொழிலாளர் காங்கிரஸான தமது ஸ்தாபனத்துக்கும், அரசாங்கத்துக்கும், நாட்டுக்கும் அதிர்ச்சியைத் தரக் கூடியதான ஒரு முடிவினைத் தமது மனதின் உள்ளே வைத்துக் கொண்டு, இந்த மூன்று நாள் பிரார்த்தனை இயக்கத்துக்கு திட்டமிட்டார் என்பதை யாரும் அறிந்திருக்கவில்லை.

பின்னால் தாம் தொடர விருந்த இந்தப் புதுமையான இயக்கத்துக்கு மக்களின் மனோபாவத்தையும், தோட்டப்பகு தியில் நிலவும் சூழ்நிலையையும் நாடி பிடித்துப் பார்ப்பதற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காகவே அவர் முதலில் மூன்று நாள் பிரார்த்தனையை அறிவித்தார். மூன்றுவது நாள் பிரார்த்தனைக் கூட்டத்தை முடித்து வைத்துப் பேசுகையில் அவர் அதிர்ச்சி தருவதான அந்த அறிவிப்பை வெளியிட்டார்.

> *"1985 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பதாக இந்திய வம்சாவழியினரின் பிரஜா உரிமைப் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வு காணப் படாவிட்டால், இதுகாலமும் நான் கடைப்பிடித்து வந்த கொள்கைகளும், என் தலைமைத்துவமும் தோல்வி யடைந்து விட்டன என்றே கருதப்படவேண்டும். எனவே நான் தலைமைப் பதவியிலிருந்து விலகி, என்னை விட அதிக உத்வேகமும் திறமையும் வாய்ந்த ஒரு தலைமைத்துவத்துக்கு இடமளிக்கப் பின்நிற்க மாட்டேன்."*

என்பதுதான் தொண்டமான் தமது பேச்சில் வெளியிட்ட அந்த அதிர்ச்சி அறிவிப்பாகும்.

இந்த அறிவிப்பை பத்திரிகைகளில் படித்தறிந்த பல் லாயிரக்கணக்கான மக்கள் கவலை அடைந்தார்கள். ஒரு சிலர் குதூகலமடைந்தார்கள்.

தொண்டமான் போன்ற ஒரு சிறந்த அனுபவசாலியான தலைவரின் வழிநடத்தலை நாடு இழக்க வேண்டி விடுமோ என்பதே பெரும்பாலாரின் கவலைக்கு காரணமாக இருந்தது.

அதே வேளையில் சிலர், தொண்டமான் விலகினுல் தம்மைப் போன்றவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும் என்று கருதினுர்கள். தொண்டமான் இல்லையென்றுல் இ.தொ.கா பலம் இழந்து போகும். அப்போது தொழிலாளர்களின் சக்தி குறைந்துவிடும் என்று மனப்பால் குடித்தார்கள் இன்னும் சிலர். போட்டித் தொழிற்சங்க வாதிகள் சிலர் தொண்டமான் தலைமை இல்லை என்றுல் இ.தொ.கா சிதறிவிடும். நாம் எமது குட்டிச் சங்கங்களைப் பலப்படுத்திக் கொள்ளலாம் என்று நப்பாசைப்பட்டார்கள்.

தொண்டமானின் அறிவிப்பு இ.தொ.கா. ஸ்தாபனத் திலும். இ.தொ.கா உறுப்பினர்களிடையேயும் பெருத்த சல சலப்பையும், அதிர்ச்சி அலையையும் ஏற்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள் விலக வேண்டாம். நீங்கள் ராஜினாமாச் செய்யவே கூடாது. உங்கள் தலைமை தான் எங்களுக்கு வேண்டும்" என்று தொண்டமானுக்கு சங்கங்களிடமிருந்து, தொண்டர்களிடமிருந்து, பொதுமக்களிடமிருந்து கடிதங்கள், தந்திகள் வந்து சேர்ந்தன. தொலைபேசிகள் மூலம் வேண்டுகோளும் விண்ணப்பங்களும் குவிந்து கொண்டே யிருந்தன.

முக்கியஸ்தர்கள் சிலர் தொண்டமானை நேரில் கண்டு "உண்மையில் நீங்கள் விலகத்தான் போகிறீர்களா?" என்று கேட்டார்கள்.

அதற்கு தொண்டமான், "எட்டு ஆண்டுகளாக நான் அமைச்சராக இருந்து நாடற்றவர் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணவேண்டும் என்று அரசாங்கத்தை வற்புறுத்தி வந்தேன். ஒன்றும் நடக்கவில்லை. இனிமேலும் இப்படியே இருக்க முடியாது. ஒரு நெருக்கடியை உருவாக்கித்தான் ஆக வேண்டும். அப்போது தான் நியாயம் பிறக்கும். நான் எந்த அறிவிப்பைச் செய்தேனோ அதன்படி நடக்கப் பின் நிற்கமாட்டேன்" என்று மிகுந்த உறுதிப்பாட்டோடு பதிலளித்தார்.

தொண்டமானுடைய 'பதவி விலகல்' அறிவிப்பு ஜூன் மாதத்தில் வெளியிடப்பட்டது. கொடுக்கப்பட்ட கெடு டிசெம்பர் 31 ஆம் திகதி. நவம்பர் மாதம் நடுப்பகுதிவரை அரசாங்க தரப்பில் எதுவித நகர்வும் தெரியவில்லை.

எனவே, 1985 நவம்பர் 19 ஆம் திகதி தொண்டமான் ஜனாதிபதி ஜயவர்த்தனாவுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் தான் வெளியிட்ட அறிவிப்பைக் குறிப்பிட்டு டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்பதாக நாடற்றவர் பிரச்சினை தீர்க்கப் படவேண்டும் என்று வற்புறுத்தினார் தொண்டமான். ஆனால், ஜனாதிபதியிடமிருந்து எந்தவித பதிலும் கிடைக்கவில்லை.

அடுத்த நடவடிக்கையாக, தான் என்ன செய்ய உத் தேசித்துள்ளார் என்பதை விளக்கி, தானே கையொப்பமிட்டு எல்லாத் தோட்டத் தலைவர்களுக்கும் முதன் முறையாக ஒரு கடிதத்தை அனுப்பினார் தொண்டமான். அந்தக் கடிதத்தில் தோட்டத் தலைவர்கள் டிசெம்பர் 3ஆம் திகதிக்கு முன்பதாகத் தத்தம் கருத்துக்களை எழுத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் கேட்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அமைச்சர் தொண்டமான் பணியாற்றும், கிராம கைத்தொழில்
அபிவிருத்தி அமைச்சின் அழகிய மாடிக்கட்டடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பிரிட்டிஷ் மகாராணி எலிஸபெத் அம்மையாரை
தொண்டமான் வரவேற்கிறார். கூட இருப்பவர் பேத்தி
அநுராதா சாந்த மோஹன்.



இலங்கை அமெரிக்க தூதருடன் தொண்டமான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜப்பான் விஜயத்தின்போது தொண்டமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீலங்கா ஜனதிபதி ஜயவர்த்தனவுடன் தொண்டமான்



இந்திய தூதுவர் சட்வால் அளித்த விருந்தில்
தொண்டமான். கூட எதிர்கட்சி தலைவர் அநுரா
பண்டாரநாயகா, எம்.எஸ். செல்லசாமி ஆகியோரும் உளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"என் வாழ்வும் கால ஓட்டமும்" என்ற நூலை தொண்டமான் ஸ்ரீலங்கா பிரதமர் ஆர். பிரேமதாஸாவுக்கு வழங்கினார். பின்னால் அமைச்சின் இணைப்புச் செயலாளர் பி. திருநாவுக்கரசு காணப்படுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமது குடும்ப உறுப்பினர்களுடன் தொண்டமான்



மகன் இராமநாதன், பேத்தி அநுராதா, பேரன் மனைவி
இராஜலக்ஷ்மி ஆகியோருடன் தொண்டமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





1. தோட்டப்பகுதியில் ஒரு வரவேற்பின் போது.
2. கருப்பையா பிள்ளையின் வரலாறு கூறிய
திருக்கோஷ்டியூர் கோவில் பூஜகர்
எஸ். வெங்கடேஷ பட்டாச்சாரியார்.



மேல்நாட்டு விருந்தினர்களுடன் தொண்டமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜெனீவா தொழிலாளர் மாநாட்டு விருந்தில் தொண்டமான் — கோதை தொண்டமான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு டிசெம்பர் மாதம் 3ஆம் திகதி அன்று, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய கவுன்ஸில் கூட்டமும், செயல் குழுக் கூட்டமும் கொழும்பில் இணைந்து கூட்டப்பட்டது.

இந்தக் கூட்டத்துக்குத் தலைமை வகித்து தமது திட்டத்தைப் பகிரங்கப்படுத்தினார் தொண்டமான். அவருடைய கருத்துக்களை உள்ளடக்கிய ஒரு பிரகடனமும் தயார் செய்யப்பட்டு ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அந்தப் பிரகடனத்தில் பல அம்சங்கள் குறிப்பிடப்பட்டன. அவற்றின் திரட்டு வருமாறு:-

1. தோட்டத் தொழிலாளர் அனுபவித்துவரும் கஷ்டங்களும், அவர்கள் எதிர்நோக்கும் ஆபத்துகளும், பயமுறுத்தல்களும் சுட்டிக்காட்டப் பட்டன.
2. கஷ்டமான காலகட்டங்களில் எல்லாம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஜனாதிபதி ஜயவர்த்தனவை யும், அவர் அரசாங்கத்தையும் ஆதரித்து நின்றது ஏன்? நாலு லட்சம் தோட்டத் தொழிலாளர்களு டைய பிரஜா உரிமை உட்பட ஏனைய உரிமைகளும் கிடைக்கும் என்பதால்தான். நாட்டில் நிலவும் இனப்பிரச்சினை தீர்க்கப்படும் என்பதால்தான். வன்செயல்கள் ஒழிக்கப்பட்டு இன ஒற்றுமையும். சமாதானமும் நிலவும் என்பதால்தான். உயிர் பாதுகாப்பும், உத்தரவாதங்களும் கிடைக்கும் என்பதால் தான். ஆனால் எட்டு ஆண்டுகளாக எதிர்பார்த்தும் எதுவும் கிடைக்கவில்லை.
3. ஆகையால் இவற்றை எல்லாம் அடைவதற்காக பொதுமக்களின் புரிந்துணர்வையும், ஒத்துழைப் பையும், ஆதரவையும் பெற்று, அரசாங்கத்தைச் செயலூக்கம் அடையுமாறு தூண்டும் வண்ணம் ஒரு பிரார்த்தனை இயக்கத்தை நடத்த திட்டமிடப் படுகிறது.
4. இந்தப் பிரார்த்தனை இயக்கம் 1986 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14 ஆம் திகதியாகிய தைப் பொங்கல் தினதிலிருந்து 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதியாகிய தமிழ் சிங்களப்



18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தாண்டுத் தினம் வரை மூன்று மாத காலம் நடைபெறும்.

5. இந்தப் பிரார்த்தனை இயக்கத்தின் போது இதில் பங்கு பற்றுமாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சகல தோட்டத் தொழிலாளர்களையும் கேட்டுக் கொள்ளும். அவர்கள் தோட்டங்களிலே ஒன்றுகக் கூடி காலை முதல் மதியம் வரை பிரார்த்தனை, தியானம், இன ஒற்றுமைக்கான இதர நிகழ்ச்சிகள் ஆகியவற்றில், அஹிம்சையைக் கடைப்பிடித்து சமாதானமாக, ஈடுபடுவார்கள். இந்த பிரார்த்தனை இயக்கத்துக்கு இடமளித்து, சம்பள இழப்பு இல்லாத வகையில் தோட்ட நிர்வாகம் செய்யும் வேலை நேரமாற்று ஒழுங்குகளுக்கு தொழிலாளர்கள் இணங்கி கடமை புரிவார்கள்.

6. 1986 ஆம் ஆண்டு முழுவதையும் சமாதானம், ஒற்றுமை, தேசிய நல் இணக்க ஆண்டாக பிரகடனப் படுத்துவது எனவும் இ.தொ.காவின் தேசிய கவுன்ஸில் பிரகடனப்படுத்துகிறது.

மேற்கூறிய கூட்டம், பிரகடனம், பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் பொதுவாக வெளிவந்தன. பிரகடனத்தின் வாசகங்கள் அடங்கிய முழுப்பக்க விளம்பரங்களை இ.தொ.கா. சில பத்திரிகைகளில் வெளியிட்டது. ஒரு சில பத்திரிகைகள் இந்த விளம்பரத்தை வெளியிட மறுத்துவிட்டன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தொண்டமான் திரும்பவும் ஜனதிபதிக்கு ஒரு கடிதம் எழுதினர். இந்தக் கடிதம் டிசெம்பர் 17 ஆம் திகதி அனுப் பப்பட்டது. அந்தக் கடிதத்தோடு இ.தொ.காவின் பிரார்த்தனை இயக்கப் பிரகடனத்தின் ஒரு பிரதியும் சேர்த்து அனுப்பப் பட்டது.

இந்தக் கடிதம் கிடைத்ததும் ஜனதிபதி காரியம் முற்றிவருகிறது என்பதை உணர்ந்திருக்க வேண்டும். இன்னும் அலட்சியமாக இருந்தால் தோட்டப் பொருளாதாரம் தூள்தூளாகிவிடும் அல்லவா? அதனுல் உடனே அவர் செயல் படலானுர்.

மறுநாள் புதன்கிழமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சர் அவை கூடும் நாள். அமைச்சர் அவைக் கூட்டத்துக்குப் போவதற்காக காலை 7 மணிக்கு தொண்டமான் தயாராகிக் கொண்டிருந்தார். அவருடைய வீட்டு தொலைபேசி மணி அடித்தது.

பேசியவர் ஜனதிபதி ஜயவர்த்தன!

*"தொண்டா, உங்கள் கடிதம் கிடைத்தது. உங்களைச் சந்தித்துப் பேச விரும்புகிறேன். வாட் பிளேஸ் வீட்டுக்கு வருகிறீர்களா? இருவரும் ஒன்ருகச் சேர்ந்து அமைச்சர் அவைக் கூட்டத்துக்குப் போவோம்" என்ருர் ஜனதிபதி.*

தொண்டமான் போய்ச் சேர்ந்த போது ஜனதிபதி ஆயத்தமாக புறப்பட்டு நின்ருர். இருவரும் ஒரே காரில் ஏறிக் கொண்டு போனர்கள். போகும் வழியில் இந்திய வம்சாவழியினரின் பிரஜா உரிமை பற்றிப் பேசினர் ஜனதிபதி. தொண்டமான் கூறிய கருத்துக்களை எல்லாம் ஏற்றுக் கொண்டார். எதற்கும் மறுப்புத் தெரிவிக்கவில்லை.

அமைச்சர் அவைக் கூட்டத்தில் தாமாகவே நாடற்றவர் பிரச்சினையைக் கிளப்பினர் ஜனதிபதி. இந்திய வம்சாவழி மக்களுக்கு பிரஜா உரிமை எதுவித தாமதமுமின்றி வழங்கப் படத்தான் வேண்டும் என்பதை எல்லோரும் எதுவித மறுப்புமின்றி கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டனர்.

இது விஷயம் பற்றி தொடர்ந்து பேசுவதற்கு மறுநாள் காலையில் தமது வீட்டுக்கு வரும்படி தொண்டமானைக் கேட்டுக் கொண்டார் ஜனதிபதி. அதன் படி வியாழன் காலையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. முடிவு ஏற்படாததால் பிற்பகல் 4.00 மணிக்குப் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தன. இந்தப் பேச்சு வார்த்தைகளில் அமைச்சர் லலித் அத்துலத் முதலி உட்பட, பல அரசாங்க உயர் உத்தியோகஸ்தர்களும் கலந்து கொண்டார்கள்.

*இறுதியான முடிவு ஒன்று அன்று ஏற்படாவிட்டாலும் கொள்கை அளவில் அனைவரும் ஏற்றுக் கொண்டார்கள். நாடற்றவர்களாக இலங்கையில் உள்ள இந்திய வம்சாவழியினர் அனைவருக்கும் உடனடியாக பிரஜா உரிமை வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்தினர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தொண்டமான். அவர் கோரிக்கைக்கு எவருமே எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.*

மறுதினம் தொண்டமான் ஏற்கனவே ஒப்புக் கொள்ளப் பட்ட நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதற்காக இந்தியா சென்றார்.

தொண்டமான் இந்தியாவிலிருந்து திரும்பி வருவதற் கிடையில் இந்த விஷயத்தில் இந்தியா தலையிட்டிருக்கிறது. தலையிட்டது மட்டுமல்லாமல், நெய் திரண்டுவரும் வேளையில் தாழியை உடைத்த கதையாக தொண்டமானைக் காலைவாரிவிட்டு விட்டது.

*தொண்டமான் உடனடியாகவே பிரஜா உரிமை வழங் கப்பட வேண்டும் என்று கோரி இலங்கை அரசாங்கத்தை இணங்கவும் வைத்திருந்தார். ஆனால் இடையில் 18 மாதகால அவகாசத்துக்கு இந்தியா ஒப்புக் கொண்டுவிட்டது.*

இந்தப் பேச்சுவார்த்தைகளைத் தொண்டமானிடமே முற்று முழுதாக விட்டிருந்தால், அவர் நிச்சயம் வெற்றிகண் டிருப்பார் என்று அவதானிகள் அபிப்பிராயம் தெரிவித்தார் கள். இந்தியா எல்லாவற்றையும் குழப்பியடித்துவிட்டது என்பது அவர்கள் அபிப்பிராயமாகும்.

இந்தியாவும் இலங்கையும் சேர்ந்து நாடற்றவர் சம்பந்தமாக தயாரித்த அறிக்கையை, தொண்டமானை ஒதுக்கிவிட்டு, வெளியிடுவதற்கும் இருசாராரும் ஆயத்தமானார் கள்.

இந்தக் காரியத்தை இப்படிச் சாதித்தவர் லலித் அத்துலத் முதலியாகத்தான் இருக்க வேண்டும் என்று தொண்டமான் கருதுகிறார். இந்தியாவிலிருந்து திரும்பிய தொண்டமான் இங்கு ஏற்பட்டிருந்த திருப்பத்தைப் பார்த்து ஆச்சரியப்படவேண்டிய தாயிற்று.

***இந்திய தூதுவரான டி.என்.டிக்ஷிட் தொண்டமானுடன் தொலைபேசியில் பேசினார்.***

***"தொண்டா, இரண்டு அரசாங்கங்களும் சேர்ந்து ஒரு அறிக்கையைக் கூட்டாக வெளியிடப்போகிறோம்" என்றார் டிக்ஷிட்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தயவு செய்து இணங்காதீர்கள். உடனடியாகப் பெறவேண்டிய காரியம் இது. 18 மாதங்கள் என்றால் எல்லாம் இழுத்தடிக்கப்படலாம்" என்று எச்சரித்தார் தொண்டமான்.

"தொண்டமானுடைய இணக்கம் பெறுவிட்டால், இரண்டு அரசாங்கங்களும் இந்த அறிக்கையை வெளியிட முடியாமல் இருக்கும். நான் என்ன செய்யட்டும்...? என்றார் டிக்ஷிட்.

இதற்கிடையில் லலித் அத்துலத் முதலி, தொண்டமானிடம் ஓடிவந்தார்.

"ஓ, நீங்கள் ஒத்துவராவிட்டால், முழு அமைச்சரவையும் இந்த ஏற்பாடுகளுக்கு எதிராக மாறிவிடும்." என்று பயங்காட்டினார் அத்துலத் முதலி.
பேச்சில் சூடு பிடித்தது.
"அப்படியா சமாச்சாரம்? எனக்கு கவலை இல்லை. அப்படி ஒரு நிலைமையை எதிர் கொள்ள நான் தயார்" என்றார் தொண்டமான்.

தொண்டமானைத் தாஜா பண்ணி காரியம் சாதிக்கப் பார்த்தார் அத்துலத் முதலி.

"முடியாது. நான் இணங்க முடியாது" என்றார் தொண்டமான்.

ஆனாலும், தொண்டமானால் அதற்கு மேல் எதுவும் செய்யமுடியவில்லை. ஏனென்றால் இந்தியாவே அறிக்கையின் வாசகங்களை டில்லியிலிருந்து அனுப்பி, இலங்கை அரசுடன் இணங்கிக் கொண்டது.

இந்தியாவும்-இலங்கையும் செய்து கொண்ட இந்த ஒப்பந்தத்தின்படி ஒரு நன்மை ஏற்பட்டது. நாடற்றவர்களாக விடுபட்டிருக்கும் 94000 பேருக்கும் 18 மாதங்களுள் பிரஜா உரிமை வழங்கி நாடற்றவர் என்ற சொற் பிரயோகத்தையே ஒழித்துவிடுவது என்ற முடிவு செய்யப்பட்டிருப்பதுதான் அந்த நன்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், 18 மாதம் என்ற காலக்கெடு கடந்தும் இந்த நன்மை இன்னும் கிட்டுவதாக இல்லை.

ஆயினும் இதற்கான ஒரு சட்டம் நிறை வேற்றப்பட்டிருப்பது பிரார்த்தனை இயக்கத்துக்கு கிடைத்த வெற்றி என்று கணிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27

# தனித்துவம் இழக்காத நடுநிலைத் தலைவர்

தொண்டமான் தனித்துவம் இழக்காத தலைவர். எந்த சந்தர்ப்பத்திலும் நடுநிலை தவறாத தலைவர்.

தான் ஒரு கட்சியில் சார்ந்து நிற்கிறார் என்பதற்காக அந்தக் கட்சி செய்வதை எல்லாம் கண்மூடித்தனமாக ஆதரிப்பது அவர் போக்கல்ல. துணிகரமாக அவர் தம் கருத்துக்களை வெளியிடுவார்.

இரண்டு தடவைகள் தொண்டமான் நியமன அங்கத்தவராக பாராளுமன்றத்தில் இருந்திருக்கிறார். ஒரு தடவை அவரை ஒரு நியமன எம்.பி. ஆக்கினார் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயகா.

அவர் ஸ்ரீமாவோவின் அரசாங்கத்தில் இருக்கும்போது தான் தோட்டத் தொழிலாளரின் உரிமைகளுக்காக அதிகமான போராட்டங்களை நடத்தினார். அவற்றில் பல அரசாங்கத்தையே எதிர்த்து நடத்திய தொழிற்சங்கப் போராட்டங்களாகும்.

ஸ்ரீமாவோ காலத்தில் சிம்மாசனப் பிரசங்கம் விவாதிக்கப்பட்ட போதெல்லாம் அவர் பல திருத்தப் பிரேரணைகளைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கல் செய்து, அரசாங்கக் கொள்கைக்கு மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்.

அரசாங்கக் கட்சி அங்கத்தவர் ஒருவர் நாட்டின் ஒற்றுமை பற்றியும், இன ஒற்றுமை பற்றியும் பேசியபோது, "நாங்கள் ஒற்றுமையை வரவேற்கிறோம். அந்த ஒற்றுமை தமிழர்களாகிய எங்களின் தனித்துவத்தைப் பாதிக்காத ஒற்றுமையாக இருக்க வேண்டும். பெரும்பான்மை இனம் சிறுபான்மை மக்களை விழுங்கி ஏப்பம் விடுவதன் மூலம் ஏற்படுத்தப்படும் ஒற்றுமையை நாங்கள் ஆதரிக்கமாட்டோம். அதை உயிர்உள்ள வரை எதிர்த்தே தீருவோம்" என்று ஆணித்தரமாய்ப் பேசினார்.

ஸ்ரீமாவோ அரசாங்கம் கவிழும்படியான ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணை பாராளுமன்றத்தில் வந்தபோது தாம் ஸ்ரீமாவோவால் நியமிக்கப்பட்டவர் என்பதைக் கூட எண்ணாமல், தனித்துவமாக நிற்க வேண்டும், நியாயத்தின் பக்கம் நிற்க வேண்டும் என்பதற்காக வாக்களிப்பின் போது நடுநிலை வகித்தார். அதன் காரணமாக ஸ்ரீமாவோ அரசாங்கமே கவிழ வேண்டியதாயிற்று.

இரண்டாவது தடவை டட்லி சேனநாயகாவால் நியமன எம்.பி.யாக நியமிக்கப்பட்டார். அது ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில். அப்போதும் அவர் தனித்துவத்தை இழக்கவில்லை. தோட்டத் தொழிலாளர்களுடைய உரிமைப் போராட்டங்களை உத்வேகத்துடன் நடத்தினார். தொழிலாளருக்கு சம்பள உயர்வு கோரி டட்லியுடன் நேருக்கு நேர் பொருதினார். அவசரகால சட்டத்தின் கீழ் தோட்டத் தொழிலாளருக்கு சம்பள உயர்வு பெற்றுக் கொடுத்தார். தம் எம்.பி. பதவிக்காக அவர் தமது மக்களின் நலன்களை ஒருபோதும் பணயம் வைத்ததில்லை.

ஜயவர்த்தன அரசாங்கத்தில் அவர் கிராமக் கைத்தொழில் அமைச்சர் ஆக்கப்பட்டார். அவர் அமைச்சர் ஆன பின் இரண்டு சம்பவங்கள் நடைபெற்றன. ஒன்று 1983 ஆம் ஆண்டு இனக்கலவரம். இந்த இனக் கலவரத்தைத் தொடர்ந்து பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் அவர் பேசிய பேச்சுக்களைப் பார்த்தால் அவர் ஒரு அரசாங்க அமைச்சரா அல்லது எதிர்க்கட்சி அங்கத்தவரா என்று எண்ணத் தோன்றும். பாதிக்கப்பட்ட தமிழர்களுக்காக அவர் அவ்வளவு வேகத்துடன் அரசாங்க செயல்பாடுகளில் குறை கண்டு பிடித்துப் பேசினார். அப்போதும் தனித்துவத்தை நிலைநாட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது சம்பவம் எதிர்கட்சித் தலைவரான அ. அமிர்தலிங்கத்தை அரசாங்கக் கட்சி உறுப்பினர்கள் கன்னு பின்னு என்று திட்டியபோதும், அரசமைப்புச் சட்டத்தில் 6ஆவது திருத்தப் பிரேரணை கொண்டுவந்து அமிர்தலிங்கம் உட்பட தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களை பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுத்தபோதும் நிகழ்ந்தவையாகும்.

இந்தச் சந்தர்ப்பங்களில் எல்லாம் தொண்டமான் அரசாங்கத்தோடு சேர்ந்து சப்பைக் கட்டுப் பேச்சுப் பேசவில்லை. ஒன்றன் பின் ஒன்ருக வந்த அரசாங்கங்கள், குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை வழங்குவதில் அசமந்தம் காட்டியதனுல் தான் தமிழர் தலைவர்களும், தமிழ் தீவிரவாத இளைஞர்களும் தனிநாடு கோரும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள் என்பதை விளக்கிக் காரசாரமாகப் பேசினுர். தாம் ஓர் அரசாங்க அமைச்சர் என்ற காரணத்தால் அவர் தமது தனித்துவத்தை இழக்கவில்லை. நடுநிலைமையையும் இழக்கவில்லை. உண்மையை உள்ளது உள்ளபடி உறைப்பாக எடுத்துக் கூறினுர்.

எந்தக் கருத்தையும் அவர் சளப்பல் பேசுவதில்லை. எதைப் பற்றியாவது கேள்வி கேட்டால் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற பாங்கில் பதில் சொல்லி விடுகிருர்.

மலைநாட்டில் ஓர் இடத்தில் ஒரு கோயிலில் திரு விழா நடைபெற்றது. ஏதோ ஒரு பழைய கோபத்தை வைத்துக் கொண்டு சிங்களக்காடையர்கள்தமிழ்த் தோட்டத் தொழிலாளரைத் தாக்கி விட்டார்கள். தோட்டத் தொழிலாளர்கள் பதில் தாக்குதல் செய்து அவர்களை ஓட ஓட அடித்து விட்டார்கள். வன் செயல்கள் பெரும் அளவில் இடம் பெற்றுவிட்டன.

இது பற்றி ஒரு பத்திரிகை நிருபர், "இப்படியும் செய்யலாமா?" என்று கேட்டார். அதற்கு தொண்டமான் அளித்த பதில் என்ன தெரியுமா?

"தாக்குபவர்களைத் திருப்பித் தாக்குவது தான்
தற்காப்புகளில் எல்லாம் சிறந்த தற்காப்பு"

என்ருரே பார்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் மற்றொரு சந்தர்ப்பத்தில் இன்னொரு பத்திரிகை நிருபர் தொண்டமானைப் பிடித்துக் கொண்டார்.

"நீங்கள் அஹிம்சாவாதி ஆயிற்றே. சத்தியாக்கிரகத்தில் நம்பிக்கை உள்ளவர் ஆயிற்றே. அப்படியான நீங்கள் "தாக்குப வர்களைத் திருப்பித் தாக்குவதுதான் தற்காப்புகளில் சிறந்த தற்காப்பு என்று சொல்லியிருக்கிறீர்களே, இது சரியாகுமா?" என்று கேட்டார்.

அதற்கு தொண்டமான் வெகு சாமர்த்தியமாகப் பதில் சொன்னார். காந்தி மகாத்மா ஒரு சிறந்த அஹிம்ஸாவாதி. உயர்ந்த சத்தியாக்கிரகி. ஆனால் அவர் பாராயணம் செய்தது பகவத் கீதை. நீங்கள் பகவத் கீதை படித்திருந்தால் இந்தக் கேள்வியை என்னிடம் கேட்கமாட்டீர்கள்" என்றார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், "சத்தியாக்கிரஹி கோழை அல்ல. அவன் ஒரு கோட்பாட்டுக்காக அஹிம்சையைக் கடைப்பிடிப்பவன். அதனால் அஹிம்சாவாதியை எவர் வேண்டு மானாலும் அடித்து நொறுக்கிவிடலாம் என்று அர்த்தங் கொள்ளக் கூடாது. பசுவை இந்துக்கள் தெய்வமாக மதித்துப் பூஜை செய்வார்கள். ஆனால் அதே இந்து மக்களிடையே "தன்னைக் கொல்ல வரும் பசுவைக் கொல்லு" என்று ஒரு வாக்கிய மும் உண்டு. இந்த வாக்கியத்தையே நானும் திருப்பிச் சொன்னேன்" என்றார் தொண்டமான்.

சமீபத்தில் தொண்டமான் மலேஷிய நாட்டில் நடைபெற்ற ஆறுவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்கு அரசு விருந்தினராகச் சென்றிருந்தார்.

அங்கு ஒரு பத்திரிகையாளர் தொண்டமானைப் பார்த்து உங்கள் நாட்டில் உள்ள தீவிரவாதிகளான புலிகளைப் பற்றி என்ன சொல்கிறீர்கள் என்று கேட்டார். இந்தக் கேள்வியை வேறு யாரா வது ஒரு தமிழ் அரசியல்வாதியிடம் கேட்டிருந்தால், பதில் சொல்வதற்கு அவர் தயங்கிப் போவார்.

தொண்டமான பளிச் சென்று பதில் சொன்னார். "வீரம் இருக்கும் அளவிற்கு அவர்களிடம் விவேகம் போதவில்லை என்று கவலைப்படுகிறேன். அவர்களுடைய வீரத்தை மதிக்கிறேன். அவர்களுக்கு விவேகமும் அதிகரிக்க வேண்டும் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரார்த்திக்கிறேன்" என்ருர். இப்படி ஒரு பதிலை வேறு யாராவது சொல்லியிருக்க முடியுமா.

தொண்டமான் இந்தக் கருத்தை வெளியிடுவதற்கு, திலீபன் உண்ணுவிரதமிருந்து உயிர்விட்டதும், புலிகள் சிலர் சைதாகி சைனைட் வில்லைகள் அருந்தி இறந்ததும், இடைக்கால நிர்வாக சபை அமைப்பதில் ஏற்பட்ட சிக்கலும் ஆகிய சம்பவங்கள் கருத்திற் கொள்ளத் தக்கனவாகும்.

இலங்கை-இந்திய சமாதான ஒப்பந்தம் சம்பந்தமாகவும் தொண்டமான் தனித்துவமானதும், நடுநிலைமையானதுமான கருத்துக்களையே வெளியிட்டு வருகிருர். ஜனுதிபதி ஜயவர்த்தனு செய்து கொண்ட ஓர் ஒப்பந்தம் என்பதற்காக அமைச்சர் தொண்டமான் ஓகோ என்று பாராட்டிவிடவில்லை.

ஜனுதிபதியும்-பிரதமர் ராஜீவும், சம்பந்தப்பட்ட போராளிகளுடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தி சுமுக நிலையை ஏற்படுத்த வேண்டும். அதற்கு ஏற்றவாறு உடனடியாக யுத்த நிறுத்தம் ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்றே சொல்லி வருகிருர்.

இந்த அபிப்பிராயத்தை அவர் இலங்கையில் மட்டும் சொல்லவில்லை. இந்தியாவிலும் சொல்கிருர்.

எந்த விஷயமாஞலும் சரி அதில் தனித்துவமான அபிப்பிராயமும், நடுநிலையான கொள்கையும் உடைய அரசியல் ஞானி தொண்டமான் என்பதை யாவரும் ஒப்புக் கொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28

# காக்கும் தெய்வமானார் கோதை தொண்டமான்

கிடைத்தற்கரியரான ஒரு சிறந்த கணவர் கிடைத்த பெரும் பாக்கியசாலி கோதை அம்மாள்.

தொண்டமானோடு அவர் அரை நூற்றாண்டு காலம் பாலும் தேனும் போல, மணியும் ஒளியும் போல, வானும் மதியும் போல, வள்ளுவனும் வாசுகியும் போல வாழ்க்கை நடத்தினர்.

மனமொத்த இந்த நலம் மிக்க தம்பதிகளைப் பார்த்தவர்கள் கம்பன் ராமாயணத்தில் சொல்வது போல யோகமும் போகமும் ஒன்றினவோ என்று வியந்தனர்.

தொண்டமான் மூலம் ஒரே ஒரு புதல்வரை ஜீவ வந்தராகப் பெற்றவர் இந்தப் பெருமாட்டி. அவர் பெயர் சௌமிய மூர்த்தி குமாரவேல் இராமநாதத் தொண்டமான். இந்த ஒருவர் மூலம் தான் தொண்டமான் பரம்பரை பரந்து பெருகி, இன்று விகசித்து விளங்குகின்றது.

படித்துத் தேறியவரான இராமநாதத் தொண்டமான் தனித் தொழிலிலோ, அரசியலிலோ ஈடுபடவில்லை. தனது தந்தையாருக்கு துணையாளராகவே செயல்பட்டு வந்தார். தந்தையாரின் தோட்ட நிர்வாகங்களைக் கவனிப்பதும், தொழிற்சங்க துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் அவருக்கு வேண்டிய உதவிகளைப் புரிவதும் இராமநாதத் தொண்டமானின் பணியாக இருந்தது.

தொண்டமான் அமைச்சரானதும் இராமநாதத் தொண்டமான் அமைச்சருடைய அந்தரங்கச் செயலாளராக நியமனம் பெற்ருர். 1988 ஆம் ஆண்டில் மாகாண சபைத் தேர்தல்கள் வரும்வரை அவர் இந்தப் பதவியைப் பத்து வருடகாலம் வசித்திருக்கிருர்.

மாகாண சபைத் தேர்தல் வந்தபோது இராமநாதன் மத்திய மாகாணத்தில் போட்டியிட்டு, அமோகமான வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டினூர். மத்திய மாகாண சபையின் உறுப்பினரான அவருக்கு ஓர் அமைச்சர் பதவியும் கிடைத்தது. உள்ளூராட்சி, தொழில், கைத்தொழில், கால் நடை அபிவிருத்தி ஆகிய துறைகளுக்கு அவர் அமைச்சராக விளங்குகிருர்.

இராமநாதத் தொண்டமான் இளவயதிலேயே திருமணம் செய்து கொண்டார். இவருடைய மனைவி இராஜேஸ்வரி. இராஜேஸ்வரியின் தந்தை பெயர் வைத்தியலிங்கம் சேர்வை. தாயார் பெயர் திருமால்.

இந்த திருமால் என்ற பெணமணி யார் தெரியுமா? வெள்ளைச் சாமியின் மகள் தான் திருமால். இந்த வெள்ளைசாமிதான், தொண்டமானின் தந்தையாரான கருப்பையாபிள்ளையின் சொத்துக்களைப் பாகப்பிரிவினை செய்து பாதிப் பங்கினைத்தரவேண்டும் என்று, பஞ்சாயத்தார் முன் பிராது கொடுத்து வழக்காடியவராவார்.

அப்படிப்பட்டவரின் மகளுடைய வயிற்றில் பிறந்த இராஜேஸ்வரியையே தொண்டமான் தன் ஒரே புதல்வரான இராமநாதனுக்குத் திருமணம் செய்து வைத்தார் என்ருல், தொண்டமானுடைய குலம் தழுவும், குடிதழுவும், இனந்தழுவும் பண்பு எத்தகையது என்பது புலனுகிறது அல்லவா?

என்னதான் அபிப்பிராய பேதம் ஏற்பட்டாலும், இன பந்துக்களை அணைத்து, கட்டிச் சேர்த்து, ஒன்றுக்குள் ஒன்ருக இணைத்து வைக்க வேண்டும் என்ற எண்ணம் கருப்பையா பிள்ளையிடமும் இருந்தது. இந்த நல்ல எண்ணம் தொண்டமானிடமும் இருந்து வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமநாதனுக்கும் இராஜேஸ்வரிக்கும் ஐந்து குழந்தைகள். நான்கு பெண்கள், ஒரு ஆண்பிள்ளை. 1. அநுராதா 2. ஆதிலஷ்மி 3. ரேணுகாகோதை, 4. சௌமிய மூர்த்தி ஆறுமுக இராமநாத தொண்டமான் 5. தமயந்தி கீதா.

ஆக மூத்தவர் அநுராதா, ஆக இளையவர் தமயந்தி கீதா. ஆறுமுகத் தொண்டமான் மட்டும் ஒரு ஆண்பிள்ளை.

இராமநாதத் தொண்டமான் மத்திய மாகாண சபையில் ஓர் அமைச்சராக நியமனம் பெற்றதும், அமைச்சர் தொண்டமானுடைய அந்தரங்க செயலாளராக ஆறுமுகத் தொண்டமான் பதவியேற்றுள்ளார்.

தொண்டமானின் பேத்திகளான நால்வரும் திருமணம் செய்து விட்டார்கள். அந்த தம்பதியர்களின் விவரம்- அநுராதா: சாந்த மோகன், ஆதிலக்ஷ்மி: முத்து விநாயகம், ரேணுகா கோதை: மாணிக்க வேல், தமயந்தி கீதா: சங்கரன்.

பேரரான ஆறுமுகத் தொண்டமானும் திருமணம் செய்து கொண்டார். மனைவியின் பெயர் இராஜலக்ஷ்மி.

பேரன் பேத்திகளில் நால்வருக்குப் பிள்ளைகள்உண்டு. அந்தப் பிள்ளைகளின் பெயர்கள் செந்தில் தொண்டமான், சௌமியலக்ஷ்மி, சித்தம்மை கோதை நாச்சியார், கோதை ரங்க நாயகி என்பனவாகும்.

இவ்வாறான ஒரு தொண்டமான் குடும்ப விருக்ஷத்தை வளர்த்திருக்கிறார் கோதை தொண்டமான் அன்னையார். இந்த விருக்ஷம் இப்போது தொண்டமானுக்கு மகிழ்ச்சியும், நிழலும், நிம்மதியும் தரும் விருக்ஷமாக அமைந்திருக்கிறது.

கோதை தொண்டமான் மிகுந்த தெய்வ பக்தியுடையவர். அதே போலவே தொண்டமானும் கோயில்களுக்கும், தெய்வ கைங்கரியங்களுக்கும் மனங்கோணாது வாரி வழங்கும் தன்மை உடையவர். தோட்டப் பகுதிகளில் எத்தனையோ ஆலயங்களை அவர் புனர்நிர்மாணம் செய்வித்திருக்கிறார். அதே போலவே இந்தியாவிலும் பல ஆலயங்களைப் புதுப்பித்திருக்கிறார். சமீபத்தில் கூட அவர் அருள்மிகு கரியமலை சாத்தய்யனார் இரவுத்தராயர் ஆலயத்தைப் புனர் நிர்மாணம் செய்து குடமுழுக்கு விழா நடத்தியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்களைத் தரிசிப்பதில் அளப்பரிய ஆர்வம் கொண்டவர் கோதை அன்னை. இந்தியாவில் உள்ள புண்ணிய ஸ்தலங்களைப் பல தடவைகள் தரிசித்திருக்கிறார் அவர். ஆயினும் தமது கணவர் தொண்டமான் அமைச்சரான பின், ஸ்தலயாத்திரை ஒன்றை மேற்கொள்ளவேண்டும் என்ற ஆசை அவருக்கு ஏற்பட்டது.

எனவே அவர் தமது கணவருடனும், பிள்ளை, பேரப்பிள்ளைகளுடனும் 1983 ஆம் ஆண்டு டிஸம்பர் மாதம் ஒரு திவ்ய யாத்திரையை மேற்கொண்டார்.

திருக்கடவூர் சென்று அங்கு ஒரு யாகம் நடத்து வித்தார். பின்னர் திருப்புவனம் சென்று அங்கு பூஜை நடத்தித் தரிசித்தார்.

கோதை அன்னையாருக்கு சாத்தம்மை என்று ஒரு சகோதரி திருச்சியில் இருக்கிறார். அவரிடம் கோதை அன்னைக்கு மிகவும் அன்பும் ஈடுபாடும் உண்டு. அங்கு சென்று தங்கி சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் கோவிலில் தங்கரதம் இழுக்க ஏற்பாடு செய்தார். தாமே பக்திப் பரவசத்துடன் தங்கரதத்தின் வடத்தைப் பிடித்து இழுத்துப் பரம திருப்தியடைந்தார்.

பின்னர் எல்லோரும் ஸ்ரீரங்கம் சென்றார்கள். அரங்கநாதருக்கு அன்று சொக்கவாசல் திருவிழா நடைபெற்றது. திருவரங்க நாதரைத் தரிசித்த போது கோதை அன்னையாருக்கு திருக்கோஷ்டியூர் சௌமிய நாராயணப் பெருமாளைத் தரிசித்த மன நிறைவும் ஏற்பட்டது. அன்று டிஸம்பர் மாதம் 25 ஆம் நாள் கிறிஸ்தோதய தினம்.

ஏதோ ஒரு தெய்வீக சக்தி உந்த கோதை அன்னையார் இந்தப் புனித யாத்திரையைத் திட்டமிட்டாரோ என்று எண்ண வேண்டியிருக்கிறது.

மறுநாள் டிஸம்பர் 26 ஆம் திகதி அனைவரும் மூனுப்புதூர் திரும்பி வந்தார்கள்.

அன்றையத்தினம் கோதை அன்னை என்றுமில்லாதவாறு வெகு ஆனந்தமாகக் காணப்பட்டார். வேலையாட்களின் உதவியோடு தாமே சமையலைக் கவனித்தார். கணவர் உட்படப் பேரப்பிள்ளைகளுக்கு எல்லாம் தம் கைப்பட மதிய கால உணவுகளைப் பரிமாறினர். தானும் உண்டு, சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று சாயந்தரம்... அந்தோ... அந்த சம்பவம் நிகழ்ந்தது! மணி 4 இருக்கும்!

மூனைப்புதூரில் உள்ள வயி.கரு. இல்லத்தில் அது நிகழ்ந்து விட்டது.

வானத்திலிருந்து ஒரு பேரிடி வீழ்ந்தது போல் ஆகி விட்டது.

எதற்குமே கலங்காத தொண்டமான் அன்று கதி கலங்கிப் போனார். அவர் சற்றும் எதிர்பாராத சம்பவம் சம்பவித்தே விட்டது.

மார்பிலே கையை வைத்த கோதை அன்னையார் திடீரென்று சரிந்து போனார். நொடிப் பொழுதில் அவர் ஆவி பிரிந்து விட்டது.

எப்படியான மரணம் அது. அவரைப் பொறுத்த வரையில், கிடைத்தற்கரிய வகையில், தமது கணவரோடும், அருமைக் குழந்தைகளோடும், ஸ்தல யாத்திரை முடித்து வந்த கையோடு, பூவோடும் பொட்டோடும், அவர் தமது முடிவைத் தேடிக் கொண்டார்.

ஒரு நாள் பாயில் படுக்காமல், பலநாள் கிடந்து சீரழியாமல், காலனை வா என்று அழைத்து, ஒரே நொடியில் அவனிடம் தஞ்சம் புகுந்து விட்ட புண்ணிய மரணத்தை வீரமரணம் என்பதா, விறல் கொண்ட மரணம் என்பதா? அன்றி புஷ்பக விமானத்தில் சொர்க்கம் ஏகிய மரணம் என்பதா?

அவரைப் பொறுத்த வரையில், அவர் திருக்கோஷ்டியூராரின் சொர்க்க வாசலில் புகுந்து விட்டார் என்றே கொள்ள வேண்டும்.

ஆயினும், அவர் கணவர் தொண்டமானும், ஒரே பிள்ளையும், பேரப்பிள்ளைகளும் கதறிக் கதறி அழவேண்டியதாயிற்று. இந்த திடீர் அதிர்ச்சியை அவர்களால் தாங்க முடியுமா?

அவர்கள் மட்டுமென்ன, செய்தியைக் கேட்டதும் லட்சோப லட்சம் மக்கள், இலங்கையில் தோட்டத்து தொழிலாள மக்கள் துவண்டு துவண்டு அழுதார்கள். சோகமே உருவானார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பத்தா மறைந்து விட்டார் என்ற செய்தியை அவர்களால் நம்பவே முடியவில்லை.

என்று தரிசிப்போம் அந்த இன்முகத்தை? என்று கேட்போம் அந்த இதமான பேச்சை? என்று காண்போம் அந்த நிறைவான புன்னகையை? என்று உணர்வோம் அந்த இளகிய உள்ளத்தை?- என்று தேம்பித் தேம்பி அழுதார்கள்.

அவர்கள் கண்ணீர், மலை உச்சியிலிருந்து ஊற்றாகப் பெருகியது. துயரம் மழையாகப் பொழிந்தது. சோகம் ரம்பொடை வீழ்ச்சியாக ஓடிப்பாய்ந்தது!

என்றாலும் காலதேவன் கண்டது தோல்விதான்!

கோதை அன்னையாரை காலன் அழைத்துச் சென்றதால் அந்தப் புண்ணியவதியைத் தோட்டத் தொழிலாளர் மக்களிடமிருந்து பிரித்து விடலாம் என்று அவன் நினைத்தான். அவனால் முடியவில்லை. தோல்விதான் கண்டான்.!

ஏனென்றால், கோதை அன்னையார் தொழிலாளர் உள்ள வரை அவர்கள் உள்ளங்களில் வாழ்ந்து கொண்டேதான் இருப்பார்கள்.

தொழிலாளர் இயக்கம் உள்ளவரை அன்னையார் அந்த இயக்கத்தின் மூச்சாக இருந்து உயிர்த்துக் கொண்டே வாழ்வார்கள்.

தொண்டு செய்வோர் சாவதில்லை. அதுபோல் தொண்டமானின் துணைவியாரும் சாகவில்லை. இறப்பு இல்லாப் பெருவாழ்வு அவருடையது. அதனால் கோதை அன்னையார் என்றும் வாழ்கிறார்கள்.

தொண்டமானை தொடர்ந்தும் சரியான பாதையில் வழிநடத்திக் கொண்டே இருப்பார்கள்.

மனைவியாக அல்ல;
மாபெரும் சக்தியாக;
தேவியாக அல்ல;
காத்து நிற்கும் தெய்வமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 29

# அழகும் எழிலும் கொழிக்கும் தொண்டமான் அமைச்சகம்

அமைப்புத் திறனும், நிர்வாகத் திறனும் ஒருங்கே வாய்க் கப் பெற்ற வல்லாளர் தொண்டமான் என்று ஏற்கனவே ஓர் அத் தியாயத்தில் எடுத்துரைக்கப்பட்டது.

அவருடைய இந்தத் திறமைகளை மேலும் நிரூபிப்பதற்கு இன்னொரு உதாரணமாக விளங்குகிறது அவருடைய கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சகம்.

ஸ்ரீலங்கா அமைச்சர்களின் காரியாலயங்களில் சில, மிக அழகாகவும், சுத்தமாகவும், சிறப்பாகவும், அலங்காரமாகவும் அமைந்திருக்கின்றன. அவற்றை முதலாந்தரம், இரண்டாந்தரம், மூன்றாந்தரம் என்று பிரித்தால், தொண்டமானுடைய அமைச்சின் காரியாலயம் நிச்சயமாக முதலாந்தரக் காரியாலயங்களுள் ஒன் ருக இடம் பிடித்துக் கொள்ளும்.

ஒன்றிரண்டல்ல, பதினொரு தட்டுகளைக் கொண்டது இந்த அமைச்சகத்தின் நெளிமாடிக் கட்டடம். நவீன மயமான கட்டட நிர்மாணக் கலையின் ஒரு சின்னமாக விளங்கும் இந்த வான்தொடு மாளிகையில், நில அறைத்தளத்தையும், தரைமட்டத் தளத்தையும் நீக்கி விட்டால், மொத்தம் ஒன்பது பரந்த மாடிகள் உள்ளன, இந்தக் கட்டடத்தில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பதாவது உச்சார மாடியில் ஒரு பெரிய கூடம் போன்ற அறையில் கிழக்கு முகமாக அமர்ந்திருக்கிறார் அமைச்சர் தொண்டமான். அறை குளிர் ஊட்டப்பட்டிருக்கிறது. சுவரோர மாக கப்போட்டுகள் அமைத்து கண்ணாடி பொருத்தி, உள்ளே புத் தகங்களும், கைப்பணிப் பொருள்களும் காணப்படுகின்றன. அலங்காரமான 'ரட்டன்' நாற்காலி, மேஜை முதலியன போடப் பட்டுள்ளன. வலது புறக் கப்போட்டின் மேலே பிள்ளையார், முரு கன், லக்ஷ்மி, முதலிய படங்கள் உள்ளன. பச்சைப் பசேல் என்ற அழகான 'பான்' செடிகள் கொட்டிகளில் வைக்கப்பட்டுள்ளன.

அமைச்சரின் பின்னால் உள்ள மிகப் பெரிய கண்ணாடி ஜன்னலினூடாகப் பார்த்தால் காலிமுகக் கடல் அலைபாய்ந்து கொண்டிருப்பதையும், இந்து சமுத்திரத்தில் நாவாய்கள் சென்று கொண்டிருப்பதையும், காலிவீதியிலே பரபரப்போடு மோட் டார் வாகனங்கள் ஓடிக்கொண்டிருப்பதையும் காணலாம். ரம்மி யமான காட்சி!

அமைச்சரின் முன்னால் ஒருபுறம் கன்பரன்ஸ் மேஜை, நாற்காலிகள். மறுபுறம் வி.ஐ.பி.க்களை உபசரிக்க சோபாக்கள், டீ போய்கள் முதலியன உள்ளன.

மலர்ந்த முகத்தோடும், நிறைந்த புன்சிரிப்போடும் அமைச்சர் தொண்டமான் அங்கே ஒரு சுழல் நாற்காலியில் உட் கார்ந்திருப்பது அழகாக ஒரு தனி சோபையோடு காணப்படும். மேஜை மீது பல வண்ணங்களில் உள்ள டெலிபோன்கள் அவ்வப்போது ஒலியெழுப்பும்.

அமைச்சர் காரியாலயத்துக்கு வருவதே ஒரு தனி அழகு. காலை 8.30 மணிக்கு அவர் வீட்டிலிருந்து புறப்பட்டு விடுவார். நேராக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைமைக் காரியா லயத்துக்குச் செல்வார். இந்தக் காரியாலயம் கொழும்பு ஆனந்த குமாரசாமி வீதியில் இருக்கிறது. அங்கு அவர் 10.30 மணிவரை அமர்ந்து தொழிலாளர் பிரச்சினைகளைக் கவனிப்பார். பின்னர் 10.30 மணிக்கு அமைச்சு காரியாலயத்துக்குப் புறப்படுவார். புறப்படுமுன் அமைச்சர் புறப்படுகிறார் என்று அமைச்சுக்கு டெலிபோனில் செய்தி வரும்.

அமைச்சுக் கட்டடத்தில் இரண்டு பெரிய 'லிப்டு'கள் இயங்குகின்றன. ஒரு 'லிப்ட்' உடனே கீழே போய் அமைச்சரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகைக்காகக் காத்து நிற்கும். பெட்டியை, பைல்களைத் தூக்கி வருவதற்காக அமைச்சரின் பியோன்களும் கீழே போய்விடுவார்கள்

அமைச்சர் காரில் வந்து இறங்குவார். கூடவே அவருடைய மெய்க்காப்பாளரும், அந்தரங்கச் செயலாளரான பேரன் ஆறுமுகத் தொண்டமானும் வருவார்கள். அமைச்சர் மேலே வந்ததும், அவருடைய, கம்பளம் விரித்த அறைக்குள் புகுவதற்கு ஒரு தனிவாயில் இருக்கிறது. அதன் வழியாக அவர் உள்ளே சென்று நாற்காலியில் உட்காருவதற்கு முன்பாகத் தமது மேஜையை நோக்குவார். அங்கே ஒரு வெற்றிலையில் அன்று காலை கோவிலில் செய்யப்பட்ட அர்ச்சனையின் விபூதி குங்குமம் இருக்கும். அதை எடுத்து பயபக்தியோடு நெற்றியில் இட்டுக் கொள்வார். பக்கத்தே இருக்கும் சுவாமி படங்களைப் பார்த்து கண்களை ஒரு கணம் மூடித் திறப்பார். அதன் பின்னரே ஆசனத்தில் அமர்வார்.

மேஜையின் மீது அவர் அன்று கவனிக்க வேண்டிய வேலைகள், சந்திக்க வேண்டிய பிரமுகர்கள், மற்றும் விஷயங்கள் எல்லாம் பட்டியல் இட்டு, நேரம் குறித்து, டைப் செய்து, படியெடுத்து வைக்கப்பட்டிருக்கும். இந்த வேலைகளை எல்லாம் அவருடைய இணைப்புச் செயலாளரான பி. திருநாவுக்கரசு கனகச்சிதமாகச் செய்து வைத்திருப்பார்.

அமைச்சர் தொண்டமானுடைய அன்றைய உத்தியோக பூர்வமான பணிகள் பரபரவென்று ஆரம்பமாகும். விஷயங்களை கன வேகத்தில் கவனிப்பார். மதியம் உணவுக்காக வீடு செல்வார். பின்னர் 2.30 மணிக்கெல்லாம் காரியாலயத்துக்கு வந்து விடுவார். ஒன்றன் பின் ஒன்றாக வேலைகளைக் கவனித்துக் கொண்டேயிருப்பார். சில சமயங்களில் மாலை 6 மணிக்கு மேலும் அவர் காரியாலய வேலைகளைக் கவனிப்பது உண்டு.

வெளிநாடுகளுக்குச் செல்லவில்லையென்றால், வெளியூர்களுக்குச் செல்லவில்லையென்றால், வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவில்லை யென்றால், மந்திரிசபைக் கூட்டத்துக்குப் போகவில்லையென்றால், அவர் காரியாலய வேலைகளைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்துக் கொண்டே இருப்பார். அவரைக் காணவந்த யாரும் தெருவில் நின்று தூங்குவது இல்லை. வீட்டில் படுத்துக் கொண்டு தொகுதி மக்களை "இன்று வா. நாளை வா" என்று அவர் அலைப்பதும் இல்லை. அந்தந்த வேலையை அந்தந்த வேளையே முடித்து அனுப்பி விடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் அமர்ந்திருக்கும் ஒன்பதாவது மாடியில், அவருடைய செயலாளர் காரியாலயம், இணைப்பு செயலாளரின் காரியாலயம், அமைச்சரின் பேர்சனல் டிபார்ட்மெண்ட் எல்லாம் அமைந்துள்ளன. இணைப்புச் செயலாளர் திருநாவுக்கரசு அமைச்சின் சகல பிரிவுகளையும் கோர்டினேட் செய்து அனைத்தும் சுமுகமாக செயல்பட வேண்டிய பணிகளைத் துரிதமாகவும், திறமையாகவும் அவ்வப்போது செய்து, அமைச்சரின் காரியங்களுக்கு எதுவித தடங்கலும் ஏற்படாத படி பார்த்துக் கொள்கிறார், சுழலும் சக்கரத்தின் அச்சுப்போல! (He is a pivot in the organisation) அமைச்சின் எட்டாவது மாடியில், உதவி அமைச்சர், அவருடைய அந்தரங்கச் செயலாளர், பொது ஜனத் தொடர்பு அதிகாரி, ஆலோசகர்கள், இவர்களுடைய உத்தியோகஸ்தர்கள் ஆகியோர் உள்ளார்கள்.

ஏழாவது மாடியில், மேலதிகச் செயலாளர் இருக்கிறார். கைத்தொழில் அபிவிருத்திப் பகுதி, சிறு கைத்தொழில் காரியாலயங்கள்- இவையும் உள்ளன.

ஆறாவது மாடியில், அமைச்சின் திட்டமிடல், அபிவிருத்திப் பணி பகுதிகள் அமைந்துள்ளன.

ஐந்தாவது மாடியில், அமைச்சின் நிர்வாகப் பிரிவும், நிதிப் பிரிவும் உள்ளன.

நான்காவது மாடியில், கால் நடைகள் பற்றிய திட்டமிடல் பகுதியும், அபிவிருத்திப் பகுதியும் இருக்கின்றன.

மூன்றாவது மாடியிலும் மேற்கூறிய பிரிவுகளின் இதர உத்தியோகஸ்தர்கள் உள்ளார்கள்.

இரண்டாவது மாடியில், தேசிய கைப்பணி கவுன்ஸில் அமைந்திருக்கிறது.

முதலாவது மாடியில், பத்திரிகை முதலிய தொடர்பு சாதனங்கள் பகுதி, கேட்போர் கூடம், பெண்கள் இளைப்பாறும் அறைகள் உள்ளன.

தரைமட்டத் தளத்தில், பாதுகாப்பு பிரிவு, வரவேற்பு பிரிவு, கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தகவல் நிலையம், கால்நடை உற்பத்தி திணைக்களத்தின் தகவல் நிலையம் ஆகியன அமைந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நில அறைத் தளத்தில், களஞ்சியமும், தஸ்தாவேஜுக்களின் சேமிப்புப் பாதுகாப்பு அறைகளும் உள்ளன.

இப்படியாக, 11 தளங்களிலும்வியாபித்திருக்கிறதுதொண் டமானுடைய அமைச்சகம். காரியாலயங்கள் எல்லாம் அழகான தளவாடங்களை உடையன. காரியாலய அறைகள் அலுமினியம் பிரேமில் கண்ணுடிகளால் அழகாகவும் ஒழுங்காகவும் சுத்தமாகவும் பார்ட்டிஷன் செய்யப்பட்டு பார்வைக்கு எடுப்பாக உள்ளன.

இந்தக் காரியாலயத்தில் ஏறக்குறைய 200 பேர் வேலை செய்கிருர்கள். அங்கு வேலை பார்ப்பவர்களை அமர்த்தி, அமைச் சர் தொண்டமான் மத்தியில் உட்கார்ந்து, அமைச்சகத்தின், முழுத் தோற்றத்தையும் பின்னணியாகக் கொண்டு எடுக்கப்பட்ட ஒரு போட்டோப் படம் இந்நூலில் இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.

இந்தப் பெரிய கட்டடத்தில் அமைச்சர், உதவி அமைச்சர், செயலாளர்கள் இருக்கும் மாடிகள், மற்றும் கேட்போர் கூடம் உட்பட மொத்தம் மூன்று மாடிகள், குளிர் ஊட்டப்பட்டுள்ளன.

ஆனுல் வேடிக்கை என்ன வென்ருல், அமைச்சர் தொண்ட மானைச் சந்திக்க அவர் குடியிருக்கும் கொழும்பு ரேஸ் கோர்ஸ் அவெனியு தொடர்மாடி வீட்டுக்குச் சென்ருல், அங்கே எயர் கொண்டிஷன் கிடையாது.

தனிப்பட்ட முறையில் தலைவர் தொண்டமான் சொகுசையோ, ஆடம்பரத்தையோ விரும்புபவர் அல்லர் என்பதற்கு அவர் வீடு ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.

அதே வேளையில், வெளிநாட்டவர்கள், பிரமுகர்கள், ராஜதந்திரிகள், தூதுவர்கள் எல்லாரும் வந்து போகக் கூடிய தொண்டமானுடைய அமைச்சுக் காரியாலயம், எந்த ஒரு தமி ழரும் பெருமைப்படும் படியாக அழகும் எழிலும் கொழிக்க வைக்கப்பட்டிருப்பது பாராட்டற்குரியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30

# எழுபத்தைந்து வயதிலும் எழுச்சி மிக்க இளைஞர்

அவர் ஓர் இளைஞர்!

ஆக எழுபத்தைந்து ஆண்டுகளே பூர்த்தியாகியுள்ளன, அவருக்கு.

இன்றும் அவர் ஓர் எழுச்சிமிக்க இளைஞராகவே காணப்படுகின்றார்.

ஈடுபாடு இல்லாத துறை எதுவும் இல்லை. தொழிற் சங்கம், அரசியல், கலை, கலாசாரம், தமிழ் மொழி, சமூகப் பணி, குடும்பம் இப்படி எல்லா விஷயங்களிலும் அவருக்கு ஆர்வமும் ஞானமும் உண்டு.

உலகத்தில் அவர் பாராத நாடு இல்லை. போகாத தேசம் இல்லை. எனினும் அவர் உள்ளத்தில் இடம் பிடித்திருப்பன இலங்கை மணித்திருநாடும், புண்ணிய பாரத தேசமும் தான். இரண்டும் இணையற்ற நாடுகள்; இணைந்த சமய கலாசாரம் பரவிய நாடுகள் என்பது அவர் கருத்து.

ஊக்கமும் உழைப்பும் அவரோடு பிறந்தவை. உற்சாகத்தில் அவர் ஒரு வாலிபர். உறங்கிச் செயலற்றுக் கிடப்பவர்களே அவருக்குப் பிடிக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா மக்களையும், எல்லா சமூகத்தவரையும், சகல இனத்தவரையும், எல்லா சமயங்களையும் அவர் சமமாகவும், சமரஸமாகவும் நேசிக்கிறார்.

ஏணிப் படியாக அவர் எவரையும் பயன் படுத்துவதில்லை. எவரெவர் தமக்கு உதவிபுரிந்தார்களோ, அவர்களை என்றென்றும் உள்ளத்தில் நிலையாக வைத்துப் போற்றுகிறார்.

ஐந்து இலட்சியங்களுக்காக அவர் தம்மை அர்ப்பணித்து வாழ்கிறார். இலங்கை வாழ் இந்திய மக்களுக்கு பிரஜா உரிமை, வாக்குரிமை - தோட்டத் தொழிலாளருக்கு உயர் சம்பளம் - பெண்களுக்கு சம உரிமை, சம நீதி - தோட்ட மக்களுக்கு உயர்கல்வி - அவர்களுக்கு நல்ல வீடும் காணி நிலமும் கிடைக்க வேண்டும் - என்பனவே அந்த இலட்சியங்களாகும்.

ஒருமைப் பாட்டில் அசைக்கமுடியாத நம்பிக்கை உடையவர். ஆனால் ஒருமைப்பாடு என்பது வேற்றுமையில் ஒற்றுமை காணும் ஒருமைப்பாடாக, அதாவது, Unity in diversity என்ற ஒருமைப்பாடாக இருக்கவேண்டுமே தவிர, பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனங்களை விழுங்கி ஏப்பம் விடும் ஒருமைப்பாடாக இருக்கக் கூடாது என்பது அவர் கருத்து. விளக்கமாகச் சொல்லப் போனால், He is for integration and not for assimilation.

ஓர் இனம் தன் தனித்துவத்தை இழக்கக் கூடாது, இழக்கவும் முடியாது. அதே வேளையில் பிற இனங்களை விட்டு ஒதுங்கித் தனித்து வாழவும் கூடாது. பரஸ்பரம் நம்பிக்கை வைத்து, மனந்திறந்து பழகி அன்னியோன்யமாக அனைவரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளாக வாழ வேண்டும் என்பது அவர் கொள்கை.

அவ்வப்போது உருவாகும் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு அமைய ஒரு தலைவன் தனது போராட்ட முறைகளையும், தர்ம யுத்த தந்திரோபாயங்களையும் ஏற்றவாறு மாற்றியமைத்து, தன்னைப் பின் பற்றும் தொழிலாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் எது நன்மையோ அதைப் பெற்றுக் கொடுக்க முயல வேண்டும். அதுவே சிறந்த தலைவனுக்கு தக்க சான்று என்பது அவர் கோட்பாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விதாம் தன்மைகள் அனைத்தும் ஒன்று திரண்டு உருவான ஒரு திருவுருவம் தான் தலைவர் தொண்டமான்.

தொள்ளாயிரம் பிறைகள் - ஒன்பது நூறு பௌர்ணமிகள் - அவர் வாழ்நாளில் வந்துபோய் விட்டன. ஆயினும் தொய்வோ, சோர்வோ அற்று யௌவன தேஜஸுடன் அவர் விளங்குகிறார்.

இருபத்து ஏழாயிரத்து முன்னூற்று எழுபத்தைந்து தரம் சூரியன். தினம் தினம் உதித்து விட்டான். ஆயினும் அவர் திறமை குன்றாமல், தீரம் குறையாமல் தோட்டத் தொழிலாளர் தொண்டில் தொடர்ந்து ஈடுபட்டு, அன்றாடம் உதிக்கும் ஆதவனைப் போலவே பிரகாசிக்கிறார்.

யார் அவர்?

அவருடைய இளமையின் இரகசியம் தான் என்ன?

அவர் தான் இந்த நூலின் கதா நாயகர் மாமனிதர் சௌமிய மூர்த்தி தொண்டமான்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பெருந்தலைவர் தொண்டமான்.

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் கிராமக் கைத்தொழில் அமைச்சர் தொண்டமான்.

எல்லாவற்றிற்கும் மேலாக இலங்கை வாழ் ஆறு லட்சம் இந்திய வம்சாவழி மக்களின் இதய பீடத்தில் கொலுவீற்றிருந்து அன்பாட்சி செலுத்தும் தோட்டத் தொழிலாளர்களின் முடிசூடா மாமன்னர் தொண்டமான்.

அகவை என்றால் ஒருவருக்கு நிறைவாகிவிட்ட வயது, பூர்த்தியாகிவிட்ட ஆண்டு என்று பொருள். தொண்டமானுக்கு 30.8.1988இல் அகவை 75 ஆகிறது. ஆயினும் அவர் 75 அகவையினர் என்று நம்புவதற்கு எவரும் தயாராக இல்லை.

ஒருவருடைய வயது அவர் பிறந்த ஆண்டிலிருந்து கணக்கிடப்படலாம். ஆனால் அது, உடலின் வயதே தவிர உளத்தின் வயது ஆகாது. மனிதனின் வயதே தவிர அவனுக்குள்ளே இருக்கும் மனத்தின் வயது ஆகாது. ஒருவருடைய உடல் தளர்ந்தாலும், நரை விழுந்தாலும் அவருடைய மனம் மட்டும் இளமையாக இருந்தால் அவர் இளைஞரே தான். அவருடைய உழைப்பு, சுபாவம், தொண்டு எல்லாம் இளமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ந்தனவாகவே பரிணமிக்கும். இந்த உண்மையை உட்பொதிந்ததாகவே இருக்கிறது "தேகத்துக்கு வயது உண்டு, தேகிக்கு வயது கிடையாது" என்ற பகவத் கீதை வாக்கியம்.

வாழ் நாளில் பிறருக்காக தொண்டு செய்வதையே தமது குறிக்கோளாகக் கொண்ட இந்த தொண்டு + மானுக்கு வயது 75 ஆக இருக்கலாம். ஆனல் அவர் மனது இன்னும் ஏழு ஐந்தாகவே விளங்குகின்றது.

பூமான் என்ருல் பூமிக்கு அதிபதி. சீமான் என்ருல் செல்வத்துக்கு அதிபதி என்று பொருள் கொள்வது போல, தொண்டு மான் என்ருல் தொண்டுக்கு அதிபதி என்று பொருள் கொள்வது தவருகாது.

தொண்டுதான் தொண்டமானை இளமையாக வைத்திருக்கிறது. அவருடைய இளமையின் இரகசியம் இதுவேதான்.!

எந்த ஒரு மனிதன் தனது மனதுக்கு மிக மிகப் பிடித்தமான ஒரு காரியத்தை முழு மனதுடன் தொடர்ந்து செய்கிருனே அவனுக்கு அளப்பரிய மனநிறைவும் சந்தோஷமும் ஏற்படுகின்றன. இந்த மனநிறைவு ஒரு டானிக் போன்றது. இந்த சந்தோஷம் சிரஞ்சீவித்துவம் அளிக்கும் அமிர்தம் போன்றது. இவை கிடைத்துவிட்டால் அவனுக்கு வயசு ஏறுவதே இல்லை. இறங்கிக் கொண்டே வருகிறது. இளமை பெயர்கிறது. வாலிபம் வளம் பெறுகிறது.

தொண்டமானின் இளமையின் இரகசியம் அவருக்கு தொண்டில் உள்ள ஈடுபாடுதான்.!

கோதை அம்மையார் மட்டும் இன்னும் ஜீவவந்தராக இருந்திருந்தால் தொண்டமானின் சேவை இன்னுமின்னும் மேலோங்கியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

தொண்டமானுடைய வாழ்க்கையைப் பின்நோக்கிப் பார்த்தால் அது ஆச்சரியமும் வியப்பும் நிறைந்ததாகவே இருக்கும். சில கட்டங்கள் பிரமிப்பு ஊட்டுவனவாகவும் இருக்கும். வெள்ளைக்காரன் ஆட்சிக்காலத்தில் தோட்டத்தொழிலாளி கீழ் மட்டத்தில் உள்ளவனுக, அடிமையாக, மதிக்கப்பட்டான். இந்தியாவில் ஏழை விவசாயிகளையும், கிராமத்து மக்களையும் பட்டிக்காட்டான் என்று அழைத்தது போல, இங்கு மலை நாட்டுத் தொழிலாளி "தோட்டக்காட்டான்" என்று அழைக்கப்பட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றாலும், மலைநாட்டு மக்களிடையே அன்று பணக்காரர்களும் படித்தவர்களும் பலர் இருக்கவே செய்தார்கள். ஆயினும் அவர்களில் எவருமே தோட்டக்காட்டானைப் பற்றிக் கவலைப்பட வில்லை. தோட்டத் தொழிலாளர்களுக்காகப் பாடுபட அவர்களைக் கைதூக்கிவிட, அவர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுக்கப் போராட முன் வரவில்லை.

அப்படி முன் வந்தவர் தொண்டமான் ஒருவர்தான். "இந்த அடிமட்ட சமூகத்துக்காக நமது நேரத்தையும், உழைப்பையும், பணத்தையும் ஏன் வீணில் செலவிட வேண்டும்?" என்று மற்றவர்கள் எல்லாரும் ஒதுங்கி விட்ட வேளையில், "என் மக்களுக்காக நான் பாடுபட்டே தீருவேன்" என்ற திட சங்கல்பத்தோடு, பொறுப்பேற்றுக் கொண்டவர் தொண்டமான் ஒருவர்தான்.

மலைநாட்டு சமூகத்துக்கு ஒரு சிறந்த தலைவன் தேவைப் பட்டான். அவனைத் தொண்டமானுடைய வடிவத்தில் கடவுளே படைத்து அளித்தார் என்றுதான் எண்ணவேண்டியிருக்கிறது.

தமது சமூகத்துக்காகப் பாடுபடுவதற்கு, தமது நாட்டுக் காகப் பாடுபடுவதற்கு அவ்வப்போது ஒருவர், ஒருவரை ஆண்டவன் அனுப்பியிருக்கிறான். இப்படியான விவரங்களை நாம் விவிலிய நூலில் நிறையப்படிக்கிறோம். சரித்திரத்தில் நிறையச் சந்திக்கிறோம்.

மோஸஸைப் போன்றவர் தொண்டமான் என்று ஒரு சிங்களப் பெருமகனார் எழுதியிருக்கும் சம்பவத்தை இந்த நூலிலேயே முன்பு கண்டோம். அது போலவே, ஏப்ரஹாம் லிங்கன், காந்தி, நேரு, கார்ள்ஸ் மார்க்ஸ், லெனின், மாட்டின் லூதர் கிங் போன்றவர்கள் தத்தம் மக்களுக்காக, நாட்டுக்காகப் பாடுபட, ஒவ்வொரு இலட்சியத்தோடு, ஒவ்வொரு காலகட்டத்தில் தோன்றினார்கள்.

அவர்களைப் போலவே தோன்றிய ஒருவர்தான் தலைவர் தொண்டமானும்.

தொண்டமான், தாம் ஏற்ற பெரும் பணியை எப்படிச் செய்து முடிக்கிறார், எப்படி வெற்றிகாண்கிறார் என்பதை அவர் கூடவே இருந்து அவதானிப்பவர்கள் அதிசயப்பட்டுவிடுவார்கள். நாட்டின் சகல மட்டத்து மக்களோடும் அவர் சர்வ சாதாரணமாகப் பழகுகிறார். நாட்டின் அதி உத்தம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதியாக இருந்தாலும் சரி, பிரதம மந்திரியாக இருந்தாலும் சரி, சாதாரண தோட்டத் தொழிலாளியாக இருந்தாலும் சரி, அல்லது தேசிய, சர்வதேசிய தலைவர்களாக இருந்தாலும் சரி அவர் எலலோருடனும் அவரவருக்கு ஏற்றபடி மதிப்பும் மரியாதையும் கொடுத்துப் பழகுகிறார்.

தொண்டமானோடு பேசிப் பழகுபவர்கள், வாக்குவாதம் செய்பவர்கள், அபிப்பிராய பேதம் உள்ளவர்கள் யாராக இருந்தாலும் அவருடன் சிறிது நேரம் பேசிவிட்டால் அவருடைய உள்ளத்தின் உண்மையையும், நேர்மையையும், கபடம் இல்லாத் தனத்தையும் உணர்ந்து கொள்கிறார்கள். பகைவர்கள் கூட அப்படியே. "ஆஹா, தொண்டமான் எவ்வளவு நல்ல மனிதர். அவர் தமது கொள்கைக்காகப் பாடுபடுகிறார். நாம் அவர் கொள்கையை ஏற்றுக் கொள்ள முடியாவிட்டாலும், அந்த நல்ல மனிதரை ஏற்றுக்கொள்கிறோம். அவர் பண்பாட்டையும், விசுவாசத்தையும் மதிக்கிறோம்" என்று சொல்லிக் கொள்கிறார்கள்.

ஒரு தொழிலாளி, எத்தகைய ஏழையாக இருந்தாலும், அவனுடைய பிரச்சினை என்ன என்பதை அணுகி ஆராய்ந்து பார்க்கிறார். அவனுக்கு வேண்டிய உதவிகளை எப்படிச் செய்ய முடியுமோ அதற்கான வழிமுறைகளைக் கண்டறிந்து செய்து கொடுக்கிறார். அவருடைய ஸ்தாபன வளர்ச்சிக்கு தொண்டமான் கையாளும் தனிமனித அணுகு முறை தக்க பலனை அளித்திருக்கிறது.

இந்த வயதிலும் அவர் எந்தக் காரியத்தையும் குறித்த நேரம் தவறாமல் செய்து முடிக்கிறார். ஏதாவது ஒரு நிகழ்ச்சிக்கு ஒப்புக் கொண்டால் அதை எக்காரணம் கொண்டும் அவர் ரத்துச் செய்ய விரும்புவதில்லை. இரவு இரண்டு மணிக்கு வந்து படுத்துக் கொண்டாலும் அதிகாலை ஆறு மணிக்கு உள்ள நிகழ்ச்சிக்கு எப்படியோ போய்க் கலந்து கொள்கிறார். எப்போது படுக்கிறார்? எப்போது தூங்குகிறார்? எப்போது எழுந்திருக்கிறார்? எப்படியெப்படி யெல்லாம் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார் என்பது பெரும் ஆச்சரியத்தை விளைப்பதாக உள்ளது.

உலக நாடுகளுக்கெல்லாம் பிரயாணம் செய்கிறார். உலக மாநாடுகளில் எல்லாம் கலந்து கொள்கிறார். நள்ளிரவில் இலங்கை திரும்புகிறார். மறுநாள் காலை 8.30 மணிக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் காரியாலயத்திலும், 10.30 மணிக்கு அமைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுக் காரியாலயத்திலும் ஆஜராகி விடுகிறார். காரியாலய வேலைகள் நியமப்படி நடக்கின்றன. அவருடைய உழைப்பு சக்தியையும், வேலைத்திட்டத்தையும் கண்டு அதிசயிக்காதவர்களே இல்லை.

தொண்டமான் ஏற்ற காரியங்கள் எல்லாவற்றிலும் அதிகமாக வெற்றியே ஈட்டியிருக்கிறார். ஒரு சிலவற்றில் தோல்வியும் கண்டிருக்கிறார். எனினும் மக்கள் அவரை நம்பத் தயாராக இருக்கிறார்கள். "இன்று தோற்றாலும் நாளை வெற்றி காண்பார் தொண்டமான்." என்ற நம்பிக்கை அவர்களிடம் வளர்ந்திருக்கிறது. இதற்கு அவர் செய்திருக்கும் தியாகம் தான் காரணம். தொண்டமானைப் போல தமது மக்களுக்காக உழைப்பு என்றும், பணம் என்றும், உடைமைகள் என்றும் தியாகம் செய்துள்ள தலைவர் பிறிதொருவரைக் காணமுடியாது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்ற பாரிய ஸ்தாபனத்தை இத்தனை வருட காலமாக நிர்வகிப்பது என்பது இலேசுப்பட்ட காரியம் அல்ல. அந்த சாதனை ஒன்றிற்காகவே எந்தப் பல்கலைக் கழகமும் தொண்டமானுக்கு ஒரு டாக்டர் பட்டம் வழங்கி கௌரவிக்கலாம்.

தொண்டமான் மூன்று சகாப்தத்தின் தலைவர். சுதந்திரத்துக்கு முன்னர் வெள்ளைக்காரர் தோட்டங்களை நிர்வகித்த போதும் அவர் தொழிலாளர் தலைவர். சுதந்திரத்தின் பின்னரும் தலைவர். தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்ட பின்னரும் அவரே தொடர்ந்து தலைவர்.

அரசியல் துறைகளிலும் ஏனைய துறைகளிலும் தலைவர் என்று தோன்றியவர்கள் எடுத்த காரியங்களை முடிக்காமல், ஒரு ஒரு கால கட்டத்தில் தலைவராக இருந்து மறைந்தார்கள். ஆனால் தொண்டமான் தமது மக்களின் விடிவுக்காகத் தோன்றிய தலைவர். ஒரு காரியத்தைச் சாதிப்பதற்கென்று தெய்வ அருளால் தோற்று விக்கப்பட்டிருக்கும் தலைவர். அவர் பல வெற்றிகளைக் கண்டு விட்டார். மீதமாக உள்ள விஷயங்களிலும் அவர் வெற்றியைப் பெற்றே தீருவார். அதற்கான திடசித்தம் அவரிடம் உண்டு. அதற்கான திட்டமும் அவரிடமுண்டு.

தொண்டமான் மேற்கொண்ட பணி மூன்று வகையானது.

1. தொழிற்சங்கப் பணி.
2. அரசியல் பணி
3. சமூகப் பணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மூன்று பணிகளையும் தொண்டமான் தொடர்ந்து நடத்திக்கொண்டே இருப்பார். அவர் காலத்துக்குப் பின்னும் இப் பணிகள் நடைபெற்றுக் கொண்டே இருக்கும்.

தொழிற் சங்கப் பணியை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் செய்யும். அரசியல் பணியை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசியல் பிரிவு மேற்கொள்ளும். சமூகப் பணியை மேற்கொள்வதற்கு ஒரு புதிய ஸ்தாபனத்தைத் தமது பெயரில் தோற்றுவித்திருக்கிறார் தொண்டமான்.

## தொண்டமான் அற நிதியம்.

தமது 75 ஆவது வயது கடந்த ஆண்டு ஆரம்பமான போது அவர் ஒரு நல்ல காரியத்தைச் செய்தார். தமது பெயரிலே "தொண்டமான் அற நிதியம்" என்று ஒரு நிறுவனத்தைத் தோற்றுவித்தார். அதற்கு பத்து லட்சம் ரூபாவை முதல் பணமாக ஒதுக்கினார். இந்த நிதியத்தில் ஆரம்ப விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட ஸ்ரீலங்காவின் பிரதம மந்திரி ஆர். பிரேமதாஸா, விழாவிலேயே ஒரு லட்சம் ரூபா வழங்கி "தொண்டமான் அற நிதியம்" வளர வேண்டும் என்று வாழ்த்தினார்.

இந்த நிதியத்தின் பண இருப்பை அதிகரிப்பதற்காக தொண்டமான் பல நல்ல திட்டங்களைத் தம் மனதுள் வைத்திருக்கிறார். தோட்டத் தொழிலாளர் மனம் வைத்தால், ஒரே வருடத்துள் இந்த நிதியம் கோடானு கோடி ஆகிவிடும்.

தன்னுடைய வாழ் நாளுக்குப் பிறகும் தனது இலட்சியமும், கொள்கைத் திட்டங்களும் வாழ வேண்டும் என்று விரும்புகிறார் தொண்டமான். தன் பெயராலும் தன் மனைவி கோதை அன்னையார் பெயராலும் நாட்டில் பல நல்ல காரியங்கள், சமூக நலத் தொண்டுகள், கல்வி கலாசார மேம்பாடுகள், தான தருமங்கள் நடைபெற வேண்டும் என்று ஆசைப்படுகிறார் தொண்டமான். இந்த தொண்டமான் அற நிதியத்தால், தான் பிறந்து, வாழ்ந்து, தொண்டு புரிந்து, தலைமை வகித்து வளர்த்த தோட்டத் தொழிலாளர் சமுதாயம் மேன்மையுற வேண்டும், மேன்மேலும் வளர்ச்சியுற வேண்டும் என்பதே தொண்டமானின் இதயக் கனவு ஆகும்.

தொண்டமான் அற நிதியம் என்ன செய்யப் போகிறது? அதன் இலட்சியங்கள் யாவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டமான் நிதியம் ஏழு இலட்சியங்களைக் கொண்டது. அவையாவன:-

1. பல இன சமுகங்களைக் கொண்ட இலங்கை மக்களின் ஆத்மார்த்த உணர்வுகளை போற்றி வளர்த்து இலங்கையில் வாழும் வித்தியாசமான சமுகங்களிடையே சமத்துவத்தையும், மரியாதையையும் உருவாக்குதல்.

2. உணவு, உடை, இருப்பிடம், கல்வி, மனித கலாசார வளர்ச்சி ஆகியவை தொடர்பாக சமுகங்களிடையேயும், மக்களிடையேயும் காணப்படும் சமத்துவமின்மையை அகற்றி, சமுக நிதியை உறுதிப்படுத்தி, வசதிகள் இன்றி அவதிப்படும் மக்களின் முன்னேற்றத்துக்காக பாடுபடுதல்.

3. கல்வி வசதியை விருத்தி செய்யும் முகமாகவும் அறிவு வளர்ச்சியை ஏற்படுத்தும் முகமாகவும், பாடசாலைகளை, வாசிகசாலைகளை, கலாசார நிலையங்களை, மற்றும் ஆராய்ச்சி கூடங்களை நிறுவி அவற்றைப் பேணும் வகையில் அவற்றுக்கு நிதி உதவி, நன்கொடை, வழங்கல். புலமைப் பரிசில்கள் கல்லூரி நிதிகள் ஆகியவற்றை ஏற்படுத்துதல். எல்லா விதமான உயர்கல்வி ஸ்தாபனங்களுக்கும் நிதி உதவி வழங்கல். முயற்சி உடைய பொருத்தமான நபர்களுக்கு வர்த்தக, தொழில் துறைகளிலும், நிபுணத்துவம் கொண்ட தொழில்களிலும் சந்தர்ப்பம் அளித்தல், தனிப்பட்டவர்களின் திறமைகளை வளப்படுத்தும் வகையில் பயிற்சி நிலையங்களை அமைத்தல்.

4. வறுமை மற்றும் துன்பங்களை நிவிர்த்தி செய்யும் வகையில் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு நிதி உதவி, மற்றும் ஏனைய பொருளாதார உதவிகள் வழங்கல், வறுமையாலும், விபத்தாலும் பாதிக்கப்பட்டுள்ளோருக்கு உதவும் வகையில் அனாதை இல்லங்கள், திக்கற்றவர்களுக்கான இல்லங்கள், ஏழைகளுக்கு உதவி செய்யும் அமைப்புகள் புனர்வாழ்வு நிலையங்கள் ஆகியவற்றை அமைத்து நடத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. எல்லா விதமான நோய்களைத் தடுத்து நிவாரணம் அளிக்கும் முயற்சிகளுக்கு பொருளாதார உதவி அளித்து உதவி செய்தல். நோய்களால் பாதிக்கப் பட்டவர்களுக்காகவும் உடல் மன ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்காகவும், உடல் ஊனம் கொண்டவர்களுக்காகவும் இயங்கும் ஆஸ்பத்திரி கள், மருத்துவ விடுதிகள், சுகாதார நிலையங்கள், ஓய்வு விடுதிகள் ஆகியவற்றை அமைத்து நடத்துதல்.

6. சிறுவர் சிறுமியரின் சுகாதாரத்தைப் பேணும் வகையில் உணவு, உடை, மருத்துவ மற்றும் சத்திர சிகிச்சை வசதிகளை ஏற்படுத்துதல். போஷாக்கின்மை, விபத்து மற்றும் நோய்களால் பீடிக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கான சிகிச்சை நிலையங்களை அமைத்து பாதிக்கப்பட்டவர்களை முறையாக பராமரித்தல்.

7. இலங்கை வாழ் மக்களின் கற்பனை வளத்தை அதிகரிக்கும் வகையில் கலை, கலாசார மற்றும் இலக்கிய துறை முயற்சிகளுக்கு ஊக்கம் அளித்து வளர்த்தல்.

இவைதாம் தொண்டமான் அற நிதியத்தின் குறிக்கோள் கள் ஆகும். தொண்டமான் அற நிதியம், தொண்டமானுடைய திருநாமத்தை சிலையின் மேல் எழுத்தாக நிலை நிறுத்தப் போகிற ஒரு நிறுவனமாகும்.

இதன் மூலம், இலங்கையில் வேறு எந்த ஒரு தலைவரும், வேறு எந்த ஒரு தனிமனிதரும் செய்யாத ஒரு பெருஞ் செயலைச் செய்தவராகி விடுகிறார் தொண்டமான்.

அமெரிக்காவில் ஒரு ஹென்றி போட், ஒரு றொக் பெல்லர், இந்தியாவில் ஒரு பிர்லா, ஒரு ராஜா அண்ணாமலையார் அமைத்த அற நிதியங்கள் போல இலங்கையில் ஒரு தொண்டமான் அற நிதியம் விளங்கப் போகிறது. ஆயிரம் ஆயிரம் இளைஞர்கள், யுவதிகள் பயன் பெறப் போகிறார்கள்.

தொண்டமான் தமது வாழ்நாளில் ஆற்றிய மிகப் பெரிய சாதனையாக இந்த அறநிதியமே அவர் பெயரை ஆண்டாண்டு காலம் பாதுகாத்து நிற்கப் போகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த ஆண்டு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொன் விழா ஆண்டாகும். அந்த ஆண்டில் "காங்கிரஸ் மாளிகை" ஒன்று தலைநகரிலோ அன்றி தொண்டமானைத் தொழிலாளர் தலைவராக ஆக்கிய நுவரேலியா நகரிலோ கட்டப்பட்டு, அங்கு ஒரு "தொண்டமான் மண்டபம்" அமைய வேண்டும் என்பது இந்த நூலைத் தயாரித்த "மாண்புமிகு அமைச்சர் தொண்டமான் பாராட்டுக் குழுவினரின் அபிலாஷையாகும். அதையும் தொண்டமான் அறநிதியம் நிறைவேற்றி வைக்கவேண்டும்.

சாதனையாளர் தொண்டமான், தமிழ் மக்கள் தலைவர் தொண்டமான், தமிழ் மொழிக் காவலர் தொண்டமான், மனிதாபிமானி தொண்டமான், தேசாபிமானி தொண்டமான், தொழிலாளர் சக்கரவர்த்தி தொண்டமான், தொண்டர்க்குத் தொண்டர் தொண்டமான் இன்னும் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து பணிபுரிய வேண்டும் என்று இந்த எழுபத்தைந்து ஆண்டு நிறைவு விழாவில் வாழ்த்துவோமாக.

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★

# பூர்வீக வரலாறு எப்படி எழுதப்பட்டது?

தலைவர் தொண்டமானுடைய வம்ச வேர்களைக் கிளறி, அவருடைய பரம்பரையின் ஆணிவேரை அறிவதற்காக 1976 ஆம் ஆண்டில் மூன்று தடவைகள் இந்தியாவுக்குப் போய் வந்தேன். இரண்டு தடவைகள் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சுற்றினேன். ஒரு தடவை சென்னை, தஞ்சாவூர், மதுரை ஆகிய இடங்களில் உள்ள நூல் நிலையங்களையும், வாசிகசாலைகளையும் முற்றுகையிட்டேன்.

மதுரையிலிருந்து திருப்பத்தூர், அங்கிருந்து பட்டமங்கலம், மூஞபுதூர் (முத்துவடுகநாதபுரம்) திருக்கோஷ்டியூர் ஆகிய இடங்களுக்கு சென்றேன்.

பின்னர் கண்டரமாணிக்கம், காளையார் கோவில், காரைக்குடி, சிவகங்கை, புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய ஊர்களுக்கும் சென்றேன்.

பட்டமங்கலத்திலும், மூஞபுதூரிலும் நிரம்பிய வயதுடைய முதியவர்கள் பலரைச் சந்தித்து அவர்கள் தொண்டமான் பரம்பரைபற்றி அறிந்திருந்த விஷயங்களையும், கர்ணபரம்பரையாகக் கேட்டறிந்த விஷயங்களையும், நான் அவர்களிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டறிந்தேன். சில செவ்விகளை ஒலி நாடாக்களிலும் பதிவு செய்து கொண்டேன்.

நான் சந்தித்தவர்களில் சிலர் தலைவர் தொண்டமானின் நெருங்கிய உறவினர்கள். சிலர் அவரை விட வயதில் மூத்தவர்கள். சிலர் அவருடனேயே சிறு வயதிலிருந்தே பழகியவர்கள். சிலர் சரித்திரம், வரலாறு கற்ற புலவர்கள், பட்டதாரிகள்.

திருக்கோஷ்டியூர் கோவிலில் கடமை புரிந்து வந்த பட்டர்கள் சிலர் பல தகவல்களைத் தந்தார்கள். கோவிலைச் சுற்றி வதியும் வயதான பட்டர்கள் செவிவழி கேட்டறிந்த கதைகள் பலவற்றைக் கூறினார்கள்.

என்னுடைய சுற்றுப் பிரயாணத்தின் சில கட்டங்களில் புலவர் கரு. சேது எம்.ஏ.பி.எட். என்னுடன் கூட வந்தார். இவர் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் ஒக்கூர் சோமசுந்தரம் செட்டியார் உயர் நிலைக்கல்லூரியில் பேராசிரியராகவுள்ளார். எனக்கு உதவிபுரிந்த இன்னொருவர் கண்டரமாணிக்கத்தைச் சேர்ந்த பரு. லஷ்மணன் என்பவராவர். இந்த இருவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

மூனுபுதூரிலும், பட்டமங்கலத்திலும் நான் சந்தித்த முதியவர்களின் பெயர்களையும் வயதையும் இங்கு பதிவு செய்து வைப்பது நான் அவர்களுக்கு அளிக்கும் கௌரவமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

1. என்.எஸ்.வி.சேவுகப்பெருமாள் அம்பலம் - வயது 81, 2. வே. சுப்பையா அம்பலம் - வயது 80, 3. எஸ்.வி.ராமசாமி தொண்டமான் - வயது 80, 4. கருவேல் குரிச்சி எஸ்.வி.ஆர்.வி. ராமசாமி அம்பலம் - வயது 76, 5. எஸ். வி. எம். மாதவன் அம்பலம் - வயது 73, 6. கே.கே.எம். சாத்தப்ப தொண்டமான் - வயது 75, 7. வயி. முத்துராமலிங்கம் தொண்டமான் — வயது 75, 8. பெரி.வெகாத்தையாபிள்ளை - வயி.கரு.மாளிகையின் காரியஸ்தர்.

இவர்களைத் தவிர மு.சொக்கையா, வீ.காத்தப்பன், ஆ. ஆறுமுகவேளாளர், மா.சுப்பையா தொண்டமான் ஆகியோரும் தொண்டமான் பாரம்பரியம் பற்றிப் பல சுவையான தகவல்களைத் தந்தனர்.

திருக்கோஷ்டியூர் சௌமிய நாராயணப் பெருமாள் ஆலயத்தையும் பார்வையிட்டேன். அங்கு தொண்டமானின் தந்தையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாரவேல் என்று அழைக்கப்பட்ட கருப்பையாபிள்ளை உபயம் செய்த வெள்ளியானை வாகனத்தையும் காணமுடிந்தது.

தொண்டமானைப்பற்றியும் அவர் தந்தையாரைப் பற்றியும் கோயில் பட்டர் மலேஷியாபுகழ் என்.வெங்கடேச பட்டாச்சாரியார் எடுத்துக்கூறினர். இவர் ஒரு சொற்பொழிவாளரும் கதாப்பிரசங்கியும் ஆவார். கோயில் வரலாற்றைக் கேட்டபோது, அதை நான் நாடாவில் பதிவு செய்யும் வண்ணம் ஒரு கதாப்பிரசங்கமாகவே நிகழ்த்தி விட்டார்.

திருக்கோஷ்டியூருக்கு நான் இரண்டாவது விஜயம் ஒன்றை மேற்கொண்டபோது கோயில் அருகே கே.வை.கோபாலாச்சாரியார், அ.மு.பார்த்தசாரதி பட்டாச்சாரியார் என்று இரு பெரும் முதியவர்களைத் தனித்தனியாகச் சந்தித்து உரையாடினேன். அவர்கள் இருவரும் கருப்பையாபிள்ளை இலங்கையில் தனவந்தராகவும், தோட்ட முதலாளியாகவும் விளங்கியதைப் பற்றி நன்கு அறிந்தவர்களாக இருந்தார்கள். இவர்களில் ஒருவர் தான் கருப்பையா பிள்ளையைத் திருடர்கள் வழிமறித்தது பற்றியும், அப்போது நடந்த அற்புதம் பற்றியும் கூறினர்.

புதுக்கோட்டை தொண்டமான்களுடைய சரித்திரத்தையும், இராமநாதபுரம் தொண்டமான்களுடைய வரலாறுகளையும் ஆராய்வதற்கும், காளையார் கோவில் சிவகங்கை ஆகிய இடங்களைப் பற்றிய பின்னணிகளைத் தெரிந்து கொள்வதற்கும் பல நூல்களைப் படிக்கவும், ஆராயவும் வேண்டியிருந்தது.

பின்வரும் நூல்கள் பெரிதும் துணை புரிந்தன.

1. கலிங்கத்துப்பரணி
2. தொண்டை மண்டல சதகம்
3. சிவகங்கை வரலாறு
4. மயூரகிரிக் கோவை
5. புதுக்கோட்டை ஆட்சி
6. மருதுபாண்டியர் சரித்திரம்
7. தொண்டப் பத்து
8. கள்ளர் சரித்திரம்
9. காளையார் கோவில் ஸ்தல புராணம்
10. திருக்கோஷ்டியூர் மான்மியம்
11. திருப்பத்தூர் கோட்டைக் கருப்பையா கோவில் வரலாறு
12. இராமநாதபுர மன்னர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. The Tamil of Early Ceylon - C.Sivaratnam
14. Castes of South India- Thurstan
15. Ancient India - S.K. Iyangar
16. The Chola - K.A.Neelankanta Sastri
17. The Pandiya
18. Ancient Sea Ports of South India - Prof Wrrigs
19. Battles around Kalayar Temple - Col. Welsh.

இந்த நூல்களில் சில என்னிடமிருக்கின்றன. சிலவற்றை இரவல் வாங்கியும், சிலவற்றை சென்னை பல்கலைக்கழக வாசிகசாலை, தஞ்சாவூர் சரஸ்வதிமஹல், சென்னை கன்னிமாரா நூலகம், மதுரை தமிழ்ச் சங்க நூல் நிலையம் ஆகியவற்றிலும் பெற்றுப் படித்தேன்.

சில குறிப்புகளைப் பெறுவதற்காக நானும் என் மனைவியும் சென்னை பல்கலைக்கழகத்துக்குச் சென்ற போது அங்கு சப்-ரெஜிஸ்ட்ராராகவிருந்த எஸ்.மணவாளன் மிகவும் உதவி புரிந்தார் அத்தோடு, நான் தேடிய விவரங்களைப் பெறுவதற்காக கன்னிமாரா நூலகத்தின் மேல்நிலையப் பகுதி உதவியாளராகவிருக்கும் ஆர்.யுவராஜகுமார் என்பவரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, பின்னர் எங்களை அங்கு அனுப்பி வைத்தார்.

கன்னிமாரா நூலகத்தில் நானும் என் மனைவியும் பல நாட்களைச் செலவிட்டோம். அங்கு அரிய தகவல்கள் எல்லாம் கிடைத்தன. இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை ஆராய்ந்தோம். அவற்றில் முக்கியமாக TEMPLES OF MADRAS STATE என்ற நூலும், A MANUAL OF PUDUKKOTTAI என்ற நூல் தொகுப்புகளும் தொண்டமான் பரம்பரை பற்றிப் பல விஷயங்களை வெளியிட்டன.

கலிங்கத்துப்பரணி கூறும் கருணாகரத் தொண்டமானையும் அவருடைய இலங்கை விஜயத்தையும், தொண்டமானுற்றையும் பற்றி நான் எழுதியிருக்கும் ஆய்வுக்கு ஆதாரம் அங்கும் கிடைத்தது. அது மட்டுமன்றி ஆனைகாத்தான் தொண்டமானுக்கு முன்பும் சில தொண்டமான்கள் யானையை அடக்கும் சாகஸங்களைப் புரிந்திருக்கிறார்கள் என்ற உண்மையும் புலனாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுபத்து நான்கு கலைகளிலே ஆனை அடக்கம், ஆனை ஏற்றம் என்ற கலைகளும் அடங்கும். ஆனை அடக்கம் என்பது காட்டானையை எப்படிக் கட்டி மறித்துப் பிடித்து, தறியில் பிணைத்து, பின்னர் போருக்குப் பழக்குவது என்பதாகும். இன்றைய நவீன கால யுத்தங்களில் டாங்கி என்னும் யந்திரப் பீரங்கி வண்டி புரியும் பணியைப் பண்டைக் காலத்தில் யானைகள் புரிந்தன. பண்டைத் தமிழ் அரசர்களின் யுத்த டாங்கிகள் யானைகள் தாம்.

யானைகளைப் பொறியிடும் கலைக்கும், அடக்கும் அங்குசக் கலைக்கும், போர்க்களம் புகுத்தும் கஜேந்திரக் கலைக்கும் தான் தொண்டமான்கள் அதிபதிகளாக விளங்கினுர்கள். கஜேந்திரக் கலைதான் யானை ஏற்றம் எனப்பட்டது.

யானைகளைக் கட்டிப் பராமரிக்கும் பணி பணிக்கர் குலமக்களிடம் விடப்பட்டிருந்தது. அவர்களே யானைப் பணிக்கர்கள், யானைப் பாகர்கள் என்று அழைக்கப்பட்டார்கள்.

ஆனை ஏற்றம் என்பது யானை மீது ஏறி, யானையை யுத்தத்துக்குச் செலுத்தும் சாகஸ கலையாகும். இந்தக் கலையில் கலிங்கத்துப் பரணியில் வரும் கருணுகரத் தொண்டமான் தலைசிறந்த வல்லவனுக விளங்கியிருக்க வேண்டும்.

ஆனை அடக்கம், ஆனை ஏற்றம் ஆகிய இருகலைகளிலேயும் தொண்டமான் வம்சத்தினர் ஆற்றலும் திறமையும் பெற்றுத் திகழ்ந்திருக்கிருர்கள் என்பதைப் பல சம்பவங்களும், கதைகளும் நிரூபிக்கின்றன.

சௌமியமூர்த்தி தொண்டமான் மூதாதையர்களில் ஒருவரான ஆனைகாத்தான் தொண்டமான் சிவகங்கை மன்னரின் வேண்டுகோள்படி மதங்கொண்ட திருக்கோஷ்டியூர் யானையை அடக்கினுர் அல்லவா? அதே போல விஜயநகர மன்னரான ஸ்ரீரங்கராயர் தென் இந்தியாவில் திக்விஜயம் செய்த போது அவருடைய யானையும் மதம் பிடித்து கட்டு மீறியது. அந்த வேளையில் ஆவடி ரகுநாத தொண்டமான் என்ற ஒருவர் தான் அந்த யானையையும் அடக்கினுர்.

இவ்வாறு தொண்டமான்கள் யானையை அடக்கவல்லவர்களாக இருந்ததால் அவர்களுக்கு பல்வேறு அரசர்களின் படைகளிலும் தளபதிகளாகும் வாய்ப்பும் கிட்டியிருக்கிறது. அதே வேளையில் தொண்டமான் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் தாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுநில மன்னர்களாகவும், பெருநில மன்னர்களாகவும் தமிழ் நாட்டின் வரலாற்றில் இடம் பெற்றிருக்கிறார்கள்.

கன்னிமாரா நூலகத்தில் கண்டெடுத்த ஒரு பழைய சுவடியான PUDKKOTTAI STATE GENERAL HISTORY என்ற நூலின் 754 முதல் தொடர்ந்து வரும் பக்கங்களில் தொண்டமான் வரலாறு பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

**Pudukkokttai State : General History. Page 754 onwards. Section VI - Tondaimans : The Making of the State. Origin of the Tondaimans.**

An account of the origin of the Tondaimans is found in a Telugu poem called the Tondaiman Vamsavali, which was written by a Court poet of Venkanna, about 1750 A.D., a summary of which is given below:

When Indra King of Heaven, was once touring the earth, he met a maiden whom he married. She gave birth to many sons, one of whom became a ruler. From him descended fifteen rulers one after the other. The fifteenth ruler was Raya Tondaiman.

This account of the legendary origin of the Tondaimans is only a variant of the story relating to the origin of the Kallar community as a whole, which is traced to Indra.

The Tondaimans of the present ruling line are said to have come like the Pallavarayars from Tondaimandalam, comprising the present Chingleput, Chittor and North Arcot Districts.

Tondaimans were a tribe of Kallars that lived on the hills near Tirupati and were skilful catchers of elephants.

Some of them were engaged by the Pallava Kings of Conjeeveram and one of them, with his people followed a Pallavarayar from Conjeeveram and had



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

lands at Ambukkovil or Alumbil, as it is called in old Tamil works and inscriptions, and some other villages assigned to him.

Ambunadu also called Alumbil Nadu formed originally one of the twelve independent small communities forming a sort of confederacy. It was a Thannarasu Nadu, that is, a district which had its own kings.

From an inscription (P.S.I. 879 dated A.D. 1728) at Vellai Mandapam in the Kolattur taluk, the late Mr. Radhakrishna Aiyar concluded that "the ruler (Ramaswami Tondaiman of Kolattur) seems to connect himself with the family of the well known Vaisnava saint of the name of Thirumangai Alvar" The text of the inscription says that the Tondaiman nattars (meaning the people of the Tondaiman country) were the descendants of the families of the ministers of Kalla Thirumangai Alvar.

An Amma Chatram copper plate grant of Ramasvami Tondaiman which gives the "prasasti" of the Tondaimans confirms this claim that they were descendants of the eight followers of Thirumangai Alvar.

The inscriptions of the early Tondaiman rulers refer to them as belonging to the race of Indra, and the sept of Kasyspa (Kasyapa Gotra).

**Raya Tondaiman**

While Sriranga Raya, King of Vijayanagar and in theory 'suzerin of Gingee, Tanjore and Madura' was touring in the part of South India, one of his elephants got out of control and worked great havoc. Avadai Ragunatha Tondaiman, son of Paccai Tondaiman of Karamba Kudi, captured the elephant with great skil and conducted it to Sriranga Raya. The king was so much pleased with the exploit that he conferred on



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Avadai Ragunatha Tondaiman the title of Raya Rahutta Raya Vajridu Raya Mannidu Raya so that the Tondaiman came to be called ever afterwards Raya Tondaiman.

The king granted him also some lands and many insignias of distinction such as an elephant with "howdah" another carrying a kettle drum, a plainquin, a large drum, the insignia of Ganda bherunda (the fabulous bird said to prey on elephants), flags bearing the emblems of a lion, carp, Garuda and Hanuman, horses and umbrellas, the right to use torches in the day time and a couple of bards to go in front of his palanquin singing his praises. (More details in the Tamil poem Raya Tondaiman Anuraaga Malai).

In all the copper plates issued by the Tondaimans, Avadai Tondaiman is never mentioned by only name, but is always called 'Raya Tondaiman, who got the title of Raya from Sriranga Raya'.

The first Tondaiman ruler of Pudukkottai inherited the title and called himself Ragunatha Raya Tondaiman (1686 - 1730) and some of his successors also adopted it.

மேலே தரப்பட்டுள்ளவற்றின் சாரம் வருமாறு: *புதுககோட்டை ராஜ்யம்: பொது வரலாறு பக்கம் 754 முதல் தொண்டமான்களின் தோற்றம்*:

"தொண்டமான் வம்சாவழி" என்ற பெயரையுடைய ஒரு தெலுங்கு கவிதை நூலில் தொண்டமான்களின் தோற்றம் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. இது கி.மு. 1750 ஆம் ஆண்டில் ஆட்சி நடத்திய வெங்கண்ணு என்ற மன்னரின் ராஜசபைக் கவிஞரால் பாடப்பட்டது. அதில் தரப்பட்டுளள விவரங்களாவன.

தேவலோகத்து அரசனை இந்திரன் ஒரு முறை பூமியில் உலா வந்த வேளையில் ஒரு கன்னியைக்கண்டு அவளை மணந்து கொண்டான். அவள் இந்திரனுக்குப் பல புத்திரர்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுள். அவர்களில் ஒருவன் மன்னனுனன். அவனுடைய பரம் பரையில் பதினைந்தாவது வாரிசு ஆக ராயர் தொண்டமான் தோன்றினுர்.

இந்த ஐதீக வரலாறு கள்ளர் சமுதாயத்தின் தோற்றம் பற்றிய கதையின் ஒரு திரிபுதான். கள்ளர் இனத்தைச் சேர்ந்தவர்களும் இந்திரனுடைய வம்சாவழியினர் என்றே கொள்ளப்படுகிருர்கள்.

செங்கல்பட்டு, சித்தூர், வட ஆர்க்காடு மாகாணங்கள் சேர்ந்த பகுதி தொண்டை மண்டலம் என்று அழைக்கப்பட்டது. தொண்டைமண்டலத்தில் இருந்து பல்லவராயர்கள் வந்தது போலவே தொண்டமான்களும் வந்தார்கள்.

தொண்டமான்கள் திருப்பதி மலையை அண்டிய பிரதேசத்தில் வாழ்ந்த கள்ளர் குலத்தினர் ஆவர். இவர்கள் யானைகளைக் கட்டுவதிலும் பிடிப்பதிலும் வல்லவர்களாயிருந்தார்கள்.

காஞ்சீவரத்தைச் சேர்ந்த பல்லவ மன்னர்கள் இவர்களுடைய சேவையைப் பெற்றிருந்தார்கள். இவர்களில் ஒருவர் காஞ்சீவரத்திலிருந்து ஒரு பல்லவராயரைத் தொடர்ந்து அம்புக் கோவில் பிரதேசத்துக்கு வந்து நில அதிபதியானுர். பழந்தமிழ் நூல்களிலும், கல் வெட்டுகளிலும் அம்புக்கோவில் அலம்பில் என்று குறிப்பிடப்படுகிறது.

அம்புநாடு, அலம்பில் நாடு என்றும் அழைக்கப்பட்டது. இது தன்னரசு நாடு என்ற பன்னிரண்டு கூட்டு நாடுகளில் ஒன்றுகும். அதனுல் அலம்பில் நாடு ஒரு தனி ஆட்சி மன்னனின், கீழ் இருந்தது.

குளத்தூர் தாலுக்காவில் உள்ள வெள்ளை மண்டபம் என்ற இடத்தில் ஒரு கல்வெட்டு கண்டெடுக்கப்பட்டது. (இது கி.பி. 1728 ஆம் ஆண்டைச் சேர்ந்ததாகும். இதன் குறியீட்டு எண் பி.எஸ்.ஐ.897). இந்தக் கல்வெட்டின்படி குளத்தூர் ராமசாமி தொண்டமான் என்ற ஆட்சித்தலைவர் தம்மை வைஷ்ணவரான திருமங்கை ஆழ்வாரின் குடும்பத்துடன் தொடர்பு படுத்தி யுள்ளார் என்று காலஞ் சென்ற திரு.ராதாகிருஷ்ண ஐயர் நிலை நாட்டியுள்ளார்.

தொண்டமான் நாட்டார்கள், கள்ள திருமங்கை மன்னரின் அமைச்சர்களுடைய வம்சத்தைச் சேர்ந்தவர்களாவர் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த கல்வெட்டின் வாசகம் கூறுகிறது. தொண்டமான்களு டைய பராக்கிரமத்தைக் கூறும் அம்மா சத்திரம் செப்பேடு இதை ஊர்ஜிதம் செய்கிறது. அதாவது தொண்டமான்கள் திருமங்கை ஆழ்வாரின் எட்டு சீடர்களின் வம்சாவழியினராவர் என்று அந்த செப்பேட்டில் காணப்படுகிறது.

ஆதிகாலத் தொண்டமான்களின் கல்வெட்டுக்கள் இவர்களை இந்திரனின் இனத்தவர் என்றும் காசியப்ப கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் குறிப்பிடுகின்றன.

## ராயர் தொண்டமான்

விஜயநகர மன்னர் ஸ்ரீரங்கராயர் ஆவார். இவர் செஞ்சி, தஞ்சாவூர், மதுரை ஆகிய பிரதேசங்களுக்கும் அதிபதியாக விளங்கினார். ஸ்ரீரங்கராயர் தென் இந்தியாவில் ஒரு திக் விஜயத்தை மேற் கொண்ட போது அவருடைய பட்டத்து யானை கட்டு மீறி, மதங்கொண்டு குழப்பம் விளைவித்தது. கரம்பக் குடி பச்சைத் தொண்டமானின் மகன் ஆவடை ரகுநாத தொண்டமான் அழைக் கப்பட்டான். அவன் மிகச் சாமர்த்தியமாக யானையை அடக்கிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, ஸ்ரீரங்கராயரிடம் அழைத் துச் சென்றான். ஸ்ரீரங்கராயர் பெருமகிழ்ச்சியடைந்தார். ஆவடை தொண்டமானுக்கு ராயர் ராகுத்தராயர் வஜ்ரராய மன் னிது ராயர் என்ற கௌரவப்பட்டத்தை வழங்கினார். அன்று முதல் ஆவடை ரகுநாத தொண்டமான் ராயர் தொண்டமான் என்றே அழைக்கப்பட்டார்.

ஸ்ரீரங்கராயர் மன்னர் தொண்டமானுக்கு நிலங்களும் கொடுத்தார். பரிசுகளும் வரிசைகளும் வழங்கினார். முக படாம் அணிந்த யானை, முழவு சுமந்த யானை, பல்லக்கு, முரசம், காந்தபிருந்தா என்ற பறவைச் சின்னம் (காந்தபிருந்தா என்ற பறவை யானைகளை பட்சிக்கும் ஒரு ஐதீகப் பறவை) சிங்கக் கொடி, மீன் கொடி, கருடக் கொடி, அனுமான் கொடி முதலியனவும், குதிரைகள், குடைகள் ஆகியனவும் வரிசைகளாகிக் கொடுத்தார். பகல் வேளையில் பவனியின் போது தீவட்டி பிடித்துச் செல்லும் உரிமையும் வழங்கினார். பல்லக்கின் முன்னால் புகழ் பாடிச் செல் வதற்கு ஒரு ஜோடி பாடகர்களையும் கொடுத்து உதவினார். மேலும் விவரங்களை ராயர் தொண்டமான் அநுராக மாலை என்ற கவிதை நூலில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீரங்க ராயரரால், ராயர் தொண்டமான் என்று பெயர் சூட்டப்பட்ட ஆவடை தொண்டமான், பின்னர் வெறும் தொண்டமான் என்று அழைக்கப்பட்டதில்லை. எப்பொழுதும் ராயர் தொண்டமான் என்றே அழைக்கப்பட்டார். எல்லா செப்பேடுகளும் இப்படியே கூறுகின்றன.

கி.பி.1686 முதல் கி.பி.1730 வரை புதுக்கோட்டையை ஆண்ட முதலாவது தொண்டமான் இந்தப் பாரம்பரிய பட்டத்தைத் தன் பெயரோடு இணைத்துக் கொண்டு ரகுநாதராயர் தொண்டமான் என்று வழங்கி வந்தார்.

இப்படியான சரித்திரச் சான்றுகள் எல்லாம் கன்னிமாரா நூலகத்தில் உள்ளன. இவற்றிலிருந்து தொண்டமான் வரலாற்றைத் தொகுக்க முடிந்தது. சௌமிய மூர்த்தி தொண்டமானின் மூதாதையர்கள் புதுக்கோட்டை ராஜ்யத்திலிருந்தே மூனுப்புதூருக்கும் பட்டமங்கலத்துக்கும் வந்து குடியேறி பெருகினுர்கள் என்பது பெறப்பட்டது. நூலில் எடுத்தாளப்பட்ட பழைய சம்பவங்களுக்கான சான்றுகளில், சில சமயம் கால வழுக்களும், வேறு வழுக்களும் இருக்கலாம். எனினும் கதையின் கருவோட்டம் சரியாகவே இருக்கும் என்பது எனது துணிவு ஆகும்.

—எஸ்.டி.எஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜொலிக்கிறது அவர் தொண்டு

ஆறுலட்சம் தொழிலாளர் தோட்டக் காட்டில்
அநுபவித்த துயருக்கோ அளவே யில்லை
கூறுகூருய்ப் பிரிந்தவர்கள் தனித்து நின்று
குமைந்த தல்லால் சாதித்த தெதுவுமில்லை
வீறுகொண்ட புலியைப் போல் அந்த வேளை
விளங்கிய நம் ஜவாஹர்லால் இலங்கை வந்து
தேறுமதி கூறியொரு இயக்கம் தன்னைத்
தோற்றுவித்தார் அதன் தலைவர் தொண்ட மானே.

தோன்றிய அவ் வியக்கந்தான் இலங்கை நாட்டின்
தொழிலாளர் காங்கிரஸாய் மலர்ந்து இன்று
மூன்றுலட்சம் உறுப்பினரும் மற்றும் பல்லோர்
மூலவராய் நின்றுழைக்கச் சங்க மாகி
வானுயர்ந்து வளர்ந்தோங்கித் தென் கிழக்கு
ஆசியாவின் மிகப்பெரிய தொழில் அமைப்பாய்
மேன்மையுற்று விளங்கிடற்குப் பாடு பட்ட
மேதையவர், யாரென்ருல் தொண்ட மானே.

தொண்டமான் தொட்டதெல்லாம் பொன்னே யாகும்
தொழிலாளர் எல்லாரும் மன்ன ராஞர்
வண்டாடும் மலர் குவிந்த மலை நாட்டின் கண்
வனிதையரும் வீரத்தில் மறப்பெண் ணுஞர்
திண்டாட்டம் இல்லாது வாரம் ஆறு
தினம் உழைத்து வாழ்வதற்கு வழிபெற் ருர்கள்
கொண்டாட்டம் அவர் வாழ்வில் கொழிப்ப தற்கு
கொடியுயர்த்தி வைத்தவரும் தொண்ட மானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவர்க்கு எழுபத்தோ டைந்து என்று
யார் கேட்டா லும்நம்ப மாட்டார் இன்று!
தூண்டு கோல் தேவையிலா விளக்குப் போல
சுடர் விட்டு ஜொலிக்கிறது அவரின் தொண்டு!
ஆண் சிங்கம் போன்றதவர் விறல்சேர் தோற்றம்
யாருக்கும் அஞ்சாத நெஞ்சின் சீற்றம்
காண்டற்கு எளியரவர் கருத்து வேறு
பட்டார்க்கும் கருணை பொழி பண்பின் ஏற்றம்.

தம்சொத்து தம்வீடு தமது தேட்டம்
தமதென்று எண்ணுமல், உழைக்கும் மக்கள்
தம்சொத்துப் போல் எண்ணிச் செலவு செய்து
தொழிலாளர் நலன் காத்த பாரி வள்ளல்!
தம்மக்கள் தோட்டத்தில் துயருற் றக்கால்
தமதுடலின் நலன் கூட நாடா ராக
எம்மட்டில் என்ருலும் அங்கே பாய்ந்து
எதுவேனும் செய்தவரைக் காக்கும் வேந்தர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உழைக்கும் கரங்களுக்கு
## சமர்ப்பணம்

இலங்கை மணித்திரு நாடும், நாட்டு மக்களும்
சீரும் சிறப்பும் செல்வமும் பெற்று,
நல்வாழ்வு வாழ்வதற்கு
தம் உடலையும் உணர்வையும்
உதிரத்தையும் படைத்து
ஆண்டாண்டு காலம்
அரும்பாடு பட்டு வரும்
எமது லட்சோப லட்சம்
மலை நாட்டுத் தோட்டத் தொழிலாளர்களின்
உரம் வாய்ந்த உழைக்கும் கரங்களுக்கு
இந்நூல்
சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Title in Tamil: THALAIVAR THONDAMAN
(THONDAMAN, THE LEADER)

No. of Pages : Text- 312
Pictures- 32
Total Pages- 344

Print Order : 10,000 Copies

First Edition : 1988

Price : Rs. 25 in India
: Rs. 50 in Sri Lanka

Print : Off-set Process

Printed by : P. R. Lithographers
Madras 600 013

Cover Picture : Vashicara
Advertising
Colombo

## ACKNOWLEDGEMENT

We are thankful to S. T. Sivanayagam for his research articles on General Karunakara Thondaman (1047 A.D.) of Chola Regiment, Thondaman Dynasty, and the Ancestors of Thondaman, appearing on pages 25, 104, 112 and 298 of this book.

*—Publishers*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org